ஜெயமோகன்



# பனி மனிதன்

# பனி மனிதன்

ஜெயமோகன்

## <u>பனி மனிதன்</u>

ஜெயமோகன்

பிறந்தது 1962, ஏப்ரல் 22ல். பள்ளி நாள்களில் ரத்னபாலா என்கிற சிறுவர் இதழில் முதல் கதையை எழுதினார். 1987ல் கணையாழியில் எழுதிய 'நதி' சிறுகதை பரவலாகக் கவனம் பெற்றது. 1988ல் எழுதப்பட்ட 'ரப்பர்' நாவல் அகிலன் நினைவுப்போட்டியின் பரிசைப் பெற்றது. இது தவிர கதா விருதும் சம்ஸ்கிருதி சம்மான் தேசிய விருதும் பெற்றுள்ளார். இவர் எழுதிய விஷ்ணுபுரம் தமிழ் இலக்கிய உலகில் பெரிய கவனத்தைப் பெற்றதோடு விவாதத்தையும் ஏற்படுத்தியது. இவரது படைப்புகள் தொடர்ந்து தமிழ் இலக்கிய உலகில் அதிர்வலைகளையும் புதிய சாத்தியங்களையும் ஏற்படுத்திய வண்ணம் உள்ளன. தமிழ் மற்றும் மலையாளத் திரைப்படத் துறைகளிலும் இவரது பங்களிப்பு தொடர்கிறது.

பிரியமுள்ள
நண்பர் பாவண்ணனுக்கு

# முன்னுரை

பனிமனிதனை நான் 1999ல் தினமணி நாளிதழின் சிறுவர் மணியில் எழுதினேன். பதினோரு வருடங்களுக்கு முன்பு. அப்போது இந்தக் கதைக்கு இளம் வாசகர்கள் அளித்த வரவேற்பு எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளித்தது. அனேகமாக எல்லா வாரமும் இரு வாசகர் கடிதங்களாவது அச்சாகும்.

நம்முடைய சிறுவர் சிறுமியர் தமிழில் நல்ல கதைகளை வாசிக்க ஆசைப்படுகிறார்கள்.ஆனால் அவர்களுக்கு அது கிடைப்பதில்லை. காரணம் நம்முடைய பெற்றோர் குழந்தைகளுக்குத் தமிழ் நூல்களை வாங்கி அளிப்பதில்லை. பாடப்புத்தகங்களையே கஷ்டப்பட்டு வாங்கக்கூடிய பெற்றோர், நூல்களை வாங்கிக் கொடுக்காதது இயல்புதான். வாங்கிக்கொடுக்கும் வசதி கொண்ட பெற்றோர் ஆங்கில நூல்களை மட்டுமே வாங்குவார்கள்.

நம்முடைய கிராமநூலகங்களில் குழந்தைகளுக்கான நூல்கள் அனேகமாகக் கிடையாது. பள்ளி நூலகங்களின் நூல்களை குழந்தைகளுக்குக் கொடுக்க மாட்டார்கள். ஆகவே பிள்ளைகளுக்கு நாளிதழ்களின் வார இணைப்புகளாக வரும் குழந்தை மலர்கள் மட்டுமே கிடைக்கின்றன. நான் ஒருமுறை ஒரு சவரக்கடையில் இரு குழந்தைகள் வந்து நாளிதழின் சிறுவர் இணைப்பை கெஞ்சி வாங்கிக்கொண்டு சென்றதைக் கண்டேன்.

ஆகவேதான் இதை எழுத ஒப்புக்கொண்டேன். சிறுவர் மணியில் ஆசிரியராக இருந்த மனோஜ் கேட்டுக்கொண்டதனால் எழுதினேன். இந்தக்கதை குழந்தைகளுக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆகவே இதை தொடர்ந்து எழுத எண்ணினேன். ஆனால் அதற்குள் மனோஜ் சிறுவர் மணி பொறுப்பில் இருந்து விலக நேர்ந்தது. எனக்கு அவ்விதழுடன் உள்ள தொடர்பு இல்லாமல் ஆகியது.

இந்த நாவலை எழுதும்போது என் மகன் அஜிதனுக்கு ஏழு வயது. எல்லா அத்தியாயங்களையும் அவனுக்குச் சொன்னேன். கதை அவனுக்குப் புரியும்படியாக எழுதினேன். பின்னர் அவன் ஐந்தாம் வகுப்பு படிக்கும்போது இந்த நாவலை வாசித்தான். இதுதான் அவன் வாசித்த முதல் புத்தகம். என் குழந்தைகளுக்காக நான் எழுதிய நாவல் இது. எல்லாக் குழந்தைகளையும் இப்போது என் குழந்தைகளாகவே நினைக்கிறேன்

இந்த நாவலை சிறுவர்களுக்கான நடையிலேயே எழுதியிருக்கிறேன். ஒரு சொற்றொடர் பத்து சொற்களுக்குள்தான் அமையும். மொத்தம் 3000 வார்த்தைகளுக்குள் இந்நாவல் இருக்கும். ஐந்தாம் வகுப்பு தேறிய ஒரு குழந்தை இதை வாசிக்க முடியும்

ஆனால் இந்த நாவல் வெறும் குழந்தைக்கதை அல்ல. இதில் தத்துவமும் ஆன்மிகமும் அறிவியலும் உள்ளன. இந்தப் பிரபஞ்சத்துக்கும் மனிதனுக்குமான உறவு என்ன என்ற கேள்வி உள்ளது. அந்தக்கேள்வி பெரியவர்களுக்கும் உரியது. அவர்களும் இந்நாவலை விரும்பி வாசிக்கலாம். அவர்களை அது சிந்திக்க வைக்கும்

முதல்பதிப்பை வெளியிட்ட கவிதா பதிப்பகத்துக்கும் இப்பதிப்பை வெளியிடும் கிழக்கு பதிப்பகத்துக்கும் என் நன்றி

ஜெயமோகன்

நாகர்கோயில்

# உள்ளே

அத்தியாயம் 1
அத்தியாயம் 2
அத்தியாயம் 3
அத்தியாயம் 4
அத்தியாயம் 5
அத்தியாயம் 6
அத்தியாயம் 7
அத்தியாயம் 8
அத்தியாயம் 9
அத்தியாயம் 10
அத்தியாயம் 11
அத்தியாயம் 12
அத்தியாயம் 13
அத்தியாயம் 14
அத்தியாயம் 15
அத்தியாயம் 16
அத்தியாயம் 17
அத்தியாயம் 18
அத்தியாயம் 19
அத்தியாயம் 20
அத்தியாயம் 21
அத்தியாயம் 22
அத்தியாயம் 23
அத்தியாயம் 24
அத்தியாயம் 25
அத்தியாயம் 26
அத்தியாயம் 27

அத்தியாயம் 28
அத்தியாயம் 29
அத்தியாயம் 30
அத்தியாயம் 31
அத்தியாயம் 32
அத்தியாயம் 33
அத்தியாயம் 34
அத்தியாயம் 35
அத்தியாயம் 36
அத்தியாயம் 37
அத்தியாயம் 38
அத்தியாயம் 39
அத்தியாயம் 40
அத்தியாயம் 41
அத்தியாயம் 42
அத்தியாயம் 43
அத்தியாயம் 44

# அத்தியாயம் 1

பத்தாயிரம் அண்டாக்கள் நிறைய ஐஸ்கிரீமைக் கொட்டிப் பரப்பி வைத்தால் எப்படி இருக்கும்? அப்படி இருந்தது அந்த மலைச்சரிவு. முழங்கால் வரை புதையக்கூடிய மென்மையான வெண்பனி பரவியிருந்தது. அதன்மீது எட்டு பேர் நடந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களில் ஆறு பேர் ராணுவ வீரர்கள். இருவர் வழிகாட்டிகள். அவர்கள் தடிமனான பனி உடைகள் அணிந்திருந்தார்கள். அவ்வுடைகளின் உட்பக்கம் கம்பளியும் வெளிப்பக்கம் தோலும் இருக்கும். முட்கள் பதிக்கப்பட்ட பனிச் செருப்புகள் அணிந்திருந்தார்கள். ஒளியைக் குறைத்துக் காட்டும் கறுப்புக் கண்ணாடிகள் போட்டிருந்தார்கள்.

நான்கு பக்கமும் பனி மலைகள் உயர்ந்து நின்றன. மலை மலையாகச் சீனியைக் குவித்துப் போட்டது போல அவை காணப்பட்டன. அப்போது சூரியன் மறைந்துவிட்டிருந்தது. ஆனால் சூரிய ஒளி இல்லாவிட்டாலும் பனிப்பாளங்கள் வெகுநேரம் பிரகாசமாக இருக்கும். இதற்கு அக எதிரொளிப்பு என்று பெயர்.

அந்த இடம் கடல் மட்டத்திலிருந்து ஏழாயிரம் அடி உயரம் உடையது. அது லடாக் பீடபூமிக்கு வடக்கே இருந்தது. அதற்கு தேப்சாங் பள்ளத்தாக்கு என்று பெயர். அவ்வளவு உயரத்தில் எந்தவிதமான தாவரங்களும் வளர்வதில்லை; எந்த உயிரினமும் வாழ முடியாது.

அங்கு கேட்கும் ஒரே ஒலி பனிக்காற்றின் ஊளைதான். அது விசில் போல சீராக இருந்தால் பயமில்லை. விட்டு விட்டுக் கேட்க ஆரம்பித்தால் அவ்வளவுதான். பனிப்புயல் வருகிறது என்று பொருள். பனிப்புயலில் பனித் துகள்கள் பெரிய மழை போலக் கொட்டும். சமவெளியை அப்படியே பனியால் மூடிவிடும். யாருமே தப்ப முடியாது.

அதைப் போல பனி மெதுவாக விரிசல் விடும் ஒலியும் கேட்டபடி இருக்கும். குளிர் ஏறும்போது பனிப்பாளங்கள் இறுகுவதனால் ஏற்படும் ஒலி அது. திடீரென்று ஒரு பனிமலை அப்படியே பிளந்துவிடும். அதன் மேல் உள்ளவர்களோடு சேர்ந்து மலையின் அடிப்பகுதிக்கு மண் சரிந்துவிழும்.

லடாக் பீடபூமியில் மனிதர்கள் வாழ்கிறார்கள். அவர்கள் மஞ்சள் நிறமானவர்கள். அதாவது மங்கோலிய இனத்தவர்கள். அவர்களுடைய மொழி லடாக்கிய மொழி. அவர்களுடைய மதம் பௌத்த மதம்.

லடாக்கைத் தாண்டி மலையில் ஏற வேண்டுமானால் இம் மக்களின் உதவி தேவை. அவர்கள் மலைகளைப் பற்றித் தெரிந்தவர்கள். பனியில் மலையேறும் பயிற்சி உடையவர்கள். ராணுவத்தினர் அவர்களை வழிகாட்டிகளாக அமர்த்திக் கொள்வார்கள்.

தேப்சாங் சமவெளிக்கு அப்பால் வடக்கே காரகோரம் கணவாய் உள்ளது. கணவாய் என்றால் மலைத்தொடரின் நடுவே உள்ள பாதை. அது சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே உள்ள வாசலாகும். 1962-ல் அதன் வழியாக சீனர்கள் நம்மீது படையெடுத்தார்கள். எனவே அந்தக் கணவாயை ராணுவம் எப்போதும் கண்காணித்து வருகிறது.

அங்கு சில ராணுவ வீரர்கள் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். இரவுக்குள் அவர்கள்

அருகே இருந்த மலையுச்சியில் உள்ள ராணுவ முகாமை அடைந்துவிடவேண்டும். இரவாகிவிட்டால் பனி மலையில் நடக்க முடியாது. குளிரில் உறைந்து சாக வேண்டியதுதான். எனவே அவர்கள் வேகமாக நடந்தார்கள்.

அந்தக் குழுவின் காப்டன் தொலைநோக்கியால் மலை உச்சிகளையும் மலைச்சரிவுகளையும் கூர்ந்து பார்த்தான். வெண்ணிறம் தவிர வேறு நிறமே இல்லை. எனவே பனி மலைகளில் எதையும் அடையாளம் காண்பது கடினம்.

நிறவடிகட்டிகள் எனப்படும் குறிப்பிட்ட வகை லென்ஸ்களை மாற்றி வைத்துப் பார்த்தான். அப்போது பனிப்பரப்பு நீலநிறமாகவும், சிவப்பு நிறமாகவும், ஊதா நிறமாகவும் மாறி மாறித் தெரிந்தது. பல நிறங்களில் மாற்றி மாற்றிப் பார்க்கும்போது சிறு வித்தியாசம் கூடக் கண்ணில் பட்டுவிடும். ஆபத்து ஏதும் தென்படவில்லை. வடக்குத் திசையில் சீனாவில் உள்ள குன்லுன் மலைகள் தெரிந்தன. வானத்தில் புகை அசையாது நிற்பது போல அவை காணப்பட்டன. வடமேற்கில் காஷென்பிரம் மலைச்சிகரம் தெரிந்தது. மாலை வெயில் அதன் மீது பட்டது. அப்போது அது சிவப்பு நிறமாகத் தெரிந்தது. கண்ணாடியில் தீ எரியும் பிம்பம் தெரிவது போல் இருந்தது அது.

காப்டன் தொலைநோக்கியைக் கண்களிலிருந்து எடுக்கப் போனான். அப்போது ஒரு விஷயம் அவன் பார்வையில் பட்டது. பனிச்சரிவில் ஒரு நீண்ட தடம் தெரிந்தது. ஏதோ வண்டி போனதன் அடையாளம் போல இருந்தது.

காப்டன் தன் கையைத் தூக்கி அபாய அடையாளம் தந்தான். உடனே வழிகாட்டிகள் பின்புறமாக நகர்ந்தார்கள். வீரர்கள் தங்கள் துப்பாக்கிகளுடன் முன்னால் நகர்ந்தார்கள். துப்பாக்கிகளின் பூட்டுகளைத் திறந்து கொண்டு, வரிசையாக நடந்தார்கள்.

அவர்கள் பனியில் இறங்கி அந்த இடத்தை அணுகினார்கள். பனி பொழிந்து அந்தத் தடம் அழிய ஆரம்பித்திருந்தது.

அருகே சென்றதும் அது வண்டித்தடம் அல்ல என்று தெரிந்தது. அந்தச் சுவடுகள் நீள்வட்ட வடிவில் இருந்தன. வரிசையாக நீண்டு கிடந்தன. காப்டன் குனிந்து அவற்றை உற்றுப் பார்த்தான். அவனுக்கு அது என்ன என்று புரியவில்லை.

வழிகாட்டிகளில் ஒருவன் உரத்த குரலில் ஏதோ கூவினான். மற்றவன் உடனே முழந்தாளிட்டு அமர்ந்து வணங்கினான். இருவரும் மிகவும் பயப்பட்டவர்கள் போலத் தெரிந்தார்கள்.

“என்ன சொல்கிறார்கள்?” என்று காப்டன் கேட்டான்.

ராணுவ வீரர்களில் ஒருவனுக்கு லடாக் மொழி தெரியும். அவன், “சாப் இந்தத் தடத்தைக் கூர்ந்து கவனியுங்கள். இது...” என்றான்.



உடனே காப்டனுக்குப் புரிந்தது. அவன், “ஆ..!” என்று அலறிவிட்டான். அவனால் நம்பவே முடியவில்லை. அது ஒரு பெரிய பாதத்தின் தடம். மனிதர்களின் பாதத் தடத்தைவிட மூன்று மடங்கு பெரியது. சற்று தள்ளிச் சென்று பார்த்தபோது ஒரு தடம் அழியாமல் முழுமையாக இருப்பது தெரிந்தது, விரல்களின் அடையாளம் கூடத்தெரிந்தது.

அப்படியானால் இந்தப் பாதங்களுக்குரிய மனிதன் மூன்று மடங்கு உயரமானவன். அதாவது

யானையை விடவும் ஒட்டகச் சிவிங்கியை விடவும் பெரியவன். கிட்டத்தட்ட பன்னிரண்டு அடி உயரம்!

“அது பனிமனிதனின் காலடித்தடம். அவன்தான் இமயமலைகளின் காவலன்” என்றான் ஒரு ராணுவ வீரன்.

“பனி மனிதனா?”

“ஆமாம்... அவனுடைய காலடித்தடம் இங்கு அடிக்கடி தெரியுமாம். சிலர் அவனைப் பார்த்ததும் உண்டு. லடாக்கிய மக்கள் அவனை வணங்குகிறார்கள்” என்றான் அந்த ராணுவ வீரன்.

மற்ற வீரர்கள் நடுங்க ஆரம்பித்து விட்டார்கள். ஒரு வீரன், “சாப்! நாம் உடனே போய்விடுவோம்!” என்றான்.

காப்டன் தன் புகைப்படக் கருவியால் அந்தத் தடங்களைப் பல கோணங்களில் படம் எடுத்தான். மலை உச்சிகள் நீலநிறமான கண்ணாடிச் சுவர்கள் போல் மாறின. அப்படியானால் சீக்கிரமே இருட்டாகிவிடும் என்று பொருள்.

அவர்கள் வேகமாக மலை ஏறித் தங்கள் முகாமை நோக்கிப் போனார்கள்.

சீனா போர் தொடுத்தது ஏன்?

சீனாவிற்கும் இந்தியாவிற்கும் நடுவே இமயமலைத் தொடர்கள் உள்ளன. இவற்றில் சில பகுதிகள் சீனாவுக்குரியவை என்று சீனா சொன்னது. இந்தியா அதை ஒப்புக்கொள்ளவில்லை. அப்போது இந்தியப் பிரதமராக ஜவாஹர்லால் நேரு இருந்தார். சீன அதிபராக மா-சே-துங் இருந்தார்.

1962-ல் சீனா இந்தியா மீது படை எடுத்தது. இந்தியாவுக்குரிய பல மலைச் சிகரங்களை சீனா கைப்பற்றிக் கொண்டது. ஜவாஹர்லால் நேரு அமைதியை விரும்புபவர். ஆகவே, நாம் போருக்குத் தயாராக இருக்கவில்லை. சீனா கைப்பற்றிய பகுதிகள் இன்னும் சீனாவிடமே உள்ளன.

## அத்தியாயம் 2

லடாக்கின் தலைநகரம் 'லெ' என்ற ஊர் ஆகும். அங்குதான் அப்பகுதியின் ராணுவத் தலைமையகம் இருந்தது. மேஜர் பாண்டியன் காலையில் தன் அலுவலகத்துக்கு வந்தான். அவனைப் பிரிகேடியர் அழைப்பதாகத் தகவல் வந்தது.

லடாக்கில் பத்து மணிக்குத்தான் பனி விலகி விடியும். பதினொரு மணிக்குத்தான் அலுவல்கள் தொடங்கும். குளிர்காலம் ஆகையால் மதியத்திலும்கூட விடியற்காலை போலவே இருந்தது.

பிரிகேடியர் கே.கே. நாயர் தன் அறைக்குள் இருந்தார். அறை முழுக்க அவர் பிடித்த சுருட்டின் புகை நிரம்பியிருந்தது.

பாண்டியன் கதவைத் தட்டியதும் பிரிகேடியர் "உள்ளே வா" என்றார். அவன் உள்ளே போய் சல்யூட் செய்தான். அவனை பிரிகேடியர் அமரச் சொன்னார்.

பிரிகேடியர் அவர் படித்துக் கொண்டிருந்த மலையாள மொழி செய்தித்தாளை மேஜை மீது வைத்தார். பாண்டியன், "தபால் வந்துவிட்டதா?" என்றான்.

'லெ'க்கு வாரம் ஒருமுறை தான் தபால் வரும். செய்தித்தாளும் அதில்தான் வரும்.

"இல்லை, இது பழைய செய்தித்தாள். சும்மா படித்தேன்" என்றார் பிரிகேடியர்.

சொந்த ஊரைப் பிரிந்து ராணுவத்தில் இருக்கும் வீரர்கள் பழைய கடிதங்களையும், செய்தித்தாளையும் திரும்பத் திரும்பப் படிப்பார்கள். சொந்த ஊரையும் உறவினர்களையும் நினைத்து மகிழ்ச்சி அடைவார்கள்.

பிரிகேடியர் ஒரு காகித உறையை எடுத்து மேஜை மீது போட்டார். "பார், உனக்கு வேலை வந்திருக்கிறது" என்றார்.

பாண்டியன் அந்த உறையைப் பிரித்தான். உள்ளே நிறையப் புகைப்படங்கள் இருந்தன. நிற வடிகட்டி லென்சுகளைப் பயன்படுத்தி எடுக்கப்பட்ட பற்பல நிறங்கள் கொண்ட படங்கள் அவை. எல்லாவற்றிலும் ஒரே பாதத்தடம்தான் இருந்தது.

"இதை சென்ற வாரம் தேப்சாப் பள்ளத்தாக்கில் நமது ரோந்துக் குழு எடுத்தது. உடனே மேலிடத்துக்குத் தகவல் தெரிவித்துவிட்டது. இதில் உள்ள உண்மை என்ன என்று விசாரித்துக் கூறும்படி மேலிட உத்தரவு வந்திருக்கிறது" என்றார் பிரிகேடியர்.

"ராட்சசனின் பாதத் தடம் போல இருக்கிறதே" என்றான் பாண்டியன்.

"இது இமயப் பனி மனிதனின் பாதத்தடம் என்கிறார்கள். கடந்த ஐம்பது வருடங்களில் முப்பது முறை இம்மாதிரிப் பாதத்தடங்களை ராணுவத்தினர் பார்த்திருக்கிறார்கள். பதினேழு முறை புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த கோப்பில் அவை உள்ளன பார்" என்று கூறியபடி பிரிகேடியர் ஒரு கோப்பை நீட்டினார். பாண்டியன் அதைப் பிரித்துப் பார்த்தான்.

அந்தக் கோப்பில் நிறைய புகைப்படங்கள் இருந்தன. வடமேற்கு இமயமலைப் பகுதிகளில் மட்டும்தான் அவை தென்பட்டிருந்தன என்று தெரிந்தது.

''பலமுறை ஆய்வுக்குழுக்களை அனுப்பியுள்ளோம். அங்கு அவர்கள் போய் பார்த்தால்

எதுவுமே இருப்பதில்லை. அங்குள்ள மக்கள் எதுவும் பேச மாட்டார்கள். ஆகவே இந்த முறை ரகசியமாக விசாரணை செய்ய உத்தரவு வந்துள்ளது" என்றார் பிரிகேடியர்.

"இது ஏன் நம் எதிரிகள் செய்யும் தந்திரமாக இருக்கக்கூடாது? ராணுவத்தினரை மிரட்டி சில இடங்களில் ரோந்துக்குப் போகாமல் தடுப்பது அவர்கள் நோக்கமாக இருக்கலாம் அல்லவா?" என்று பாண்டியன் கேட்டான்.

"அந்தப் பனிமலையின் உச்சியில் அத்தனை எளிதாக எவரும் போய்விட முடியாது. இது உருவாக்கப்பட்ட செயற்கையான காலடித்தடம் என்றால் இதை உருவாக்கியவர்களின் காலடித்தடமும் விழுந்திருக்கும் அல்லவா?" என்றார் பிரிகேடியர்.

"உண்மைதான்" என்றான் பாண்டியன்.

"நமது விஞ்ஞானிகள் இது இயற்கையாகவே பனியில் ஏற்படும் குழிகள்தாம் என்கிறார்கள். பனிப்பாளத்தில் நீண்ட விரிசல்கள் விழுகின்றன. அந்த இடைவெளியின் மீது மென்மையான பனி பரவுகிறது. அப்போது உள்ளே சிக்கிய காற்று குளிரில் சுருங்குகிறது. உடனே வரிசையாக குழிகள் ஏற்படுகின்றன. சேற்றில் குமிழிகள் உடைந்து குழிவிழுமே அதுபோல. இதுதான் உண்மை என்று எனக்கும் படுகிறது" என்றார் பிரிகேடியர்.

"நம்பும்படியான விளக்கம்தான்" என்றான் பாண்டியன்.

"அதுமட்டுமல்ல, அந்தப் பனிமலையில் அப்படி ஒரு மனிதன் இருந்தால் அவன் எதைச் சாப்பிடுவான்? அங்கு பனியைத் தவிர வேறு எதுவுமே இல்லையே" என்றார் பிரிகேடியர்.

"உண்மைதான்" என்றான் பாண்டியன்.

"எல்லாம் லடாக் மக்களின் கற்பனைதான். அதை நமது ராணுவ வீரர்களும் கேள்விப்படுகிறார்கள். வெறும் பயம்தான். நீ போய் விசாரித்து ஒரு அறிக்கை தந்துவிடு. ஒரு வார வேலை. அவ்வளவுதான்" என்றார் பிரிகேடியர்.

பாண்டியன் அந்தப் படங்களை மீண்டும் பார்த்தான். "இல்லை சார், இது அப்படி எளிய விஷயம் அல்ல. நீங்கள் சொன்னவை எல்லாமே சரியாகத்தான் உள்ளன. ஒரு சந்தேகம் மட்டும்தான் மிச்சம்" என்றான்.

"என்ன சந்தேகம்?" என்று பிரிகேடியர் கேட்டார்.

"இந்தப் புகைப்படங்களைப் பாருங்கள். எல்லாப் பாதத் தடங்களும் ஏறத்தாழ ஒரே அளவு கொண்டவை. இயற்கையாகவே பனியில் ஏற்பட்ட குழிகள் என்றால் ஏன் இவை வேறு வேறு அளவுகளில் இல்லை?" என்றான் பாண்டியன்.

"ஆமாம். யோசிக்க வேண்டிய விஷயம்தான்" என்றார் பிரிகேடியர்.

பாண்டியன் அவரிடம் விடை பெற்றுக் கிளம்பினான். அந்தப் பாதத் தடங்களைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தான்.

லெ நகர் ஓரளவு பரபரப்பு கொள்ள ஆரம்பித்திருந்தது. தூரத்தில் பனி படர்ந்து இமயமலைத் தொடர்கள் தெரிந்தன. அங்கு அந்தப் பனி மனிதன் உண்மையிலேயே இருக்கிறானா?

பன்னிரெண்டடி உயரம்! ஒரு குட்டிப் பனைமரத்தின் அளவு! அவனை உயிருடன் பார்க்க முடிந்தால் எப்படி இருக்கும்? பாண்டியன் ஆர்வத்துடன் தன் அலுவலக அறைக்குச் சென்றான்.

கழுதைத் தபால்காரர்கள்

நம் வீட்டுக்கு தபால்களை தபால்காரர் கொண்டு வருகிறார். ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு தபால் பைகள் பேருந்தில் கொண்டு செல்லப்படுகின்றன. ஆனால் இமயமலையின்

சரிவுகளில் உள்ள பல ஊர்களுக்கு தபால் பைகள் கழுதை மீது ஏற்றி அனுப்பப்படுகின்றன. அங்கு பேருந்துகளோ பிற வண்டிகளோ போக பாதை இருக்காது. ஒரு வாரத்துக்கு ஒருமுறைதான் தபால் வரும். ஏனெனில் கழுதைகள் பக்கத்து ஊரிலிருந்து அங்கு வந்து சேர ஒரு வாரம் நடக்க வேண்டும். இதற்கு கோவேறு கழுதைகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை மிகவும் வலிமையானவை. சோர்வடையாமல் மலைகளில் ஏற இவற்றால் முடியும்.

# அத்தியாயம் 3

மாலையில் பாண்டியன் தன் வீட்டுக்குத் திரும்பினான். மூன்று அறைகள் கொண்ட சிறிய வீடு அது.

குளிர் பகுதிகளில் வீடுகளின் சுவர்கள் கற்களால் மிகவும் கனமாகக் கட்டப்பட்டிருக்கும். கற்சுவர்களுக்கு உள்ளே இன்னொரு மரச்சுவரும் காணப்படும். அதேபோல் கூரையும் இரண்டு அடுக்குகள் கொண்டதாக இருக்கும். அந்த இடைவெளியில் காற்று இருப்பதனால் வெளியே உள்ள குளிர் உள்ளே வருவது குறையும். நாம் குளிரும்போது இரண்டு சட்டைகள் போட்டுக் கொள்வது போலத்தான் இதுவும்.

குளிர்ப் பகுதிகளில் வீடுகளின் கூரை மிகவும் தாழ்வாகவும் அறைகள் சிறியதாகவும் இருக்கும். காரணம் கணப்பு வைத்து அறையைச் சூடுபடுத்தும்போது குறைவான இடத்தை மட்டும் சூடுபடுத்தினால் போதும் அல்லவா?

பாண்டியனின் வீடு ராணுவத்தால் அளிக்கப்பட்டது. அவனுக்கு சமையற்காரர், பணியாள், அலுவலக உதவியாளர் ஆகியோரும் உண்டு. அவர்களும் ராணுவ வீரர்களே. அவன் ராணுவத்தில் புலனாய்வுத் துறையில் மேஜர் பதவி வகித்தான். அது உயர்ந்த பதவி.

பாண்டியன் முப்பது வயதான இளைஞன். ஆறடி உயரமும் கரிய நிறமும் உடையவன். வலிமையான உடல் கொண்டவன். அவனுக்குத் திருமணம் ஆகவில்லை. அவனுடைய பெற்றோர் அவனுடைய சொந்த ஊரில் இருந்தார்கள். மதுரை மாவட்டத்தில் உள்ள சின்ன மங்கலம் என்ற சிறிய கிராமம்தான் அவனுடைய ஊர்.

பாண்டியன் உடைகளை மாற்றிக்கொண்ட பிறகு தன் அறைக்குச் சென்றான். கொதிக்கும் நீரில் முக்கிய துணியால் முகத்தைத் துடைத்துக்கொண்டான். குளிர்ப் பகுதிகளில் வாழ்பவர்கள் மாதம் ஒருமுறைதான் குளிப்பார்கள். அங்கு வியர்ப்பதே இல்லை. எனவே உடல் அழுக்காவது மிகவும் குறைவு.

மின்சார கணப்பை நன்கு எரிய விட்ட பிறகு, பாண்டியன் அமர்ந்து கொண்டான். தனக்கு அளிக்கப்பட்ட குறிப்புகளை எடுத்து கூர்மையாகப் படிக்க ஆரம்பித்தான்.

பிறகு இரண்டு தாள்களை எடுத்துக் கொண்டான். ஒன்றில் பனி மனிதன் உண்மையில் இல்லை என்று எழுதினான். அதற்குக் கீழே அதற்கான காரணங்களை வரிசையாக எழுதினான். இன்னொரு தாளில் பனி மனிதன் இருக்கிறான் என்று எழுதினான். அதற்குக் கீழே அதற்குரிய காரணத்தை எழுதினான். ஒரு மணி நேரம் இவ்வாறு யோசித்து எழுதினான்.

தெளிவாக யோசிப்பதற்கு இந்த முறை மிகவும் உதவிகரமானது. குழப்பமாக உள்ள விஷயங்களைப் பிரித்து எழுதிப் பார்த்தால் தெளிவு பிறக்கும்.

பனி மனிதன் இல்லை என்பதற்கு பதினெட்டு காரணங்களை எழுத முடிந்தது. உண்டு என்பதற்கு ஒரே ஒரு காரணம்தான் எழுத முடிந்தது. அந்தப் பாதத்தடங்கள். உண்மையான பாதத் தடங்களைப் போலவே இருந்தன என்பதுதான் அது.

மேலும் ஒரு தாளை எடுத்தான். அந்தப் பாதம் இயற்கையாகவே பனியில் உருவானது என்று அதில் எழுதினான். அதற்கு நான்கு காரணங்களை யோசித்துக் கீழே குறித்தான்.

இன்னொரு தாளில் அது எதிரிகளால் உருவாக்கப்படுவது என்று எழுதினான். அதற்கு ஆறு காரணங்களை எழுதினான்.

அது பனி மனிதனுடைய பாதத் தடம்தான் என்பதற்கு ஒரே காரணம்தான் இருந்தது. அந்தப் பாதத்தடம் பெரியதாக இருந்தது என்பதுதான் அது.

பாண்டியன் ஆழ்ந்து யோசித்தான். மனிதனின் பாதத்தடமே ஏன் அவ்வளவு பெரிதாக ஆகக் கூடாது? ஒருவேளை மிகப் பெரிய காலணிகளை அவன் அணிந்திருக்கலாம். மென்மையான பனியில் பதிந்த சாதாரணமான பாதத்தடம் பனி உருகும்போது விரிந்து பெரியதாக ஆகிவிட்டிருக்கலாம்.

புலனாய்வை சரியான இடத்தில் தொடங்குவது அவசியம். தவறான கருத்தை வைத்து ஆராயத் தொடங்கினால் நேரமும் உழைப்பும் வீணாகிவிடும்.

சாதாரணமான மனிதப் பாதத்தின் தடம் எப்படி மூன்று மடங்கு பெரியதாக ஆக முடியும்? அதைப் பற்றி விசாரிப்பதே சரியான தொடக்கமாக இருக்கும் என்று எண்ணினான் பாண்டியன்.

திருப்தியுடன் எழுந்து கழிப்பறைக்குப் போய்விட்டுத் திரும்பினான். குழாயை சரியாக மூடினோமா என்ற சந்தேகம் ஏற்பட்டது. திரும்பிப் பார்த்தான். அவனுடைய ஈரமான காலணியின் தடம் தரையில் பதித்து கிடந்ததைக் கண்டான்.

உடனே அவன் மனத்தில் ஓர் எண்ணம் பளிச்சிட்டது. புகைப்படங்களில் ஒன்றை எடுத்துப் பார்த்தான். அந்தப் பெரிய பாதங்களின் தடமும் பாண்டியனின் பாதத்தடமும் மிகவும் மாறுபட்டிருந்தன. அவனுடைய பாதத்தடம் வரிசையாக நேராக இருந்தது. ஆனால் அந்தப் பெரிய பாதங்களின் தடம் வெளிப்பக்கமாக விலகி விலகி இருந்தது.

அதாவது அந்தப் பெரிய பாதத்தின் தடங்கள் சற்று வெளிப்பக்கமாக விலகி இருந்தன. அந்த மனிதன் தன் கால்களை சேர்ந்து நின்றால் அந்தப் பாதத்தடம் Uஎன்று காணப்படும்.

பாண்டியன் வண்ணப் பென்சிலை எடுத்து அந்தப் பனிமனிதனின் பாதத்தடங்களைப் போலவே தரையில் வரைந்தான். பிறகு அவற்றின் மீது தன் கால்களை வைத்து நடந்து பார்த்தான்.

முதலில் ஒவ்வொரு காலாகத் தூக்கி வைத்து சிரமப்பட்டு நடக்க வேண்டியிருந்தது. பிறகு ஒரு விஷயம் தெரிந்தது. கால்களை சற்று மடக்கியபடி நடந்து பார்த்தான். இடுப்பைச் சற்று வளைத்தும் நடந்து பார்த்தான். அப்போது அவற்றின் மீது நடப்பது எளிதாக ஆயிற்று.

அப்படியானால் அந்த மனிதனால் முழுக்க நிமிர முடியாது. அவனுடைய கால்கள் குட்டையாக இருக்கக்கூடும். பாதங்கள் வெளிப்பக்கமாக விலகி இருக்கலாம்! அவன் ஆடி ஆடி நடந்து சென்றிருக்கிறான்!

அப்படி நடக்கும் மிருகம் எது? கரடி சாதாரணமாக கைகளையும் ஊன்றியபடிதான் நடக்கும். நிமிர்ந்து நடக்கும்போது அதன் முதுகு வளையாது.

அப்படியானால் குரங்கா? ஆம், கொரில்லாக் குரங்குகள்தான் அப்படி நடக்கும். பாண்டியன் தன் கால்களை மீண்டும் ஈரப்படுத்திக் கொண்டான். கொரில்லாக் குரங்கு போல கைகளை ஆட்டியபடி கால்களைப் பரப்பி வைத்து நடந்தான்.

தரையில் படிந்திருந்த அவனுடைய பாதத்தடம் பனி மனிதனின் பாதத்தடம் போலவே இருந்தது! அப்படியானால் அந்தப் பனிமனிதன் ஒரு குரங்குதான்!

பன்னிரண்டு அடி உயரமான ஒரு குரங்கு அது! அது எப்படிப் பனிமலையில் வாழ்கிறது? அங்கு அது எதைச் சாப்பிடும்? ஏன் அது ஒரு முறைகூட ஊர்களுக்குள் வரவில்லை?

பாண்டியன் உடனடியாக ராணுவப் புலனாய்வுப் பிரிவின் ஆராய்ச்சித் துறைக்கு ஒரு கடிதம் எழுதினான். அதில் கீழ்க்கண்ட தகவல்களை சேகரித்து அனுப்பும்படி எழுதினான்.

1) குரங்குகளைப் பற்றிய எல்லா தகவல்களும் உடனடியாகத் தேவை.
2) குரங்குகளைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் நிபுணர் ஒருவரை சந்திக்க வேண்டும்.
3) காஷ்மீரின் நில அமைப்பு பற்றி ஆராய்ச்சி செய்யும் ஒரு நிபுணரையும் சந்திக்க வேண்டும்.

கடிதத்தைத் தனித் தபாலில் அனுப்ப ஏற்பாடு செய்துவிட்டு பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தான். காஷ்மீரில் குளிர்காலத்தில் குளிர் மிகவும் கடுமையாக இருக்கும்.

நமது ஊரின் வெப்பநிலை ஏறத்தாழ 30 டிகிரி செல்ஷியஸ். அது 20 டிகிரி செல்ஷியஸ் ஆனால் கூட நாம் கடுமையான குளிர் என்று சொல்லிப் போர்த்திக் கொள்வோம். வெப்பநிலை 0 டிகிரி செல்ஷியஸ் ஆனால் தண்ணீர் உறைந்து பனிக்கட்டி ஆகிவிடும். காஷ்மீரில் வெப்பநிலை அதைவிடவும் குறையும். - (மைனஸ்) 22 டிகிரி செல்ஷியஸ் வரை ஆகிவிடும்.

அப்போது எவருமே பனிமலையில் ஏற மாட்டார்கள். உயிரோடு திரும்பி வருவதே சிரமம். ஆனால் பாண்டியனுக்கு துணிச்சல் அதிகம். மேலும் எல்லா வகையான பயிற்சிகளையும் அவன் பெற்றிருந்தான். எத்தனை இக்கட்டிலும் அவன் தன் கடமையைச் செய்வான்.

கார்கில் போரும் ராணுவப் புலனாய்வும்
ராணுவத்தில் தரைப்படை, வான்படை, கடற்படை என்ற மூன்று பிரிவுகள் உண்டு. ஒவ்வொன்றுக்கு உள்ளேயும் பற்பல துறைகள் உண்டு.
பாலங்களையும் சாலைகளையும் போடுபவர்கள் ராணுவப் பொறியியல் பிரிவினர். ரேடியோவையும் தொலைபேசியையும் இயக்குபவர்கள் தொலைதொடர்புப் பிரிவினர். நேரடிப் போரில் ஈடுபடுபவர்களில் காலாட் படை (இன்ஃபன்ட்ரி), பீரங்கிப்படை (ஆர்ட்டில்லரி) என்று இரண்டு வகை உண்டு. பெரிய படைகள் சென்று தாக்க முடியாத சூழ்நிலைகளில் பயிற்சி பெற்ற சில வீரர்களை மட்டும் அனுப்புவார்கள். இவர்களை அதிரடிப்படை (கமாண்டோ) என்பார்கள். எதிரியை உளவு பார்ப்பவர்கள் ராணுவப் புலனாய்வுப் பிரிவினர்.

# அத்தியாயம் 4

இரண்டு வாரம் கழித்து பாண்டியனுக்கு ராணுவ ஆய்வு மையத்திலிருந்து தபால் வந்தது. அதில் அவன் கேட்ட விபரங்கள் அனைத்தும் இருந்தன.

குரங்குகளைப் பற்றிய தகவல்கள் அவனுக்குச் சிறிதும் பயன்படாதவையாக இருந்தன. இமயமலையின் அடிவாரத்தில் மட்டுமே சிறிய வகைக் குரங்குகள் உள்ளன. மலை உச்சியில் குரங்குகள் வாழ முடியாது. காரணம் குரங்குகள் வெப்ப நிலங்களில் வாழ்பவை.

மேலும் பெரிய உடலமைப்பு உடைய குரங்குகள் எவையும் இந்தியாவில் இல்லை. சிம்பன்சி, உராங் உடான், கொரில்லா முதலியவை பெரிய குரங்குகள். அவை ஆப்பிரிக்காவிலும், ஜாவா, சுமத்ரா முதலிய தீவுகளிலும் வசிப்பவை.

பாண்டியனுக்கு ஏமாற்றமாக இருந்தது. பனிமலையின் மீது இருந்த அந்தப் பாதத்தடம் குரங்குடையதாக இருக்க வாய்ப்பே இல்லை. அப்படியானால் அது எதனுடையது?

அக் குறிப்புகளில் டாக்டர் திவாகர் என்பவரைப் பற்றிய தகவல் இருந்தது. அவர் இமயமலைப் பகுதிகளில் உள்ள மனிதர்களைப் பற்றி ஆராய்ச்சி செய்பவர். அவரைச் சந்தித்தால் புது விபரங்கள் கிடைக்கும் என்று குறிப்பில் சொல்லப்பட்டிருந்தது.

பாண்டியன், டாக்டர் திவாகரை சந்திக்கக் கிளம்பினான். அவர் வசிக்கும் மலைக் கிராமத்தின் பெயர் டா பிங். அது இருநூறு கிலோ மீட்டர் தொலைவில் இருந்தது. ஜீப்பில் பயணம் செய்து அதனருகே இருந்த ராணுவ முகாமுக்குப் போனான். அதன் பிறகு செங்குத்தான மலை மீது ஏறிச் செல்லவேண்டும். கோவேறு கழுதை மீது ஏறித்தான் அங்கு போக முடியும்.

மறுநாள் மூன்று கோவேறு கழுதைகள் கொண்டு வரப்பட்டன. அவை ராணுவத்தால் வளர்க்கப்படுபவை. கோவேறு கழுதைகள் குதிரையும் கழுதையும் கலந்தவை. அவை குதிரை போல உயரமாக இருக்கும். ஆனால் முகம் கழுதை மாதிரி இருக்கும். அதே சமயம் அவை குதிரை, கழுதை இரண்டை விடவும் வலிமையானவை. அவை மிக அதிகமான எடையைக்கூட சாதாரணமாக முதுகில் தூக்கிச் செல்லும். செங்குத்தான மலை மீது கூட ஏறும். எளிதில் களைப்படையாது.

இமயமலைப் பகுதியில் மண் கெட்டியாக இருக்காது. கிணறு வெட்டும்போது வெளியே அள்ளிப் போடப்படும் மண் போல அங்குள்ள மண் காணப்படும். உருளை வடிவமான சுண்ணாம்புக் கற்கள் கலந்த செம்மண் அது. மழை பெய்தால் அது வயல் போல சேறாகிவிடும். மலை விளிம்புகள் அடிக்கடி இடிந்து சரியும்.

கோவேறு கழுதைக்குதான் அந்த மண்ணில் கவனமாக நடக்கத் தெரியும். மண் ஆழமான சேறாக இருந்தால் அது முகர்ந்து பார்த்தே கண்டுபிடித்துவிடும். அதன் கால்களில் குளம்புகள் அகலமாக இருக்கும். எனவே அதற்குக் கால் வழுக்காது.

பாண்டியன் ஒரு கோவேறு கழுதை மீது ஏறிக் கொண்டான். இன்னொரு கோவேறு கழுதை மீது அவனுடைய பொருள்கள் அடங்கிய பொதி ஏற்றப்பட்டது. மூன்றாவது கோவேறு கழுதையின் மீது அவனுடைய வழிகாட்டுபவன் ஏறிக் கொண்டான். அவன் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவன். அந்த மலைகளில் அவர்கள் உதவி இல்லாமல் யாரும் போக முடியாது.

அந்த மலைச்சரிவில் பகலிலும் விடியற்காலை போல குறைந்த வெளிச்சம் மட்டுமே இருந்தது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பனிபடர்ந்த மலைகள் தெரிந்தன. மலைகளின் தலை மீது வெண்ணிறமான துணியைப் போட்டிருப்பது போல இருந்தது அந்த பனியைப் பார்த்தபோது.

மலைச்சரிவு முழுக்க வெறும் செம்மண்தான் இருந்தது. சில இடங்களில் சிறிய புல்வெளிகள் தெரிந்தன. அங்கு செம்மறியாடுகள் மேய்ந்தன. அவற்றை மேய்க்கும் பழங்குடி மக்கள் கூட்டமாக அமர்ந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் மண்ணாலான நீண்ட குழாய்களில் புகையிலையை அடைத்து, தீ பற்றவைத்து, புகை பிடித்தார்கள். சிறிய மூங்கில் குழாயை வாயால் ஊதி இசைத்தார்கள். அந்த இசை இனிமையாக இருந்தது.

பழங்குடியினர் வசிக்கும் பல சிறிய கிராமங்கள் அம்மலைச் சரிவில் இருந்தன. அவர்கள் அவற்றைத் தாண்டிச் சென்றார்கள். ஒரு கிராமத்தைத் தாண்டிச் சென்றபோது மணியோசை கேட்டது.

அவர்கள் விரைந்து சென்று பார்த்தார்கள். பத்து கிராமவாசிகள் ஒரு படுக்கையைத் தூக்கியபடி நடந்து போவதைக் கண்டார்கள். அவர்கள் கரிய கம்பளி உடை அணிந்திருந்தார்கள். அந்தப் படுக்கையில் ஒரு சிறுவன் கிடந்தான். அவனுக்குப் பத்து வயது இருக்கும்.

பாண்டியனுக்கு அங்குள்ள பழங்குடியினரின் மொழிகள் ஏற்கனவே கற்பிக்கப்பட்டிருந்தன. எனவே அவன் அங்கு ஆடு மேய்த்தபடி நின்ற ஒரு பழங்குடி இளைஞனிடம் பேச முடிந்தது.

“அவன் இறந்துவிட்டானா?” என்று பாண்டியன் கேட்டான்.

“இல்லை. இவன் பிசாசின் குழந்தை. அதனால் இவனை ஊருக்கு வெளியே கொண்டு வீசப் போகிறார்கள்” என்றான் அந்தப் பழங்குடி இளைஞன்.

“ஏன் இவனைப் பிசாசின் குழந்தை என்கிறார்கள்?” என்றான் பாண்டியன்.

“சென்ற மாதம் எங்கள் மேய்ச்சல் குழு ‘தெ-லிங்’ மலை மீது ஆடு மேய்க்கப் போயிற்று. வழி தவறிப் பனிமலையில் வெகுதூரம் சென்றுவிட்டார்கள். இந்தப் பையனும் இவன் தந்தையும் அக் குழுவில் இருந்தார்கள். இவனுக்குத் திடீரென்று காய்ச்சல் வந்துவிட்டது. நடக்கவே முடியவில்லை. எனவே இவனைப் பனி மலை உச்சியில் விட்டுவிட்டார்கள். மற்றவர்கள் வழி கண்டுபிடித்துத் திரும்பி வந்து விட்டார்கள். இருபது நாள் கழித்து, இந்தப் பையன் திரும்பி வந்துவிட்டான்” என்றான் அந்த இளைஞன்.

“தனியாகவா?” என்று பாண்டியன் கேட்டான்.

“ஆமாம். இன்று காலையில் நாங்கள் வீடுகளை விட்டு வெளியே வந்தபோது இவனைப் பார்த்தோம். கணப்புச் சாம்பலில் தூங்கிக் கொண்டிருக்கிறான். பிசாசுகளின் உதவி இல்லாமல் எப்படி ஒரு சிறுவன் திரும்பி வர முடியும்?”

“மிகவும் ஆச்சரியம்தான்” என்றான் பாண்டியன்.

“பிசாசுகள் இவனைப் பின்தொடர்ந்து ஊருக்குள் வந்துவிடும். ஆகவேதான் மலைக் கடவுள்களுக்கு இவனைப் பலி தரப் போகிறோம்” என்றான் இளைஞன்.

“நாம் இவர்களைப் பின்தொடர்ந்து போகலாம்” என்றான் பாண்டியன் வழிகாட்டியிடம்.

“வேண்டாம்! ஆபத்து!” என்று வழிகாட்டி பயப்பட்டான்.

“நாம் இவனைக் காப்பாற்றியாக வேண்டும். இதில் ஏதோ மர்மம் இருக்கிறது. அதை நாம் கண்டிப்பாக அறிந்தாக வேண்டும்.” பாண்டியன் உறுதியாகச் சொன்னான்.

இமயமலை கடலாக இருந்தது

ஏறத்தாழ 30 கோடி ஆண்டுகளுக்கு முன்பு தென் அமெரிக்காவும் ஆப்பிரிக்காவும் இணைந்து ஒரே கண்டமாக இருந்தது. அதை கோண்ட்வானா கண்டம் என்கிறார்கள். இந்திய நிலப்பகுதி 'கோண்ட்வானா'வில் இணைந்திருந்தது. ஆசியாவும் ஐரோப்பாவும் ஒன்றாக இருந்தன. காலப்போக்கில் பூமி குளிர்ந்தபோது அதன் மேற்பகுதி உலர்ந்து பலவிதமாகப் பிரிந்தது. இந்திய நிலப்பகுதி பிரிந்து வந்து ஆசியாக் கண்டத்தில் முட்டியது. அந்த அழுத்தத்தில் நிலப்பகுதி வளைந்து மேலெழுந்தது. அது மலைத் தொடராக ஆயிற்று. அதுவே இமயமலை. அங்கிருந்த கடல் விலகியது.

அதாவது இன்றைய இமயமலைப் பகுதி முன்பு கடலுக்கு அடியில் இருந்தது. இமயமலையில் பல சிகரங்களில் கடல் மீன்களின் ஓடுகள் இப்போதும் கிடைக்கின்றன.

இதனால்தான் இமயமலைப் பகுதியின் மண் சுண்ணாம்பு கலந்து மென்மையானதாக உள்ளது. தென்னிந்திய மண் உறுதியான கரிய பாறைகளினால் ஆனதாக உள்ளது.

இப்போதும் இமயமலைகள் மெல்ல உயர்ந்து கொண்டே இருக்கின்றன. அப்பகுதியில் தொடர்ந்து பூகம்பங்கள் நடப்பது இதனால்தான்.

# அத்தியாயம் 5

சிறுவனைச் சுமந்து சென்றவர்களை அவர்கள் அறியாமல் பாண்டியனும் வழிகாட்டியும் பின்தொடர்ந்து சென்றார்கள். ஒரு சிறு குன்றை அடைந்ததும் பாண்டியன் நின்றான். குன்று மீது ஏறி என்ன நடக்கிறது என்று கவனித்தான்.

அந்தக் குன்றுக்கு அப்பால் ஒரு பெரிய குகை இருந்தது. அதன் முகப்பில் கட்டில் போல ஒரு பாறை இருந்தது. அதன் அருகே பீடம் போல ஒரு சிறு பாறையும் இருந்தது.

சிறுவனைத் தூக்கிச் சென்றவர்கள் அவனை அந்தப் பெரிய பாறைமேல் படுக்க வைத்தார்கள். பூசாரி போல இருந்த ஒருவன் சிறிய பாறை மீது ஏறி நின்றான். அவன் கையில் ஒரு தடி வைத்திருந்தான்.

பூசாரி உரத்த குரலில், "மலைத்தேவதைகளே!" என்று கூவினான்.

உடனே எதிர்ப்பக்கம் இருந்த மலையிலிருந்து ஒரு பதில் குரல் கேட்டது. பிறகு இன்னொரு மலையுச்சியிலிருந்து இன்னொரு பதில் குரல் கேட்டது. ஒவ்வொரு மலையிலிருந்தும் குரல்கள் கேட்டபடியே இருந்தன.

"மலைத் தேவதைகள் பேசுகின்றன!" என்று வழிகாட்டி பதறினான். "நான் போகிறேன். எனக்கு பயமாக இருக்கிறது!" என்று ஓடப் பார்த்தான்.

"இரு!" என்று பாண்டியன் கோபமாகச் சொன்னான். வழிகாட்டி நின்றான்.

பூசாரி "இவனைப் பலியிடவா?" என்று கத்தினான்.

மலைகள் மாறி மாறிப் பதில் கூறின.

அவர்கள் அனைவரும் தரையில் விழுந்து வணங்கினார்கள். பின்பு பின்னால் திரும்பிப் பார்க்காமல் விரைந்து நடந்து விலகினார்கள்.

"காலையில் அந்தப் பாறை மீது எலும்புகள் மட்டும்தான் கிடக்கும். மலைத் தேவதைகள் அவனைத் தின்றுவிடும்!" வழிகாட்டி பயத்தில் நடுங்கியபடிச் சொன்னான்.



அவர்கள் அனைவரும் சென்றதும் பாண்டியன், “வா, நாம் அந்தச் சிறுவனைக் காப்பாற்றுவோம்” என்றான்.

“அய்யோ! ஆபத்து! மலைத் தேவதைகள் நம்மையும் தின்று விடும்” என்று வழிகாட்டி கூவினான்.

“உடல்களைத் தின்பவை தேவதைகள் அல்ல. வானத்தைப் பார் புரியும்” என்ற பாண்டியன்

வானத்தைக் காட்டினான்.

வானத்தில் சிறு சிறு கரிய புள்ளிகள் தென்பட்டன. அவை மெல்ல மெல்லப் பெரிதாயின. அவை மலைக் கழுகுகள் என்று தெரிந்தது. மிகப் பெரிய பறவைகள்! அவை பறந்து வந்தபடியே இருந்தன.

வழிகாட்டி பயந்து, தலையைப் பிடித்தபடி அமர்ந்துவிட்டான். “மலைக் கழுகுகள்!” என்று கூவினான்.

“ஆம். மலைப் பொந்துகளில் வசிப்பவை அவை. இந்தப் பாறை மீது இரை வைக்கப்பட்ட உடனே அவை வந்துவிடும்” என்றான் பாண்டியன்.

வழிகாட்டி, “இவை மலைப் பிசாசுகளை விடவும் பயங்கரமானவை! இரை கிடைக்கவில்லை என்றால் நம்மையும் கோவேறு கழுதைகளையும்கூடத் தின்றுவிடும்” என்றான்.

பாண்டியன் துப்பாக்கியை உருவினான்.

“கழுகுகள் நூற்றுக்கணக்காக உள்ளன. எத்தனை கழுகுகளைச் சுட முடியும்? இந்த வெட்டவெளியில் ஓடி ஒளியக்கூட இடமில்லை” என்று வழிகாட்டி அலறினான்.

கழுகுகள் வானில் பெருகிவிட்டன. சில பறவைகள் சிறு விமானம் போல ‘சர்ர்’ என்று தாழ்ந்து பறந்துவிட்டு எழுந்தன. கோவேறு கழுதைகள் பயந்து கனைத்தபடி குதித்தன.

“வழி இருக்கிறது” என்று பாண்டியன் கூறினான். ஓடிப்போய் அந்தக் கல் பீடம் மீது ஏறி நின்றான்.

அவன் ஊகித்தது சரிதான். அந்தக் குகை ஒரு ஒலி பெருக்கியின் வாய் போல இருந்தது. அந்தப் பாறை மீது நின்று எந்த ஒலியைக் கிளப்பினாலும் அந்த ஒலி பல மடங்காகப் பெருகும். மலைகள் மீது பட்டு எதிரொலி கேட்கும். மீண்டும் மீண்டும் மலைகளில் அந்த எதிரொலி கேட்கும்.

பாண்டியன் துப்பாக்கியால் வானை நோக்கிச் சுட்டான். வெடியோசை பயங்கரமாக எழுந்தது. சிறிது நேரம் கழித்து எதிரில் இருந்த மலைச்சிகரத்தில் பெரிய வெடியோசை கேட்டது. பிறகு இன்னொரு மலை மீது அதே ஒலி கேட்டது. தொடர்ச்சியான இடியோசை போல ஒலி எழுந்தபடியே இருந்தது.

கழுகுகள் பயந்து, கலைந்து சிதறின. “வ்வாக்! வ்வாக்!” என்று காது செவிடாகும்படிக் கூவின. திசை தவறிப் பறந்து விலக ஆரம்பித்தன.

பாண்டியன் அந்தச் சிறுவனைத் தூக்கியபடி ஓடி வந்தான். கோவேறு கழுதைகள் பயந்து நின்றிருந்தன. ஒரு கோவேறு கழுதை மீது சிறுவனை வைத்து, பெல்ட்டால் கட்டினான். கோவேறு கழுதை கால்களை உதைத்தது. அதன் உடம்பு சிலிர்த்தது. பாண்டியன் அதன் பின்னந்தலையில் காதுகளுக்கு நடுவே சொறிந்து, தட்டிக் கொடுத்தான். அது சமாதானம் அடைந்தது.

அவர்கள் மிக வேகமாக விலகிச் சென்றார்கள். சீக்கிரமே இருட்டிவிட்டது. கடுமையாகக் குளிர் அடிக்க ஆரம்பித்தது.

அந்தச் சிறுவனின் உடம்பு மிகவும் சூடாக இருந்தது. அவனுக்குக் கடுமையான காய்ச்சல் என்று தெரிந்தது.

இருட்டில் வழி கண்டுபிடிக்கச் சிரமமாக இருந்தது. பாண்டியன் வானத்தைப் பார்த்தான். நட்சத்திரங்களை வைத்து திசை கண்டுபிடிக்க அவனுக்குத் தெரியும். ஆனால் வானில் நட்சத்திரங்களே இல்லை.

“வழி தெரியுமா?” என்றான் பாண்டியன் வழிகாட்டியிடம்.

“இருட்டி விட்டதே!” என்று வழிகாட்டி தயக்கமாக பதில் சொன்னான்.

இருட்டில் எதுவும் தெரியவில்லை. இன்னும் சற்று நேரத்தில் கடுமையான குளிர் ஏற்படும். குளிர்ந்தே சாக வேண்டியதுதான். என்ன செய்வதென்றே தெரியவில்லை.

அப்போது மேற்குத் திசையிலிருந்து காற்று வீச ஆரம்பித்தது.

வழிகாட்டி “ஆ! வழி கிடைத்துவிட்டது!” என்றான்.

“எப்படி?” என்றான் பாண்டியன்.

“வாருங்கள்!”என்று வழிகாட்டி நடந்தான்.

மெதுவாக விஷயம் பாண்டியனுக்கும் புரிந்தது. மேற்கே எங்கிருந்தோ சாம்பிராணி வாசம் வந்தது. அதை வைத்துத்தான் வழிகாட்டி வழி கண்டுபிடித்திருக்கிறான்!

சாம்பிராணி வாசனையை முகர்ந்து பார்த்தபடி அவர்கள் நடந்தார்கள்.

தொலைவில் ஒரு தீச்சுடர் தெரிந்தது.

“அதுதான் டா பிங் கிராமம்” என்றான் வழிகாட்டி.

மலைக்கிராமங்களில் ஊர் நடுவே பெரிய குழி இருக்கும். அதில் விறகைக் குவித்து, தீ மூட்டி, இரவெல்லாம் எரிய விடுவார்கள். அந்தத் தீயைச் சுற்றித்தான் அவர்களுடைய ஆடு, மாடுகள் கட்டப்பட்டிருக்கும். அவை அத்தீயில் குளிர் காயும். ஓநாய் முதலியவை ஆடு மாடுகளைப் பிடிக்க வராமல் அந்தத் தீ தடுக்கும். வழிதவறிப் போனவர்கள் தூரத்திலிருந்தே தீயை அடையாளம் கண்டு வந்துவிடலாம்.

அருகே சென்றபோதுதான் அது எவ்வளவு பெரிய தீ என்று தெரிந்தது. பெரிய மரத்தடிகளைக் குவித்து, எரிய விட்டிருந்தார்கள். தீ ஆளுயரத்துக்கு எரிந்தது.

ஊரை நெருங்க நெருங்க சாம்பிராணி வாசனை வலுத்தது. ஊரே சாம்பிராணிப் புகையில் மூழ்கி இருந்தது. அதற்குக் காரணம் அப்போதுதான் பாண்டியனுக்குப் புரிந்தது.

அங்கு எரிவது தேவதாரு மரம்! அந்த மரத்திலிருந்துதான் சாம்பிராணி எடுக்கப்படுகிறது. மிகவும் விலை உயர்ந்த மரம் அது. அதை விறகாக எரிக்கிறார்கள்!

“தேவதாருவையா எரிக்கிறார்கள்?” என்று பாண்டியன் வியப்புடன் கேட்டான்.

“என்ன செய்வது? இங்குள்ள காட்டில் வேறு பெரிய மரங்களே இல்லையே?” என்றான் வழிகாட்டி.

அவர்கள் ஊரின் முகப்புக்கு வந்து சேர்ந்தார்கள்.

ஒரே ஒலி பல எதிரொலி
இங்கிலாந்தில் உள்ள உட்ஸ்டாக் என்ற கோட்டையில் ஓர் இடத்தில் ஓர் ஒலி, பதினேழு முறை எதிரொலிக்கும். செக்கோஸ்லோவாகியாவில் ஆதர்ஸ்பாக் அருகே ஒரு பாறைப் பகுதியில் ஓர் ஒலி, ஏழு முறை எதிரொலிக்கும். இவை புகழ்பெற்ற சுற்றுலாத் தலங்கள். எப்படி இது நிகழ்கிறது? நமது ஒலி ஒரு திடப்பரப்பில் பட்டு, திரும்பி நமது காதுக்கு வந்து சேர்ந்தால் எதிரொலி கேட்கிறது. அந்த ஒலி ஒரு திடப்பரப்பில் பட்டு, அங்கிருந்து இன்னொரு திடப்பரப்புக்கு சென்று, பிறகு நம் காதை வந்து அடைந்தால் இரண்டு எதிரொலிகள் கேட்கின்றன. அவ்வாறு மூன்று பரப்புகளில் பட்டால் மூன்று எதிரொலிகள் கேட்கும்.

# அத்தியாயம் 6

அந்த ஊரைச்சுற்றி பெரிய பாறைகளை அடுக்கி சுவர் போலக் கட்டியிருந்தார்கள். ஒரேயொரு வாசல் இருந்தது. அது பெரிய மரக்கதவால் மூடப்பட்டு இருந்தது.

தீயைக் கண்டதும் கோவேறு கழுதைகள் முன்னால் ஓடின. அந்த மரக்கதவில் முட்டியபடி கனைத்தன. உடனே உள்ளே பல கோவேறு கழுதைகள் கனைத்தன. மலைப்பசுக்களும் செம்மறியாடுகளும் குரல் எழுப்பின.

உள்ளே சிலர் விளக்கை ஏற்றுவது தெரிந்தது. இருவர் கையில் அரிகேன் விளக்குடன் வந்தார்கள். "யாரது?" என்றார்கள்.

பாண்டியன் முன்னால் நகர்ந்து தன் அடையாள அட்டையைக் காட்டினான். "நான் பாண்டியன். டாக்டர் திவாகரைப் பார்க்க வந்திருக்கிறேன்" என்றான்.

அவர்கள் அடையாள அட்டையை வாங்கினார்கள். விளக்கருகே வைத்து நுட்பமாகப் பரிசோதனை செய்தார்கள். பிறகு ஒருவன், "சரி, உள்ளே வாருங்கள்" என்றான்.

பாண்டியனும் கோவேறு கழுதைகளும் திறந்த வாசல் வழியாக நுழைந்தார்கள். அப்போதுதான் இருட்டில் மேலும் இருவர் நிற்பதை பாண்டியன் கண்டான். அவர்கள் கையில் புதிய நவீன வகையிலான ரைஃபிள்கள் எனப்படும் குழாய் துப்பாக்கிகள் இருந்தன.

அவனை அவர்கள் டாக்டர் திவாகரின் வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். கதவைத் தட்டியபோது டாக்டர் விளக்குடன் வந்து திறந்தார்.

டாக்டர் திவாகருக்கு ஐம்பது வயது இருக்கும். மீசை இல்லாத வட்ட வடிவமான முகம். தடிமனான கண்ணாடி போட்டிருந்தார்.

"யார் நீங்கள்?" என்றார் டாக்டர்.

பாண்டியன் அடையாள அட்டையையும், ராணுவ ஆராய்ச்சிப் பிரிவினர் அளித்த கடிதத்தையும் நீட்டினான்.

டாக்டர் அவற்றைப் படித்தார். "உள்ளே வாருங்கள்!" என்றார்.

"இந்தச் சிறுவனுக்கு உடல்நிலை சரியில்லை டாக்டர்" என்றான் பாண்டியன்.

"என்ன ஆயிற்று?" என்று டாக்டர் கேட்டார்.

பாண்டியன் நடந்தவற்றை அவரிடம் சுருக்கமாகச் சொன்னான்.

"உள்ளே கொண்டு வந்து படுக்க வையுங்கள்" என்று டாக்டர் சொன்னார்.

வீட்டுக்குள் மூங்கிலால் செய்யப்பட்ட கட்டில் இருந்தது. அதில் சிறுவனைப் படுக்க வைத்தான் பாண்டியன்.

வழிகாட்டியைக் கிராமவாசிகள் கூட்டிச் சென்றார்கள். டாக்டர் சிறுவனைப் பரிசோதித்தார். "நிமோனியா என்று நினைக்கிறேன். ஆனால் காய்ச்சல் குறைய ஆரம்பித்துவிட்டது. உடம்பு வியர்ப்பது தெரிகிறது. எனவே சீக்கிரமே சரியாகி விடுவான்" என்று டாக்டர் சொன்னார்.

பாண்டியன் தன் தோல்பையைத் திறந்து புதிய உடைகளை எடுத்தான். அவற்றை மாட்டிக் கொண்டு உட்கார்ந்தான்.

கிராமவாசிகள் ஒரு மண்கலயத்தில் சூடாக ஒரு கூழ் கொண்டு வந்து தந்தார்கள். ஆட்டுப்பாலில் ஓட்ஸ் மாவைப் போட்டுச் செய்தது. அது மிகவும் சூடாகவும் ருசியாகவும் இருந்தது. அதை அருந்தியதும் பாண்டியனுக்குத் தெம்பாக இருந்தது.

“நாம் படுத்துக் கொள்வோம்” என்றார் டாக்டர். பாண்டியன் தன் தூங்கும் பையை எடுத்தான். உயர்தர நைலானால் செய்யப்பட்டது அந்தப் பை. அதற்குள் கம்பிளி பதிக்கப்பட்டிருந்தது. உள்ளே போய் காலை நீட்டிப் படுத்தான். ஜிப்பை இழுத்து, கழுத்து வரை மூடிக் கொண்டான். குளிருக்கு இதமாக இருந்தது.

“இந்தப் பையன் எப்படி பனி மலையிலிருந்து தனியாக வந்திருக்க முடியும்?” என்று பாண்டியன் கேட்டான்.

“அதுபோலப் பல சம்பவங்கள் இங்கு நடந்துள்ளன. பனியில் கைவிடப்படுபவர்களைப் பனிமனிதன் காப்பாற்றுவதாகச் சொல்கிறார்கள்” என்று டாக்டர் திவாகர் சொன்னார்.

“உண்மையாகவா?” என்றான் பாண்டியன்.

“ஆமாம்! பல குழந்தைகள் அவ்வாறு திரும்ப வந்து சேர்ந்துள்ளன. ஆனால் குழந்தைகளை மட்டும்தான் பனிமனிதன் காப்பாற்றுகிறான்” என்றார் டாக்டர்.

“அப்படியானால் அந்த கிராமத்தினர் ஏன் பிசாசுகள் இவனைக் கொண்டு வந்தன என்று நம்பினார்கள்?” என்றான் பாண்டியன்.

“அவர்களுக்குப் பனி மனிதனைப் பற்றி அதிகம் தெரியாது. இந்தக் கிராமத்திலும் பக்கத்து கிராமத்திலும்தான் அப்படி நம்புகிறார்கள்.” டாக்டர் விளக்கினார்.

“பனி மனிதனை யாராவது பார்த்திருக்கிறார்களா?” என்று பாண்டியன் கேட்டான்.

“குழந்தைகள்தான் பார்த்திருக்கின்றன. ஆனால் அவற்றால் விளக்கமாகக் கூற முடியவில்லை. பாதத் தடங்களை மட்டும்தான் பெரியவர்கள் பார்த்திருக்கிறார்கள். இப்பகுதியில் கடந்த இருபது ஆண்டுகளில் நூற்றுப் பதினேழு முறை அத்தகைய பாதத்தடங்கள் தென்பட்டுள்ளன” என்றார் டாக்டர்.

“அடேயப்பா!” என்று பாண்டியன் வியந்தான்.

“அவற்றை நான் திரட்டிப் பதிவு செய்து வைத்திருக்கிறேன். கடந்த ஆறு ஆண்டுகளாக இங்கு தங்கியிருக்கிறேன்.” டாக்டர் சொன்னார்.

“எதற்கு?” என்றான் பாண்டியன்.

“ஆராய்ச்சிக்கு” என்றார் டாக்டர்.

“என்ன ஆராய்ச்சி?” பாண்டியன் கேட்டான்.

“நாளைக்குச் சொல்கிறேன். இப்போது தூங்குவோம்” என்று டாக்டர் கொட்டாவி விட்டார்.

பாண்டியனும் தூங்கிவிட்டான்.

காலையில் எழுந்ததும் பாண்டியன் அந்த வீட்டைத்தான் முதலில் கவனித்தான். சாதாரணமாக வீடுகள் சதுர வடிவிலோ, செவ்வக வடிவிலோதான் இருக்கும். அந்த வீட்டின் உட்புறம் ஒரு பெரிய பானையின் உட்புறம் போல இருந்தது. நிறம்கூடப் பானை போல சிவப்புதான்.

பாண்டியன் வீட்டை விட்டு வெளியே வந்தான். அந்தக் கிராமத்தின் வீடுகள் அனைத்துமே

பெரிய பானைகளைக் கவிழ்த்து வைத்தது போல இருந்தன.

ஒரு கிராமவாசி பாண்டியனிடம் பொதுக் குளியலறைக்குப் போய் பல் தேய்க்கும்படிச் சொன்னான். கிராமத்தின் கிழக்குப் பக்கம் பொதுக் குளியலறை இருந்தது.

பாண்டியன் அங்கே டாக்டர் நிற்பதைக் கண்டான். அவனைப் பார்த்ததும் டாக்டர் காலை வணக்கம் சொன்னார்.

“விசித்திரமான கிராமம்” என்றான் பாண்டியன்.

“இங்கு நான் வந்தபோது இவர்களும் பிறரைப் போலத்தான் இருந்தார்கள். கற்களை அடுக்கி வீடுகளைக் கட்டியிருந்தார்கள். இமயமலைப் பகுதியில் சிறு பூகம்பங்கள் நடந்தபடியே இருக்கும். பயங்கரமான வேகத்தில் காற்று வீசும். வீடுகள் இடிந்து ஆட்கள் சாவது சகஜமாக இருந்தது. அதனால்தான் வீடுகளை இப்படி வடிவமைத்தேன்” - டாக்டர் சொன்னார்.

“இதை எப்படிக் கட்டுகிறீர்கள்?” என்று பாண்டியன் கேட்டான்.

“இந்த வீடுகள் வெறும் களிமண்ணை மட்டும் வைத்துக் கட்டப்பட்டவை. களிமண்ணைப் பிசைந்து அச்சுகளில் வைத்து அழுத்தி சிறு சட்டிகள் செய்வோம். அந்தச் சட்டிகளை உலர வைத்து எடுப்போம். அவற்றை செங்கல் மாதிரி அடுக்கி வைத்துச் சுவராகக் கட்டுவோம்... இதோ இப்படி” என்று டாக்டர் வரைந்து காட்டினார்.

“பிறகு?” என்றான் பாண்டியன்.

“கூரையைத் தனியாக செய்ய மாட்டோம். சுவர்களையே வளைவாகக் கட்டிக் கூரையாக மாற்றுவோம். சுவர்கள் மீது களிமண்ணைக் குழைத்துப் பூசுவோம். ஒரு பெரிய பானையைக் கவிழ்த்தது போல அது இருக்கும். பிறகு வீட்டுக்குள் நிறைய விறகைக் கொட்டித் தீ வைப்போம். வீடு அப்படியே வெந்து, சிவந்துவிடும்” - டாக்டர் சொன்னார்.

“சூளையில் மண்பானை செய்வது போலவா?” - பாண்டியன் கேட்டான்.

“ஆமாம்... இந்த வீடுகள் பெரிய பானைகள்தாம்... சுவருக்குள் சட்டிகளில் காலியிடம் இருக்கிறது. எனவே வெளியே உள்ள குளிர் உள்ளே வராது. இது கனமில்லாத வீடு. ஆகையால் இடிந்து விழுந்தாலும் காயம் ஏற்படாது. இது ஒரே மண்பாண்டம். ஆதலால் எளிதில் இடியாது. உருண்டை வடிவமாக இருப்பதால் பலத்த காற்று வீசினாலும் உடையாது” என்றார் டாக்டர் திவாகர்.

“வியப்பாகத்தான் இருக்கிறது!” என்றான் பாண்டியன்.

“சாப்பிட்ட பிறகு நாம் ஆய்வுச்சாலைக்குப் போவோம். நான் ஆராய்ச்சி செய்வதை விரிவாகக் கூறுகிறேன்” என்றார் டாக்டர்.

களிமண் போதும்; சிமெண்ட் வேண்டாம்!
டாக்டர் லாரி பேக்கர் அயர்லாந்தைச் சேர்ந்தவர். இவர் ஒரு கட்டட நிபுணர். காந்திஜி மேல் ஈடுபாடு உடையவர். எனவே இந்தியாவுக்கு வந்து இந்தியக் குடிமகன் ஆனார். திருவனந்தபுரத்தில் வசித்த இவர் 2007ல் இறந்துபோனார்.
இந்தியாவில் உயர்தரக் களிமண்ணும் சுண்ணாம்பும் கிடைக்கிறது. வலிமையான கட்டடங்கள் கட்ட இவையே போதும். ஐரோப்பாவில் நல்ல களிமண் இல்லாததனால்தான் ஐரோப்பியர்கள் சிமெண்டைக் கண்டுபிடித்தார்கள் என்பது இவர் கருத்து.
வெறும் களிமண்ணால் செலவு குறைவான, மிக உறுதியான வீடுகளை இவர் கட்டிக் காண்பித்தார். கேரள அரசு, நிர்மிதி கேந்திரம் என்ற அமைப்பின் தலைவராக இவரை நியமித்தது. சிமெண்டே இல்லாமல் பலமாடிக் கட்டடங்களை இவர் எழுப்பியிருக்கிறார். இந்திய அரசு இவருக்கு பத்மஸ்ரீ விருது அளித்து கௌரவித்தது.

# அத்தியாயம் 7

பல் தேய்த்து முடிந்ததும் அவர்கள் பொது உணவுக்கூடத்துக்குச் சென்றார்கள். அந்தக் கிராமத்தில் தனித்தனியாக யாரும் சமைப்பதில்லை. ஒன்றாக சமைத்து சேர்ந்து உண்பார்கள். அங்குள்ள ஆடு மாடுகள் கூட அனைவருக்கும் பொதுவானவைதான்.

தீயில் சுடப்பட்ட பார்லி மாவு அப்பமும் செம்மறியாட்டுப் பாலும்தான் உணவு. மிகவும் சுவையாக இருந்தது. கிராமவாசிகள் கிட்டத்தட்ட நூறு பேர் இருந்தார்கள். அதில் பத்தொன்பது குழந்தைகளும் உண்டு.

“இவர்களுக்கு ரைஃபிள்கள் எப்படிக் கிடைத்தன?” என்றான் பாண்டியன்.

“ராணுவம் அளிப்பதுதான். ராணுவம் இவர்களுக்கு மருந்துகளும் உடைகளும்கூட இலவசமாக அளிக்கிறது. இவர்கள் நம் எல்லைப் பகுதிக்கு பாதுகாப்பு அல்லவா? இவர்கள் உதவி இல்லாமல் யாருமே இந்த மலைப்பகுதியில் நடமாட முடியாது” - டாக்டர் திவாகர் சொன்னார்.

சாப்பாடு முடிந்து அவர்கள் டாக்டரின் ஆய்வுச் சாலைக்குச் சென்றார்கள். அங்கு பலவகையான வரைபடங்களும் புகைப்படங்களும் காணப்பட்டன. நிறைய நூல்கள் இருந்தன. பாண்டியன் புகைப்படங்களை எடுத்துப் பார்த்தான். எல்லாப் புகைப்படங்களிலும் பனி மனிதனின் பாதத்தடம் மட்டுமே இருந்தது.

“இதுவரைக்கும் கிடைத்த தகவல்கள் இந்த பாதத்தடங்கள் மட்டுமே” என்றார் டாக்டர்.

“இவை குரங்கின் பாதத்தடங்கள்தானே?” என்றான் பாண்டியன்.

“எப்படிச் சொல்கிறீர்கள்?” என்றார் டாக்டர்.

“பாதங்கள் வெளிப் பக்கமாக திரும்பியிருக்கின்றன. அதை வைத்துச் சொன்னேன்” என்றான் பாண்டியன்.

“கிட்டத்தட்ட சரிதான். பனிமனிதனைப் பார்த்த குழந்தைகள் எல்லாமே அவன் குரங்கு போல நடந்ததாகக் கூறுகின்றன. அதற்குக் காரணம் என்ன தெரியுமா?” - டாக்டர் கேட்டார்.

“தெரியாது” என்றான் பாண்டியன்.

“இரண்டு காரணங்கள் உள்ளன. இந்தப் பாதத்தடங்களைக் கூர்ந்து பாருங்கள். என்ன தெரிகிறது?” என்றார் டாக்டர்.

பாண்டியனுக்கு ஏதும் தெரியவில்லை.

“மனிதனுடைய பாதங்களின் நடுவே ஒரு வளைவு உண்டு. அது இருப்பதனால்தான் அவனால் தரையைப் பற்றியபடி நிற்க முடிகிறது. எம்பி காலெடுத்து வைத்து நடக்கவும் முடிகிறது. ஆனால் இந்தப் பாதத்தடத்தில் அந்தக் குழி இல்லை. இந்தப் பாதத்தடம் மொத்தையாக இருக்கிறது” என்று டாக்டர் சுட்டிக்காட்டினார்.

“ஆமாம்” என்றான் பாண்டியன் வியப்புடன். அவன் அதைக் கவனிக்கவேயில்லை.

“மனிதனின் மிகச் சிறப்பான அம்சம் இதுதான். எனவே உயிரினங்களில் மனிதன் மட்டும்தான்

நிமிர்ந்து நேராக நடக்க முடியும்." டாக்டர் சொன்னார்.

"இந்தப் பனி மனிதன் நடக்க மாட்டானா?" பாண்டியன் கேட்டான்.

"நடப்பான். ஆனால் கால்களை நன்றாகப் பரப்பி வைத்தால் தான் அவனால் நடக்க முடியும். அதனால்தான் கால்களை இப்படித் திருப்பி வைத்து நடக்கிறான்." டாக்டர் சொன்னார்.

"சரி, இன்னொரு காரணம் என்ன?" என்றான் பாண்டியன்.

டாக்டர் ஒரு படத்தை எடுத்துக் காட்டினார். அது ஒரு சிம்பன்சிக் குரங்கின் படம். "இதன் கால்களைப் பாருங்கள். இதன் தொடையின் நீளம் அதிகம். முழங்கால் குட்டையானது. எனவே இதன் கால்கள் இரண்டு அடைப்புக் குறிகள் போல வளைந்து இருக்கின்றன. இதோ இப்படி...( )" என்று டாக்டர் வரைந்து காட்டினார்.

"ஆமாம்" என்றான் பாண்டியன்.

"அதனால் இதன் பாதங்கள் வெளிப்பக்கமாகத் திரும்பியிருக்கின்றன. பனி மனிதனின் கால்களும் இப்படித்தான் இருக்கின்றன என்று படுகிறது. அதனால்தான் அவனும் ஆடி ஆடி நடக்கிறான்." டாக்டர் கூறினார்.

"அப்படியானால் நான் கூறியது சரிதான். அது ஒரு மனிதக் குரங்குதான்" - பாண்டியன் கூறினான்.

"இல்லை. இன்னொரு ஆதாரம் இருக்கிறது" என்றார் டாக்டர். மேஜைக்கு உள்ளே இருந்து ஒரு வெண்ணிறமான தகடை எடுத்து வைத்தார். அது வளைவாக இருந்தது.

பாண்டியனுக்கு அது என்ன என்று புரியவில்லை. தொட்டுப் பார்த்தான். வழவழப்பாக இருந்தது. ஒரு பெரிய பீங்கான் கோப்பையின் உடைசல் அது என்று தோன்றியது.

"இது ஒரு எலும்பு. மண்டையோட்டின் ஒரு பகுதி. பனிமலையில் இதை போன வருடம்தான் தோண்டி எடுத்தேன்" என்றார் டாக்டர்.

"இதை வைத்துக் கொண்டு என்ன செய்வது?" என்றான் பாண்டியன்.

"மண்டை ஓடுகளை வைத்துக்கொண்டு மனித இனத்தை ஆராய்ச்சி செய்யலாம். அதற்கு மண்டை ஓட்டியல் என்று பெயர். இந்த மண்டை ஓட்டுத்துண்டை வைத்து முழு மண்டை ஓட்டையும் நாம் வரைந்து விடலாம். இதோ பாருங்கள்" என்று டாக்டர் ஒரு வரைபடத்தை எடுத்தார்.

அந்த வரைபடத்தில் சிவப்பு நிறத்தில் மண்டையோட்டுத் துண்டை பக்கவாட்டில் வரைந்திருந்தார்.

நீலநிறத்தில் அதை மேலும் வரைந்து முழுமைப்படுத்தியிருந்தார் டாக்டர். மொத்தமான ஒரு மண்டை ஓட்டின் வரைபடம் உருவாகியது.

பாண்டியன் வியப்புடன் அதைப் பார்த்தான். டாக்டர் இன்னொரு வரைபடத்தை எடுத்தார். "இதைப் பாருங்கள். இது ஒரு சிம்பன்சி மண்டை ஓடு." இரண்டுக்கும் என்ன வித்தியாசம் தெரிகிறது?" என்று டாக்டர் கேட்டார்.

"இதன் முகவாய் மேலும் நீளமாக இருக்கிறது. பனி மனிதனின் முகவாய் மனிதனின் முகவாய் போலவே இருக்கிறது" என்றான் பாண்டியன்.

"சரிதான். வேறு என்ன வித்தியாசம் தெரிகிறது?" என்றார் டாக்டர்.

"வேறு ஏதும் தெரியவில்லையே" என்றார் பாண்டியன்.

"நெற்றியைப் பாருங்கள். சிம்பன்ஸி குரங்கின் நெற்றி சப்பையாக இருக்கிறது. ஆனால்

மனிதனின் நெற்றி கண்ணுக்கு மேல் செங்குத்தாக இருக்கிறது. இந்த பனி மனிதனுக்கும் அப்படித்தான் இருக்கிறது” என்றார் டாக்டர்.

“ஆமாம்” என்று பாண்டியன் சொன்னான்.

“இதிலிருந்து என்ன தெரிகிறது? பனி மனிதனின் மூளை குரங்கின் மூளையை விடப் பெரியது. மேலும் அவனுடைய முன் மூளை நன்றாக வளர்ந்திருக்கிறது. ஆகவே அவனால் ஓரளவு பேச முடியும். யோசிக்கவும் முடியும். அதாவது அந்த உயிரினம் கண்டிப்பாக ஒரு குரங்கு இல்லை.” டாக்டர் கூறினார்.

பாண்டியன் வியப்புடன் “அப்படியானால் அது என்ன குரங்கா, மனிதனா?” என்றான்.

“அதைத்தான் நாம் கண்டுபிடிக்க வேண்டும்” என்றார் டாக்டர்.

“நீங்கள் ஏன் இந்த ஆராய்ச்சியைச் செய்கிறீர்கள்?” என்று பாண்டியன் கேட்டான்.

“நான் அறிய விரும்புவது என்னைப் பற்றித்தான். நான் யார்? மனிதன்! ஆனால் மனிதன் எப்படி உருவானான்? எப்படி அவனுக்கு இன்றைய உருவம் கிடைத்தது? எப்படி அவனுக்கு இத்தனை அறிவு ஏற்பட்டது? இதெல்லாம் என் கேள்விகள்” என்றார் டாக்டர்.

“அதற்கும் இந்தப் பனிமனிதனுக்கும் என்ன தொடர்பு?” என்றான் பாண்டியன்.

“நான் பனி மனிதனைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறேன். ஆனால் அது உண்மையில் மனிதனைப் பற்றிய ஆராய்ச்சிதான்” என்றார் டாக்டர் திவாகர்.

மனிதன் எந்த வகை விலங்கு?
உயிரினங்களை நாம் எப்படிப் புரிந்து கொள்கிறோம்? முதலில் உயிரினங்களின் இயல்புகளைப் புரிந்து கொள்கிறோம். பிறகு பல உயிரினங்களுக்கு இடையே பொதுவான இயல்பு என்ன என்று பார்க்கிறோம். அந்தப் பொது இயல்பின் அடிப்படையில் அந்த உயிரினங்களுக்குப் பொதுவான பெயர் சூட்டுகிறோம்.
இந்த முறையைத் தொடங்கியவர் யார்? கிரேக்க ஞானியான அரிஸ்டாட்டில்தான்.
இதன்படி மனிதன் குட்டிகளைப் போடும் பாலூட்டி வகை மிருகம் ஆவான். தாவரம், மாமிசம் இரண்டும் சாப்பிடுவதால் அவன் அனைத்துண்ணி. உருவ அமைப்பின்படி அவனைக் குரங்கு வகையில் சேர்க்கலாம்.
உடலியல் நிபுணர்கள் மனிதனை ‘ஹோமோ ஸேபியன்’ என்று குறிப்பிடுகிறார்கள். பூமி மீது உள்ள எல்லா மனிதர்களும் இந்த ஹோமோ ஸேபியன் இனம்தான்.

## அத்தியாயம் 8

பாண்டியன் வியப்புடன் “மனிதனைப் பற்றியா ஆராய்ச்சி செய்கிறீர்கள்?” என்றான்.

“ஆமாம்” என்றார் டாக்டர்.

“மனிதனைப் பற்றி என்ன ஆராய்ச்சி செய்வது?”

“இருக்கிறது. இந்த உலகில் உள்ள உயிர்களை எல்லாம் நாம் வகைப்படுத்தியிருக்கிறோம். புலி எந்த வகைப்பட்ட மிருகம்?” டாக்டர் கேட்டார்.

“பூனை வகை.”

‘அப்படியானால் மனிதன் எந்த வகை?” டாக்டர் மீண்டும் கேட்டார்.

“குரங்கு வகை” என்றான் பாண்டியன் யோசித்தபடியே.

‘‘ஆனால் ஐந்து வரை எண்ணும் திறன் கொண்ட எந்தக் குரங்கும் இல்லை. மனிதன் கணிப்பொறிகளை கண்டுபிடித்திருக்கிறான். சந்திரமண்டலம் வரை போயிருக்கிறான். இத்தகைய வித்தியாசம் எப்படி ஏற்பட்டது? மற்ற குரங்குகளுக்கு இல்லாத பிரம்மாண்டமான அறிவுத்திறன் மனிதனுக்கு மட்டும் எப்படி வந்தது?”

பாண்டியனால் பதில் கூற முடியவில்லை.

“மானிடவியல், உயிரியல், புதைபொருளியல், உளவியல் முதலிய பல அறிவுத் துறைகள் உள்ளன. இவை எல்லாம் சேர்ந்து இன்று இந்த வினாவுக்குப் பதிலைத் தேடுகின்றன. நான் ஒரு மானுடவியலாளன். நானும் இதைத்தான் ஆராய்ச்சி செய்கிறேன்” என்றார் டாக்டர்.

அப்போது பயங்கரமான ஊளைகள் கேட்டன. ஆட்கள் கத்தும் சத்தமும் ஓடும் ஓசையும் கேட்டன. பாண்டியனும் டாக்டரும் வெளியே ஓடிவந்தார்கள்.

கிராமவாசிகள் கைகளில் கம்புகளும் துப்பாக்கிகளுமாக ஓடிக் கொண்டிருந்தார்கள். நாய்கள் ஊளையிட்டன.

“என்ன? என்ன?” என்றார் டாக்டர்.

“ஓநாய்ப் படை வருகிறது” என்றான் ஒரு கிராமவாசி.

“எங்கே?”

“கிழக்கு மலைச்சரிவில்” என்றபடி கிராமவாசி ஓடினான்.

“வாருங்கள், போய்ப் பார்ப்போம்” என்றார் டாக்டர்.

இருவரும் இறங்கி நடந்தார்கள். சில கிராமவாசிகள் தங்கள் ஆடுமாடுகளை கிராமத்துக்குள் ஓட்டி வந்து சேர்த்தார்கள். கதவுகளைப் பூட்டினார்கள்.

“ஓநாய்களைக் காணோமே?” என்றான் பாண்டியன். அவர்கள் மலைச் சரிவை அடைந்தார்கள். எங்குமே ஓநாய்களைக் காணவில்லை.

“ஓநாய்கள் வெகுதொலைவில்தான் வருகின்றன. அவற்றை நாம் காண வெகுநேரம் நடக்க

வேண்டும்” என்றார் டாக்டர்.

“அப்படியானால் எப்படி கிராமவாசிகளுக்கு ஓநாய்கள் வருவது தெரிந்தது?” என்று பாண்டியன் கேட்டான்.

“டீன் என்ற பெயருள்ள சிறு பறவைகள் இங்கு உண்டு. ஓநாய்கள் வருவதைப் பார்த்து விட்டால் அவை பறந்து வந்து மனிதர்களிடம் சொல்லும். நமது தலைக்கு மேல் டீன் பறவைகள் கலைந்து பறந்தால் ஓநாய்கள் வருகின்றன என்று அர்த்தம்” என்றார் டாக்டர் திவாகர்.

“எந்தத் திசையில் வருகின்றன என்று எப்படித் தெரியும்?” என்றான் பாண்டியன்.

“மனிதர்கள் கவனித்ததுமே டீன் பறவைகள் வழிகாட்ட ஆரம்பிக்கும்” என்றார் டாக்டர்.

அதற்குள் அவர்கள் மலைச்சரிவைத் தாண்டி விட்டார்கள். அந்தச் சரிவில் தூரத்தில் கிராமவாசிகள் கூட்டமாகப் போவது தெரிந்தது. நாய்களும் கூடவே ஓடின. அவர்களுடைய தலைக்கு மேல் சிறிய பறவைகள் கலைந்து பறப்பது தெரிந்தது.

“ஓநாய்கள் கீழே பள்ளத்தாக்கில் வசிப்பவை. ஒரு கூட்டத்தில் ஐநூறு ஓநாய்கள் கூட இருக்கும். பெரிய படையாகக் கிளம்பி வந்து அவை ஊரைத் தாக்கும். அத்தனை ஆடுகளையும் பசுக்களையும் பிடித்துக் கொண்டு போய்விடும். அவை இரவில் வந்து தாக்கினால் எதுவுமே செய்ய முடியாது. மிகவும் பயங்கரமானவை அவை. எதற்கும் பயப்படாதவை. ஒற்றுமையாகச் சேர்ந்து தாக்கும் பயிற்சி அவற்றுக்கு உண்டு” என்றார் டாக்டர்.

“இவர்கள் எங்கே போகிறார்கள்.” பாண்டியன் கேட்டான்.

“அவற்றை வழியிலேயே ஒழித்துக் கட்டத்தான்” என்ற டாக்டர், “வாருங்கள் காட்டுகிறேன்” என்று கூட்டிப் போனார்.

வெகுதூரம் சென்ற பிறகு திடீரென்று நாய்கள் நின்றன. காதுகளைப் பின்னால் சரித்து வால்களை அடிவயிற்றில் சேர்த்துக் கொண்டன. மூக்கைத் தூக்கி மோப்பம் பிடித்தன. பிறகு ஊளையிட்டபடி திரும்பி ஓடின. டாக்டரையும் பாண்டியனையும் தாண்டி கிராமத்தை நோக்கிப் பாய்ந்து சென்றன.

“ஓநாயின் வாடை தெரிந்தாலே நாய்கள் பயந்துவிடும்” என்றார் டாக்டர்.

மேலும் சென்றபோது மலையின் அடிவாரத்தில் ஓநாய்க் கூட்டம் வருவது தெரிந்தது. சிவப்பு எறும்பு வரிசைகள் போல மிகச் சிறியவையாக அவை தெரிந்தன.

கிராமவாசிகள் மலையின் மீது நின்றார்கள். ஏழெட்டு பேர் பெரிய பாறை அருகே சென்றார்கள். அப்பாறை மலையிலிருந்து சற்று வெடித்து நின்றிருந்தது.

கிராமவாசிகள் அந்த வெடிப்பில் எதையோ போட்டு குத்தி இறக்கினார்கள்.

“அது வெடிமருந்து” என்று விளக்கினார் டாக்டர். பாண்டியன் குழப்பமாக டாக்டரைப் பார்த்தான். “பார்த்துக் கொண்டே இரு” என்றார் டாக்டர்.

வெடிமருந்து குத்தி இறக்கப்பட்டதும் ஒருவனைத் தவிர பிறர் விலகினார்கள்.

கீழே நின்ற ஓநாய்கள் மனித வாடையை அறிந்துவிட்டன. முகவாயைத் தூக்கியபடி அவை கூட்டமாக அசையாமல் நின்றன.

பாறையருகே நின்றவன் தன் துப்பாக்கியால் பாறையிடுக்கில் சுட்டான். வெடிமருந்து பயங்கரமாக வெடித்தது. அந்தப் பாறை படீரென்று பிளந்தது. வெடித்து மலையடிவாரம் நோக்கிச் சரிந்தது. பெரிய பாறைகள் மலை மீதிருந்து அருவி போலக் கொட்டின.

பாறைகள் ஓநாய்கள் மீது விழுந்து கொண்டே இருந்தன. நிறைய ஓநாய்கள் நசுங்கிச் செத்தன.

சில ஓநாய்கள் தப்பி ஓடின. அவற்றின் ஊளையும் அழுகையும் மெலிதாகக் கேட்டன.

கிராமவாசிகள் ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டு சிரித்தார்கள்.

அவர்கள் திரும்பி நடந்தார்கள்.

“டீன் பறவைகள் ஏன் ஓநாய்களைக் காட்டிக் கொடுக்க வேண்டும். அதைப் பற்றி யோசித்தீர்களா?” பாண்டியனைப் பார்த்து டாக்டர் கேட்டார்.

“ஆம். காட்டில் சில பறவைகள் இதைப் போலச் செய்கின்றன. ஒருமுறை நான் காட்டில் போய்க் கொண்டிருந்தேன். அப்போது ஒரு கிளி என்னைப் பார்த்து பலமுறை கத்தியது. ஏதோ சந்தேகம் ஏற்பட்டு நான் ஓடிப்போய் ஒரு மரத்தில் ஏறிக் கொண்டேன். பார்த்தால் எனக்குப் பின்னால் ஒரு புலி பதுங்கி வந்து கொண்டிருந்தது. நல்லவேளை தப்பித்தேன்.”

“அந்தப் பறவை ஏன் உங்களுக்கு உதவி செய்தது?” என்றார் டாக்டர்.

“தெரியவில்லை” என்றான் பாண்டியன்.

“நாம் ஏற்கெனவே பேசிக் கொண்டிருந்த விஷயத்துக்கும் இதற்கும் தொடர்பு உண்டு. இதைப் புரிந்துகொள்ள பரிணாமக் கொள்கையைப் புரிந்துகொள்ள வேண்டும்” என்றார் டாக்டர்.

யானையளவு பெரிய காண்டாமிருகம்

தமிழகத்தைச் சேர்ந்த மண்ணியல் (ஜியாலஜி) நிபுணர் சு.கி. ஜெயகரன். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சாத்தான்குளம் என்ற ஊரில் காராமணி என்ற ஆற்றின் கரையில் மண் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். அப்போது களிமண் படிவத்திலிருந்து ஒரு பெரிய எலும்பு அகப்பட்டது.

அரை மீட்டர் நீளம் உடைய அந்த மண்டை ஓட்டு எலும்பு என்ன தெரியுமா? பத்து லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த காண்டாமிருகம் ஒன்றின் எலும்பு அது! அந்தக் காண்டாமிருகம் கிட்டத்தட்ட யானை அளவு பெரியது.

சென்னை அருங்காட்சியகத்தில் புவியியல் பகுதியில் அந்த எலும்பு வைக்கப்பட்டுள்ளது.

# அத்தியாயம் 9

பாண்டியனும் டாக்டரும் மீண்டும் கிராமத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கு நாய்களின் முனகல் ஒலிகள் கேட்டன.

டாக்டரின் வீட்டருகே ஒரு நாய் பதுங்கி அமர்ந்திருந்தது. மூக்கை தரைவரை தாழ்த்தி, காதுகளை மடக்கி, நடுங்கிக்கொண்டிருந்தது. கண்களைப் பரிதாபமாகச் சரித்து உய்ங் உய்ங் என்று புலம்பியது.

டாக்டர் அந்த நாயை கழுத்தின் மீது சொறிந்து கொடுத்தார். நாய்களுக்கும் கழுத்தின் மீது யாராவது சொறிந்தால் மிகவும் பிடிக்கும். நாய் வாலை ஆட்டியது.

“ஓநாய்கள் என்றால் நாய்க்கு மிகவும் பயம். புலியையும் சிங்கத்தையும் பார்த்துப் பயப்படாத நாய்கூட ஓநாய்க்குப் பயப்படும். ஓநாயின் மலத்தை வெயிலில் வைத்து நன்றாக உலர்த்தி, சட்டைப் பையில் போட்டிருந்தால் போதும்; நாய்கள் பயந்து அலறி ஓடிவிடும்” என்றார் டாக்டர்.

இருவரும் வீட்டுக்குள் போய் உட்கார்ந்தார்கள்.

கிராமவாசிகள் வெளியே கூடி அமர்ந்து சிரித்துப்

பேசிக் கொண்டார்கள். ஒருவன் டாக்டருக்கும் பாண்டியனுக்கும் குடிக்க ஒரு பானம் கொண்டு வந்து தந்தான். அந்த பானம் ரசம் போல இருந்தது.

“இது என்ன பானம்?” என்று பாண்டியன் கேட்டான்.

“இங்குள்ள மரம் ஒன்றின் பட்டையைப் போட்டுச் செய்கிற சூப் இது. உடம்புக்கு நல்லது” என்றார் டாக்டர்.

பின் அந்தச் சிறுவனுக்கு ஊசி போட்டார்.

“டீன் பறவைகள் ஏன் ஓநாய்களுக்கு எதிராக இருக்கின்றன?” - பாண்டியன் கேட்டான்.

“அந்தப் பறவைகள் செம்மறியாடுகள் மீது உள்ள உண்ணிகளையும் பூச்சிகளையும் தின்று வாழ்பவை. செம்மறியாடுகளும் பசுக்களும் மேயும்போது இந்தப் பறவைகள் கூட்டம் கூட்டமாக வந்து அவற்றின் மீது அமர்ந்திருக்கும். செம்மறிகளை ஓநாய் பிடித்தால் இவற்றுக்கு உணவு இல்லாமல் ஆகிவிடுமே!” என்றார் டாக்டர்.

“அவை இப்படியெல்லாம் யோசித்து இதை செய்கின்றனவா?” என்றான் பாண்டியன்.

“அவற்றுக்கு யோசிக்கும் திறமையே இல்லை. பற்பல வருடங்களாக இவை செம்மறியாடுகளை நம்பி வாழ்ந்து வருகின்றன. இந்த விஷயம் அவற்றின் மூளையில் ஊறிவிடும். யாரும் சொல்லித் தராமலேயே எல்லா டீன் பறவைகளுக்கும் இந்த விஷயம் தெரியும்.”

“ஒவ்வொரு உயிருக்கும் அதன் வாழ்க்கைக்குத் தேவையான அறிவுத்திறனும் உடலமைப்பும் இருக்கின்றன. நாயின் மோப்ப சக்தி அதிகம். கழுகுக்குப் பார்வை சக்தி அதிகம்” என்றான் பாண்டியன்.

“இதற்குப் பெயர்தான் தகவமைவு. சார்லஸ் டார்வின் இதைத்தான் விளக்கினார்.

உயிரினங்களின் உடம்பும் மூளையும் அவற்றின் வாழ்க்கைக்கு ஏற்பத் தானாகவே மாறுகின்றன. இதைத்தான் டார்வின் பரிணாம வளர்ச்சி என்கிறார்” என்று டாக்டர் கூறினார்.

“இதை யாராவது நிரூபித்திருக்கிறார்களா?” என்று பாண்டியன் கேட்டான்.

“குறைந்த கால வாழ்நாள் உடைய உயிரினங்களில் இதைச் சோதனை செய்து பார்த்திருக்கிறார்கள். ஓர் உயிரி எங்கு வாழ்கிறதோ அதற்கு ஏற்பத்தான் அதன் உடலின் வடிவம் இருக்கும் இல்லையா?” டாக்டர் கேட்டதும் ‘ஆமாம்’ என்று தலையசைத்தான் பாண்டியன்.

டாக்டர் தொடர்ந்தார். “பவளப் பாறைகள் நிரம்பிய கடலில் வாழும் மீன்கள் பவளப் பாறைகள் போலவே இருக்கும். பளபளவென்று பவளம் மாதிரி அவற்றின் உடல் மின்னும். விஞ்ஞானிகள் அவற்றைக் கரிய பாறைகள் நிரம்பிய கடலில் வாழவிட்டார்கள். ஒவ்வொரு முறை மீன் முட்டைகள் பொரிக்கும் போதும் புதிய மீன் குஞ்சுகளின் நிறம் மாறியபடியே வந்தது. பல தலைமுறைகள் தாண்டியதும் அந்த மீன்கள் சாம்பல் நிறமாக மாறிவிட்டன.”

“ஆச்சரியம்தான்” என்றான் பாண்டியன்.

“மனிதனிலும் பரிணாம மாற்றம் நடைபெறுகிறது. ஆனால் மனிதனின் வாழ்நாள் அதிகம். அதனால் மாற்றம் தெரியப் பல ஆயிரம் வருடங்கள் ஆகும். நாற்பது கோடி வருடம் முன்பு பூமி மீது பலவகையான குரங்குகள் இருந்தன. அவற்றில் சில வகைக் குரங்குகள் வாழ்ந்த சூழல் மாறுபட்டது. பூமி மீது குளிர் குறைந்தபோது அவற்றின் உடலில் முடியும் குறைந்தது. மரங்கள் குறைந்தன. எனவே அவை அதிகமாகத் தரையில் நடக்க ஆரம்பித்தன. அதனால் படிப்படியாக அவற்றின் முதுகு நிமிர்ந்தது. அவை மென்மையான உணவுகளைச் சாப்பிட ஆரம்பித்தன. எனவே அவற்றின் வாய் சிறியதாக ஆயிற்று. அதாவது, அவை படிப்படியாக மனிதனாக மாறின” என்றார் டாக்டர்.

“ஆமாம்... இதுதான் டார்வினின் பரிணாம வளர்ச்சிக் கொள்கை.” பாண்டியன் சொன்னான்.

“குரங்குகள் படிப்படியாக மனிதனாக மாறிய காலகட்டத்தில்தான் குரங்கு மனிதர்கள் வாழ்ந்தார்கள். சில குரங்குகள் மெதுவாக மாறின. சில குரங்குகளுக்கு உடல் வேகமாக மாறியது. சிலவற்றுக்கு மூளை வேகமாக வளர்ந்தது. வேகமாக மாறிய குரங்கு மனிதர்கள் மற்ற குரங்கு மனிதர்களைத் தோற்கடித்தார்கள். மனிதன் உருவான பிறகு மனிதர்கள் குரங்கு மனிதர்களைத் தோற்கடித்தார்கள். அவர்களைக் கொன்றார்கள். இப்படித்தான் மனிதர்களின் இனம் பூமி மீது எங்கும் பரவிப் பெருகியது. குரங்கு மனிதர்கள் படிப்படியாக இல்லாமல் ஆனார்கள்.” டாக்டர் சொன்னார்.

“எங்குமே அவர்கள் இல்லையா?” என்றான் பாண்டியன்.

“இதுவரை உயிருடன் குரங்கு மனிதர்களை யாரும் கண்டுபிடிக்கவில்லை. ஆனால் புதைபொருள் ஆய்வில் பல வகையான குரங்கு மனிதர்களின் எலும்புகள் கிடைத்துள்ளன. அவற்றை வைத்து அந்தக் குரங்கு மனிதர்கள் எப்படி இருப்பார்கள் என்று ஊகித்திருக்கிறார்கள். படம் போட்டுப் பார்த்திருக்கிறார்கள். அவற்றின் மூளையை ஆராய்ச்சி செய்து பார்க்கும்போது சில குரங்கு மனிதர்கள் ஓரளவு புத்திசாலிகளாக இருந்திருப்பது தெரிய வருகிறது. ஆனால் இன்றுவரை மனிதனைப் போல சிந்திக்கக்கூடிய ஒரு குரங்கு மனிதன் இருப்பது நிரூபிக்கப்படவில்லை. இதை மானுடவியலில் விடுபட்ட கண்ணி என்கின்றார்கள்.” டாக்டர் விளக்கினார்.

“இந்தப் பனிமனிதன் அந்த விடுபட்ட கண்ணியாக இருக்கக் கூடுமா?” என்றான் பாண்டியன்.

“பார்க்கலாம். ஆனால் இதுவரை இதற்கு ஒருவிதமான ஆதாரமும் கிடைக்கவில்லையே” என்றார் டாக்டர்.

திடீரென்று சிறுவன் எழுந்து அமர்ந்தான். அவர்களைப் பார்த்து, “குரங்கு மனிதன்! குரங்கு மனிதன் என்னைப் பிடிக்கிறான்!” என்று அலறினான்.

கோழிக்குஞ்சுக்கு எப்படித் தெரியும்?
பாவ்லோவ் என்ற ரஷிய விஞ்ஞானி இருந்தார். இவர் ஒரு பழக்கவியல் நிபுணர் (பிஹேவியரிஸ்ட்). மிருகங்களின் பழக்கங்களை ஆராய்ச்சி செய்பவர் இவர்.
இவர் ஒரு சோதனை செய்தார். அட்டையில் பருந்து போலச் செய்துகொண்டார். முட்டையிலிருந்து ஒரு கோழிக் குஞ்சு வெளியே வந்ததுமே அதன் மீது பருந்து நிழலை விழ வைத்தார்.
கோழிக்குஞ்சு பயந்து ஓடி ஒளிந்தது. கோழிக் குஞ்சுக்கு பருந்து ஆபத்தானது என்று எப்படித் தெரியும்? வேறு நிழலைக் காட்டினால் குஞ்சு பயப்படவில்லையே!
இதற்குக் காரணம் தகவமைவுதான். உயிர் வாழ்வதற்குத் தேவையான அவசியமான விஷயங்கள் மூளையில் பதிந்து விடுகின்றன. தலைமுறைகள் தோறும் அவை தானாகவே தொடர்கின்றன. வழவழப்பான ஏதாவது காலில் தட்டுப்பட்டால் நாம் கூட உடனே பாம்பு என்று பயந்து விடுகிறோம் இல்லையா?

# அத்தியாயம் 10

டாக்டரும் பாண்டியனும் சிறுவனைப் பிடித்துக்கொண்டார்கள்.

சிறுவன் கனவு கண்டவனைப் போல அலறினான். டாக்டர் அவன் முகத்தில் சிறிது தண்ணீரைத் தெளித்தார்.

சிறுவன் சற்று தெளிவு அடைந்தான். பயத்துடன் அவர்களைப் பார்த்து, “நீங்கள் யார்?” என்றான்.

“நீ பத்திரமாகத்தான் இருக்கிறாய்” என்றான் பாண்டியன்.

“குரங்கு மனிதன் எங்கே?” என்றான் சிறுவன். அவன் உடம்பு நடுங்கியது.

“உன்னைக் கொண்டு வந்து விட்டுவிட்டான். நான் உன்னைக் காப்பாற்றினேன்” என்றான் பாண்டியன்.

டாக்டர் சிறுவனுக்கு பார்லிக் கஞ்சி கொண்டு வந்து தரச் சொன்னார். கஞ்சியைக் குடித்ததும் சிறுவன் தெளிவு அடைந்தான்.

“உன் பெயர் என்ன?” என்றார் டாக்டர்.

“கிம்சுங்” என்றான் சிறுவன்.

“கிம், நீ எதற்குப் பனிமலைக்குப் போனாய்?” டாக்டர் கேட்டார்.

“ஆடு மேய்க்கப் போனேன். என் அப்பாவும் வந்தார். அங்கு எனக்குக் காய்ச்சல் வந்தது. என்னால் நடக்க முடியவில்லை. என்னை அங்கேயே விட்டுவிட்டார்கள். ரொம்பக் குளிர்ச்சியாக இருந்தது. எல்லோரும் போய்விட்ட பிறகு நான் தனியாகப் படுத்திருந்தேன். அப்போது யாரோ என்னைப் பார்ப்பது போலிருந்தது” என்றான் சிறுவன்.

“யார்?” பாண்டியன் குரலில் ஆவல்.

“யார் என்றே தெரியவில்லை. ஆனால் யாரோ பார்ப்பது போலிருந்தது. பிறகு இரவாகி விட்டது. ஆனால் பனியில் நல்ல ஒளி இருந்தது. அப்போது ஒரு மிகப் பெரிய குரங்கு எதிர்ப்பக்கம் ஒரு பனிப்பாறை மீது நிற்பதைப் பார்த்தேன்.”

“குரங்கா?” வேகமாகக் கேட்டான் பாண்டியன்.

“ஆமாம். குரங்குதான். நான் பயந்து போய் அழுதேன். அந்தக் குரங்கு என்னை நோக்கி ஆடியபடி வந்தது.”

“அதற்கு என்ன நிறம்?” என்றார் டாக்டர்.

“சாம்பல் நிறம். உடம்பெல்லாம் நீளமான முடி இருந்தது. அது என்னருகே வந்து பாடியது.”

“பாடியதா?” என்று இருவரும் வியப்புடன் கேட்டனர்.

“ஆமாம். பாட்டுதான். நான் பயந்து அலறினேன். அது என்னை அப்படியே தூக்கி எடுத்தது. அது மிகப்பெரிய குரங்கு. மரங்கள் போல மிகவும் உயரம் உடையது. அதன் உள்ளங்கைகளில்

நான் உட்கார்ந்து கொண்டேன். என்னைத் தூக்கிக் கொண்டு பனிப் பாறைகள் மீது தாவித்தாவிச் சென்றது.”

“நீ என்ன செய்தாய்?” பாண்டியன் கேட்டான்.

“எங்கு போனாலும் மலைச்சிகரங்களைக் கூர்ந்து பார்த்தபடியே போக வேண்டும் என்று என் அப்பா சொல்வார். அப்போதுதான் திரும்பி வரமுடியும். நான் மலைச்சிகரங்களை அடையாளம் வைத்தபடி போனேன்.”

“உன்னால் அங்கு போவதற்கு வழிகாட்ட முடியுமா?” என்றார் டாக்டர்.

“முடியும்.”

“பிறகு என்ன ஆயிற்று?” என்றான் பாண்டியன்.

“ஒரு பெரிய மலைக்கு அப்பால் பனிக்கட்டியாலான ஒரு பெரிய மைதானம் இருந்தது. அதற்கு அப்பால் ஒரு மலைப்பிளவு இருந்தது. அதன் மீது ஏறித்தாவியது அந்தக் குரங்கு. அதற்கும் அப்பால் இரண்டு பெரிய மலைகள் இருந்தன. அவை வாசல் போல தெரிந்தன. அதற்கு குரங்கு என்னைக் கொண்டு போனது. உடனே எனக்கு மார்பு அடைப்பது போல இருந்தது. நான் மயக்கம் அடைந்துவிட்டேன். பிறகு இப்போதுதான் நினைவு திரும்பியது.”

“இரு” என்றார் டாக்டர். ஓடிச்சென்று ஆய்வுக்கூடத்திலிருந்து ஒரு பெரிய புத்தகத்தை எடுத்து வந்தார். அதில் எட்டு படங்கள் இருந்தன. முதல் படம் மனிதக் குரங்கின் படம். எட்டாவது படம் சாதாரண மனிதன் படம். நடுவே ஆறு வகையான குரங்கு மனிதர்களின் படங்கள் இருந்தன.

“கிம். இந்தப் படத்தில் இருக்கும் குரங்கு மனிதர்களைப் பார். இதில் நீ பார்த்த குரங்கு எதைப் போல இருந்தது?” என்றார் டாக்டர்.

“இதில் எதைப் போலவும் அது இருக்கவில்லை” என்றான் கிம். படங்களைக் கூர்ந்து பார்த்தான். பிறகு இரண்டாவது படத்தைப் பார்த்து “கிட்டத்தட்ட இதே மாதிரிதான் இருந்தது. ஆனால் அதன் கை இன்னும் நீளமாக இருந்தது. கால் குட்டையாக இருந்தது.”

பாண்டியன் அந்தப் படத்தைப் பார்த்தான். அதன் கீழே “ஹோமோ எரக்டஸ்” என்று எழுதப்பட்டிருந்தது.

“சரி கிம், நீ தூங்கு. உன் உடம்பு தேறியதும் நாம் பனிமலைக்குப் போகலாம். அங்கு நாம் அந்தக் குரங்கு மனிதனைச் சந்திக்கலாம்” என்றார் டாக்டர்.

கிம் தலையசைத்தான்.

டாக்டரும் பாண்டியனும் மீண்டும் சோதனைச்சாலைக்குச் சென்றார்கள்.

“இவையெல்லாம் என்ன?” என்றான் பாண்டியன்.

“இவை உலகம் முழுக்கக் கண்டுபிடிக்கப்பட்ட குரங்கு மனிதர்களின் வகைகள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு பரிணாம கட்டத்தில் உள்ளது” என்றார் டாக்டர்.

“இவற்றை யார் கண்டுபிடித்தார்கள்?”

“மனிதனுக்கும் குரங்குக்கும் நடுவே உள்ள குரங்கு மனிதன் வாழ்ந்த இடங்களை விஞ்ஞானிகள் ஊகிக்கிறார்கள். அங்கு தோண்டிப் பார்க்கிறார்கள். முதலில் டாக்டர் எஜென் டியுபுவா என்பவர்தான் ஒரு குரங்கு மனிதனின் தொடை எலும்பைக் கண்டுபிடித்தார்.”

“எங்கே?” என்றான் பாண்டியன்.

“ஜாவா தீவில். அந்தத் தொடை எலும்பு மனிதனின் தொடை எலும்பைவிடக் குட்டையானது.

குரங்கின் தொடை எலும்பைவிடப் பெரியது. அந்தத் தொடை எலும்பை வைத்து அவர் அந்தக் குரங்கு மனிதன் நிமிர்ந்து நின்றிருந்தான் என்று ஊகித்தார். அவனுக்கு 'பித்தாகாந்த்ரோபஸ் எரக்டஸ்' என்று பெயர் சூட்டினார். அதற்கு நிமிர்ந்த குரங்கு மனிதன் என்று பொருள்." டாக்டர் கூறினார்.

"பிறகு?" பாண்டியனுக்கு ஆவலை அடக்க முடியவில்லை.

"அதன் பிறகு நிறையக் குரங்கு மனிதர்களின் எலும்புக் கூடுகள் கிடைத்தன. இவற்றில் 1948-ல் ஜெர்மனியில் நியாண்டர்தால் என்ற ஊரில் கிடைத்த எலும்புக் கூடுதான் மனித எலும்புக் கூடு மாதிரியே இருந்தது. அதேசமயம் குரங்கு மாதிரியும் இருந்தது. அந்தக் குரங்கு மனிதன் நிமிர்ந்து நடந்தான் என்று தெரிந்தது" என்றார் டாக்டர்.

"எப்படித் தெரியும்?"

"மண்டை ஓட்டில் முதுகு எலும்பு நுழைவதற்கு ஒரு துளை இருக்கும். நான்கு காலில் நடக்கும் மிருகங்களுக்கு அது பின் பக்கமாக இருக்கும். ஆனால் மனிதனைப் போல இரண்டு காலில் நடக்கும் உயிரினத்துக்கு அந்தத் துளை நேர் கீழே இருக்கும். இந்தக் குரங்கு மனிதனின் மண்டை ஓட்டிலும் முதுகெலும்புத் துளை கீழே இருந்தது. அதன் மூளையும் பெரிதாக இருந்தது. முன் மூளை வளர்ந்திருந்தது. எனவே அதற்கு விஞ்ஞானிகள் நியாண்டர்தால் மனிதன் என்று பெயர் வைத்தார்கள். மனிதனை மிகவும் ஒத்திருக்கும் குரங்கு மனிதன் அவன்தான். அவனிடமிருந்துதான் மனித இனமே உருவாகி வந்திருக்கிறது என்று கூறப்படுகிறது" என்றார் டாக்டர்.

"ஆனால் கிம் அதற்கும் முந்தைய உருவத்தைத்தானே சுட்டிக்காட்டினான்?" என்றான் பாண்டியன்.

"அதுதான் குழப்பமாக இருக்கிறது."

"அதே சமயம் இந்தப் பனிமனிதன் சிந்திக்கிறான். பாட்டுப் பாடுகிறான். மனிதர்களுக்கு உதவியும் செய்கிறான்" என்றான் பாண்டியன்.

"நேரில் போய்ப் பார்ப்பதுதான் ஒரே வழி" என்றார் டாக்டர்.

வேதாளத்தின் பல்

1912-ம் வருடம் ஓர் ஐரோப்பிய விஞ்ஞானி சீனாவில் சுற்றுப்பயணம் செய்தார். அங்கு ஒரு மருந்துக்கடையில் 'வேதாளத்தின் பற்கள்' என்ற பெயரில் சில பற்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. அவை மிகப் பெரிய கடைவாய்ப் பற்கள்.

அப்பற்களை வாங்கிய விஞ்ஞானி, அவற்றை ஐரோப்பிய ஆய்வாளர்களிடம் அளித்தார். அவர்கள் அவற்றை வைத்து அந்தப் பற்களின் சொந்தக்காரரை வரைந்தார்கள்.

அது ஒரு பெரிய குரங்கு மனிதன்! பிற்பாடு பீகிங் நகரத்துக்கு அருகே அதன் எலும்புக்கூடு கிடைத்தது. பிதுங்கிய நெற்றியும் வளைந்த கால்களும் அதற்கு இருந்தன. எட்டடி உயரம் இருந்தது. அதற்குச் சீனக் குரங்கு மனிதன் என்று பொருள் வரும்படி 'சீனாந்த ரோபஸ்' என்று பெயர் சூட்டினார்கள். மனிதனுக்கும் குரங்குக்கும் இடைப்பட்ட வகை குரங்கு மனிதர்களில் அதுவும் ஓர் இனம்.

# அத்தியாயம் 11

மறுநாள்முதல் டாக்டர் பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தார். முதலில் எந்தத் திசை நோக்கிப் போவது என்று தீர்மானிக்க வேண்டியிருந்தது.

வரைபடத்தில் அப்பகுதியை விரிவாக அடையாளப்படுத்தினார். மலைகள், பள்ளத்தாக்குகள் அனைத்தையும் குறித்தார்.

பிறகு பனிமனிதனின் பாதத்தின் தடங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பகுதிகளை அதில் குறித்தார். அவை போன திசையை அம்புக் குறியிட்டுக் காட்டினார். அதில் மதியத்துக்கு முன்பு கண்டு பிடிக்கப்பட்டவை சிவப்பு நிறத்தில் அடையாளப்படுத்தப்பட்டன. மத்தியானத்துக்குப் பிறகு கண்டுபிடிக்கப்பட்டால் பச்சை நிறம் தரப்பட்டது.

“இதைப் பார்த்தால் என்ன தெரிகிறது?” என்று டாக்டர் கேட்டார்.

பாண்டியன் கூர்ந்து பார்த்தான். அவனுக்குப் புரிந்தது. சிரித்தபடி, “அடாடா” என்றான்.

“என்ன கண்டு பிடித்தீர்கள்?” என்றார் டாக்டர்.

“காலையில் பதிவான தடங்கள் எல்லாமே இதோ இந்த இடத்திலிருந்து விலகிச் செல்கின்றன. மாலையில் பதிவான இடங்கள் இந்த இடத்துக்குத் திரும்பிச் செல்கின்றன” என்றான் பாண்டியன்.

“அதற்கு என்ன அர்த்தம்?” டாக்டர் கேட்டார்.

“இந்த இடம்தான் பனிமனிதனின் வாழும் இடம். இங்கிருந்துதான் காலையில் அவன் கிளம்புகிறான். பிறகு மாலையில் திரும்பி விடுகிறான்” என்றான் பாண்டியன்.

“சரியாகச் சொன்னீர்கள்.” டாக்டர் கூறினார்.

“இந்த இடம் எப்படிப்பட்டது?” என்றான் பாண்டியன்.

“நில அளவைக் குறிப்புகளின்படி இது வெறும் பனிவெளி. இங்கு ஒரு போதும் பனி உருகுவதில்லை. காரணம் வருடம் முழுக்க வெப்பநிலை மைனஸ் இருபது டிகிரிதான்” என்றார் டாக்டர்.

“வெண்பனி தவிர வேறு எதுவுமே இருக்காது இல்லையா?” என்று பாண்டியன் கேட்டான்.

“ஆமாம்... விமானங்களில் இருந்து எடுத்தபுகைப்படங்களில் அங்கு வெண்ணிறப் பரப்பு மட்டும்தான் தெரிகிறது. அங்கு இதுவரை மனிதர்கள் போனதேயில்லை” என்றார் டாக்டர்.

“அங்கு எப்படி அவை வாழ முடியும்?” என்றான் பாண்டியன்.

“அதுதான் ரகசியம். நாம் நேரில் போய் பார்ப்போம். அங்கு இதுவரை எனக்கும் போக முடியவில்லை. காரணம் துணைக்கு யாரும் இல்லாதது தான். இப்போது நீங்கள் இருக்கிறீர்கள்” என்றார் டாக்டர்.

பயணத்துக்கு கோவேறு கழுதைகளைக் கூட்டிச் செல்ல இயலாது. அவை குளிரில் செத்து விடும். எனவே டாக்டர் ஒரு வண்டியை உருவாக்கியிருந்தார். அது இலகுவான

அலுமினியத்தால் செய்யப்பட்டது. சிறிய மெல்லிய சக்கரங்கள் கொண்டது. அலுமினியம் கனமில்லாத உலோகம். ஆனால் வலுவானது. அதை எளிதில் தள்ளிக்கொண்டு போகலாம். அதில் தேவையான பொருள்களை ஏற்றிக்கொண்டார்கள்.

கிம் நலமடைந்துவிட்டான். உடனே எழுந்து கிராமத்தில் உள்ள வேலைகளைச் செய்ய ஆரம்பித்தான். அவன் பெரிய தொட்டி நிறைய நீரை மலைக்குக் கீழேயிருந்து தூக்கி வருவான். தேவதாரு மரக்கட்டைகளையும் சுமப்பான். பாண்டியனுக்கு வியப்பாக இருந்தது. அது பற்றி டாக்டரிடம் கேட்டான்.

“இந்தப் பழங்குடி மக்கள் மிகவும் உடல் வலிமை உடையவர்கள். செங்குத்தான மலையில் எவ்வளவு தூரம் ஏறினாலும் இவர்கள் மூச்சு வாங்குவதில்லை” என்றார் டாக்டர்.

“எப்படி?”- பாண்டியனுக்கு ஆச்சரியம் தாளவில்லை.

“அவர்கள் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். திபெத்திய லாமாக்களை வழிபடுபவர்கள். மடாலயங்களில் சிறுவயதிலிருந்தே பயிற்சி பெறுகிறார்கள். அவர்களுக்குப் பலவிதமான யோகப் பயிற்சிகள் தெரியும்.”

மறுநாள் அவர்கள் விடைபெற்றுக் கிளம்பினார்கள். மலைச்சரிவில் ஏறிச் சென்றார்கள். படிப்படியாக மண் இல்லாமல் ஆயிற்று. பிறகு தவிட்டு நிறமான பாறை மட்டும் தெரிய ஆரம்பித்தது. குளிரில் அந்தப் பாறைகள் வெடித்து வெடித்துக் காணப்பட்டன.

மேலே ஏற ஏற குளிர் அதிகரித்தது. காற்றும் வேகமாக அடிக்க ஆரம்பித்தது.

“ஓய்வெடுத்த பிறகு இதில் ஏறலாம்” என்றார் டாக்டர்.

கிம் தரையில் காலை பத்மாசனமிட்டு அமர்ந்தான். தோள்களை விரித்து, மார்பை நிமிர்த்தி, அடிவயிற்றை இறுக்கினான். மிக ஆழமாக மூச்சை இழுத்து வேகமாக விட்டான். சீராக அப்படியே பலமுறை செய்தான்.

“என்ன செய்கிறாய்?” என்றான் பாண்டியன்.

“யோக சுவாசம் என்று இதற்குப் பெயர். என் தந்தை சொல்லித் தந்தார். இதைச் சிறுவயது முதலே செய்து வருகிறேன்.”

பாண்டியனுக்கு வியப்பாக இருந்தது. பனிமலையில் வாழும் பழங்குடி மக்கள் அத்தனை சிறப்பாக யோகப் பயிற்சி பெற்றிருப்பார்கள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

“நேரமாகிறது” என்று டாக்டர் எழுந்தார். தன் கருவிப் பெட்டியைத் திறந்தார். உள்ளிருந்து ஒரு குழாயை எடுத்துத் தரையில் ஊன்றினார். அதற்குள் துப்பாக்கி ரவை போல இருந்த ஒன்றைப் போட்டார். அது வாய் அகலமான சிறு குப்பி போல இருந்தது.

அதன் பிறகு அந்தக் குழாய்க்குள் ஒரு இரும்புக் கொக்கியை வைத்து இறுக்கினார். அந்தக் கொக்கியின் நுனியில் மெல்லிய கயிறு கட்டப்பட்டிருந்தது. அந்தக் கயிறு ஓர் உருளையில் சுற்றப் பட்டிருந்தது.

அந்தக் குழாயுடன் இணைக்கப்பட்டிருந்த ஒரு கம்பியை வேகமாக இழுத்தார். உடனே அந்தக் குழாய் ஒரு துப்பாக்கி போல வெடித்தது. துப்பாக்கியின் குண்டு சீறிப்பாய்வது போல அந்த இரும்புக் கொள்ளி பறந்து சென்றது.

டாக்டர் அந்தக் கொள்ளியை செங்குத்தான பாறையை நோக்கி குறி வைத்திருந்தார். கொக்கி கணீர் என்று சத்தமிட்டபடி பாறையை மோதித் துளைத்தது. அதில் கட்டப்பட்டிருந்த கயிறு இழுபட்டது. உருளை வேகமாக சுழன்றத. கயிறு நீளமாகத் தொங்கியது.

டாக்டர் கயிற்றைப் பிடித்து இழுத்துப் பார்த்தார்.

“ஏறலாமா?” என்றான் பாண்டியன்.

“இரு. கயிறு பலமானதுதான். கொக்கியும் ஆழமாகப் பதிந்துவிட்டது. ஆனால் ஒரு சந்தேகம்” என்றார் டாக்டர்.



“என்ன சந்தேகம்?”

“நான் வரும் வழியில் இங்குள்ள பாறைகளை கவனித்தபடியே வந்தேன். இங்கு வெடிப்பு விழாத பாறைகள் மிகக்குறைவு. கிம், நீ ஏறு. உன் எடை குறைவுதானே?”

கிம் உடனே பாய்ந்து சென்றான். கயிற்றைப் பிடித்து மளமளவென்று ஏற ஆரம்பித்தான்.

அப்போது மெல்லிய வெடிப்பொலி கேட்டது. கிம் உடனே பாறைப் பரப்பை ஒரு கையால் பற்றிக் கொண்டு மேலே பார்த்தான்.

எதுவும் தெரியவில்லை. எனவே மீண்டும் ஏறினான். ஆனால் வெடிப்பொலி பெரிதாகக் கேட்க ஆரம்பித்தது.

“கிம்!” என்று பாண்டியன் கத்தினான்.

கிம் சற்றும் பயப்படவில்லை. கயிறை விட்டு விட்டு கரடுமுரடான கைகளால் பற்றியபடி பல்லி போல ஒட்டியிருந்தான்.

அவன் தலைக்குமேல்இரும்புக் கொக்கி துளைத்திருந்த அந்தப் பாறை பெரிய ஒலியுடன் பிளந்தது. பிறகு அது மெதுவாகச் சரிந்தது.

பாண்டியனின் மனம் படபடத்தது. அந்தப் பாறை அப்படியே பிரிந்தது. ஆனால் கிம்மைத் தொடாமல் அவனைத் தாண்டிவந்து விழுந்தது. இடி போல ஒலி எழுந்தது. பாறை நொறுங்கியது. பெரிய கற்களாக மாறி மலையடிவாரத்தை நோக்கி விழுந்தது அது.

தூசிப்படலம் அடங்கியதும் பாண்டியன் மேலே பார்த்தான். கிம் அப்படியே அமர்ந்திருந்தான்.

“எமகாதப் பயல்!” என்றான் பாண்டியன்.

கிம் பாறையின் இடைவெளிகளைப் பிடித்தபடி தொற்றி ஏறினான். அது ஓணான் மரம் ஏறுவது போலிருந்ததது.

பாறை கீழே விழுந்து உடைந்தபோது கொக்கி விடுபட்டுவிட்டது. தரையில் அது கயிறுடன் கிடந்தது. டாக்டர் அதை எடுத்தார்.

கிம் பாறை மீது ஏறி நின்றான். டாக்டர் கயிற்றை கொக்கியுடன் சுழற்றி வீசினார். அதை கிம் பிடித்துக் கொண்டான். கயிறை அவன் இழுத்துச் சென்றான். மிகவும் உள்ளே தள்ளியருந்த ஒரு பாறையில் அதைக் கட்டினான்.

பாண்டியன் கயிறைப் பற்றி ஏறி மேலே சென்றான். டாக்டர் கீழிலிருந்து ஒவ்வொரு பொருளாகக் கயிற்றில் கட்டினார். பாண்டியன் அவற்றை மேலே இழுத்துக் கொண்டான். கடைசியாக டாக்டர் ஏறினார்.

அப்பாறையின் மேல்பகுதி பெரிய சமவெளிபோல இருந்தது. அதன் மீது வெண்ணிறமான பனி கண்ணுக்கெட்டிய தூரம் வரை பரவிக் கிடந்தது.

இமயமலை என்றால் என்ன அர்த்தம்?
இமயமலை என்ற பெயர் எப்படி வந்தது? சம்ஸ்கிருதத்தில் இமயமலைக்கு ஹிமகிரி என்று பெயர். ஹிமவான் என்றும் கூறுவதுண்டு. ஹிமம் என்பது தமிழில் இமயம் என்று மருவியது. ஹிமம் என்றால் உறைந்த பனி என்று அர்த்தம். ஹிமகிரி என்றால் பனிமலை என்று பொருள்.
இந்தியாவில் இமயமலையில் மட்டுமே பனிக்கட்டியைப் பார்க்க முடியும் . வேறு எங்கும் அந்த அளவு குளிர் இல்லை.

# அத்தியாயம் 12

மிகக் கடுமையாக குளிர ஆரம்பித்தது. ஆனால் காற்று வீசுவது நின்று விட்டது. கம்பளி உடைகளைத் தாண்டி குளிர் உள்ளே வந்தது. அப்போது ஊசிகளை உடம்பில் குத்தி இறக்குவது போலிருந்தது.

டாக்டர் திவாகர் வண்டியிலிருந்து பனி உடைகளை எடுத்தார். மூவரும் அவற்றை அணிந்து கொண்டார்கள்.

விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட உடை அது. அவற்றின் உள்ளே முதலில் அடர்த்தியான கம்பளி இருக்கும். அதன் மீது சிலிகன் தகடால் ஆன ஓர் உறை உண்டு. அந்த உறைக்குள் மெல்லிய செம்புக் கம்பிகள் வலை மாதிரி அடர்த்தியாகப் பின்னியிருக்கும். அதன் மீது நுரை ரப்பர் பரப்பப்பட்டிருக்கும். அதற்கும் மேல் தண்ணீர் புகாத உயர்தர பாலிமர் உறை உண்டு.

அந்த உடையின் முன் பக்கம் ஒரு வெப்பத்தகடு (ஹீட்டர்) உண்டு. அதில் மின்சாரஇணைப்பு அளித்தால் அது சூடாகும். அதன் வெப்பம் அதனுடன் இணைக்கப்பட்ட செம்புக் கம்பிகள் வழியாக உடை முழுக்கப் பரவும். அந்த சிலிகன் தகடு சூடாகி கம்பளியை சூடுபடுத்தும். வெளிப்பக்கம் நுரை ரப்பர் இருப்பதனால் வெளியே உள்ள குளிரில் அந்த சூடு ஆறிப் போகாது. ஒருவாரம் வரை கூட உடை வெது வெதுப்பாக இருக்கும்.

டாக்டரின் வண்டியில் ஒரு பாட்டரி இருந்தது. அதனுடன் தங்கள் உடைகளை இணைத்துக் கொண்டார்கள். உடை சூடாகியது. மூவரும் இவ்வாறு சூடுபடுத்திக் கொண்டார்கள்.

டாக்டர் வண்டியில் இருந்த பனி பூட்சுகளை எடுத்தார். மூவரும் அதை அணிந்து கொண்டார்கள். கைகளில் ரப்பர் உறைகளை மாட்டிக் கொண்டனர். காதுகளைக் குளிர் தாக்காமல் இருக்க செவிக் கவசங்களையும் அணிந்து கொண்டனர்.

பனியில் ஊன்றி நடப்பதற்குரிய ஊன்றுகோல்களையும் பனிக்கோடாரியையும் டாக்டர் எடுத்தார். ஆளுக்கொன்றாகத் தந்தார். பனி மிக வெண்மையாக இருப்பதால் கண் கூசும். எனவே கருப்புக் கண்ணாடிகளையும் போட்டுக் கொண்டார்கள்.

பிறகு டாக்டர் வண்டியின் சக்கரங்களைக் கழற்றினார். உடனே அவை பனிச்சறுக்கு வண்டியாக ஆயிற்று. பனியில் அது சறுக்கியபடி நகரும். வண்டியைத் தள்ளியபடி அவர்கள் நடந்தார்கள்.

“பனி மிகவும் சறுக்கும். பத்திரம்” என்றார் டாக்டர்.

“பனி மிகவும் பொருபொருவென்று தானே இருக்கிறது?” பாண்டியன் கேட்டான்.

“பொருக்குப் பனி என்று இதற்குப் பெயர். இதுதான் அதிகமாக வழுக்கும். நாம் காலை வைத்ததுமே இந்தப் பனிப் பொருக்கு உடைந்து உருகிவிடும். அந்தத் தண்ணீர் நம்மை சறுக்கி விழ வைக்கும்.”- டாக்டர் விளக்கினார்.

“ஆமாம் உண்மைதான்” என்றான் பாண்டியன். அவன் ஒவ்வொரு முறை காலை வைக்கும்போதும் யாரோ காலைப் பிடித்து இழுப்பது போல இருந்தது.

“கண்ணாடி மாதிரி இருக்கும் பனி உறுதியானது. அது பாறை மாதிரியே இருக்கும். அது

அதிகமாக வழுக்காது” என்றார் டாக்டர்.

அந்தப் பனிச்சரிவு உண்மையில் வெகு தூரம் இருந்தது. வெட்ட வெளியாக இருந்ததனால்தான் அதிக தூரமில்லை என்று தோன்றியது. பனியில் கால்களைத் தூக்கி வைத்து நடந்தார்கள்.

மறுபக்கம் அவர்கள் சென்று சேர்ந்தபோது சூரிய ஒளி மங்க ஆரம்பித்தது. மேற்குத் திசையில் பனி மூடிய மலைகள் தெரிந்தன. அவற்றுக்கு அப்பால் வானம் சிவப்பாக மாற ஆரம்பித்தது.

மணி என்ன இருக்கும் என்று பாண்டியன் தன் கடிகாரத்தைப் பார்த்தான். எட்டு. ஆனால் கடிகாரம் ஓடிக் கொண்டுதான் இருந்தது.

“டாக்டர், என் கடிகாரம் தவறாக ஓடுகிறது. இப்போது மணி என்ன?”- பாண்டியன் கேட்டான்.

“எட்டு மணி” என்றார் டாக்டர்.

“இரவு எட்டு மணியா?” பாண்டியனின் கேள்வியில் ஆச்சரியம்.

“ஆமாம். சூரியன் அஸ்தமித்து வெகு நேரம் ஆகிறது.”

“அப்படியானால் எப்படி இவ்வளவு வெளிச்சம்.” ஆச்சரியம் அடங்காமல் கேட்டான் பாண்டியன்.

“பனிச் சமவெளி ஒரு பிரம்மாண்டமான கண்ணாடி போன்றது. சூரிய ஒளியை அது பிரதிபலிக்கிறது” என்றார் டாக்டர்.

கிம் பனிவெளியையே பார்த்தபடி மௌனமாக வந்தான். பாண்டியன் அவனிடம் பேச்சுக் கொடுத்தான். “என்ன கிம், பேசாமல் வருகிறாய்? ஏன்? பயமாக இருக்கிறதா?” என்று பாண்டியன் கேட்டான்.

“பயமா? எதற்கு? பனிமலை, புத்தரின் மனம் அல்லவா? இங்கு வருவது பெரிய பாக்கியம் என்று என் அப்பா சொல்வார்” என்றான் கிம்.

“ஏன் இதை புத்தரின் மனம் என்கிறார்கள்?” என்றான் பாண்டியன்.

“ஏனென்றால் இங்கு எல்லாமே தூய்மையாக உள்ளன. தூய்மையாக இருக்கும்போது பூமியும் வானம் போல ஆகிவிடும். இங்கு எந்த ஒலியும் இல்லை. தியானம் செய்யும் புத்தரின் மனம் போல இந்த இடம் அமைதியாக இருக்கிறது” என்றான் கிம்.

“இதெல்லாம் உனக்கு யார் சொன்னது?” என்று பாண்டியன் கேட்டான்.

“எங்கள் மடாலயத்தில் உள்ள பிட்சு சொல்லித் தந்தார்.”

மெதுவாக சூரிய ஒளி சிவக்க ஆரம்பித்தது. தூரத்தில் தெரிந்த மலைச் சிகரங்கள் சிவப்பு நிறம் பெற்றன. எல்லாப் பக்கமும் செந்நிறம் மட்டுமே தெரிந்தது. மேலே வானம் சிவப்பு நிறம். கீழே பனிவெளியும் சிவப்பு நிறம். தீயாலான ஒரு பெரிய வெட்ட வெளியில் நிற்பது போலிருந்தது.

“புத்தர் புன்னகை புரிகிறார்” என்றான் கிம்.

பாண்டியனுக்கு அதைக் கேட்டதும் புல்லரித்தது. அதைப் போன்ற ஒரு அற்புதமான காட்சியை அவன் பார்த்ததே இல்லை. அது கனவா என்று கூடச் சந்தேகம் வந்தது.

செந்நிறம் நன்றாக அடர்ந்தது. பிறகு மெல்ல இருண்டது. குழல் விளக்குகளை அணைத்துவிடும் போது ஏற்படுவதுபோல பனிப் பரப்பில் ஒளி மங்கலாகி மறைந்தது. ஆனால் குழல் விளக்கில், மேலும் சிறிது நேரம் ஒளி இருக்குமே அது போல பனிப்பரப்பிலும் சிறிது ஒளி மிஞ்சியிருந்தது. மெதுவாக அந்த ஒளியும் மறைந்தது.

“புத்தர் தூங்குகிறார்.”- கிம் அமைதியாகச் சொன்னான்.

“நாம் இங்கே தங்க வேண்டியதுதான். கூடாரத்தை எடு.” டாக்டர் கூறினார்.

பாண்டியன் கூடாரத்தை எடுத்தான்.

“இன்று வானம் துல்லியமாக இருக்கிறது. மேகமாக இல்லை. நிலவு வந்தாலும் வரும்”என்றார் டாக்டர்.

*துருவப் பகுதிகளில் பனி எங்கும் உறைந்து காணப்படும். அவ்வப் போது அங்கு நல்ல வெயிலும் அடிக்கும். இருந்தாலும் பனி உருகுவதில்லை. ஏன்?*
*சூரியக் கதிர் என்பது வெப்ப ஆற்றல் கிடையாது. அது ஒளி ஆற்றல். ஏதாவது பொருள் மீது அந்த ஒளி படும் போது ஒளி ஆற்றல், வெப்ப ஆற்றலாக மாறி, அந்தப் பொருளைச் சூடாக்குகிறது. காற்று மண்டலத்தில் உள்ள தூசி மீது ஒளிபடும் போதுதான் காற்று சூடாகிறது.*
*ஒரு பொருள்மீது சரிவான ஒளி பட்டால் ஏற்படும் வெப்பம் குறைவு. அது பனியை எளிதில் உருக்காது.*
*செங்குத்தான ஒளிக்கதிர் விழுந்தால் மட்டுமே உறைபனி உருகும். அவ்வாறு ஓரளவு பனி உருகிய உடனே அது நீராவியாகி மேலே போகும். துருவப் பகுதியில் காற்று மண்டலம் சுத்தமானது. அது மிகவும் குளிர்ந்தும் இருக்கும். இதனால் மேலே போன நீராவி உடனே பனியாக மாறி திரும்பி வந்து விடும்.*

# அத்தியாயம் 13

பாண்டியன் கூடாரம் கட்ட ஆரம்பித்தான். அது சாதாரணக் கூடாரம் அல்ல. பனிப் பகுதிகளுக்கு உரிய விசேஷமான கூடாரம்.

முதலில் ஓர் இரும்பு ஆப்பைப் பனிப்பாளம் மீது ஆழமாக அறைந்தான். பிறகு கூடாரத்துத் துணியை எடுத்துப் பரப்பினான். அது உயர்தரமான பாலிதினால் செய்யப்பட்டது. அதன் ஓரத்தில் ஒரு பம்ப் உண்டு. சைக்கிளுக்குக் காற்றடிப்பது போல அதை அடித்தான்.

மெதுவாகக் கூடாரத் துணி காற்று ஏறி, வீங்கியது. கொட்டங்கச்சி வடிவமான கூடாரமாக அது மாறியது. அதற்குள் மூன்றுபேர் நெருக்கமாகப் படுத்துக் கொள்ள இடம் இருந்தது. பாண்டியன் அதை அந்த ஆப்பின் மீது இறுக்கமாகக் கட்டினான். இல்லாவிட்டால் அது பறந்து போய்விடும்.

டாக்டர் பெட்டிக்குள் இருந்த உணவை எடுத்தார். கொழுப்பு, புரொட்டீன் மாவு ஆகியவை அடங்கிய ரொட்டி அது. நன்றாக உலர்ந்தது. அது வெகுநாள் கெடாமல் இருக்கும்.

டாக்டர் சிறு குவளை ஒன்றில் பனிக்கட்டியை உடைத்துப் போட்டார். அவரிடம் சிறிய பெட்டி போல ஒன்று இருந்தது. அதைத் திறந்து அந்தக் குவளையை உள்ளே வைத்தார். அந்தப் பெட்டியை பாட்டரியுடன் இணைத்தார். அது மின் அடுப்பு. உள்ளே தண்ணீர் உருகி சூடாக ஆரம்பித்தது. பனிவெளியில் கடும் குளிரில் திறந்து வைத்து எதையும் சூடு பண்ண முடியாது.

நீர் சூடானதும் அதை வெளியே எடுக்காமலேயே அவர் குடிநீர் புட்டிகளில் விட்டார். அந்தக் குடிநீர்ப் புட்டிகள் கனமான கார்க் உறை போடப்பட்டவை. அவை பிளாஸ்குகள் போல இருக்கும். அதில் வைத்திருந்தால்தான் தண்ணீர் உறையாமல் இருக்கும். திறந்து வைத்திருந்தால் தண்ணீர் உடனடியாகப் பனிக்கட்டியாகிவிடும்.

தண்ணீரைக் குடித்தபடி அவர்கள் ரொட்டியைத் தின்றார்கள். டாக்டர் ஒரு காற்றாடியை எடுத்தார். அதன் சிறகுகள் தனித்தனியாக இருந்தன. அவற்றைப் பொருத்தினார். அதை ஒரு கம்பி மீது நிறுத்தினார்.

"இது என்ன?" என்றான் கிம்.

"நமது பாட்டரி சீக்கிரமே மின்சாரத்தை இழந்து விடும். இந்தக் காற்றாடியுடன் டைனமோ இணைக்கப்பட்டுள்ளது. இரவில் காற்றாடி சுழலும்போது டைனமோ இயங்கும். அது மின்சாரத்ைத உற்பத்தி செய்யும். அந்த மின்சாரத்தை நமது பாட்டரி ஏற்றுக் கொள்ளும்" என்று பதிலளித்தார் டாக்டர்.

காற்றாடியில் மின்கம்பிகளை இணைத்தார். காற்று குறைவாகவே இருந்தது.

"போதிய காற்று இல்லையே!' என்று பாண்டியன கேட்டான்.

"இமயமலைப் பகுதியில் காற்று திடீர் திடீரென்றுதான் வீசும்...

"சரி...தூங்கலாமா?" என்றபடி பாண்டியன் படுத்தான். அவனுக்கு மிகவும் களைப்பாக இருந்தது.

“இரு....” என்று கூறியபடி டாக்டர், “அதோ பார்!” என்று ஒரு திசையைக் காண்பித்தார். மூவரும் அப்போது பனிப் பாளத்தின் மீது அமர்ந்திருந்தனர்.

பாண்டியன் அவர் சுட்டிக் காட்டிய திசையைப் பார்த்தான். மேற்குத் திசை அது. முதலில் அங்கு ஒரு பனிமலையின் உச்சி தெரிந்தது. பிறகு அந்த மலையின் விளிம்புகள் இலேசாகத் தெரிந்தன.

மெதுவாக ஒளி அதிகரித்தது. வெள்ளிக் கம்பி போல மலையின் விளிம்பு தெரிந்தது. அரிவாளின் நுனி கூர்மையாக ஒளி விடுவது போல அது இருந்தது.

பிறகு அந்த மலையே ஒளிவிட ஆரம்பித்தது. வெள்ளியை உருக்கிக் குவித்து வைத்தது போல அது தகதகத்தது.

சட்டென்று தன்னைச் சுற்றியும் வெண்ணிற ஒளி நிரம்பி இருப்பதைப் பாண்டியன் பார்த்தான். பனிப்பாளம் வெள்ளியாலான கடல்போல் தெரிந்தது.

வானத்தில் முழுநிலவு எழுந்தது. அத்தனை பெரிய நிலவை அவன் பார்த்ததே இல்லை. தரையில் பார்ப்பதைப் போல இரண்டு மடங்கு பெரிய நிலவு அது! நட்சத்திரங்களின் ஊடே அவன் பறந்துகொண்டிருப்பது போலத் தெரிந்தது.

பிறகுதான் அது ஏன் என்று தெரிந்தது அவனுக்கு. பனிப்பாளம் ஒரு பெரிய கண்ணாடி போல வானத்தைப் பிரதிபலித்தது. நட்சத்திரங்களும் நிலவும் தரையிலும் தெரிந்தன. இரண்டு நிலவுகள்! அவை அசையாமல் மிதந்து நின்றன.

கிம் பத்மாசனமிட்டு அமர்ந்தான்.

> புத்தம் சரணம் கச்சாமி!
>
> சங்கம் சரணம் கச்சாமி!
>
> தர்மம் சரணம் கச்சாமி!

பாண்டியனும் அவனுடன் இணைந்து கொண்டான். புத்தரின் நாமத்தைச் சொல்லச் சொல்ல, மனம் கனிந்தது. உலகில் உள்ள அத்தனை மனிதர்கள் மீதும் அன்பு தோன்றியது.

‘புத்தர் பெருமானே! இந்த வானம் எவ்வளவு அழகாக இருக்கிறது! இந்த பூமியும் எத்தனை அழகாக இருக்கிறது! எவ்வளவு மகத்தான ஒரு வாழ்ககை மனிதனுக்கு அருளப்பட்டிருக்கிறது! ஆனால் மனிதன் சுயநலத்தால் பிறரைத் துன்புறுத்துகிறான். எனவே தானும் துன்புறுகிறான். புத்தர் பெருமானே! நீங்கள் பெரும் கருணையை மனிதர்களுக்குக் கற்பித்தீர்கள்! அந்தக் கருணை என் மனதிலும் நிறைய வேண்டும்! நான் யாரையும் வெறுக்கக் கூடாது! எனக்கு அருள் வழங்குங்கள்!’ என்று பாண்டியன் மனதுக்குள் நினைத்தான்.

அப்போது பனிப்பாளத்தில் தெரிந்த நிலவு ஒரு வெண்ணிறத் தாமரை போல அவனுக்குத் தோன்றியது. அதன் மேல் தெரிந்த வானத்து நிலவு புத்தரின் பாதங்கள் போலத் தோன்றியது.

பாண்டியனுக்குக் கண்ணீர் கன்னங்களில் வழிந்தது.

கிம் புத்தர் நாமத்தை மீண்டும் சொன்னான். மூன்று முறை குனிந்து வணங்கினான்.

“படுத்துக் கொள்வோம். நாளை மீண்டும் பயணம் இருக்கிறதல்லவா?” என்று டாக்டர் சொன்னதும், அவர்கள் கூடாரத்துக்குள் புகுந்து படுத்துக் கொண்டனர்.

பனிப்பகுதியும் துல்லியமான வானமும்
உறைபனிப் பகுதிகளில் காற்றுமண்டலம் ஏன் மிகச் சுத்தமாக இருக்கிறது?
உறைபகுதிகளில் மைனஸ் 20 டிகிரி செல்ஷியஸ் வரை குளிர் இருக்கிறது. எனவே காற்றிலுள்ள நீராவி முழுக்கக் குளிர்ந்து பனிக்கட்டியாக மாறி, மண்ணில் படிந்து விடுகிறது.

தூசுகளும் கூடவே வந்து படிந்து விடுகின்றன.
ஆனால் இவ்வாறு ஓரிரு நாட்கள்தான் இருக்கும். பிறகு மற்ற இடங்களிலிருந்து நீராவி நிரம்பிய மேகங்கள் அங்கு வந்து சேர்ந்து விடும். அவை குளிர்ந்து பனித் திவலைகளாக மாறி உதிரும். பஞ்சு உதிர்வதுபோல இது காணப்படும். இதுவே (குணணிதீ) மென்பனி எனப்படும்.

# அத்தியாயம் 14

**ம**றுநாள் காலையில் கிம்தான் முதலில் எழுந்தான். அவன் மிகச் சிறிய வயதிலேயே புத்த மடாலயத்துக்குக் கல்வி கற்க அனுப்பப்பட்டவன். அங்கு எப்போதும் அதிகாலையிலேயே எழுந்தாக வேண்டும். எத்தனை கடும் குளிராக இருந்தாலும் சரி. அவ்வாறு பழகியதனால் காலையில் அவன் நினைத்தால்கூட வெகு நேரம் தூங்க அவனால் முடியாது.

எழுந்ததுமே கிம் அரைக்குவளை நீரைச் சூடுபடுத்தினான். அதை வைத்து முகம் கழுவினான். பல்லையும் தேய்த்துவிட்டான். தரையில் அமர்ந்து கண்களை மூடிக் கொண்டான். அரை மணி நேரம் தியானம் செய்தான்.

தியானம் என்பது கண்களை மூடிக்கொண்டு நம் மனத்தில் ஓடும் எண்ணங்களைக் கூர்ந்து கவனிப்பதாகும். அப்படிக் கவனித்தால் மெதுவாக நமது எண்ணங்கள் ஒழுங்காக ஆகிவிடும். நம் மனம் மிகவும் அமைதி அடைந்துவிடும். இதை வெகு நாள் தொடர்ந்து செய்யவேண்டும்.

பௌத்த மதத்தில் பல விதமான தியானப் பயிற்சிகள் உண்டு. அவற்றை பிட்சுக்கள் சிறுவயதிலேயே குழந்தைகளுக்குக் கற்றுத் தருவார்கள். அவற்றைத் தொடர்ந்து செய்யும் குழந்தைகளுக்கு ஞாபகசக்தி அதிகமாக இருக்கும். பொறுமையும் அதிகமாக இருக்கும்.

கிம், “புத்தம் சரணம் கச்சாமி! சங்கம் சரணம் கச்சாமி! தர்மம் சரணம் கச்சாமி!” என்று மூன்றுமுறை சொன்னான்.

பிறகு எழுந்து வெளியே வந்தான். வெளியே நல்ல ஒளி இருந்தது. கிழக்குத் திசையில் மேகங்களுக்கு அப்பால் சூரியன் தென்பட்டது. ஒளிக்கதிர்கள் பனிப்பரப்பின்மீது நேர்க்கோடுகளாக விழுந்திருந்தன. பனிப்பாளம் அவற்றைக் கண்ணாடி போலப் பிரதிபலித்தது.



கிம் அந்தக் காற்றாடியைப் பார்த்தான். அது மிக வேகமாகச் சுழன்று கொண்டிருந்தது. உடனே மேற்குத் திசையைப் பார்த்தான். அங்கு மலைகளையே பார்க்க முடியவில்லை. மிகப் பெரிய கரிய திரையைத் தொங்கவிட்டது போல இருந்தது. அவ்வளவு கருமையான மேகம்!

உடனே கிம் கூடாரத்துக்குள் புகுந்தான். அவன் டாக்டரைப் பிடித்து உலுக்கினான். “டாக்டர் சாப்! டாக்டர் சாப்!” என்றான்.

டாக்டர் விழித்துக் கொண்டார். “என்ன கிம்? ஏன் இத்தனை பதற்றம்?” என்றார்.

“பனிப்புயல் வருகிறது.”

டாக்டர். “எங்கே?” என்று பாய்ந்து எழுந்தார்.

பாண்டியனும் பாய்ந்து எழுந்து, “எங்கே?” என்றான்.

மூவரும் வெளியே ஓடி வந்தார்கள். டாக்டர் மேற்குத் திசையை உற்றுப் பார்த்தார்.

பாண்டியன் “நல்ல வெயில் அடிக்கிறது!” என்றான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

“மேற்கே பார்!” என்றார் டாக்டர்.

“கருமேகம்” என்றான் பாண்டியன்.

“கடலிலும் சரி, பாலைவனத்திலும் சரி, பனிவெளியிலும் சரி வானம் கறுத்தாலே புயல் என்றுதானே பொருள்” என்றார் டாக்டர்.

“கிளம்புவோம்”என்றான் கிம்.

பாண்டியன் கூடாரத்தின் காற்றைத் திறந்து விட்டான். புஸ்ஸ் என்று அது சுருங்கியது.

பொருள்களைத் திரட்டி வண்டியில் வைத்துக் கொண்டார்கள். டாக்டர் காற்றாடியைக் கழற்றினார். டைனமோவைப் பார்த்தார். முழுமையாக மின் ஏற்றம் பெற்றிருந்தது. இரவு முழுக்கக் காற்று பயங்கரமாக வீசியிருக்கிறது என்று புரிந்தது.

கிம் மேற்குத் திசை நோக்கிப் போக முற்பட்டான்.

“அங்கிருந்துதானே புயல் வருகிறது? ஏன் அந்த திசை நோக்கிப் போக வேண்டும்?” என்று பாண்டியன் கேட்டான்.

“இந்தப் பக்கம் பெரிய பாறைகள் ஏதும் இல்லை. பனிப்புயலின் போது நாம் ஏதாவது பெரிய பாறைக்கு மறுபக்கமாக ஒண்டிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் காற்று அடித்துச் சென்று விடும். உறைபனி நம்மீது கொட்டி மூடி விடும்” என்றார் டாக்டர்.

மூவரும் மிக வேகமாக நடந்தார்கள். தொலைவில் ஒரு பாறை தெரிந்தது. மிக உயரமான பனிப்பாறை அது.

பாண்டியன் “வாருங்கள், அந்தப் பாறையின் அடியில் ஒதுங்கலாம்” என்றான்.

“இல்லை... அது வெறும் பனியாலான பாறை... புயலடித்தால் உடைந்து விடும்” என்றார் டாக்டர்.

“எப்படித் தெரியும்?” பாண்டியன் கேட்டான்.

“அது இளநீல நிறத்தில் இருக்கிறது. காரணம் அது கண்ணாடி போல ஒளி ஊடுருவுவதாக உள்ளது. மேலும் அதன் வடிவத்தைப் பார். ஒருபக்கம் சரிவாக உள்ளது. மறுபுறம் செங்குத்தாக உள்ளது. காற்றில் அடித்து வரப்படும் பனி ஒரு இடத்தில் உறைவதனால் இது உருவாகிறது. காற்று எங்கிருந்து வீசுகிறதோ அந்தப் பக்கம் சரிவாக இருக்கும், மறுபக்கம் செங்குத்தாக இருக்கும்” என்றார்டாக்டர்.

அவர்கள் அதைத் தாண்டிச் சென்றார்கள். வெறும் பனிமலைகள் பல தென்பட்டன. கடைசியாக ஒரு பனிமலை தென்பட்டது. ஆனால் அது இளமஞ்சள் நிறத்தில் இருந்தது. அதன் இரு பக்கங்களுமே சரிவாக இருந்தன. டாக்டர் அதைச் சுட்டிக் காட்டினார்.

“இதுதான் நாம் தேடியது... இந்தப் பாறைக்குள்தான் உண்மையான பாறை இருக்கிறது. ஒளி ஊடுருவாததால்தான் இது இளமஞ்சள் நிறமாக இருக்கிறது” என்று டாக்டர் கூறினார்.

அவர்கள் அந்தப் பனிப்பாறையின் கிழக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டார்கள். அதற்குள் மேற்குப் பக்கத்தில் இருந்த இருண்ட மேகப் படலம் நெருங்கி நெருங்கி வந்தது.

“சீக்கிரம் கூடாரத்தைப் போடு” என்றார் டாக்டர்.

பாண்டியன் கூடாரத்தை விரித்துக் காற்று அடிக்க ஆரம்பித்தான். கிம் ஆப்பு அறைந்தான்.

“ஆப்பை மிகவும் ஆழமாக அறைய வேண்டும். புயல் மிக வேகமானது” என்றார் டாக்டர். கிம் இன்னொரு ஆப்பையும் அறைந்தான்.

கூடாரம் தயாராயிற்று. அதற்குள் இருட்டு மிகவும் நெருங்கி விட்டது. கிம் கயிறுகளைக் கட்டினான். டாக்டர் வண்டியை ஆப்பில் இறுகக் கட்டினார். கூடாரத்துக்குள் அவர்கள் இருவரும் புகுந்து கொண்டார்கள்.

பாண்டியன் கூடாரத்துக்குள் நுழைவதற்கு முன்பு, மேற்குத் திசையைப் பார்த்தான்.

மேற்குத் திசையில் வானமே கன்னங்கரேலென இருந்தது. அந்தக் கரிய பரப்பில் அடிக்கடி மின்னல்கள் வெடித்து, நெளிந்து அணைந்தன. அந்தக் காட்சி கரிய சுவர் ஒன்று வெடித்து விரிசல் போல வேகமாக நெருங்கி வந்தது.

“பாண்டியன் உள்ளே வா!” என்றார் டாக்டர். பாண்டியன் உள்ளே புகுந்தான்.

மிகப் பெரிய மழை நெருங்கி வருவது போல ஒலி கேட்டது. பிறகு காது செவிடாகும்படி ஓலம் எழுந்தது. ஒலி பெரிய பாறைகள் உடைந்து தெறிப்பது போலக் கேட்டது.

புயல் அவர்கள் மீது கவிந்தது. அவர்கள் ஒண்டியிருந்த பாறையின் மேற்குப் பகுதியில் பெரிய பனிப்பாளங்கள் வந்து, ‘மடார் மடாரென்று விழுந்த ஒலி கேட்டது. எங்கும் இருள் பரவியது.

இருட்டில் மின்னல்கள் அதிர்ந்தன. இடியோசை மீண்டும் மீண்டும் எதிரொலித்தது. மின்னலின் ஒளியில் பறந்து செல்லும் பனிப்பாளங்கள் பளபளத்துத் தெரிந்தன. ஒரு முறை மின்னல் அடித்த போது எதிரே இருந்த பனிப்பாறை வெடித்துப் பிளப்பதைப் பாண்டியன் கண்டான்.

அடுத்த மின்னலில் அந்தப் பனிப் பாறையையே காணவில்லை.

புயல் வலுத்தபடியே சென்றது. வெட்ட வெளியில் நின்றிருந்தால், அதற்குள் அவர்கள் நசுங்கிக் கூழ் ஆகியிருப்பார்கள். ஒவ்வொரு பனிக்கட்டியும் அவர்களை விடவும் பெரியதாக இருந்தது.

வானத்தில் இடி ஒலித்தது. மண்ணில் பனிப்பாளங்கள் விழும் ஒலி கேட்டது. ஒரு விதமான தாளம் போல இருந்தது அது.

வானமும் பூமியும் சேர்ந்து போடும் தாளம் அது!

திடீரென்று பாண்டியனின் பயம் குறைந்தது. இப்படி ஒரு காட்சியைப் பார்த்த பிறகு, இறந்தாலும் தவறில்லை என்று பட்டது. அவனுக்கு உற்சாகம் ஏறியது. உரத்த குரலில் பாட ஆரம்பித்தான்.

வெடிபடு மண்டலத்து இடி பல தாளம் போட- வெறும்

வெளியில் ரத்தக் களியொடு பூதம்பாட- பாட்டின்

அடிபடு பொருளின் அடிபடும் ஒலியில் கூட- களித்

தாடும் காளீ சாமுண்டீ கங்காளி!

அன்னை! அன்னை!

ஆடும் கூத்தை நாடச் செய்தாய் என்னை!

பாண்டியன் பாடுவதை டாக்டர் கவனித்தார். ஆனால் அவருக்கு எதுவுமே கேட்கவில்லை. காரணம் புயலின் ஓசை அதைவிட பிரம்மாண்டமாக இருந்தது.

பனிப்புயல் ஏன் வீசுகிறது?
இமயமலைத் தொடரில் பனிமலைகளில் அடிக்கடி பனிப்புயல் வீசுவது ஏன்?
ஒரு பகுதியில் திடீரென்று கடும் குளிர் ஏற்படுகிறது. அங்குள்ள நீராவியெல்லாம் பனியாக மாறிவிடுகிறது. உடனே அங்குள்ள காற்று மண்டலத்தின் அழுத்தம் மிகவும் குறைந்துவிடும். உடனே காற்றின் அழுத்தம் அதிகமாக உள்ள இடத்திலிருந்து, அந்தப் பகுதிக்குக் காற்று வேகமாகப் பாய்ந்து வருகிறது. இதனால்தான் பனிப்புயல் ஏற்படுகிறது.
இவ்வாறு காற்று மண்டலத்தின் வெப்பம் குறைவது மிக வேகமாக நடைபெறுகிறது. எனவேதான் புயலும் மிக வேகமாக வீசுகிறது.

# அத்தியாயம் 15

மெதுவாகப் புயல் தணிய ஆரம்பித்தது. பனிப்பாளங்கள் விழுவது நின்றது.

காற்றின் ஒலி மாறுபட்டது. ஓவென்ற ஓலத்துக்குப் பதிலாக அது ஊளையிடுவது போலக் கேட்டது.

“சுழல் காற்றின் ஒலியா?” பாண்டியன் வியப்புடன் கேட்டான்.

“ஆமாம். முன்பு நீங்கள் என்ன பாட்டுப் பாடினீர்கள்?” என்றார் டாக்டர்.

“பாரதியாரின் கவிதை அது. எங்கள் மொழியில் அவர்தான் பெரிய கவிஞர்” என்றான் பாண்டியன்.

“கேள்விப்பட்டிருக்கிறேன்” என்றார் டாக்டர். அவருடைய தாய்மொழி இந்தி.

மின்னல் அடித்த போது பாண்டியன் ஒரு காட்சியைக் கண்டான். வானத்தையும் பூமியையும் இணைக்கும் அளவுக்குப் பெரிய ஒரு தூண் எதிரே இருந்தது. அந்தத் தூண் நகர்ந்து சென்றது.

பனித்துகள்களைத்தான் சுழல்காற்று அப்படி அள்ளிச் சுருட்டி எடுத்துச் செல்கிறது என்று பாண்டியன் அறிந்தான். அந்தத் தூண் நகர்ந்து சென்றது. பிறகு அப்படியே நின்றது. அதன் அடிப்பகுதி அகலமாக இருந்தது. அந்த அகலமான பகுதி மெதுவாக மேல்நோக்கி நகர்ந்தது. தூணின் உச்சிக்கு அது சென்றது. அங்கு அது சக்கரம் போலச் சுழன்றது. சுழன்றபடி வானத்தில் ஏறி மறைந்தது.

“சுழல் காற்று அப்படியே மேல்நோக்கி சென்றுவிட்டது” என்றார் டாக்டர்.

பிறகு சுழல்காற்று நின்ற இடத்தில் மட்டும் ஒரு மழை பொழிவது போல இருந்தது. மேல் நோக்கிச் சென் பனித்துகள்கள் எல்லாம் தரை நோக்கிப் பொழிந்தன. மின்னல் அடித்த போது அந்த இடத்தில் ஒரு குன்று போலப் பனிகுவிந்திருப்பது தெரிந்தது.

“ஒரு புதிய பனிப்பாறை பிறந்து விட்டது” என்றார் டாக்டர்.

பாண்டியன், கிம்மைப் பார்த்து, “பயந்து விட்டாயா?” என்றான்.

“எதற்குப் பயம்?” என்றான் கிம்.

“உன்னுடைய புத்தர் இப்போது கோபம் அடைந்தாரோ?” என்றான் பாண்டியன்.

“புத்தருக்கு கோபம் என்பதே இல்லை’ என்றான் கிம்.

“அப்படியானால் இப்போது இங்கு நடந்தது என்ன?”

“புத்தர் விளையாடினார்.”- கிம் அமைதியாகச் சொன்னான்.

எல்லோரும் வெளியே வந்தார்கள். கூடாரம் உறைபனியால் மூடப்பட்டிருந்தது. கூடார வடிவம் ஏன் அரைவட்டமாக உள்ளது. என்று உடனே பாண்டியனுக்குப் புரிந்தது. வேறு எந்த வடிவத்தில் இருந்தாலும் அதன் மீது அவ்வளவு பனி குவிந்திருக்கும் போது அது உடைந்திருக்கும். கோள வடிவம் எளிதில் உடையாத அமைப்பு ஆகும்.

மேகங்கள் இடைவெளி விட்டு சூரியனின் ஒளிக்கதிர்கள் வந்தன. அவை பனிப்பாளம் மீது விழுந்தன. கண்ணாடி அறைக்குள் விளக்கை வைத்தால் எப்படி இருக்கும்? அது போல இருந்தது அக்காட்சி. நான்கு திசைகளிலும் பனிப்பாறைகள் ஒளி பெற்றன. ஒவ்வொரு பனிப்பாறையும் ஒரு பெரிய மின்சார பல்ப் போல இருந்தது.

“புத்தரின் ஆசி!” என்றான் கிம்.

மேகங்கள் விலகி விரிந்தன. வானம் அதன் வழியாகத் தெரிந்தது. சூரிய ஒளி அதிகரித்தது.

மேற்குத் திசையில் பனிமலைகளின் சிகரங்களின் மீது ஒரு வானவில் மெதுவாகத் தெரிய ஆரம்பித்தது. பிறகு அதன் வண்ணங்கள் தெளிவு பெற்றன. அது வளைந்து ஒரு முழு வட்டமாக ஆயிற்று.

பாண்டியன் விமானத்தில் பயணம் செய்தபோது ஒரு முறை இவ்வாறு வட்ட வடிவமான வானவில்லைப் பார்த்திருக்கிறான்.

“நாம் மலையில் இருக்கிறோம். வானவில்லும் நாமும் ஒரே உயரத்தில் இருக்கிறோம். அதனால்தான் வானவில் வட்டமாகத் தெரிகிறது”-டாக்டர் விளக்கினார்.

பாண்டியன் கிம்மிடம் “இந்த வானவில்லை என்னவென்று சொல்வாய்?” என்றான்.

“புத்தரின் தர்மசக்கரம் இது” என்றான் கிம்.

“உனக்கு எல்லாமே புத்தர்தானா?” பாண்டியன் கேட்டான்.

“புத்தர் இல்லாத இடமே இல்லை. அழகானவையும் ஆபத்தானவையுமான எல்லாவற்றிலும் புத்தரைப் பார்க்கலாம். இதை எங்கள் பிட்சு அடிக்கடி சொல்வார்” என்றான் கிம்.

“சீக்கிரம் கிளம்புவோம்” என்றார் டாக்டர்.

மீண்டும் அவர்கள் பயணத்தைத் தொடர்ந்தனர்.

ஒரு மலையைப் பார்த்ததும் கிம் அதைச் சுட்டிக் காட்டினான்.

“அந்த மலைதான். அதோ அதன் அருகேதான் நான் கிடந்தேன். அங்குதான் முதல் முதலில் பனிமனிதனைப் பார்த்தேன்” என்றான். மலையை நோக்கி நடந்தார்கள்.

“அதோ அந்த திசை. அவ்வழியாகத்தான் என்னை பனிமனிதன் தூக்கிச் சென்றான்” என்றான் கிம்.

அவர்கள் அந்த வழியாக நடந்து சென்றார்கள்.

வழியெங்கும் பனிப்பாறைகள் உடைந்தும் பிளந்தும் கிடந்தன. அவர்கள் பாறையின் உடைசல்களைத் தாண்டிச் சென்றார்கள். அப்போது டாக்டர் நின்றார். குனிந்து தரையில் எதையோ பார்த்தார். தரையில் ஒரு வெண்ணிற ஓடு கிடந்தது.

ஏதோ பெரிய பீங்கான் பாத்திரம் உடைந்த சில்லு போலக் காணப்பட்டது. டாக்டர் அதைக் கவனமாக எடுத்தார்.

உடனே பாண்டியனுக்கும் புரிந்தது. அது ஒரு மண்டை ஓட்டுத் துண்டு!

“பாருங்கள். இந்தப் பகுதியில் இதன் வேறு துண்டுகள் கிடைக்கும்” என்றார் டாக்டர்.

அவர்கள் பொறுக்க ஆரம்பித்தார்கள். நிறைய துண்டுகள் கிடைத்தன. கடைசியாகப் பற்களுடன் கூடிய கீழ்தாடை கூட கிடைத்தது.

அது பனிமனிதனின் மண்டை ஓடு என்று பாண்டியனுக்குத் தோன்றியது. காரணம் அது அத்தனை பெரிதாக இருந்தது.

தரைக்கு அடியில் பருவநிலை என்ன?
தரை, வெப்பத்தையோ குளிரையோ கடத்தாது. எனவே தரைக்கு அடியில் போகப் போக குறைந்தபடியே போகும். ஒரு குறிப்பிட்ட ஆழத்தில் தட்பவெப்பநிலை மாறுவதே இல்லை. பாரீஸ் நகரத்தில் ஒரு ஆராய்ச்சிச் சாலையில் லவாய்ஸே என்ற விஞ்ஞானி ஒரு வெப்பமானியை அமைத்தார். இது தரைமட்டத்தில் இருந்து 28 மீட்டர் ஆழத்தில் உள்ளது. ஒரு பாதாள அறையில் இது இருக்கிறது. இதை லவாய்ஸே அமைத்து ஏறத்தாழ இரு நூறு வருடம் ஆகிறது.
இன்றுவரை இந்த வெப்ப மானியின் வெப்ப அளவு மாறியதே இல்லை. 11.7 செல்சியஸ் வெப்பத்தையே காட்டிக் கொண்டிருக்கிறது.

## அத்தியாயம் 16

அவர்கள் அந்தப் பெரிய மலையின் அடிவாரத்துக்கு வந்தார்கள். அதற்குள் அது உறைபனியால் மூடப்பட்டு இருந்தது. பாண்டியன் கூடாரம் போட ஆரம்பித்தான். வெயில் குறைந்து மாலை நேரம் தொடங்கியது.

டாக்டர் அந்த மண்டை ஓட்டின் துண்டுகளைப் பரப்பி வைத்தார். கவனமாக அவற்றை எடுத்துப் பொருத்த ஆரம்பித்தார். அவருடைய கையில் பசை இருந்தது. அதை எடுத்து ஒட்டினார். மிகவும் கவனமாக அதைச் செய்ய வேண்டியிருந்தது. ஒவ்வொரு எலும்புத் துண்டும் எந்த இடத்துக்கு உரியது என்று எளிதில் கண்டுபிடிக்க முடியவில்லை.

கடைசியாக மண்டை ஓடு தயாராகிவிட்டது. அது ஓரடி அகலமும் ஒன்றரை அடி உயரமும் உடையதாக இருந்தது.

“எவ்வளவு பெரிய தலை!” என்றான் பாண்டியன்.

“நாம் கணக்கு போட்டதைவிட இவன் உயரமானவன்” என்றார் டாக்டர்.

“இவனுடைய உடலின் எலும்புகள் எங்கே?” என்றான் பாண்டியன்.

“வெகுகாலம் முன்பு இவன் மண்ணில் புதைந்து விட்டான். உடல் மட்கி விட்டது. தலை மட்டும் இந்தப் பாறைக்குள் இருந்தது. இதன் உடல் பகுதி அந்த மலையில் இருக்கலாம்” என்றார் டாக்டர்.

“இந்த மண்டை ஓட்டை என்ன செய்வது?” பாண்டியன் கேட்டான்.

“மண்டை ஓடு ஒரு பெரிய புத்தகம் போன்றது. அதிலிருந்து ஏராளமான தகவல்களை நாம் அறியலாம். மண்டை ஓட்டியல் நிபுணர்கள் மண்டை ஓட்டுக்குள் உருக்கிய ரப்பரை ஊற்றி உறைய வைப்பார்கள். பிறகு அதைப் பிரித்து எடுத்தால் அந்த உயிரினத்தின் மூளை மாதிரியே இருக்கும். அந்த மூளையை மனித மூளையுடன் ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்வார்கள்”- டாக்டர் சொன்னார்.

“இந்தப் பனிமலையில் நாம் என்ன செய்ய முடியும்?”- சந்தேகமாகக் கேட்டான் பாண்டியன்.

“இரு, ஒரு யோசனை தோன்றுகிறது” என்று டாக்டர் தன் பையிலிருந்து பனிக் கோடாரியை எடுத்தார். பனியை வெட்டக் கூடிய கூர்மையான கோடாரி அது.

தரையில் பரவியிருந்த பனிப் பாளத்தை அந்தக் கோடாரியால் சதுரமாக டாக்டர் வெட்டினார். அந்தக் குழிக்குள் ஐஸ்கிரீம் போல மென்மையான பனி இருந்தது.

“எப்போதுமே பனிக்கட்டிக்கு அருகில் மென்மையான பனி இருக்கும். அதற்கும் அடியில் சுத்தமான தண்ணீர் இருக்கும்” என்றார் டாக்டர்.

“ஏன்?” என்றான் பாண்டியன்.

“பனிக்கட்டி சீரோ டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையில் உள்ளது. அதைவிடக் கீழான வெப்ப நிலைக்கு அது போக முடியாது. எனவே பனிக்கட்டிக்கு மேலே உள்ள கடும்குளிர் பனிக்கட்டிக்கு அடியில் போகவே முடியாது. ஆகவே அங்கு தண்ணீர் சீரோ டிகிரிக்கும்

அதிகமான வெப்ப நிலையில்தான் இருக்கும். ஆகவே அது உறைவதில்லை” என்றார் டாக்டர்.

“அப்படியானால் நமது கால்களுக்கு கீழே தண்ணீர் இருக்கிறதா?” என்று பாண்டியன் வியப்புடன் கேட்டான்.

“கண்டிப்பாக. ஒரு பத்தடி ஆழம் இந்த பனிக்கட்டியைத் தோண்டினால் நல்ல வெதுவெதுப்பான தண்ணீர் வரும். நாம் வந்த பனிப்பரப்பு எத்தனை சமதளமாக இருந்தது, பார்த்தீர்களா? அனேகமாக அது ஓர் ஏரியாக இருக்கலாம். தண்ணீர் உறைந்து அப்படியே வெட்ட வெளியாக மாறிவிட்டது.”- டாக்டர் சொன்னார்.

பாண்டியன் திரும்பி வந்த வழியைப் பார்த்தான். ‘இது ஒரு ஏரி மைதானம்’ என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

மென்மையான பனியை அள்ளி மண்டை ஓட்டுக்குள் நிரப்பினார். டாக்டர். முழுக்க நிரப்பிய பிறகு அதைச் சிறிது நேரம் அப்படியே வைத்தார்.

கடும் குளிரில் அந்தப் பனி இறுகி பனிக்கட்டியாக மாறியது. டாக்டர் மண்டை ஓட்டை ஒட்டியிருந்த பகுதிகளைப் பிரித்தார். மெதுவாகக் கழற்றி எடுத்த பிறகு திரும்பவும் அதை ஒட்டினார். இப்போது பனிமனிதனின் மூளையின் வடிவம் பனிக்கட்டியாக அவர்கள் முன் இருந்தது. நிஜமூளை போலவே அது இருந்தது.

டாக்டர் அதைக் கூர்ந்து பரிசோதித்தார்.

“என்ன தெரிகிறது?” என்றான் பாண்டியன்.

“மூளையைப் பற்றி எனக்கு அதிகமாகத் தெரியாது. தெரிந்ததை மட்டும் சொல்கிறேன். பொதுவாக பின் மூளைதான் மூச்சு, இதயத் துடிப்பு போன்ற அனிச்சைச் செயல்களைக் கட்டுப்படுத்துகிறது. மூளையில் உள்ள மடிப்புகள் அறிவுத் திறனைக் காட்டுகின்றன. முன் மூளைப் பகுதியில்தான் பேச்சுடனும் தருக்கபூர்வமான சிந்தனையுடனும் தொடர்புள்ள பகுதிகள் உள்ளன” என்றார் டாக்டர்.

பாண்டியன் அந்த மூளையைக் கூர்ந்து பார்த்தான். “இந்த முன் மூளை நன்றாக வளர்ந்திருக்கிறது. மூளையில் நிறைய மடிப்புகளும் உள்ளன” என்றான்.

“ஆமாம் இது ஏற்கெனவே நான் சொன்னதுதான். இந்த பனிமனிதனின் மூளை மனிதனின் மூளையளவுக்கே வளர்ச்சி அடைந்தது. அவனால் நம்மைப் போலவே சிந்திக்க முடியும். பேச முடியும். ஞாபகம் வைத்துக் கொள்ளவும் முடியும். அதாவது அவன் நம்மைப் போன்றே அறிவுத்திறன் உடையவன்” என்றார் டாக்டர்.

“ஆச்சரியமாகவே இருக்கிறது” என்றான் பாண்டியன்.

“அதே சமயம் இன்னொரு முக்கியமான விஷயமும் உள்ளது. இதோ இதைப் பாருங்கள்” என்றார் டாக்டர்.

டாக்டர் அந்த மூளையின் முன்பகுதியில் இருந்த ஒரு பிதுக்கத்தைச் சுட்டிக் காட்டினார். அது துணி நெளிந்து இருப்பது போல இருந்தது.

“இதுதான் பேச்சைக் கட்டுப்படுத்தும் பகுதி. மனிதர்களில் மட்டுமே இது இந்த அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்கும். இதைப் போல, மனித மூளையில் இதன் கீழ்ப் பகுதியில் உள்ள பிதுக்கங்களும் மிகவும் முக்கியமானவை. அவைதான் நமது கைகளின் இயக்கத்தைக் கட்டுப்படுத்துபவை. மனித மூளையில் இவையும் மிகவும் வளர்ச்சி அடைந்திருக்கும். நமது முன் மூளையில் பெரும் பகுதியை இந்தப் பிதுக்கங்களே நிறைத்திருக்கும்.”- டாக்டர் சொன்னார்.

“ஆனால் இந்த பனிமனிதனின் மூளையில் இந்தப் பகுதி வளர்ச்சி பெறாமல் குழியாகவே

இருக்கிறதே?” பாண்டியன் கேட்டான்.

“அது தான் மிகவும் முக்கியமான விஷயம். நாம் கூர்ந்து யோசிக்க வேண்டிய விஷயம். இந்தப் பனிமனிதனின் மொழியும் பேச்சும் மிகவும் வளர்ந்திருக்கின்றன. ஆனால் கைகள் போதிய அளவுத் திறன் பெறவில்லை” என்றார் டாக்டர்.

“அதாவது இந்தப் பனிமனிதனால் நன்றாகப் பேச முடியும். சிந்திக்கவும் முடியும். ஆனால் கைகளை நம்மைப் போல நுட்பமாகப் பயன்படுத்த முடியாது இல்லையா?” என்றான் பாண்டியன்.

“ஆமாம். மனிதனின் வரலாற்றை அறிந்தவர்கள் இதை நம்பவே மாட்டார்கள்” என்றார் டாக்டர்.

“ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?”

“மூளையில் மொழியைக் கட்டுப்படுத்தும் பகுதியும் கைகளைக் கட்டுப் படுத்தும் பகுதியும் அருகருகே உள்ளன. கவனித்தீர்களா?” டாக்டர் கேட்டார்.

*மூளையும் அறிவுத் திறனும்*
*பெரிய மூளை இருந்தால் அதிக அறிவுத்திறன் காணப்படுமா? யானையின் மூளை மனித மூளையைவிடப் பெரியதுதானே?*
*வெறும் அளவை அல்லது எடையை மட்டும் பார்க்கக்கூடாது. உடலின் எடையுடன் ஒப்பிடும்போது மூளையின் எடை எவ்வளவு என்று பார்க்கவேண்டும். அந்த வகையில் உலகிலேயே மனிதனுடைய மூளைதான் உடல் எடையுடன் ஒப்பிடும்போது மிகவும் பெரியது. அடுத்ததாக சில வகை டால்ஃபின்கள் வருகின்றன.*
*சரி, மூளையில் உள்ள மடிப்புகளையும் நெளிவுகளையும் மட்டும் வைத்து ஒருவனை அறிவாளியா இல்லையா என்று சொல்ல முடியுமா?*
*முடியாது. ஒருவனுக்குப் பெரிய வீடு இருக்கிறது. ஆனால் அதன் ஒரே ஒரு அறையில் மட்டும் அவன் வாழ்ந்தால் என்ன செய்ய முடியும்? மூளையைப் பயன்படுத்துவதுதானே முக்கியம்?*

# அத்தியாயம் 17

பாண்டியன் வியப்புடன், “இதில் அத்தனை ஆச்சரியம் என்ன இருக்கிறது?” என்றான்.

“மனித நாகரிகத்தின் அடிப்படைகள் இரண்டு. ஒன்று மொழி, இன்னொன்று கை” என்றார் டாக்டர்.

“தெளிவாகக் கூறுங்கள்” என்றான் பாண்டியன்.

“மற்ற மிருகங்களை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு எலி. எலிப் பொறியில் விழுகிறது என்றுவைத்துக் கொள்ளுங்கள். அந்த எலி பிறகு எலிப் பொறிப்பக்கம் வராது. ஆனால் மற்ற எலிகள் எலிப் பொறியில் வந்து மாட்டியபடிதான் இருக்கும். ஆகவே மனிதன் என்றால் என்ன ஆகும். அவன் மற்ற மனிதர்களிடம் எல்லாம் தான் அறிந்ததைச் சொல்லி விடுவான். எவருமே பிறகு அந்த பொறியருகே வர மாட்டார்கள் இல்லையா?” என்றார் டாக்டர்.

“ஆமாம்.”- பாண்டியன் தலையசைத்தான்.

“அதுதான் மனித இனத்தின் சிறப்பு அம்சம். ஒரு மனிதன் அறிந்தது எல்லா மனிதர்களுக்கும் பரவுகிறது. அதற்கு மொழி உதவுகிறது. மனிதன் தான் அறிந்தை எல்லாம் புத்தகங்களில் எழுதி வைக்கிறான். குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறான். ஒவ்வொரு மனிதனுக்குள் ஓரளவு அறிவு இருக்கிறது. ஆனால் மனித குலத்தின் மொத்த அறிவு, எல்லையே இல்லாத கடல் போன்றது. பேச ஆரம்பித்த பிறகு தான் மனிதனின் மூளை வேகமாக வளர ஆரம்பித்தது மொழி தான் குரங்கை நவீன மனிதனாக ஆக்கியது” என்றார் டாக்டர்.

“இந்தப் பனிமனின் பேசுகிறான்” என்றான் பாண்டியன்.

“ஆமாம். ஆனால் பேச்சு மாதிரியே மனிதனின் கையும் முக்கியமானது. ஒரு குரங்கு, கையால் எத்தனை விஷயங்களைச் செய்ய முடியும்? பேன் பார்க்கும், சாப்பிடும், சண்டை போடும். ஆனால் மனிதன் தன் கையால் படம் வரைகிறான், எழுதுகிறான். ஆயிரக்கணக்கான நுட்பமான வேலகளை அவன் செய்கிறான். மனிதன் முதலில் கைகளால் வேலை செய்ய ஆரம்பித்தான். வேலை செய்யச் செய்ய கையின் திறன் அதிகரிக்கிறது. இதை பிரடரிக் எங்கல்ஸ் என்ற அறிஞர் குறிப்பிட்டுச் சொல்கிறார். மனிதனின் எல்லாவிதமான ஆற்றல்களும் கைகளினாலான உழைப்பின் வழியாக உருவாகி வந்தவையே என்கிறார் அவர்”- டாக்டர் சொன்னார்.

“இந்தப் பனிமனிதன் கைகளைப் பயன்படுத்திப் பழகவே இல்லை. அவனால் எந்தக் கருவியையும் பயன்படுத்த முடியாது. எனவே அவனுக்கு உடையோ வீடோ இருக்காது. காட்டுக்குரங்கு போலத்தான் அவனும் வாழ்கிறான்” என்று டாக்டர் மேலும் விளக்கினார்.

கிம் தணிந்த குரலில், “டாக்டர் சாப், எனக்கு ஒரு சந்தேகம்” என்றான்.

“அதை எங்கள் பிட்சு திருஷ்ணை என்று சொல்வார். அது இருப்பதனால் தான் மனிதனுக்கு எங்கேயும் நிம்மதி இல்லை” என்றான் கிம்.

“அப்படியா?” என்றான் பாண்டியன்.

“உயிரினங்களிலேயே மனிதனுக்கு மட்டும்தானே துக்கமும் கவலைகளும் இருக்கின்றன?

பேராசையும் பொறாமையும் எல்லாம் திருஷ்ணையில் இருந்துதான் பிறக்கின்றன. ஏமாற்றமும் கோபமும் கூட அதிலிருந்துதான் பிறக்கின்றன."- கிம் கூறினான்.

"ஆமாம் புத்த மதம் அதைத்தான் கூறுகிறது." என்றார் டாக்டர்.

"அந்தத்துடிப்பை நாம் வெல்ல வேண்டும். அதை இல்லாமல் செய்தால் மனிதனுக்கு எந்த விதமான துயரமும் இருக்காது. எவ்வளவு தூரம் அந்தத் துடிப்பு இல்லாமல் இருக்கிறதோ அவ்வளவு தூரம் நாம் மகிழ்ச்சியாக இருக்கலாம். இது எங்கள் பிட்சு அடிக்கடி கூறும் விஷயம்" என்றான் கிம்.

"அதை நான் ஒப்புக் கொள்ளவே மாட்டேன். அந்தத் துடிப்புத் தானே அறிவுக்கே அடிப்படை? அந்தத் துடிப்புத்தானே நம்மை பனிமனிதனைத் தேடி இவ்வளவு தூரம் கொண்டுவந்து சேர்த்திருக்கிறது?" டாக்டர் சொன்னார்.

"சரி, நாம் கிளம்பலாம். இரவு வருகிறது" என்றான் பாண்டியன்.

அவர்கள் கிளம்பினார்கள். மலையின் அடிவாரத்தை வந்தடைந்தார்கள். இரவு நெருங்கி நெருங்கி வந்தது.

"இத்தகைய மலையின் அடியில் தங்குவது ஆபத்து. பெரிய பாறைகள் மலை மீது உடைந்து நிற்கின்றன. இமயமலைப் பகுதியில் சிறிய நிலநடுக்கம் எப்போதும் இருந்தபடியே இருக்கும். பாறைகள் உருண்டு விழுவது அடிக்கடி நடக்கும். எனவே எப்படியாவது மறுபக்கம் போக வேண்டும்" என்றார் டாக்டர்.

"இந்த மலை நடுவே ஒரு பாதை உள்ளது. அதை நான் பார்த்த ஞாபகம் வருகிறது" என்றான் கிம்.

கிம் வழிகாட்டினான். இருவரும் பின் தொடர்ந்தனர்.

இருட்டி விட்டது.

"இந்தப் பகுதியில் நீல நிறமான ஒளி பரவியிருப்பதை அன்று பார்த்தேன்." கிம் சொன்னான்.

அவர்கள் இருட்டில் தடுமாறியபடி நடந்தார்கள். சற்று தூரம் சென்றதும் நீல நிறமான ஒளி தெரிந்தது. டாக்டரும் கிம்மும் நீல நிறமாகத் தெரிந்ததைப் பாண்டியன் கவனித்தான்.

நீல நிற ஒளியில் அவர்கள் தொடர்ந்து நடந்தார்கள். பனித்தரையும் பனிப்பாறைகளும் நீல நிறமாகச் சுடர்விட்டன.

ஒளி எங்கிருந்து வருகிறது என்று மெதுவாகத் தெரிய ஆரம்பித்தது.

ஒரு பாறை மீது நீல நிறமான விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. ஆனால் அது விளக்கல்ல. அது ஒரு நீல நிறமான பெரிய கல்! அந்தக் கல்தான் சுடர் விட்டபடி இருந்தது.

"வைரம்... வைரக்கல்!" என்று அவர் கூவினார்.

ஆமாம். அது நீல நிற வைரம்தான். அந்த வைரக்கல் ஒரு மனிதனை விடப் பெரிதாக இருந்தது.

நமது கையில் எல்லா கடவுள்களும் உண்டு
மிகப் பழங்காலத்தில் இருந்தே இந்தியாவில் கைகளை வழிபட்டு வந்தார்கள். கையில் எல்லாக் கடவுள்களும் வாழ்வதாக நம்பினார்கள். தினமும் கண் விழித்ததும் நம் கைகளை விரித்துக் காட்ட வேண்டும். அப்போது கூறுவதற்குரிய மந்திரம் ஒன்று உண்டு.
கராக்ரே வசதே லட்சுமி
கரமத்யே சரஸ்வதி
கரமூலதே து கோவிந்த:
பிபாதே கர தர்சனம்.

சம்ஸ்கிருதத்தில் உள்ள இந்த மந்திரத்தின் அர்த்தம் இது:
“கைகளின் நுனியில் லட்சுமி வசிக்கிறாள். கைகளின் நடுவே சரஸ்வதி இருக்கிறாள். கைகளின் கீழ் மூலையில் கோவிந்தன் வாழ்கிறான். எனவே காலையில் தன் கரங்களைப் பார்த்து வணங்குக!”

# அத்தியாயம் 18

பாண்டியனின் கண்கள் கூசின. நீலநிறக் கண்ணாடியைப் போட்டுக் கொண்டிருப்பது போல இருந்தது.

"வைரம்! வைரம்!" என்று டாக்டர் மகிழ்ச்சிக் கூத்தாடினார்.

"இவ்வளவு பெரிய வைரமா?" என்றான் பாண்டியன்.

டாக்டர் அந்த நீலக்கல்லைத் தொட்டு வருடிப் பார்த்தார்.

அதன் வழியாகக் கண்களை வைத்துப் பார்த்தார்.

"மிக உயர்தரமான வைரம் இது. உள்ளே துல்லியமாக நீரோட்டம் இருக்கிறது" என்றார் டாக்டர்.

"நீரோட்டம் என்றால் என்ன?"

"வைரம் என்பது ஒரு படிகம். உப்பு மாதிரி. அதற்குள் ஒளிக்கதிர் புகுந்தால் உள்ளேயே அது சுற்றி வரும்."

"எப்படி?"

"ஒரு பெரிய அறையில் நான்கு சுவர்களிலும் நிலைக்கண்ணாடி இருக்கிறது. தரையும் கண்ணாடி. கூரையும் கூட கண்ணாடி. அந்த அறைக்குள் ஒரு மின்விளக்கை அடித்துப் பார்த்தால் என்ன நடக்கும்?" - டாக்டர் கேட்டார்.

"ஒளி ஒரு கண்ணாடியிலிருந்து மறு கண்ணாடிக்குப் பிரதிபலிக்கும். பிரதிபலித்துப் பிரதிபலித்துச் சுற்றிவரும்.

"அங்கு ஒரு விளக்கு ஏற்றி வைத்தால் என்ன தெரியும்? கோடிக்கணக்கான விளக்குகள் எரிவது போலத் தெரியும் இல்லையா?" டாக்டர் கேட்டார்.

"ஆமாம்."

"அதைப் போலத்தான் வைரமும். வைரத்தில் இதே மாதிரி பல கோடி நுண்ணிய கண்ணாடி அறைகள் இருக்கின்றன. வைரத்தில் விழுந்த ஒளி உள்ளே மாறி மாறிப் பிரதிபலிக்கிறது. அதனால்தான் வைரம் ஒளிவிடுகிறது. இந்த பிரதிபலிப்பைத்தான் வைர வியாபாரிகள் நீரோட்டம் என்கிறார்கள்."

"அப்படியானால் இந்த வைரம் விலை மதிப்பு மிகுந்ததா?"

"கோகினூர் வைரம் கேள்விப்பட்டிருப்பீர்கள் அல்லவா? ஷாஜகானின் மயிலாசனத்தில் இருந்த வைரம். இன்று அது லண்டன் அருங்காட்சியகத்தில் இருக்கிறது. இன்று அதன் விலை மதிப்பு எத்தனை கோடி ரூபாய் என்று கூறவே முடியாது. ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்தாலும் கிடைக்காது. அந்த வைரம் ஒரு கோழி முட்டையைவிடச் சிறியது. இது அதை விட ஆயிரம் மடங்கு பெரியதாக இருக்கிறதே" என்றார் டாக்டர்.

"அடேயப்பா!" என்று பாண்டியன் பிரமித்து நின்றுவிட்டான்.

“இந்த வைரக்கல்லை நம்மால் அசைக்கக் கூட முடியாது” என்றார் டாக்டர்.

“டாக்டர் வாருங்கள். இப்போதே திரும்பிப்போவோம். உரிய ஏற்பாடுகளுடன் திரும்பி வருவோம். இதை எப்படியாவது எடுத்துச் சென்று விடுவோம்” என்று பாண்டியன் பரபரப்பு அடைந்தான்.

“எடுத்துச் சென்று என்ன செய்வது?”

“விற்போம்.”

“இதை யார் வாங்க முடியும்? அமெரிக்க அரசாங்கத்தின் கஜானாவையே தந்தால்தான் இதை வாங்க முடியும்.”

பாண்டியன் குழப்பம் அடைந்தான். “என்ன செய்வது டாக்டர்? எத்தனை பெரிய செல்வம்! இதை என்ன செய்வது?” என்று பதறினான்.

“இதில் ஒரு சிறிய பகுதியை மட்டும் வெட்டியெடுத்துக் கொள்வோம். ஒரு கோழிமுட்டை அளவுக்கு எடுத்தால் போதும். அதை விற்றாலே நாம் உலகிலேயே பெரிய பணக்காரர்கள் ஆகிவிடுவோம்.”

“ஆம். அதுதான் சரியான வழி” என்றான் பாண்டியன். ஓடிப் போய் தன் பனிக் கோடரியை எடுத்தான். பாய்ந்து வந்து அந்த வைரப் பாறையை ஓங்கி அடித்தான்.

வைரத்தின் மீது கோடரி கணீரென்று பட்டது. பாண்டியனின் கைகளில்தான் அடிப்பட்டது மாதிரி வலித்தது.

“என்ன இது?” என்றார் டாக்டர்.

பாண்டியன் மீண்டும் ஓங்கி அடித்தான்.

“பாண்டியன் நிறுத்துங்கள்” என்று டாக்டர் கத்தினார்.

பாண்டியன் நிறுத்திக் கொண்டான்.

“பனிக் கோடரியைப் பாருங்கள்”- டாக்டர் சொன்னார்.

பனிக் கோடரியைத் தூக்கிப் பார்த்தான் பாண்டியன். அது நசுங்கிப் போயிருந்தது. வைரத்தைப் பார்த்தான். அதில் ஒரு சிறு கீறல் கூட விழவில்லை.

பாண்டியனுக்குப் பிரமிப்பாக இருந்தது.

டாக்டர் சிரித்தார். “வைரம் மிகக் கடினமானது பாண்டியன். அதை மிகவும் உறுதியான பொருளால்தான் உடைக்க முடியும். கல்லாலோ இரும்பாலோ அதை உடைக்கவே முடியாது.”

“ஆமாம் ஞாபகம் வருகிறது. தமிழில் வைரத்தை வைரத்தால்தான் அறுக்க முடியும் என்று ஒரு பழமொழிகூட உண்டு.

“நவீனக் கருவிகள் வருவதற்கு முன்பு விலை குறைவான கருப்பு வைரத்தை வைத்துத்தான் கண்ணாடியை அறுப்பார்கள் தெரியுமா? ஒரு சிறிய வைரத்துண்டை இரும்புக் கருவியின் நுனியில் வைத்திருப்பார்கள். அதை வைத்து அறுத்தால் காகிதத்தை வெட்டுவது போல எளிதாகக் கண்ணாடியை வெட்டலாம். ஆமாம். வைரம் மிகவும் உறுதியானது. அதனால்தான் உறுதியான அனைத்தையும் வைரம் என்கிறார்கள்” டாக்டர் விளக்கினார்.

“என்ன செய்வது?” என்றான் பாண்டியன் சோர்வுடன்.

“என்னிடம் சிறிது நைட்ரோகிளிசரின் இருக்கிறது. அது மிக சக்தி வாய்ந்த வெடிகுண்டு மருந்து. அதைப் பயன்படுத்திப் பார்க்கலாம்” என்றார் டாக்டர்.

“சரி.”

டாக்டர் தன் பெட்டியைத் திறந்தார். ஒரு கனமான சிறிய புட்டியை வெளியே எடுத்தார். அதற்குள் சிறிது கெட்டியான திரவம் இருந்தது.

“இதை வைத்து நாம் விரும்புவது போன்ற வெடிகுண்டைத் தயாரித்து விடலாம். இந்தத்திரவத்தில் சிறிய மின்சார அதிர்ச்சி தந்தால் போதும், பயங்கரமாக வெடித்து விடும்” - டாக்டர் சொன்னார்.

“இதை வைத்து என்ன செய்வது?”

இந்த வைரத்துக்குக் கிழேயுள்ள பாறையில் ஏதாவது சிறு இடுக்கு இருக்கும். அதற்குள் நைட்ரோகிளிசரின் அடங்கிய ஒரு கண்ணாடிச் சிமிழை இறக்கி வைக்க வேண்டும். அதிலிருந்து ஒரு மின்சாரக் கம்பியை இழுத்து வெளியே கொண்டு வர வேண்டும். இந்த பாட்டாரியுடன் அந்தக் கம்பியைத் தொடர்புபடுத்தினால் போதும். நைட்ரோகிளிசரின் வெடிக்கும். வைரம் உடைந்து விடும்”- டாக்டர் கூறினார்.

“தூள் தூளாக மாறிவிடுமோ?” - சந்தேகத்துடன் கேட்டான். பாண்டியன்.

“அந்த அளவு சக்தி இதற்கு இல்லை. ஒரு சில துண்டுகள் கண்டிப்பாகத் தெறித்து விழும். அதுவே நமக்குப் போதும்.”

கிம் அமைதியாக உட்கார்ந்திருப்பதை அப்போதுதான் பாண்டியன் பார்த்தான். அவன் வைரத்தின் அருகே வரவேயில்லை.

“கிம், உனக்கு வைரம் வேண்டாமா?”

“வேண்டாம்” என்றான் கிம்.

“ஏன்?” டாக்டர் கேட்டார்.

“நம்மை புத்தர் சோதனை செய்து பார்க்கிறார். அதை நான் தொட்டால் புத்தரின் அருளை இழந்ததுவிடுவேன்”- கிம் சொன்னான்.

டாக்டர் ஏதோ புரிந்தது போல வெடிமருந்துக் குப்பியைத் திரும்ப வைத்து விட்டார்.

“என்ன சொல்கிறாய்?” என்றான் பாண்டியன்.

“நாம் வந்தது பனிமனிதனைப் பார்க்கத்தான். வழியில் எதுவுமே நம்மை திசை திருப்பக் கூடாது. வழியில் கிடைப்பவற்றைப் பார்த்து ஆசைப்பட்டால் நமது குறிக்கோளை நாம் அடைய முடியாது?” என்றான் கிம்.

பாண்டியனுக்கு அது உண்மை என்றுபட்டது. ஆனாலும் அவனுக்கு வைரத்தின் மீது ஆசை குறையவில்லை.

“புத்தர் நம்மை எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிறார். நமது உறுதியை அவர் சோதனை செய்து பார்க்கிறார். இதை எங்கள் பிட்சு அடிக்கடி சொல்வார்” என்றான் கிம்.

டாக்டர், “ஆமாம் பாண்டியன். இது நமது குறிக்கோள் அல்ல. நாம் போக வேண்டியது பனிமனிதனைத் தேடித்தான்” என்றார்.

பாண்டியன் வியப்புடன் “வைரத்தை விட்டு விட்டா?” என்றான்.

டாக்டர், “ஆமாம், வேறு வழியே இல்லை. வாருங்கள். கிளம்புவோம்” என்றார்.

அவர்கள் கிளம்பினார்கள்.

வைரக் கடைத் தெரு

உலகிலேயே பெரிய வைரம் எது? தென்னாப்பிரிக்காவில் கிடைத்த ‘கல்லினன்’ என்ற வைரம்தான்.
இது கோழி முட்டையைவிடச் சற்றுப் பெரியது. பிறகு இந்த வைரம் மூன்று துண்டுகளாக வெட்டப்பட்டது.
உலகில் அதிகமான வைரங்கள் கிடைக்கும் நாடு தென்னாப்பிரிக்காதான்.
இந்தியாவில் பழங்காலத்தில் கர்நாடக மாநிலத்தில் ரெய்ச்சூரிலும் ஆந்திர மாநிலத்தில் கோல்கொண்டாவிலும் வைரங்கள் கிடைத்தன.
கோகினூர் வைரம் 800 வருடங்களுக்கு முன்பு கோல்கொண்டாவில் கிடைத்தது.
விஜயநகரத்தின் வைரக் கடைத் தெருவில் விற்கப்பட்டது அது. விஜயநகர மன்னர் கிருஷ்ணதேவராயரின் கிரீடத்தில்தான் அது முதலில் இருந்தது.

# அத்தியாயம் 19

அவர்கள் மீண்டும் நடந்தார்கள்.பாண்டியன் யோசனையுடன் நடந்து வருவதைப் பார்த்து டாக்டர் கேட்டார்.

“அந்த வைரத்தை விட்டுவர மனமே இல்லை அல்லவா?”

“அப்படி இல்லை. வைரத்தின் அருகே இருந்து விலகியதுமே அந்த ஆசை மறந்து விட்டது. அந்த நீல ஒளியில் என்னால் சிந்திக்கவே முடியவில்லை. ஒரே கிறக்கமாக இருந்தது. அதை எடுத்துக் கொண்டு செல்ல வேண்டும் என்பது தவிர வேறு எண்ணமே வரவில்லை. இப்போது யோசித்தால் அது மிகவும் வியப்பாக இருக்கிறது” என்றான் பாண்டியன்.

“அந்த வைரம் அங்கு எப்படி வந்தது? வைரம் மண்ணுக்கு அடியில்தானே இருக்கும்?” என்று டாக்டரைக் கேட்டான் பாண்டியன்.

“வைரம் உருவாவது மண்ணுக்கு அடியில்தான். பல்லாயிரம் வருடம் முன்பு மண்ணுக்கு அடியில் சிக்கிய மரங்கள்தான் வைரமாக ஆகின்றன. பூமியின் அடியில் உள்ள பயங்கரமான வெப்பத்தில் அவை கரியாகிவிடுகின்றன. பூமியின் அழுத்தத்தால் படிப்படியாக வைரம் ஆகின்றன. வைரம் உண்மையில் கரிதான். தெரியுமில்லையா?” என்றார் டாக்டர்.

“மரம் எப்படி மண்ணுக்கடியில் போகும்?” பாண்டியன் மீண்டும் கேட்டான்.

“பூகம்பங்கள் நிகழும் போது பூமி பிளக்கும். கரையில் நிற்கும் மரங்கள் அப்போது உள்ளே விழுந்துவிடும். இமயத்தில்தான் அடிக்கடி பூகம்பங்கள் நடக்குமே! இது வெளிவரவும் பூகம்பமே காரணமாக இருக்கும். பூமி பிளந்து உள்ளிருந்து லாவா குழம்பு வெளி வந்திருக்கலாம். அப்போது இந்த வைரமும் வந்திருக்கலாம்”- டாக்டர் விளக்கினார்.

அவர்கள் நடந்து நடந்து மலையைத் தாண்டி மறுபக்கம் சென்று சேர்ந்தார்கள்.

“நேரமாகிவிட்டது. சாப்பிட்டு விட்டு இங்கேயே தங்கி விடலாம்” என்றார் டாக்டர்.

பாண்டியன் ஒரு குகையைப் பார்த்தான்.

“டாக்டர், அங்கே பாருங்கள். ஒரு வசதியான குகை. அதற்குள் தங்கிக் கொள்ளலாம். கூடாரம் தேவையில்லை”

டாக்டர் சிரித்தார். “குகையில் தங்கினால் நீங்கள் நாளைக் காலையில் குளிரில் விறைத்து மரக்கட்டை போலக் கிடப்பீர்கள்.”

“ஏன்?” என்றான் பாண்டியன் புரியாமல்.

“பனிப் பொழிவு இருக்கிறதே! இந்தப் பனி வழியாக வீசும் குளிர்காற்று குகைக்குள் அடிக்குமே.”

“வேறு எங்கே தங்குவது? இந்தப் பனி வெளியிலா?”

“ஆம். நாம் கூடாரத்தைக் கட்டிய உடனே அதன் மீது பனி பொழிந்து மூடும். கூடாரத்தின் மீது பனி ஒரு பெரிய தகடு மாதிரி ஆகிவிடும்.” டாக்டர் கூறினார்.

“அப்படியானால் நாம் பனிக்கட்டிக்குள் தூங்க வேண்டுமா?”

“ஆமாம். பனிக்கட்டி குளிரைக் கடத்தாது. வெளியே குளிர் மைனஸ் இருபத்தைந்து டிகிரி வரை இருக்கும். உள்ளே அந்தக் குளிர் வராமல் பனிப்பாளம் தடுத்துவிடும். உள்ளே சீரோ டிகிரி செல்சியசுக்குக் குறைவாகத்தான் குளிர் இருக்கும்” என்றார் டாக்டர்.

பாண்டியன் கூடாரத்தைப் போட்டான். டாக்டர் தண்ணீரை சூடுபடுத்தினார். கிம் வண்டியை ஒழுங்குப்படுத்தி நிறுத்தினான்.

சாப்பிட்டு அவர்கள் கூடாரத்துக்குள் படுத்துத் தூங்கினார்கள்.

பாண்டியனின் கனவில் ஒரு வைரக்கல் தெரிந்தது. அது நீல நிறமான வைரம். அவன் அதை எடுக்கப் போனான். அப்போதுதான் அது நீலநிறமான தண்ணீர் என்று தெரிந்தது. உடனே அவன் குப்புற விழுந்துவிட்டான். அந்த நீரில் மூழ்கிவிட்டான். நீல நிறமான கடல் அது. நான்கு பக்கமும் நீல நிறமான நீரின் அலைகள் தெரிந்தன. அதற்குள் மீன்கள் நீந்துவது தெரிந்தது. அவனுக்கு மூச்சுத் திணறியது. நீந்தவே முடியவில்லை. நீல நிற நீர் மூக்கு வழியாக உள்ளே புகுந்தது. அவன் மார்பை அது நிறைத்தது. வாய் வழியாக நீல நிறமான நீர் புகுந்தது. அது அவன் வயிற்றை நிரப்பியது. பெரிய வைரத்தை விழுங்கியது போல இருந்தது. ஆழத்துக்கு மூழ்கி மூழ்கிப் போனான்.

சட்டென்று பாண்டியன் விழித்துக் கொண்டான். ‘எத்தனை பயங்கரமான கனவு’ என்று நினைத்துக் கொண்டான். அந்தக் கனவுக்கு அர்த்தம் என்ன என்று யோசித்தபடியே மறுபடி தூங்கிப்போனான்.

காலையில் கிம்தான் முதலில் எழுந்தான்.

அவன் தியானம் புரிந்துவிட்டு வெளியே வந்தான். வானத்தைப் பார்த்தான். பிறகு மலைகளைப் பார்த்தான். பிறகு கூடாரத்துக்குள் புகுந்து, ‘டாக்டர், டாக்டர்!’ என்று அவரை உலுக்கி எழுப்பினான்.

டாக்டர் பதறியடித்து எழுந்து, “என்ன?” என்றார்.

“நமது கூடாரம் இப்போது வேறு இடத்தில் இருக்கிறது! நாம் இரவு தங்கிய இடத்தில் இருந்து வெகு தொலைவில் இருக்கிறோம்!” என்றான் கிம்.

பனிக்கட்டி வீடு

வடதுருவப் பகுதியில் வாழ்பவர்கள் எஸ்கிமோக்கள். இவர்கள் பனிக்கட்டியாலேயே வீடு கட்டுவார்கள்.

பனிக்கட்டிகளை அடுக்கி அரைக்கோள வடிவில் வீட்டைக் கட்டுவார்கள். அது கொட்டாங்கச்சியைக் கவிழ்த்து வைத்தது போல இருக்கும்.

அந்த வீட்டுக்குள் சிறிது நேரம் தீ மூட்டுவார்கள். அப்போது பனிக்கட்டி உருகும். உடனே தீயை அணைத்து விடுவார்கள். பனிக்கட்டி மீண்டும் உறைந்துவிடும். இதனால் பனிக்கட்டிகளுக்கு இடையே உள்ள இடைவெளிகள் எல்லாம் மூடி விடும். ஒரே பனிக்கட்டியால் ஆன வீடுபோல ஆகிவிடும். பனிக்கட்டி மிக உறுதியானது. எனவே பனிக்கட்டி வீடு எளிதில் உடையாது. பனிக்கட்டி குளிரைக் கடத்தாது. எனவே வீட்டுக்குள் வெளிப்பகுதியைவிடக் குளிர் மிகவும் குறைவாக இருக்கும். அதில் எஸ்கிமோக்கள் தங்குவார்கள்.

## அத்தியாயம் 20

இருவரும் அலறிப் புடைத்து எழுந்து வந்தார்கள். வெளியே வந்து பார்த்ததும் அவர்களுக்கும் புரிந்தது. அது வேறு ஒரு இடம்.

தரையில் பனி பொழிந்து பரவியிருந்தது. அது துணி துவைக்கும் போது வரும் நுரைபோலக் காணப்பட்டது. ஆனால் சீனி போல பொரு பொருவென்று இருந்தது. நடக்கும்போது முழங்கால் வரை அமிழ்ந்தது. நிறைய அப்பங்களைப் பரப்பிப் போட்டு அதன் மீது நடந்தால் எப்படி இருக்கும்? அப்படிச் சத்தம் கேட்டது.

“நாமிருந்த பனிப்பாளம் அப்படியே நகர்ந்திருக்கிறது!” என்று பாண்டியன் கூறினான்.

“இல்லை. இங்கே பாருங்கள். ஆப்புகளை. யாரோ புதிதாக அடித்திருக்கிறார்கள்” என்றார் டாக்டர்.

“ஆமாம்” என்றான் பாண்டியன்.

“அவர்களுக்குக் கயிற்றில் முடிச்சுப் போடத் தெரியவில்லை. கயிற்றை வெறுமனே சுற்றிச் சுற்றி வைத்திருக்கிறார்கள். நம்மைக் கூடாரத்துடன் தூக்கி வந்திருக்கிறார்கள்”என்ற டாக்டர் மலைப்பகுதியைக் கூர்ந்து பார்த்தார். அடுத்த நிமிடம் ‘ஆ’ வென்று கூவினார்.

“என்ன?” என்றான் பாண்டியன்.

“அதோ அங்குதானே நாம் இருந்தோம்?” என்றார் டாக்டர்.

“ஆமாம்” என்றான் பாண்டியன்.

“அங்கு இப்போது பனி மிக உயரமாகக் கொட்டியிருக்கிறது. அங்கு நாம் இருந்திருந்தால் பனிக்கு அடியில் மிக ஆழத்துக்குப் போயிருப்போம்!” - டாக்டர் கூறினார்.

“யாரோ நம்மைக் காப்பாற்றியிருக்கிறார்கள்”- பாண்டியன் வியப்புடன் கூவினான்.

“இங்கு மனிதர்கள் நடமாடுவது சுலபம் அல்ல. அதிலும் கண்டிப்பாக இருட்டில் நடமாட முடியாது”- டாக்டர் கூறினார்.

“அப்படியானால் நம்மைக் காப்பாற்றியது பனிமனிதனா?” என்றான் பாண்டியன்.

“அநேகமாக பனிமனிதன்தான்.” டாக்டர் கூறினார்.

“அவன் ஏன் நம்மைக் காப்பாற்ற வேண்டும்” என்றான் பாண்டியன்.

“அவன் இதுவரை யாருக்கும் தீங்கு செய்ததில்லை” என்றார் டாக்டர்.

“அவனைப் பார்த்தாக வேண்டும். மிக ஆவலாக இருக்கிறது” என்றான் பாண்டியன்.

உணவருந்திய பிறகு அவர்கள் கிளம்பினார்கள்.

அந்த மலையைத் தாண்டிச் சென்றபோது பாண்டியன் திடீரென்று கூவினான், “டாக்டர் அதோ பாருங்கள், அருவி!” அங்கு ஒரு பெரிய அருவி கொட்டுவதைப் பார்க்க அவனுக்கு மிகவும் வியப்பாக இருந்தது.

விரைவாக அந்த அருவியை அவர்கள் நெருங்கினார்கள். அருகில் நெருங்க நெருங்க ஒரு விஷயம் வியப்பாக இருந்தது. அந்த அருவியில் சத்தமே இல்லை!

சத்தமே இல்லாத அருவியா! அது எப்படிச் சாத்தியம்? பாண்டியனுக்கு நம்பவே முடியவில்லை.

அருகே சென்றபோது விஷயம் புரிந்தது. அந்த அருவி அப்படியே உறைந்து போயிருந்தது. பனிக்கட்டிதான் அருவியின் வடிவில் காணப்பட்டது. ஆனால் உண்மையான அருவி நீர் போலவே அது இருந்தது. அலை அலையாக நீரின் நெளிவுகூடத் தெரிந்தது. அதே சமயம் அது பெரிய அடிமரம் போல அடிப்பகுதியில் பருத்தும் மேலே போகப் போக சிறுத்தும் காணப்பட்டது.

“இது எப்படி உருவாயிற்று?” என்றான் பாண்டியன்.

“வேறு எங்கிருந்தோ தண்ணீர் வழிந்து வருகிறது. அந்த நீர் படிப்படியாக குளிர்ந்து விடுகிறது. அருவியருகே வரும் போது ஐஸ்கிரீம் போல ஆகிவிடுகிறது. மலையில் இருந்து வழியும் போது குளிரில் உறைகிறது”- டாக்டர் விளக்கினார்.

“இங்கு எங்குமே நான் ஓடும் நீரைப் பார்த்தில்லையே. அங்கு அருவிக்கு மேல் மட்டும் எப்படி உருகிய நீர் வருகிறது?”- பாண்டியன் கேட்டான்.

“போய்ப் பார்ப்போமே. நாம் மேலேதானே போக வேண்டும்” - டாக்டர் கூறினார்.

“எப்படிப் போவது?” என்றான் பாண்டியன்.

“அருவி மிகச் சரிவாகத்தானே இருக்கிறது. ஏறிவிடலாம்” என்றார் டாக்டர்.

ஒரு கையில் ஊன்று கோலையும் மறுகையில் பனிக் கோடரியையும் எடுத்துக் கொண்டார்கள். எப்படி ஏறுவது என்று கிம்முக்கு டாக்டர் சொல்லித் தந்தார்.

முதலில் கிம்மும் பிறகு பாண்டியனும் ஏற ஆரம்பித்தார்கள். பனிக்கோடரியால் அருவியின் பனிச்சரிவில் ஒரு படி மாதிரி கிம் வெட்டினான். அதில் கால் வைத்து ஏறினான். ஊன்று கோலை ஆழமாக ஊன்றி நின்றான். ஒரு கையால் அடுத்த படியை வெட்டினான். பிறகு படி மீது ஏறினான்.

அவர்கள் மெதுவாக ஏறினார்கள். மேலே வந்ததும் பாண்டியன் தன் இடுப்பில் கட்டிருந்த கயிறை எடுத்து தொங்கவிட்டான். டாக்டர் அதில் பொருட்களைக் கட்டினார். பொருள்களைப் பாண்டியனும் கிம்மும் இழுத்து மேலே எடுத்தார்கள். பிறகு கயிற்றைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள். அதன் வழியே டாக்டர் ஏறிவந்தார்.

டாக்டர் அந்தப் பகுதியைக் கூர்ந்து பார்த்தார். அருவியின் மேலே ஓர் ஆறு இருந்தது. அது உறைந்து போயிருந்தது.

ஆறு போகப் போக மாற ஆரம்பித்தது. முதலில் அது பனிக்கட்டியாக இருந்தது. பிறகு அதன் நடுவே சிறிது ஐஸ்கிரீம் போன்ற பனி இருப்பது தெரிந்தது. இன்னும் மேலே போன போது அந்தப் பனி மேலும் இளகியிருப்பது தெரிந்தது.

மேலே சென்றார்கள். ஆற்றின் ஓரங்கள் உறைந்திருந்தன. நடுவே நீல நிறமாக நீர் ஓடுவது தெரிந்தது.

“தண்ணீர்!” என்றான் பாண்டியன்.

“இங்கு எங்கோ வென்னீர் ஊற்று இருக்கிறது” என்றார் டாக்டர்.

“எரிமலைகளும் பூகம்பங்களும் உள்ள இடத்தில்தான் வென்னீர் ஊற்று இருக்கும். மற்ற இடங்களில் மண்ணுக்கு அடியில் மிக மிக ஆழத்தில் லாவா இருக்கும். இங்கு அது மேல்மட்டம்

வரை வந்திருக்கிறது. லாவா என்றால் பூமிக்கடியில் உள்ள குழம்பு, அதாவது உருகிய நிலையில் உள்ள பாறை. அது பல்லாயிரம் டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் இருக்கும். அதன் சூட்டில் ஒரு சிறு பகுதி மேலே வந்தால் போதும். பூமிக்கு மேலே உள்ள நீர் கொதிக்க ஆரம்பித்துவிடும்”- டாக்டர் விளக்கினார்.

அவர்கள் வென்னீர் ஊற்றுகளை நெருங்கினார்கள்.

பூமி ஒரு குழம்பு உருண்டை!

நாம் வாழும் இந்தப் பூமி எப்படிப்பட்டது? நாம் வாழ்வது பூமியின் மேற்பரப்பில்தான். தாவரங்களும் மேற்பரப்பில்தான் உள்ளன. தாவரங்களின் வேர்கள் அதிகபட்சம் நூறு அடி ஆழம் வரை போகும். ஆயிரம் அடி தூரம் வரை தண்ணீர் இருக்கும்.

பூமியின் மேலே 34 கிலோ மீட்டர் முதல் நாற்பது கிலோ மீட்டர் ஆழம் வரை உள்ள பகுதியை பூமியின் மேல் ஓடு என்கிறார்கள். இது கெட்டியாக இருக்கும்.

அதற்கு அடியில் மிக அதிகமான வெப்பநிலையில் உள்ள குழம்பாக பூமி காணப்படுகிறது. அந்தக் குழம்பில் எல்லாவிதமான உலோகங்களும் பிற மூலகங்களும் உருகிய நிலையில் உள்ளன. ஏறத்தாழ 2000 கிலோ மீட்டர் ஆழத்துக்கு இந்தக் குழம்புதான் உள்ளது.

அதற்கும் அடியில் பூமியின் மையப் பகுதி உள்ளது. இது ஏறத்தாழ 1370 கிலோ மீட்டர் ஆழம் உடையது. இது இரும்பும் நிக்கலும் கலந்த கெட்டியான பொருள் ஆகும்.

அதாவது பூமியின் பெரும் பகுதி உருகிய குழம்பாகவே உள்ளது.

# அத்தியாயம் 21

வெதுவெதுப்பான காற்று வீச ஆரம்பித்தது. ஆற்றில் நன்றாக உருகிய நீர் ஓடுவது தெரிந்தது.

“வந்து விட்டோம்” என்றார் டாக்டர்.

இரண்டு பாதைகளின் இடைவெளி வழியாக சூடான நீர் கொப்பளித்து வந்தது. அவர்கள் பாறையினூடாக ஏறி மறுபக்கம் போனார்கள்.

மிக அழகான காட்சியாக இருந்தது. நான்கு பக்கமும் பளிங்குப் பாறைகள் வளைவாக நின்றன. அதன் நடுவே மிகவும் சுத்தமான நீலநிறத் தண்ணீர் தேங்கிக் கிடந்தது. அந்தத் தண்ணீர் மிகத் தெளிவாக இருந்தது. அந்தக் குளத்தின் அடிப்பக்கம் மிக அருகே தெரிவது போல இருந்தது.

“குளிக்க வேண்டியதுதான்” என்றான் பாண்டியன் உற்சாகத்துடன்.

“இரு. முதலில் தண்ணீர் எந்த அளவு சூடு என்று பார்க்கிறேன்” என்றார் டாக்டர். தொட்டுப் பார்த்தார். “அருமையான சூடு” என்றார்.

நீரில் இருந்து குமிழிகள் கிளம்பின. நீராவி எழுந்தபடியே இருந்தது. பயணம் கிளம்பிய பிறகு அன்றுதான் முதல் முறையாக உடைகளைக் கழற்றுகிறோம் என்று பாண்டியன் நினைத்தான்.

நீரில் குளித்தார்கள். வென்னீரில் உடம்பு மூழ்கியதும் மிக மிக இதமாக இருந்தது. கடும் குளிரில் தோல் சுருங்கி விடும். வியர்வைத் துளைகள் மூடிவிடும். காற்றுப் படாததனால் தோல் வெளிறிப் போய்விடும். அதனால் வென்னீர் பட்டதும் புதிய உயிர் வந்தது போல இருந்தது.

“கரையேறவே வேண்டாம். இங்கேயே நீந்தியபடியே இருக்கலாம் என்று படுகிறது” என்றான் பாண்டியன்.



“இன்னும் சிறிது நேரத்தில் கரையேறத் தோன்றிவிடும். காரணம் இருக்கிறது” என்று டாக்டர் சிரித்தார்.

அவர் என்ன சொல்கிறார் என்று பாண்டியனுக்குச் சற்று நேரத்தில் புரிந்தது. மெதுவாகப் பசிக்க ஆரம்பித்தது. மிக வேகமாக பசி அதிகரித்தது. பிறகு பசி தாங்க முடியாமல் ஆயிற்று.

“மிகவும் பசிக்கிறது!” என்றான் பாண்டியன்.

“உங்கள் உடம்பு சூடாகிவிட்டது. தசை நார்கள் தளர்கின்றன. ரத்த ஓட்டம் அதிகரிக்கிறது. இது பல கிலோ மீட்டர் தூரம் ஓடியதற்கு சமம்” என்றார் டாக்டர்.

அவர்கள் கரையேறினார்கள். பாண்டியன் வயிறு புடைக்க சாப்பிட்டான். உடனே அவனுக்கு கண்கள் சொக்கின. தூக்கம் வந்து தலை ஆடியது.

அவர்கள் கூடாரத்தை விரிக்காமல் பரப்பிப் போட்டு அப்படியே தூங்கிவிட்டார்கள்.

யாரோ அவர்களை எழுப்பினார்கள். பாண்டியன் கண்களைத் திறந்தான். பயந்துபோய் துள்ளி எழுந்தான்.

அவர்கள் அருகே இரண்டு புத்த பிட்சுகள் நின்றிருந்தார்கள். தலையை நன்றாக மொட்டை அடித்திருந்தார்கள். காவி நிறமான உடையை அணிந்திருந்தார்கள்.

கிம் அவர்கள் காலில் விழுந்து வணங்கினான்.

“புத்தர் அருள் உன் மீது பொழிவதாக” என்று அந்த பிட்சுக்கள் ஆசியளித்தனர்.

பாண்டியனும் டாக்டரும் அவர்களைக் கைகூப்பி வணங்கினர்.

“நீங்கள் யார்? எதற்கு இங்கு வந்தீர்கள்?” என்றார் பிட்சுக்களில் ஒருவர்.

“பனிமனிதனைப் பற்றி ஆராய்ச்சி செய்ய வந்தோம்” என்றார் பாண்டியன்.

“நாங்கள் திபெத்திலிருந்து வருகிறோம். எங்கள் அடுத்த லாமாவைத் தேடி அங்கிருந்து சென்ற வருடம்தான் கிளம்பினோம்” ஒரு பிட்சு சொன்னார்.

“லாமாவைத் தேடியா?” என்றார் டாக்டர்.

“ஆமாம். நாங்கள் திபெத்தில் உள்ள ஒரு வகை பௌத்த துறவிகள். அங்கு எங்கள் மாபெரும் புத்த விகாரம் உள்ளது. அதற்கு ‘சிவ ஓ ரேபா’ என்று பெயர். அதன் தலைமை லாமாவாக எங்கள் குருநாதர் இருக்கிறார். அவருடைய பெயர் ‘மிலா ஷெபாடோர்ஜெ’ அந்தப் பெயருக்கு ‘சிரிக்கும் வைரம்’ என்று பெயர். அவருக்கு இப்போது வயது நூற்று நாற்பது” என்றார் பிட்சு.

“நூற்று நாற்பது வயதா? உண்மையாகவா?” என்றான் பாண்டியன் வியப்புடன்.

“திபெத்தில் மக்கள் நூறு வயது வரை வாழ்வது மிகவும் சாதாரணம். எங்கள் லாமாக்கள் சிலர் இரு நூறு வயது வரைகூட வாழ்ந்திருக்கிறார்கள்” என்றார் பிட்சு.

“உங்கள் மகா லாமாவால் எழுந்து நிற்க முடியுமா? மிகவும் தொண்டு கிழவராக இருப்பாரோ?” என்றான் பாண்டியன்.

பிட்சு சிரித்தபடி, “என்னைப் பார்த்தால் எவ்வளவு வயது சொல்வீர்கள்?” என்றார்.

“நாற்பது அல்லது நாற்பத்தைந்து” என்றான் பாண்டியன்.

“எனக்கு தொண்ணூறு வயது ஆகப் போகிறது” என்றார் பிட்சு சிரித்துக் கொண்டே.

பாண்டியன் மூச்சடைத்துப் போனான். அந்த பிட்சுவின் வாயில் எல்லா பற்களும் உறுதியாக இருந்தன. அவருக்கு உறுதியான தோள்கள் இருந்தன. அவரது கைகள் நரம்புகள் புடைத்து வலுவாக இருந்தன. வயிறு இறுக்கமாக ஒட்டிக் காணப்பட்டது. முகத்தில் சுருக்கங்களே இல்லை.

“நம்பவே முடியவில்லை” என்றான் பாண்டியன்.

“திபெத்திய பௌத்த மதத்துக்கு வஜ்ஜராயனம் என்று பெயர். அவர்கள் பல வகையான தியானப் பயிற்சிகளை செய்வார்கள்” என்று டாக்டர் சொன்னார்.

“நீங்கள் இங்கு வருவதற்குக் காரணம் என்ன?” என்று டாக்டர் கேட்டார்.

“சென்ற வருடம் எங்கள் மகா லாமா எங்களை அழைத்தார். இன்னும் பத்து வருடத்தில் அவர் உயிர் துறக்கப் போவதாகச் சொன்னார்” என்றார் பிட்சு.

“அது எப்படி அவருக்குத் தெரியும்?” என்றான் பாண்டியன்.

“அவருக்கு அவர் விருப்பப்படிதான் மரணம் வரும். விரும்பாத போது மரணம் வராது” என்றார் இன்னொரு பிட்சு.

முதல் பிட்சு தொடர்ந்து சொன்னார். “எங்களிடம் எங்கள் மகா லாமா இங்கு வரும்படிச் சொன்னார். எனவேதான் இங்கு வந்தோம்”

“எதற்கு?” என்றான் பாண்டியன்.

“எங்கள் அடுத்த லாமாவைத் தேடி” என்றார் பிட்சு.

லாமாக்கள் என்றால் யார்?
திபெத் பீடபூமி இமயமலையின் மேல் உள்ள உயரமான பகுதியாகும். இந்தப் பகுதி பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்தது. அதற்கு முன்பு நெடுங்காலம் சுதந்தர நாடாக இருந்தது. இப்போது சீனா இந்நாட்டைக் கைப்பற்றி வைத்திருக்கிறது.
திபெத்தில் மன்னர்கள் இல்லை. அங்கு மதத்தலைவரே மன்னரும் ஆவார். அவரே லாமா எனப்படுகிறார். அவர் எல்லா பௌத்தத் துறவிகளுக்கும் தலைவர். லாமா என்றால் தலைமை குரு என்று பொருள்.
சீனாவின் ஆக்ரமிப்பை எதிர்த்து திபெத்திய மக்கள் கிளர்ச்சி செய்கிறார்கள். அவர்களுடைய தலைவரான தலாய் லாமா திபெத்திலிருந்து தப்பி இந்தியா வந்தார். உலகம் முழுக்கச் சுற்றி உலக சமாதானத்துக்காகவும் புத்த மதத்தை பரப்பவும் அவர் பாடுபடுகிறார்.
தலாய் லாமாவுக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

# அத்தியாயம் 22

பாண்டியன் குழப்பத்துடன் “இங்கேயா? இந்தப் பனிமலையிலா?” என்றான்.

“அது எங்களுக்குத் தெரியாது. எங்கள் குருநாதரின் ஆணை இது. அவர் எங்களிடம் நாங்கள் செல்ல வேண்டிய வழியைச் சொன்னார். அவர் கூறிய அடையாளங்கள் எல்லாமே சரியாக இருந்தன. இங்கு வந்து சேர்ந்துவிட்டோம். இங்கு நாங்கள் வந்து நான்கு மாதம் ஆகிறது” என்றார் ஒரு பிட்சு.

பாண்டியன் ஒன்றும் புரியாமல் விழிப்பதைக்கண்டு டாக்டர் விளக்கினார். “திபெத்திய பௌத்த மதத்தில் உள்ள வழக்கம் இது. சோதிடர்களும் பிட்சுக்களும் சேர்ந்து தியானம் செய்துதான் அவர்கள் தலைமை லாமாவைத் தேர்ந்தெடுக்கின்றனர். தியானத்தில் அடுத்த லாமா பிறந்திருக்கும் இடம் தெரியும். அங்கு போவார்கள். அவரைக் கூட்டி வந்து தங்கள் மகா லாமா ஆக்கி விடுவார்கள். சிறுவர்களைத்தான் சாதாரணமாக இவ்வாறு கண்டுபிடிப்பார்கள். சில சமயம் ஒரு வயது கூட ஆகாத கைக்குழந்தையைக் கூட இவ்வாறு அழைத்து வந்து மகா லாமா ஆக்குவதுண்டு.”

“உங்கள் அடுத்த லாமா எங்கே இருப்பார்?” என்றான் பாண்டியன்.

“எங்கள் மகா லாமா இங்கே வரச் சொன்னார். இங்கிருந்து வடக்கே ஒரு மலை இருக்கிறது. அதன் அடியில் மூன்று பாறைகள் அருகருகே இருக்கும். அங்கு நிற்கச் சொன்னார். அங்கு எங்கள் அடுத்த மகா லாமா வருவார் என்று சொன்னார்” - பிட்சு கூறினார்.

“அவர் எப்படி இருப்பார்?” என்றான் பாண்டியன்.

“அது தெரியவில்லை. அவருடைய கையில் ஒரு தாமரை மலர் இருக்கும். அந்தத் தாமரை மலர் பொன்னிறமாக இருக்கும்” என்றார் பிட்சு.

“பொன்னிறமா? சிவப்பு நிறத்தையா அப்படிச் சொல்கிறீர்கள்?” என்றார் டாக்டர்.

“இல்லை, எங்கள் மகா லாமா அவர் உணவு அருந்துகிற பொன்னாலான கிண்ணத்தை எங்களிடம் காட்டினார். அந்தத் தாமரை மலர் அதே நிறத்தில் இருக்கும் என்றார். அதுதான் அடையாளம். அந்த புதிய லாமாவின் பெயர் மிலா பத்ம ரேபா. அவருக்கு போதிசத்வா பத்ம என்றும் பெயர் உண்டு. தாமரை மலைரை ஏந்திய போதிசத்வா என்று அதற்கு அர்த்தம்” என்றார் பிட்சு.

“பொன்னிறமான தாமரைப் பூவா? இதுவரை நான் கேள்விப்பட்டதே இல்லையே” என்றார் பாண்டியன்.

“அது பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. எங்கள் குரு நாதரின் உத்தரவு அது. எங்களில் ஒருவர் இப்போது அந்தப் பாறைகளின் அருகே காவல் காக்கிறார். நாங்கள் இங்கு ஓய்வெடுக்கிறோம். இரவில் அவர் இங்கு வருவார். எங்களில் ஒருவர் அங்கு போவோம். இரவும் பகலும் அந்த இடத்தை காவல் நிற்கிறோம்” என்றார் பிட்சு.

“எதுவரை அப்படி நீற்பீர்கள்?” என்றான் பாண்டியன்.

“போதி சத்வ பத்மபாணி வரும் வரை அல்லது நாங்கள் மூவரும் சாகும் வரை” என்றார் பிட்சு.

“ஆனால் எங்கள் குருநாதரின் கட்டளைப் படித்தான் நடக்கும். கண்டிப்பாக மிலா பத்மரேபா வருவார். எங்கள் மகாலாமா மூன்று காலத்தையும் அறிந்த ஞானி” என்றார் அடுத்த பிட்சு.

பாண்டியனுக்கு வியப்பாக இருந்தது. பொன்னிறமான தாமரைப் பூவா? அப்படி ஒன்று எங்குமே இல்லை. இந்த மூன்று பிட்சுக்களும் பனியில் உறைந்து சாகப் போகிறார்கள் என்று தோன்றியது.

ஆனால் அவர்களிடம் ஏதும் கூற முடியாது என்றும் தோன்றியது பாண்டியனுக்கு. அவர்கள் தங்கள் முடிவில் மிக உறுதியானவர்கள். எவ்வளவு கூறினாலும் கேட்கமாட்டார்கள். எனவே அவன் ஏதும் கூறவில்லை.

“அது சரி. உங்கள் விஷயத்தைக் கூறுங்கள். நீங்கள் தேடிப் போகும் பனிமனிதனைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும் கூறுங்கள்” என்றார் ஒரு பிட்சு.

“அவன் குரங்கு மனிதன். அதாவது குரங்குக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள உயிரினம்” என்றார் டாக்டர்.

பிட்சு புன்னகை புரிந்தார். “அவனைப் பற்றி எங்கள் ரகசிய நூல்களில் நிறையக் குறிப்புகள் உள்ளன. அவனுக்குப் பெயர் யதி” என்றார்.

“யதியா?”

“ஆமாம். யதி என்றால் சம்ஸ்கிருதத்திலும் எங்கள் மொழியிலும் ஒரே அர்த்தம்தான். அனைத்து ஆசைகளையும் துறந்தவன். கோபமோ வெறுப்போ இல்லாத தூய மனம் உடையவன். மனிதர்கள் மீதும் அனைத்து உயிரினங்கள் மீதும் பேரன்பு கொண்டவன். பெரிய ஞானிகளைத்தான் யதி என்று சொல்வார்கள். ஆனால் எங்கள் மூதாதையர்கள் இந்தப் பனிமனிதனையும் யதி என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்” என்றார் பிட்சு.

“அவர்கள் வாழும் இடத்தைப் பற்றி ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதா?” என்றார் டாக்டர்.

“இமயமலையின் உச்சியில்தான் அவர்கள் வாழும் இடம் உள்ளது. அதுதான் இந்தப் பூமியிலேயே தூய்மையான இடம். அங்கு அழுக்கு என்பதே இல்லை. தீமை என்பதே இல்லை. அழகில்லாத எதுவுமே அங்கு இல்லை. ஒரு காலத்தில் இந்த பூமி முழுக்க அவ்வாறுதான் இருந்தது.பிறகு மாரனின் சதியால் உலகில் அழுக்கும் தீமையும் நிரம்பின” என்றார் பிட்சு.

“மாரனா, அது யார்?” என்றான் பாண்டியன்.

டாக்டர் விளக்கினார். “அன்று கிம் சொன்னானே திருஷ்ணை என்று, முன்னேறுவதற்கான துடிப்பு. அதை மனிதர்களின் மனங்களில் பரப்புகிற ஒரு தீய சக்தி இருப்பதாக பௌத்தர்கள் நினைக்கிறார்கள். அவன்தான் மாரன். மனிதர்களில் கோபம், பேராசை, பொறாமை, துக்கம் எல்லாமே அவனால் உருவாகின்றன என்கிறார்கள்.”

“எப்போதும் முன்னேறியபடியே இருக்க வேண்டும் என்ற ஆசை மாரனால்தான் உருவாகிறது என்று பௌத்தர்கள் கூறுகிறார்கள் அல்லவா? அப்படியானால் குரங்கு பிறகு மனிதனாக பரிணாம வளர்ச்சி அடைந்ததற்குக் காரணமே மாரன் என்று கூறப்படும் இந்த சக்திதானா?” என்றான் பாண்டியன்.

“ஆமாம், அந்த சக்தி நமது அனைவர் மனத்திலும் ரகசியமாக இருக்கிறது. எனவேதான் நாம் எது கிடைத்தாலும் திருப்தி அடைவதில்லை. பூமியில் உள்ள ஒவ்வொரு மனிதனையும் கூப்பிட்டு உனக்கு என்ன வேண்டும் என்று கேளுங்கள். என்னென்ன வேண்டும் என்று பட்டியல் போட ஆரம்பித்து விடுவான். இந்த ஆசையால்தான் மனிதன் மிருகங்களைப் பிடித்து அடிமையாக்கினான். பிற மனிதர்களையும் அடிமையாக்கினான். அவர்களைக் கொடுமைப்படுத்தி வேலை வாங்கி, தனக்கு செல்வம் சேர்த்துக்கொண்டான்” என்றார் பிட்சு.

“உண்மை தான்” என்றார் டாக்டர்.

“மனிதன் குரங்கிலிருந்து பரிணாம வளர்ச்சி அடைந்துவிட்டான். என்று நீங்கள் கூறுகிறீர்கள். இதுவா பரிணாம வளர்ச்சி? அணுகுண்டு வீசி, கோடிக்கணக்கான மக்களை பிற மனிதர்கள் கொன்று குவிக்கிறார்களே இதுவா நாகரிகம்? எந்தக் குரங்காவது இவ்வாறு ஆயிரக்கணக்கான வேறு குரங்குகளைக் கொன்று குவிக்குமா? காகங்கள் கூட பகிர்ந்து உண்ணுகின்றன. ஆனால் சக மனிதர்கள் பட்டினியால் சாகும் போது மற்றவர்கள் தங்களுக்கு அரண்மனை கட்டிக் கொண்டு சுகமாக வாழ்கிறார்கள். ஆம் நண்பர்களே! மனிதன் அடைந்த பரிணாம வளர்ச்சி எல்லாமே தீமையைத்தான் வளர்த்துள்ளது. அவற்றை வளர்த்தவன்தான் மாரன்” என்றார் பிட்சு.

“சரி, மாரனின் சதியால் உலகம் தீமை நிரம்பியது என்றே வைத்துக் கொள்வோம். இந்தப் பனிமனிதர்கள் வாழும் இடத்தில் தீமையே இல்லையா?” என்றார் டாக்டர்.

“அவர்கள் வாழும் இடத்தை திபெத்திய மத நூல்கள் தர்மஸ்தலம் என்று குறிப்பிடுகின்றன. அங்கு மாரன் நுழையவே முடியாது. ஆகவே அங்கு தீமையே இல்லை. துக்கம் ஒரு சிறிதும் அங்கு இல்லை. அழகும் மகிழ்ச்சியும் நன்மையும் மட்டும் நிரம்பிய இடம் அது” என்றார் பிட்சு.

“அப்படி ஒரு இடத்தை மட்டும் ஏன் புத்தர் பாதுகாத்து வைத்தார்?” என்றான் பாண்டியன்.

பிட்சு புன்னகைத்தார்.

யதி என்றால் என்ன?
புராணங்களில் ‘யதி’யைப் பற்றி இரண்டு விதமான குறிப்புகள் உள்ளன.
யதி என்பது சிவபெருமானின் அவதாரம் என்று சிவபுராணம் குறிப்பிடுகிறது.
அதே சமயம் ரிக் வேத்தில் யதிகள் காட்டு மனிதர்கள் என்று கூறப்படுகிறது. இந்த காட்டு மனிதர்கள் ஆரியர்களைத் தாக்கியதாகப் பல இடங்களில் குறிப்புகள் உள்ளன.
ஆகவே யதி என்று கூறப்படுபவர்கள் ஆரியர்கள் அல்லாத மக்கள் என்று ஊகிக்கலாம்.
இவர்கள் சிவபெருமானின் அவதாரங்களாகப் பழங்காலத்தில் கருதப்பட்டிருக்கலாம்.

# அத்தியாயம் 23

"இதை விளக்க வேண்டுமானால் திபெத்தில் நாங்கள் செய்யும் ஒரு சடங்கைப் பற்றிக் கூற வேண்டும்" என்று பிட்சு அதை விளக்கத் தொடங்கினார்.

"திபெத்தில் அடிக்கடி பூகம்பமும் வெள்ளமும் வரும். விவசாயம் முழுக்க அழிந்து போகும். எனவே ஒவ்வொரு முறை அறுவடை முடிந்ததும் நாங்கள் சிறிது தானியத்தை எடுத்து வைப்போம். அதை நன்றாக உலர வைத்து ஒரு தாமிரப் பாத்திரத்தில் போடுவோம். அதை மூடிவிட்டு விளிம்புகளை ஈயத்தால் உருக்கி அடைப்போம். அந்தப் பாத்திரத்தை மிக உயரமான மலைகளின் உச்சியில் கொண்டு போய் வைத்துவிடுவோம்."

"எதற்கு? என்று இடைமறித்துக்கேட்டான் பாண்டியன்.

"எப்போதாவது பெரிய பூகம்பமோ வெள்ளமோ ஏற்பட்டு எங்கள் விவசாயம் முழுக்க அழிந்து விட்டால் என்ன செய்வது? மீண்டும் விவசாயத்தைத் தொடங்க விதைகள் வேண்டுமே? அதற்குத்தான். பலமுறை இவ்வாறு விவசாயம் அழிந்திருக்கிறது. உடனே மலை மீது ஏறி அந்தப் பானையை எடுத்து விதைத் தானியத்தை எடுப்போம். அதை புதிதாக விதைப்போம். இந்த யதிகளும் அந்த விதைகளைப் போன்றவர்கள்தான்" என்றார் பிட்சு.

"புரியவில்லை" என்று பாண்டியன் சொன்னான்.

"உலகிலே தீமை மிகுதியாகி விட்டது. என்றாவது உலகமே அழிந்து விட்டால் என்ன ஆகும்? ஒரு மனிதர் கூட மிஞ்சாமல் ஆகிவிட்டால் என்ன செய்வது? அதற்குத்தான் புத்தர் இந்த யதிகளை விசேஷமாக பாதுகாத்து வைத்திருக்கிறார். அவ்வாறு உலகம் அழிந்தது என்றால் புத்தர் இவர்களை மீண்டும் மண்ணுக்கு இறக்கி வைப்பார். இவர்கள் பூமி முழுக்கப் பரவுவார்கள் புதிய மனித குலம் இவர்களிடமிருந்து பிறந்து வரும். அந்த மனிதர்களிடம் தீமையே இருக்காது" என்றார் பிட்சு.

"அங்கு போகும் வழியைப் பற்றி உங்கள் நூல்களில் ஏதாவது கூறப்பட்டுள்ளதா?" என்றார் டாக்டர்.

"அங்கு யாருமே போகக் கூடாது. அங்கு போனவர்கள் திரும்ப முடியாது. அங்கு போக முதலில் கடல் மீது நடந்து போக வேண்டும். பிறகு நெருப்பின் மீது நடந்து போக வேண்டும். எங்கள் நூல்களில் அப்படி சொல்லப்பட்டிருக்கிறது" என்றார் பிட்சு.

'சரியான கதை' என்று பாண்டியன் மனத்துக்குள் நினைத்தான். கடல் மீது நடக்க முடியுமா? நெருப்பு மீதுதான் நடக்க முடியுமா? இமயமலையில் கடல் எப்படி வரும்?

"நாங்கள் பனிமனிதனைத் தேடித்தான் இவ்வளவு தூரம் வந்தோம். கண்டிப்பாக நாங்கள் அங்கு போய்த்தான் ஆக வேண்டும்" என்றார் டாக்டர்.

"அது உங்களுடைய விருப்பம். எவருடைய லட்சியத்தையும் பிறர் தடுக்கக் கூடாது. உங்களுக்கு எங்கள் ஆசிகள்"- பிட்சுக்கள் ஒரே குரலில் கூறினர்.

பிட்சுக்களிடம் விடைபெற்று மூவரும் கிளம்பினர்.

பனிவெளியில் நடந்து சென்ற படியே இருந்தார்கள். வெகுதூரம் சென்ற பிறகு அவர்கள் ஒரு

மலை விளிம்பை அடைந்தார்கள். அதன் மீது கயிறு கட்டி ஏறினார்கள். மலை விளிம்பில் ஏறி மறுபக்கம் பார்த்ததும் மூவரும் வியப்புடன் அலறிவிட்டார்கள்.

மறுபக்கம் ஒரு பெரிய கடல் தெரிந்தது.

“கடல்!” என்றான் பாண்டியன்.

“ஆம், கடல்தான். ஆனால் இந்தக் கடல் உறைந்து போயிருக்கிறது. இது மிகப் பெரிய பனிக்கட்டிப் பரப்புதான்”- டாக்டர் சொன்னார்.

“இந்த பனிப்பரப்பை நான் பார்த்தேன். பனிமனிதன் என்னைத் தூக்கியபடி இந்தப் பனிப்பாளம் மீது வேகமாக சறுக்கிச் சென்றான்”- கிம் பரபரப்புடன் சொன்னான்.

“எந்தத் திசை நோக்கிச் சென்றான்?”டாக்டர் கேட்டார்.

“அதோ! ஒரு மலை இரண்டாகப் பிளந்து தெரிகிறதே. அதனருகே ஒரு இடைவெளி உண்டு. அவன் அதன் வழியாகத்தான் போனான்.” கிம் கூறினான்.

அவர்கள் அந்தக் கடலை நெருங்கினார்கள்.

“இமயமலை உச்சியில் கடல் எப்படி வந்தது?” பாண்டியன் ஆச்சரியம் அடங்காமல் கேட்டான்.

“முப்படி கோடி வருடம் முன்பு இமயமலைப்பகுதி கடலுக்குள் தான் இருந்தது. இமயமலையின் மறுபக்கம் உள்ள நிலப்பகுதி யுரேஷியா கண்டமாக இருந்தது. இப்போது இந்தியாவாக உள்ள நிலப்பகுதி கோண்ட்வானா என்ற கண்டத்துடன் ஒட்டியிருந்தது. பூமியின் நடுப்பகுதியில் உள்ள லாவா குழம்பு குளிர்ந்தபோது பூமி சுருங்கியது. ஆரஞ்சுப் பழம் உலரும்போது அதன் தோல் சுருங்குமே அது போல. பூமியின் மீது உள்ள கண்டங்கள் எல்லாம் அப்போது பிரிந்தன. இந்தியா பிரிந்து வந்து லாரேஷியாவில் மோதியது. உடனே பூமி மடங்கி மேலே எழுந்து இமயமலை ஆக மாறியது. இங்கே இருந்த கடல் நீர் விலகியது. ஆனால் இந்தப் பகுதியின் நான்கு பக்கமும் மலைகளாக இருந்தது. எனவே கடல் நீர் வெளியே ஓட முடியவில்லை. ஒரு பெரிய குழியில் நீர் தேங்கி நிற்பது போல இருக்கிறது இது.”

“அதாவது இது மிஞ்சியிருக்கிற கடல்! இதைக் கடலின் சிறு பகுதி என்று கூறலாம்” என்றார் பாண்டியன்.

“ஆமாம். இது மலையாக மேலே எழுந்த போது குளிர் அதிகரித்தது. எனவே இது அப்படியே உறைந்து பனிப்பாளமாக மாறிவிட்டது’- டாக்டர் சொன்னார்.

அவர்கள் கடலின் அருகே போய் சேர்ந்தார்கள்.

“ரிக்வேதம்தான் இந்தியாவிலேயே மிகப் பழைய நூல். அதில் இந்தியாவை ‘ஜம்புத் த்வீபம்’ என்று சொல்லியிருக்கிறது. இந்தியா ஒரு தீபகற்பம் தானே? ஏன் தீவு என்று சொல்லியிருக்கிறார்கள்?” டாக்டர் கேட்டார்.

பாண்டியன் “ஏன்?” என்றான்.

“புராதன காலகட்டத்தில் இந்தியாவின் வடக்கேயும் கடல் இருந்திருக்கிறது. அதாவது இந்தப் பகுதியெல்லாம் கடலாக இருந்திருக்கிறது. அதை நமது முன்னோர்கள் அறிந்திருக்கிறார்கள்” என்றார் டாக்டர்.

“எப்படி நாம் இந்தக் கடலை கடந்து போவது? வெகு தூரம் இருக்கிறதே?” என்றான் பாண்டியன்.

“சறுக்கிப் போக வேண்டியதுதான். பனிச்சறுக்கு தெரியுமல்லவா?” டாக்டர் கேட்டார்.

“எனக்குப் பயிற்சி தரப்பட்டிருக்கிறது” என்ற பாண்டியன் “உனக்குத் தெரியுமா?” என்று

கிம்மைப் பார்த்துக்கேட்டான்.

“நீங்கள் சொன்னால் போதும்; சறுக்கி விடுவேன்”என்றான் தன்னம்பிக்கையுடன் கிம்.

“சரி, கிளம்புவோம்” என்றார் டாக்டர்.

மூவரும் கடல் மீது சறுக்க ஆரம்பித்தார்கள்.

ஒளிவிடும் தாவரம்!

காளிதாசன் எழுதிய பெரும் காவியம் ரகுவம்சம். அதில் முதல் கதாநாயகனின் பெயர் ரகு. ரகுவம்சம் நான்காம் சர்க்கத்தில் ரகு, இந்தியா முழுக்கப் படையெடுத்து வென்றது பற்றி கூறப்படுகிறது. பாண்டிய நாடு முதல் இமயமலை வரை அவன் வென்றானாம். காமரூபம் (இன்று அது அசாம் எனப்படுகிறது) முதல் பாரசீகம் வரை அவன் கைப்பற்றினானாம். இந்த சர்க்கத்தில் இந்தியாவில் உள்ள எல்லாப் பகுதிகளையும் குறித்துக் காளிதாசன் விரிவாக வர்ணிக்கிறார். பண்டைய இந்தியாவைப் பற்றி அறிய இது மிகவும் உதவிகரமானது.

இந்த சர்க்கத்தில் எழுபதாவது சுலோகத்தில் ஒரு தகவல் வருகிறது. ரகு இமயமலைக்குப் படையெடுத்துப்போய் அங்குள்ள மலைவாசி மக்களை வென்றான். அங்கு ஒரு தாவரம் இருந்தது. அது இரவில் விளக்குபோல் ஒளி விட்டதாம். அந்த ஒளியில் ரகுவின் யானைகளின் சங்கிலிகள் மின்னினவாம். அந்தத் தாவரம் எது? இதுவரை அதை எவரும் கண்டுபிடிக்கவில்லை.

ஆனால் காளிதாசன் பிறபகுதிகளைப் பற்றிக் கூறிய தகவல்கள் எல்லாம் சரியாக உள்ளன. அப்படியானால் அந்தத் தாவரம் உண்மையிலேயே இருந்திருக்கக் கூடும். இமயமலையில் அவ்வாறு பல புதிய தாவரங்கள் இருக்கலாம்!

# அத்தியாயம் 24

கடல் மிகச் சமதளமாக இருந்தது. எனவே அவர்கள் மிக வேகமாகச் சறுக்கினார்கள். கடல் மீது நடக்க வேண்டும் என்று பிட்சு கூறியது உண்மையாகிவிட்டதே என்று பாண்டியன் நினைத்தான்.

அந்தப் பனிப்பரப்பின் அடியில் உண்மையான கடல் போலவே இருந்தது. வெள்ளி நிறமான மீன்கள் கூட்டம் கூட்டமாக அப்படியே உறைந்து காணப்பட்டன. வரிவரியாக கோடு போட்ட உடல் கொண்ட கடல் பாம்புகள் காணப்பட்டன. மிகப் பெரிய பாம்பு ஒன்று நீந்துவது போலவே உறைந்திருந்தது. அது போவா பாம்பு. உலகிலேயே பெரிய பாம்பு அதுதான். பாண்டியனை விட ஐந்து மடங்கு நீளமாகவும் அவனது பருமனிலும் இருந்தது. அது மட்டும் உறையாத கடலாக இருந்திருந்தால் இந்நேரத்துக்கு மூவரும் அந்தப் பெரும் பாம்புக்கு இரையாகி இருப்பார்கள்.

“போவா பாம்பு பூமத்திய ரேகையின் அருகே உள்ள கடலில்தானே இப்போது காணப்படுகிறது?” என்றான் பாண்டியன்.

“ஆமாம். ஒரு காலத்தில் இந்தக் கடலும் அந்தக் கடல்களுடன் இணைந்து இருந்திருக்கலாம்” என்றார் டாக்டர்.

“இது எத்தனை காலத்துக்கு முன் உயிருடன் இருந்தது?”

“இமயமலைப்பகுதி மலையாக மேலெழுந்து இரண்டு கோடி ஆண்டுகள் ஆகின்றன. அதன் பிறகும் இந்தக் கடலில் இது உயிர் வாழ்ந்திருக்கலாம். படிப்படியாக இமயமலையின் உயரம் அதிகமாகி குளிர் அதிகரித்த போது இது செத்திருக்கும். எப்படிப் பார்த்தாலும் இது ஐம்பது லட்சம் வருடங்களுக்கு முந்தைய உயிரினம்” டாக்டர் கூறினார்.

ஏதோ ஒன்று நிகழ்ந்து மொத்தக் கடலும் ஓரிரு வருடங்களுக்குள் படிப்படியாக உறைந்திருக்க வேண்டும் என்று பாண்டியன் நினைத்தான்.

கடலுக்குள் அடர்ந்த காடு போல கடல் தாவரங்கள் மண்டிக் கிடந்தன. அவையும் பனியில் அப்படியே உறைந்து காணப்பட்டன. கடல் தாவரங்கள் இல்லாத பகுதிகளில் பல வகையான மீன்களைத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. சில வட்டமான தலையணை போன்ற மீன்கள். சில பெரிய வாள் போன்ற மீன்கள். சில படகு போன்ற பெரிய மீன்கள். இளநீல நிறம், சிவப்பு நிறம், மஞ்சள் நிறம் ஆகிய பல நிறங்களில் அம்மீன்கள் இருந்தன. மிக அழகான ஒரு ஓவியம் போல இருந்தது. அந்தப் பனிப்பாளம்.

திடீரென்று ஓர் இடத்தில் திமிங்கலங்களின் உருவங்கள் தெரிய ஆரம்பித்தன. ஏராளமான திமிங்கலங்கள் வாயைத் திறந்தபடி பனியில் உறைந்திருந்தன. பாண்டியன் ஆச்சரியத்துடன், “டாக்டர், இந்தத் திமிங்கலங்களுக்கு கால்கள் இருக்கின்றன” என்று கூச்சலிட்டான்.

உண்மைதான். அந்தத் திமிங்கலத்துக்கு ஓணானின் கால்கள் போன்ற பெரிய கால்கள் இருந்தன. பின்னங்கால்கள் பெரியனவாகவும் முன்னங்கால்கள் சிறியனவாகவும் இருந்தன.

“திமிங்கலம் உண்மையில் ஒரு விலங்கு தான். பாலூட்டி வகையைச் சார்ந்தது அது. பல கோடி வருடம் முன்பு அது கரையில்தான் வாழ்ந்து வந்தது. அது பல்லி வகையைச் சார்ந்தது.

*அதாவது டைனோசர்களின் இனம்தான் அதுவும். பிற்பாடு அது கடலில் குடியேறி வாழ ஆரம்பித்தது. ஆனால் இப்போதுகூட திமிங்கலம் நீரில் மூச்சுவிட முடியாது. மற்ற மீன்கள் எல்லாம் நீரை விழுங்கி பக்கச் செதில்கள் வழியாக வெளிவிடும். அப்போது அவற்றுக்குத் தேவையான ஆக்சிஜன் கிடைத்து விடும். திமிங்கலம் இப்போதும் நீருக்கு வெளியே வாயை நீட்டி காற்றை இழுத்துத்தான் மூச்சு விடுகிறது. ஆரம்பத்தில் அதற்குப் பெரிய கால்கள் இருந்தன. கடலுக்கு வந்த பிறகு படிப்படியாக அக்கால்களின் தேவை இல்லாமல் ஆயிற்று. எனவே பரிணாம வளர்ச்சியில் கால்கள் மறைந்தன" என்றார் டாக்டர்.*

*"இவற்றுக்கு இன்னமும் கால்கள் மறையவில்லையா?" என்றான் பாண்டியன்.*

*"ஆமாம் இவை ஒன்றரை கோடி வருடம் முன்பு வாழ்ந்தவை. இது சிறிய கடல்தானே? எனவே இவை அடிக்கடி கரைக்குப் போய் சிறிய விலங்குகளைப் பிடித்துத் தின்று வாழ்ந்திருக்கலாம்" என்றார் டாக்டர்.*

*பாண்டியனுக்கு வியப்புத் தாங்க முடியவில்லை. ஒரு திமிங்கலம் கரையேறி வேட்டையாடினால் எப்படி இருக்கும்? கிட்டதட்ட முதலைகளைப் போல அவை காணப்பட்டன.*

*அவர்கள் மிக வேகமாக பனியில் சறுக்கியபடி சென்றார்கள். வெகுதூரம் வந்துவிட்டோம் என்று பாண்டியனுக்குப் புரிந்தது.*

*கடைசியில் அவர்கள் அந்த நுனி மலையருகே வந்து சேர்ந்தார்கள். அங்கு கரை தெரிந்தது.*

*"அந்தக் கரைதான்" என்றான் கிம்.*

*கரையை அவர்கள் நெருங்கினார்கள். அங்கு பல விதமான பாறைகள் நிரம்பி இருந்தன.*

*கரையை அடைந்ததும் அவர்கள் பனிச்சறுக்குக் கட்டைகளைக் காலில் இருந்து கழற்றினார்கள். வண்டியை இழுத்து நிறுத்தினார்கள்.*

*கிம், "இதோ இந்தப் பாறைகள் வழியாக இன்னும் வெகுதூரம் போக வேண்டும்" என்றான்.*

*"முதலில் ஏதாவது சாப்பிடுவோம்" என்றார் டாக்டர். அவர்கள் நீரை சூடுபடுத்தி உணவு அருந்தத் தொடங்கினார்கள்.*

*"டாக்டர், அங்கே பாருங்கள்" என்றான் பாண்டியன். சில மனிதர்கள் கடல் மீது நடந்து செல்வது தெரிந்தது. அவர்கள் சற்று உயரமாக இருந்தார்கள். ஆனால் கைகளும் கால்களும் குட்டையாக இருந்தன. அவர்கள் ஆடி ஆடி மெதுவாக நடந்தார்கள். அவர்களைத் தெளிவாகப் பார்க்க முடியவில்லை.*

*"அவர்கள் பனிமனிதர்கள் அல்ல. பனிமனிதர்கள் இன்னும் உயரமானவர்கள்" என்றார் டாக்டர்.*

*"அப்படியானால் அவர்கள் யார்?" - பாண்டியன் கேட்டான்.*

*"வாருங்கள் பார்ப்போம்" என்றார் டாக்டர்.*

*அவர்கள் எழுந்து அந்த மனிதர்களை நெருங்கினார்கள். பனிப்பாளத்தில் விழுந்த ஒளி கண்களை மிகவும் கூச வைத்ததால் அவர்களைச் சரியாகப் பார்க்க முடியவில்லை. நிழல் போலத் தெரிந்தார்கள்.*

*அந்த மனிதர்கள் கடலில் பனிப்பாளத்தை உடைத்து துளையிட்டுக் கொண்டிருந்தார்கள்.*

*"எதற்குப் பனிப்பாளத்தைத் துளைக்கிறார்கள்?" என்றான் பாண்டியன்.*

*"கரையோரம் பனிப்பாளம் மேலும் சற்று மெலிதாக இருக்கும். இங்கு துளைபோடுவது எளிது. கடலுக்கு அடியில் குளிர் அதிகமாக இருக்காது. அங்கு சில சிறிய இன மீன்கள் உயிர்*

வாழக்கூடும். அவற்றை இவர்கள் பிடிக்கிறார்கள் என்று நினைக்கிறேன்” டாக்டர் சொன்னார்.

பாண்டியன் அவர் சொன்னதை உடனே புரிந்து கொண்டான். அவர்கள் நடந்த பனிப்பாளத்தில் சில சிறிய விரிசல் துளைகள் இருந்தன. அந்தத் துளைகளின் அடியில் சிறிய மீன்கள் மூக்குகளை சேர்த்து வைத்தபடி கூட்டமாக அசையாமல் நின்றிருந்தன. அங்கு ஆழத்தில் தண்ணீர் இருப்பது தெரிந்தது.

“இந்தப் பனியில் விழக்கூடிய சிறிய விரிசல்கள் வழியாக சிறிதளவு காற்று உள்ளே உள்ள நீரில் படுகிறது. அதன் மூலம் மிகச் சிறிய அளவு ஆக்சிஜன் நீரில் கலக்கிறது. அந்த ஆக்சிஜனை சுவாசித்துதான் இந்த சிறிய மீன்கள் வாழ்கின்றன” என்றான் டாக்டர்.

அவர்கள் மீன் பிடிப்பவர்களை அணுகினார்கள். பாண்டியன் வியப்புடன் “டாக்டர், அவை மனிதர்களல்ல. முதலைகள்!” என்று கூவினான்.

அவை முதலைகள்தான். ஆனால் இரண்டு பின்கால்களையும் வாலையும் ஊன்றி நிமிர்ந்து நின்றன அவை! இரண்டு முதலைகள் தங்கள் முன்கால்களால் பனியில் பள்ளம் தோண்டியபடி இருந்தன.

ஒரு முதலை அவர்களைப் பார்த்து, ‘உர்ர்’ என்று பயங்கரமாகக் கத்தியது. உடனே மற்ற முதலைகளும் அவர்களைப் பார்த்தன. அவை அவர்களை நோக்கிப் பாய்ந்து வந்தன.

அவை மனிதர்களைப் போல, இரண்டு கால்களில் ஓடி வருவதை பாண்டியன் கண்டான். அவர்கள் மூவரும் தலைதெறிக்க ஓட ஆரம்பித்தார்கள்.

ஆனால் முதலைகள் மிகுந்த வேகத்தில் விரைந்தோடி வந்தன. அவை அவர்களை சில கணங்களில் பிடித்து விடும் என்று பட்டது.

“வளைந்து வளைந்து ஓடுங்கள். முதலைகளால் நேர் கோட்டில் தான் ஓட முடியும்!” டாக்டர் கத்தியபடியே ஓடினார்.

மூவரும் வளைந்து வளைந்து ஓடினார்கள். துரத்தி வந்த முதலைகள் தடுமாறின. சில முதலைகள் தடாலென்று பனியில் விழுந்தன.

அவர்கள் தப்பியோடி கரையை அடைந்தார்கள். ஆனால் கரையில் இருந்த பாறைகளின் மறைவுகளில் இருந்தெல்லாம் நிறைய முதலைகள் வெளிப்பட்டன. பாறை மீது ஏறி நின்று கைகளை ஆட்டியபடி ‘உர்...உர்’ என்று கூவின.

“அவ்வளவுதான். செத்தோம்” என்றார் டாக்டர்.

அவர்கள் அப்படியே நின்றார்கள்.

“வெடிமருந்து இருந்தால் வெடித்துப் பார்க்கலாம். ஆனால் அது வண்டியிலேயே இருந்தது” - டாக்டர் பதற்றத்துடன் பேசினார்.

முதலைகள் கைகளை ஆட்டியபடி அவர்களை வட்டமாகச் சூழ்ந்து கொண்டன. அவற்றின் வாயில் நீளமான பற்கள் அடர்ந்து இருந்தன.

தீடீரென்று ஒரு பயங்கரமான பிளிறல் ஒலி கேட்டது. பத்து யானைகள் சேர்ந்து பிளிறுவது போல அது இருந்தது.

கால்களும் கைகளாகலாம்!
மனிதர்களின் கால்கள் தொடர்ந்து நடப்பதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே அதன் நடுப்பகுதி வளைவாக ஆயிற்று. கட்டை விரல் தனித்து விலகி உறுதியானதாக மாறியது. நாம் நன்றாகக் கால்களை ஊன்றி நடக்கும் விதமாக அது மாறியது. ஆனால் சில பழங்குடி இன மக்கள் இன்னமும் கால்களைக் குரங்குள் மாதிரியே

பயன்படுத்துகின்றார்கள். மிக்ஸூ ஹா மக்லாய் என்ற மானுடவியல் அறிஞர் பப்புவுஒன் என்ற பழங்குடி மக்களைப் பற்றி ஆராய்ச்சி செய்தார். இவர்கள் ஆப்பிரிக்காவில் வாழ்பவர்கள்.

“பப்புவான் மக்கள் பொருள்களைக் கால்களால் எடுத்தார்கள். பல்வேறு செயல்களை கால்களால் செய்தார்கள். நீரிலிருந்து கால்களால் மீன் பிடித்தார்கள். வாழைப் பழத்தை கால்களால் தோலுரித்து சாப்பிட்டார்கள்” என்று மிக்ஸூ குறிப்பிடுகிறார். பழக்கம் மூலம் உடலின் உறுப்புகள் எப்படி வேண்டுமானாலும் மாறும்!

# அத்தியாயம் 25

அந்த ஒலியைக் கேட்டதும் எல்லா முதலைகளும் பயந்து விட்டன. கலைந்து சிதறி நாலாபக்கமும் ஓட ஆரம்பித்தன. ஒன்றோடொன்று தடுக்கி விழுந்தன. பயத்தில் ஊளையிட்டன.

மீண்டும் அந்தப் பிளிறல் ஒலி கேட்டது. அதைக் கேட்டதும் அவர்கள் மூவரும் பயத்தில் நடுங்கினார்கள்.

முதலைகள் அனைத்தும் விலகி ஓடி மறைந்துவிட்டன. அவர்கள் அந்த ஒலி வந்த திசையையே உற்றுப் பார்த்தார்கள்.

முதலில் பாறைகள் மீது நிழல் விழுந்தது. மிகப் பெரிய நிழல் அது. ஒரு ராட்சதனின் நிழல்போல அது காணப்பட்டது.

பிறகு ஒரு பெரிய பாறையின் மறுபுறத்தில் இருந்து ஒரு பிரம்மாண்டமான குரங்கு எழுந்து வந்தது.

அது ஏறத்தாழ பதிமூன்று அடி உயரம் இருந்தது. அதாவது இரண்டு மனிதர்கள் ஒருவர் மீது ஒருவராக நின்றால் எவ்வளவு உயரம் இருக்குமோ அதை விடவும் அதிக உயரமாக இருந்தது.

அதன் உடல் முழுக்க இளம்சாம்பல் நிறமாக மென்மையாக மயிர் அடர்த்தியாக பரவியிருந்தது. அதன் உடம்பு மனித உடம்பு போலவே இருந்தது. ஆனால் கைகள் வேறு மாதிரி இருந்தன. அதன் புறங்கைகளிலும் அடர்த்தியான ரோமம் இருந்தது. அதன் விரல்கள் தடிமனாகவும் குட்டையாகவும் இருந்தன. அதன் கால்கள் நீளம் குறைந்தும் வளைந்தும் இருந்தன.

“யதி!” என்றான் கிம். சட்டென்று ஒரு எட்டு முன்னால் எடுத்து வைத்தான். அப்படியே மண்டியிட்டு அதை தலைகுனிந்து வணங்கினான்.

“பனிமனிதன்!” என்றார் டாக்டர்.

பாண்டியனுக்கு வியப்பில் பேச்சே எழவில்லை.

பனிமனிதனின் முகம் குரங்கின் முகம் போல இருக்கவில்லை. அது மயிர் அடர்ந்த மனித முகம் போலவே இருந்தது. கண்கள் இரண்டும் கண்ணாடிக் கோளங்கள் போல இருந்தன. மிக அழகான விழிகள் அவனுக்கு இருந்தன. இரண்டு இளநீல நிறமான வைரங்கள் போல அவை ஒளியுடன் காணப்பட்டன. அவனுக்கு உதடுகள் இல்லை. வாய் குரங்கின் வாய் போல முன்னால் உந்தி இருக்கவில்லை. அதே சமயம் மனித முகம் போல மீசையும் உதடுகளும் தாடியுமாக இருக்கவும் இல்லை. மீசை தாடிக்குப் பதிலாக மென்மையான சாம்பல் நிறமான மயிர் அடர்ந்திருந்தது. அதன் நடுவே சிறிய வாய் திறந்திருந்தது. அதற்குள் வெண்மையான சிறிய பற்கள் வரிசையாகக் காணப்பட்டன. குரங்குகளுக்கும் மற்ற மிருகங்களுக்கும் இருப்பது போல கோரைப் பற்கள் அவனுக்கு இருக்கவில்லை. எனவே முகம் மனித முகம் போலவே இருந்தது.

பனிமனிதன் அவர்களை மாறி மாறிப் பார்த்தான். பிறகு பாறையில் இருந்து கீழே குதித்தான்.

ஒரு பாறையின் இடுக்கில் இருந்த எதையோ எடுத்தான். அது ஒரு பெரிய காய். அதை ஒரு பாறையின் மீது வைத்து விட்டு அவர்களைப் பார்த்தான்.

பனிமனிதன் அந்தக் காயைச் சுட்டிக் காட்டினான். தன் வாயில் கையை வைத்தான். சாப்பிடச் சொல்கிறான் என்று டாக்டருக்குப் புரிந்தது.

பனிமனிதன் ஏதோ சொன்னான். அந்தக் குரலைக் கேட்டதும் அவர்கள் மூவருக்கும் பரவசமாக இருந்தது. அது மனிதக் குரல் போலவோ மிருகங்களின் குரல் போலவோ இருக்கவில்லை. மிகப் பெரிய ஆர்மோனிய வாத்தியமொன்றை வேகமாக வாசிப்பது போல, இருந்தது. அது பாட்டா, பேச்சா, இசையா என்று ஊகிக்கவே முடியவில்லை. ஆனால் அது மிக மிக இனிமையாக இருந்தது.

பிறகு பனிமனிதன் எம்பி இன்னொரு பாறைக்குச் சென்றான். அங்கிருந்து பாறைகள் மீது தாவித்தாவிச் சென்றான். பிறகு அவன் மறைந்து போனான்.

“பனிமனிதன் நம்மை உபசரிக்கிறான்” என்றார்டாக்டர்.

மூவரும் அந்த காயின் அருகே சென்றார்கள். அது ஒரு பெரிய பூசணிக்காயின் அளவு இருந்தது.

டாக்டர் தன் கத்தியால் அதை வெட்டினார். உடனே மிக இனிமையான ஒரு வாசனை எழுந்தது. மாம்பழ வாசனையும் தாமரைப் பூவின் வாசனையும் கலந்தது போன்ற வாசனை அது.



“இது என்ன பழம்?” என்றான் பாண்டியன்.

“தெரியவில்லை. இப்படி ஒரு பழத்தை நான் எங்குமே பார்த்ததில்லை. கேள்விப்பட்டதும் இல்லை” என்றார் டாக்டர்.

அது பூசணி வகையைச் சேர்ந்த பழம் என்று பட்டது. ஆனால் உள்ளே பலாப்பழம் போல சுளைகள் இருந்தன. ஒரு சுளையை கிம் எடுத்தான்.

“சாப்பிடாதே. நாம் இதுவரை அறியாத பழம் இது. இது எப்படிப்பட்டது என்று சோதனை செய்த பிறகு சாப்பிடுவோம்” என்றார் டாக்டர்.

“யதி எனக்கு விஷத்தையே தந்தாலும் தயங்காமல் சாப்பிடுவேன்” என்றான் கிம். பிறகு அதை சாப்பிட்டான். அவன் முகம் மலர்ந்தது.

பாண்டியனும் டாக்டரும் சுளைகளைப் பிய்த்துச் சாப்பிட்டார்கள். அவர்கள் அதைப் போன்ற ஒரு இனிய பழத்தை சாப்பிட்டதே இல்லை. மிகவும் தித்திப்பாக இருந்தது. லேசான புளிப்பு கலந்த தித்திப்பு அது! தேனையும் பலாப்பழச் சுளையில் இருந்து ஊறும் சாறையும் கலந்தது போல இருந்தது. அப்படிப்பட்ட ஒரு பழம் உலகில் உண்டு என்று யாராவது சொல்லியிருந்தால் நம்பியிருக்க மாட்டார்கள். அத்தனை சுவையாக இருந்தது அது.

அந்தச் சுளைகளை மாறி மாறிச் சாப்பிட்டார்கள். எத்தனை சாப்பிட்ட போதும் திகட்டவே இல்லை.

சாப்பிட்டு முடித்ததும் பாண்டியன் “ஆசை தீரவே இல்லை. இந்தத் தோலையும தின்று விடலாம் என்று தோன்றுகிறது” என்றான்.

“இது பழமா இல்லை அமுதமா என்று சந்தேகம் வருகிறது” என்றார் டாக்டர்.

“அந்தப் பனிமனிதனைப் பின் தொடர்ந்து போவோம்” என்றான் பாண்டியன்.

அவர்கள் அந்தப் பாறைகளினூடாக சென்றார்கள். அவர்களால் வேகமாக நடக்க முடிந்தது. பாண்டியன் அந்தப் பாறைகள் மீது தாவித்தாவிச் சென்றான்.

திடீரென்று பாண்டியனுக்கு ஒரு விஷயம் தெரியவந்தது. எத்தனை வேகமாக குதித்தாலும் அவனுக்கு மூச்சு இரைக்கவில்லை. களைப்பு கொஞ்சம் கூடத் தெரியவில்லை.

“டாக்டர், இந்தப் பழம் உண்மையிலேயே அமுதம்தான். இதை சாப்பிட்ட பிறகு களைப்பே தெரியவில்லை”என்றான் பாண்டியன்.

டாக்டர் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தது போலக் காணப்பட்டார்.

“என்ன டாக்டர் யோசனை?” என்றான் பாண்டியன்.

“இந்தப் பழம் எங்கே விளைந்தது? இது மிக மிக இனிமையாக இருக்கிறது. சூரிய ஒளிபட்டு பழுக்கும் பழங்கள்தான் இத்தனை இனிமையாக இருக்கும். எப்படி இந்தப் பழம் வந்தது?” என்றார் டாக்டர்.

“ஆமாம். அது ஒரு புதிர்தான்” என்றான் பாண்டியன்.

“இங்கே எங்கோயோ தாவரங்கள் நிரம்பிய ஒரு நிலப்பகுதி உள்ளது. அங்குதான் இந்த பனிமனிதன் வசிக்கிறான்”- டாக்டர் சொன்னார்.

“பனிமலையில் எப்படி தாவரம் வளரும்?” பாண்டியன் கேட்டான்.

“அதைத்தான் நாம் கண்டுபிடிக்க வேண்டும். பார்ப்போம்” என்றார் டாக்டர்.

“சரி டாக்டர். இந்த முதலை மனிதர்கள் எப்படி உருவாகிறார்கள்?” பாண்டியன் கேட்டான்.

“அவர்கள் முதலை மனிதர்களல்ல. முதலைகள் தான். அவை எழுந்து நடந்ததனால் நமக்கு அவை மனிதர்கள் என்று தோன்றியது” - டாக்டர் சொன்னார்.

“அவை எப்படி எழுந்து நடந்தன?” பாண்டியன் கேட்டான்.

“எல்லா முதலைகளாலும் எழுந்து நடக்கமுடியும். நம்முடைய ஊரிலுள்ள சாதாரண முதலை தேவை ஏற்பட்டால் எழுந்து இரண்டு காலில் வேகமாக ஓடும். ஆனால் அவை அதிகமும் நீரில் கிடக்கின்றன. அங்கு நீர் அருகருகே அவற்றுக்கு உணவும் சிக்கி விடுகிறது. எனவே அவை

பெரும்பாலும் எழுந்து ஓடும் அவசியம் ஏற்படுவதில்லை. ஆனால் இங்கு கடல் உறைந்து விட்டது. பனி மீது நடந்து போய்தான் இவை மீன் பிடிக்க வேண்டும். எனவே படிப்படியாக இவை நடக்க ஆரம்பித்து விட்டன" என்றார் டாக்டர்.

அவர்கள் அந்தப் பாறைக் கூட்டத்தைத் தாண்டினார்கள். மீண்டும் ஒரு மலைச்சரிவு வந்தது. அதில் ஏற ஆரம்பித்தார்கள்.

"அட!" என்றார் டாக்டர்.

"என்ன டாக்டர்?" என்றான் பாண்டியன்.

"இந்தப் பனி மனிதன் எந்த வகை உயிரினம் என்று இப்போது தெரிந்து விட்டது!" டாக்டர் சொன்னார்.

"எந்த வகை உயிரினம்?" என்றான் பாண்டியன்.

"இதன் முகம் குரங்கு போல இல்லை. ஆனால் உடல் குரங்கு போல இருக்கிறது. இப்படிப்பட்ட குரங்கு மனிதனுக்கு பரிணாம வரலாற்றில் ஒரு பெயர் உண்டு"டாக்டர் கூறினார்.

"என்ன பெயர்?" என்றான் பாண்டியன்.

"இராமபிதாகஸ்" என்றார் டாக்டர்.

"இராமபிதாகஸா?" என்றான் பாண்டியன்.

"ஆமாம். இராமனின் வாலில்லா குரங்கு என்று இதற்குப் பெயர்" என்றார் டாக்டர்.

ராட்சதக் குரங்கு மனிதர்கள்!
கேனிக்ஸ்வால்டு என்ற ஆராய்ச்சியாளர் ஹாங் காங் நகரில் ஒரு மருந்துக்கடையில் குரங்குப் பற்களை வாங்கினார். அவற்றில் மிகப் பெரிய பற்கள் சில இருந்தன.
அவை சீனாவின் தெற்குப் பகுதியில் வாழ்ந்த மிகப் பெரிய குரங்கு மனிதர்களின் பற்கள். அவற்றுக்கு ஜைஜான்டோ பித்திகஸ் என்று அவர் பெயரிட்டார். அரக்கக் குரங்கு என்று பொருள் அதற்கு!
இவை இந்தியாவின் வடபகுதியில் வாழ்ந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. இவற்றுக்கு மெகாந்திரேபாய் (மாபெரும் குரங்கு) என்றும் பெயர் உண்டு.
இந்தப் பெரிய குரங்குமனிதர்களின் சில எலும்புகளும் கிடைத்துள்ளன.

# அத்தியாயம் 26

“இராமனின் குரங்கா? வானரங்களையா கூறுகிறீர்கள்?” என்று பாண்டியன் கேட்டான்.

“ஆமாம். ஏறத்தாழ ஒன்றரைக் கோடி ஆண்டு முன்பு இந்தியாவுக்கு வடக்கே சிவாலிக் நதி என்று ஒரு நதி ஓடியது. அதன் கரையில் நிறைய குரங்கு மனிதர்கள் வாழ்ந்தார்கள்” என்றார் டாக்டர்.

“அப்படி ஒரு நதியை நான் கேள்விப்பட்டதே இல்லையே” என்றான் பாண்டியன்.

“அந்த நதி கங்கையை விட பத்து மடங்கு பெரிய நதி தெரியுமா?” டாக்டர் கூறினார்.

“எப்படி அதில் அந்த அளவுக்குத் தண்ணீர் வந்தது?” என்று பாண்டியன் கேட்டான்.

“இந்திய நிலப்பகுதி அப்போதுதான் லாரேஷியா கண்டத்தில் இணைந்திருந்தது. அங்குள்ள நீரெல்லாம் இந்தியாவுக்கு வந்து சிவாலிக் நதியாக மாறிக் கடலில் கலந்தது.”

“’அது சரி” என்றான் பாண்டியன்.

“கண்டங்களின் அழுத்தம் காரணமாக பிறகு படிப்படியாக இமயமலை மேலே எழுந்தது. அது ஒரு அணை மாதிரி ஆயிற்று. எனவே லாரேஷியாவில் இருந்து தண்ணீர் வரவில்லை. மெல்ல சிவாலிக் நதி வற்றி விட்டது. அங்குள்ள குரங்கு மனிதர்கள் படிப்படியாக வேறு இடத்துக்குப் போனார்கள். இப்போது சிவாலிக் நதியின் கரை எங்கே இருக்கிறது தெரியுமா?”டாக்டர் கேட்டார்.

“எங்கே?” என்றான் பாண்டியன்.

“அந்தக் கரை அப்படியே உயர்ந்த மலையாக மாறிவிட்டது. அதற்கு இன்று சிவாலிக் மலைத் தொடர் என்று பெயர்” என்றார் டாக்டர்.

“நதிக்கரை மலையாக ஆயிற்றா? எப்படி?” என்றான் பாண்டியன் வியப்புடன்.

“இமயமலைப் பகுதி இப்போது கூட ஆண்டுக்கு பத்து சென்டிமீட்டர் வீதம் உயரமாகிறது. பத்து லட்சம் ஆண்டு ஆகும் போது அது இவ்வாறு பல கிலோ மீட்டர் உயரம் அதிகமாகி இருக்கும். அப்படித்தான் சிவாலிக் நதிக்கரை மலையாக மாறியது” என்றார் டாக்டர்.

“இதை யார் கண்டுபிடித்தார்கள்?” என்றான் பாண்டியன்.

“அமெரிக்காவைச் சேர்ந்த ஜி.இ. லூயிஸ் என்பவர்தான். அவர் ஒரு நிலவியல் நிபுணர். 1958-ல் இவர் சிவாலிக் மலையின் உச்சியில் போய் தோண்ட ஆரம்பித்தார். எல்லோரும் சிரித்தார்கள். மலை உச்சியில் போய் யாராவதுதோண்டிப் பார்ப்பார்களா என்று கேட்டார்கள். ஆனால் லூயிஸ் அங்கு புராதனமான குரங்கு மனிதனின் எலும்புக் கூட்டைக் கண்டுபிடித்தார்” என்றார் டாக்டர்.

“அப்படியா?” என்றான் பாண்டியன்.

“இந்தியாவில் குரங்கு மனிதர்கள் வாழ்ந்ததை ஜி.இ. லூயிஸ் நிரூபித்தார். அந்தக் குரங்கு மனிதனுக்கு அவர் இராமபிதாகஸ் என்று பெயர் சூட்டினார். அதற்கு இராமனின் வாலில்லாக் குரங்கு என்று பொருள்’ என்றார் டாக்டர்.

“அப்படியானால் ராமாயணத்தில் உள்ள வானரங்கள் எல்லாம் உண்மையாகவே இருந்தவையா?” என்றான் பாண்டியன்.

“ராமாயணம் எழுதப்பட்டது பல்லாயிரம் ஆண்டு கழிந்துதான். அப்போதும் குரங்கு மனிதர்கள் வாழ்ந்தார்களா என்று தெரியவில்லை. ஆனால் குரங்கு மனிதர்களைப் பற்றிய தகவல்களை மக்கள் கதைகளாகச் சொல்லி வந்திருக்கலாம். அதை வைத்து வால்மீகி தன் கதையை எழுதியிருக்கலாம்” என்றார் டாக்டர்.

திடீரென்று கிம் நின்றான். டாக்டரிடம், “ஒரு விசித்திரமான ஒலி கேட்கிறது!” என்றான்.

டாக்டர் உடனே அதைக் கவனித்தார். ஏதோ விலங்கு உறுமுவது போலக் கேட்டது.

“என்ன விலங்கு அது?” என்றான் பாண்டியன்.

“இங்கு விலங்குகள் ஏதும் இல்லை. பனிதான் அப்படி ஒலி எழுப்புகிறது” என்றார் டாக்டர்.

கிம் உடனே, “பனி உறுமினால் மலை நம்மை விழுங்கப் போகிறது என்று அர்த்தம். பசிக்கும்போதுதான் பனிமலை உறுமும் என்று அப்பா சொல்வார்” என்றான்.

“கிம் கூறுவது உண்மை. பாண்டியன் ஓடுங்கள். அந்தப் பாறை முனை நோக்கிப் போவோம். இந்தப் பனித்தரை பிளந்து சரியப் போகிறது” என்றார் டாக்டர்.

மூவரும ஓட ஆரம்பித்தார்கள்.

பனியின் உறுமல் ஒலி அதிகரித்தது. பயங்கரமான பிளிறும் ஒலியாக அது மாறியது.

“இந்தப் பனிமலையே உடைந்த சரியப் போகிறது” என்றார் டாக்டர்.

பாண்டியன், “டாக்டர், கயிற்றை வீசுங்கள்” என்றான்.

டாக்டர் உடனே தன் வண்டியிலிருந்து கொக்கியை ஏவும் குழாயை எடுத்தார். குண்டு போட்டார்.

“சீக்கிரம்!” என்றான் பாண்டியன்.

“பாண்டியன், நீங்கள் இதைச் சுடுங்கள். சரியாக அதோ அந்தப் பாறை முனையில் பட வேண்டும். வேறு எங்கு கொக்கி மாட்டினாலும் நாம் தப்ப முடியாது” என்றார் டாக்டர்.

பாண்டியன் குறிபார்த்து குழாயை வெடிக்க வைத்தான். அவன் துப்பாக்கியை சுடுவதில் நிபுணன். குறி தவறவில்லை. கொக்கி மாட்டிக் கொண்டது.

“பிடித்துக் கொள்ளுங்கள்” என்று பாண்டியன் கூவினான்.

அதற்குள் பனிமலை அசைய ஆரம்பித்து விட்டது. அவர்கள் நின்ற பனித்தரையும் நடுங்கியது.

டாக்டர் வண்டியைக் கயிற்றில் கட்டினார். அக்கயிற்றின் மீது தன் உடலையும் சேர்த்துக் கட்டிக்கொண்டார்.

பெரும் ஒலியுடன் பனிமலை பிளந்து சரிந்தது. செவியைக் கிழிக்கும் ஓசை எழுந்தது. ஆயிரம் அருவிகள் ஒரே சமயம் கொட்டுவது போலப் பனிப்பாளங்கள் கீழே சரிந்தன. அவை உடைந்து உடைந்து கொட்டின.

அவர்கள் மூவரும் நின்றிருந்த பனிப்பாளமும் இடிந்து சரிந்தன. அவர்கள் அந்தக் கயிற்றில் தொங்கியபடி ஆடினார்கள். காலுக்குக் கீழே மிக மிக ஆழம். அங்குதான் பனியெல்லாம் கொட்டிக் கொண்டிருந்தது.

அவர்கள் பயத்தில் கண்களை மூடிக் கொண்டார்கள். அவர்களைச் சுற்றி பனிப்பாளங்கள் கொட்டிபடியே இருந்தன.

வெகுநேரம் கழித்து அவர்கள் கண்களைத் திறந்தார்கள். அங்கு பனியே இல்லை! தவிட்டு நிறமான பாறை மட்டுமே இருந்தது. அந்த இடமே வேறு போலத் தோன்றியது. எல்லா பனியும் உடைந்து கீழே போய் விட்டிருந்தது.

“தப்பித்தோம்” என்றான் பாண்டியன்.

“ஏறுவோம்” என்றார் டாக்டர்.

மூவரும் கயிறு வழியாக ஏறி அந்த பாறையின் உச்சியை அடைந்தார்கள். வண்டியையும் இழுத்து எடுத்தார்கள்.

“நல்ல வேளை இந்தப் பாறை உறுதியாக இருந்தது. இல்லாவிட்டால் இந்நேரம் நாமும் பாதாளத்தில் விழுந்து பனிக்குள் புதைந்து கிடப்போம்” என்றான் பாண்டியன்.

“மலையின் உச்சி நுனியில் உள்ள பனி தொடர்ந்து உருகி வழிந்த படியே இருக்கும். எனவே அங்குள்ள பனிப்பாளம் கனமில்லாமல் இருக்கும். ஆகவே நமது கொக்கி நேராக உள்பாறையிலேயே இறங்கிவிட்டது. அதனால்தான் தப்பினோம்” என்றார் டாக்டர்.

“அவலாஞ்சே என்று சொல்கிறார்களே அது இதுதானா?” என்றான் பாண்டியன். அவலாஞ்சே என்ற ஆங்கிய வார்த்தைக்குப் பனிப் பெயர்வு என்று அர்த்தம்.

“ஆமாம்” என்றார் டாக்டர்.

“இது எப்படி ஏற்படுகிறது?” என்று பாண்டியன் கேட்டான்.

“குளிர் அதிகரிக்கும்போது பனிப்பாளங்களின் கனம் அதிகரிக்கிறது. உள்ளே உள்ள மென்மையான பனியால் அந்தக் கனத்தை தாங்க முடிவதில்லை. எனவே அது வெடித்து விடுகிறது” என்றார் டாக்டர்.

பிறகு அவர்கள் மலையேறி நடந்தார்கள். அங்கு இருந்த பனியெல்லாம் பிய்ந்த விழுந்திருந்தது. எனவே சேறாக இருந்தது.

டாக்டர் குனிந்து சேற்றை ஆராய்ந்தார்.

“என்ன பார்க்கிறீர்கள் டாக்டர்?” என்று பாண்டியன் கேட்டான்.

“இந்த மண்ணைப் பார்த்தீர்களா? இது வண்டல் மண்” என்றார் டாக்டர்.

“ஆமாம்” என்றார் பாண்டியன்.

“இது ஒரு நதியின் கரையாக இருந்திருக்கிறது” என்றார் டாக்டர்.

வானரங்கள் எங்கு வாழ்ந்தன?
வால்மீகி எழுதிய ராமாயணம்தான் இந்தியாவில் உள்ள கதைகளிலேயே மிகவும் பழமையானது. எனவே இது ஆதி காவியம் (முதல் கதைப்பாடல்) எனப்படுகிறது.
இதில் கிஷ்கிந்தா காண்டத்தில் குரங்கு மனிதர்களான வானரங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.
இந்தக் காண்டத்தில் 37-ஆவது சர்க்கத்தில் வானரங்கள் எங்கெல்லாம் வசித்தன என்று கூறப்பட்டுள்ளது.
தெற்கே - மகேந்திர கிரி, விந்திய மலை, வடக்கே - இமய மலை, கைலாசமலை, ஸ்வேத மலை, மந்தர மலை ஆகியவற்றில் குரங்கு மனிதர்கள் வாழ்ந்தார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
அஞ்சன நிலத்தில் (கரிய நிலத்தில்) வசிக்கும் வானரங்கள் நீல நிறமுள்ளவை. மனயோலா குகைகளில் வசிப்பவை மஞ்சள் நிறமானவை. இமயலையிலும் கைலாசத்திலும் வசிப்பவை இளம் சிவப்பு நிறமானவை. இமயமலையில் வசிக்கும் குரங்கு மனிதர்கள் மிதமிஞ்சி மது அருந்துபவர்கள். இவ்வாறு வால்மீகி ராமாயணம் குறிப்பிடுகிறது.

# அத்தியாயம் 27

இமயமலை மீது ஏரிகள் எப்படி உருவாயின என்பதை விளக்கினார் டாக்டர். “சிவாலிக் நதி என்பது போய்விட்டது அல்லவா? இமயமலை மேலே எழுந்த போது அந்த நதியின் நீர் மலை மடிப்புகளில் தேங்கியது. அப்படித்தான் இமயமலைகளின் மீது ஏராளமான ஏரிகள் உருவாயின. அவற்றில் மானச சரோவர் என்ற ஏரிதான் மிகப் பெரியது” என்றார்.

“இது சிவாலிக் நதியின் கரையா?” என்று ஆச்சரியத்துடன் கேட்டான் பாண்டியன்.

அவர்கள் சேற்றுப் பரப்பில் நடந்து சென்றார்கள். சில இடங்களில் சேறு முழங்கால் வரை அழுத்தியது. சில இடங்களில் தரையில் சேற்றின் மீது குமிழிகள் எழுந்தன.

“குமிழிகள் எழும் பகுதி மீது நடக்க வேண்டாம். அங்கு சேறு மிகவும் இளகி இருக்கலாம்” என்றார் டாக்டர்.

அதற்குள் டாக்டரின் கால்கள் சேற்றில் அழுந்த ஆரம்பித்தன. அவர் பயங்கரமாக அலறியபடி உள்ளே போனார்.

பாண்டியன் கண்ணிமைக்கும் நேரத்தில் தன்கையில் இருந்த கொக்கியை டாக்டரை நோக்கி வீசி விட்டான்.

அது டாக்டரின் சட்டை மீது மாட்டிக் கொண்டது.

டாக்டர் அதற்குள் கழுத்துவரை சேற்றல் மூழ்கி விட்டார் பாண்டியனும் கிம்மும் கயிற்றைப் பிடித்து இழுத்தார்கள்.

டாக்டர் மேலே வந்தார். “நல்ல வேளை! சில கணங்கள் தாமதித்துப் பாண்டியன் கொக்கியை வீசியிருந்தால்கூட நான் தப்பியிருக்க முடியாது” என்றார் டாக்டர்.

டாக்டரை மேலே இழுத்த போது குழியில் சேறு கலங்கியது. கீழே உள்ள சேறு மேலே வந்தது. அதில் நிறைய மீன் முட்கள் இருந்தன.

“சிவாலிக் நதியின் மீன்கள்!” என்றான் பாண்டியன்.

அங்கு ஒரு மண்டை ஓடு கிடந்தது. அது இராமபிதாகஸ் குரங்கு மனிதன் வகையைச் சார்ந்தது என்று விளக்கினார் டாக்டர். “இராமபிதாகஸ் இங்கு வாழ்ந்திருக்கிறது. ஆனால் அப்போது இந்தப் பகுதி மலையாக இருக்கவில்லை. பிறகு அந்த இனம் கூண்டோடு அழிந்திருக்கிறது” என்றார்.

மூவரும் மீண்டும் கிளம்பினார்கள். டாக்டர் தன் உடைகளை பனியை உருக்கிக் கழுவிக் கொண்டார். பிறகு பனிப்பாளத்தின் மீது நடந்து செல்ல ஆரம்பித்தார்கள். அவர்கள் அந்த மலையின மறுபகுதிக்கு வந்தார்கள். அங்கு தரை பனிப்பாளங்களால் மூடப்பட்டிருந்தது.

ஒரு இடத்தில் அமர்ந்து இரவு உணவு உண்டார்கள். அங்கேயே கூடாரம் அமைத்துத் தூங்கிவிட்டார்கள். மறுநாள் எழுந்து மீண்டும் நடந்தார்கள். சிவாலிக் நதியின் நீர் தேங்கி உறைந்த ஒரு ஏரியை அவர்கள் அடைந்தார்கள். ஏரியின் பரப்புக் கண்ணாடி மாதிரி உறைந்து காணப்பட்டது. அதன் மீது நடந்து சென்றார்கள்.

திடீரென்று கிம் ‘ஆ’ என்று அலறும் ஒலி கேட்டது. அவன் நின்றிருந்த பனித்தரை மெல்லிய கண்ணாடி உடைவது போல உடைந்தது. பாண்டியன் பாய்ந்து கிம்மைப் பிடித்தான். அதற்குள் அவனுடைய காலடியிலும் பனிப்பாளம் உடைந்தது. மடமட வென்று சத்தம் எழுந்தது. பனிப்பாளம் விரிசல் விட்டபடியே இருந்தது.

அவர்கள் மூவரும் பனிப்பாளத்தின் விரிசல்களுக்குள் விழுந்தார்கள். ஒரு பெரிய பள்ளத்தில் விழுவது போல இருந்தது. நல்ல வேளையாக அவர்கள்விழுந்த இடத்தில் மென்மையான பனிதான் இருந்தது. அதில் விழுந்ததினால் அவர்களுக்கு அடிபடவில்லை.

அவர்கள் மீது அவர்கள் நின்றிருந்த பனிப்பாளத்தின் துண்டுகள் கொட்டின. அப்பனிப்பாளங்கள் கூர்மையாக இருந்தன. அவை பட்டதனால் கிம்மின் காது சற்றுக் கிழிந்து விட்டது. ரத்தம் வழிந்தது.

மூவரும் எழுந்து நின்றார்கள். அங்கு இடுப்பு வரை புதையுமளவு மென்மையான பனி இருந்தது.

“இங்கிருந்து எப்படி வெளியேறுவது? மிக ஆழத்தில் அல்லவா விழுந்திருக்கிறோம்?” என்றான் பாண்டியன்.

“இது ஒரு குகை. பனிமலையில் இப்படிப்பட்ட பனிக்குகைகள் உண்டு” என்றார் டாக்டர்.

“நல்ல வேளையாக நமது வண்டியும் நம்முடன் விழுந்து விட்டது. நமது கொக்கி வீசும் கருவியை எடுத்து கொக்கியை வீசுவோம்’ என்றான் பாண்டியன்.

“பிரயோசனமில்லை .மேலே பாறை இல்லை. பனிப்பாளம்தான் உள்ளது. கொக்கியை வீசினால் அப்பனிப்பாளமும் உடைந்து வந்து விடும்” என்றார் டாக்டர்.

“அப்படியானால் என்ன செய்வது? குழியின் விளிம்பு மிக மிக உயரத்தில் இருக்கிறதே?” என்றான் பாண்டியன்.

“பார்ப்போம். இது வெறும் ஒரு குழியல்ல. இது ஒரு குகை. குகைக்குக் கண்டிப்பாக இன்னொரு திறப்பு இருக்கும்” என்றார் டாக்டர்.

டாக்டர் தரையைச் சுட்டிக் காட்டினார். ஒரு ஆறு பனியில் உறைந்து விட்டது போல் இருந்தது. அந்தப் பனியாறு கிழக்கு திசை நோக்கி போவது போல் காணப்பட்டது.

‘‘இதற்கு ஓர் அர்த்தம் இருக்கிறது. அங்கு ஒரு திறப்பு இருக்கிறது. அதன் வழியாக இந்த ஆறு வெளியே போகிறது” என்றான் பாண்டியன். அவனுக்கு மிகவும் உற்சாகமாக இருந்தது.

“ஆம், வாருங்கள். இந்த ஆறு போகும் திசையிலேயே போவோம்” என்றார் டாக்டர். அவர்கள் வண்டியைத் தள்ளியபடி நடந்தார்கள். ஒரு ஆறு மீது நடந்து போவது போலவே இருந்தது.

“என்ன நடந்தது என்று இப்போது புரிகிறது” என்றார் டாக்டர். “இது மண்ணுக்கு அடியில் உள்ள பெரிய குகை. மண்ணின் ஆழத்தில் இருந்து லாவா பொங்கி வந்து உறைவதனால் பாறைகள் உருவாகின்றன. லாவாவில் பல வகையான பொருட்கள் உண்டு. மென்மையான பொருள்கள் காலப் போக்கில் கரைந்து போகின்றன. அவை இருந்த இடம் பெரிய குகை போல ஆகிவிடுகிறது. இதை ‘பிலிம்’ என்று சொல்வார்கள்” என விளக்கினார் டாக்டர்.

“இந்த ஆறு எப்படி வந்தது?” என்றான் பாண்டியன்.

“நாம் நின்றிருந்தோமே அந்தப் பகுதி ஒரு பெரிய ஏரி. ஏரியின் அடியில் இந்தப் பிலிம் உருவாகியது. உடனே நீர் இதன் வழியாக ஓடி வேறெங்கோ போக ஆரம்பித்து விடுகிறது. அதுதான் இந்த ஆறு” என்றார் டாக்டர்.

அப்போது ‘உய்ய்…உய்ய்’ என்ற ஒலி கேட்டது. யாரோ மிகமிகப் பலமாக விசில் அடிப்பது போலக் கேட்டது அது.

“அது என்ன ஒலி?” என்றான் பாண்டியன்.

“இந்தப் பிலிம் வளைந்து செல்கிறது. இதன் வழியாகக் காற்று வீசும் போது இவ்வாறு ஒலி கேட்கிறது” என்றார் டாக்டர்.

அவர்கள் பிலிம்குகைக்குள் நடந்தார்கள். அக்குகை மிகப் பெரியதாக இருந்தது. தரையில் உறைந்த பனியாறு வெண்ணிறமாக இருந்தது. மற்றபடி ஒரே இருட்டுதான் தெரிந்தது.

“இங்கு வேறு யாரோ பேசும் ஒலி கேட்கிறதே” என்றான் பாண்டியன்.

அவர்கள் கூர்ந்து கேட்டார்கள். யாரோ பேசுவது போலக் கேட்டது.

“யாரும் பேசவில்லை. அது தொலைவில் பனத்துளிகள் உருகிச் சொட்டும் ஒலி தான்” என்றார் டாக்டர்.

பிறகு அந்த ஒலி மழை பொழிவது போலக் கேட்க ஆரம்பித்தது.

சற்று நேரம் கழிந்ததும் பனித்துளிகள் விழும் ஒலி தபலா இசை மாதிரி கேட்டது. காற்றின் ஒலி புல்லாங்குழல் போல மாறியது.

“ராட்சதர்களின் இசை நிகழ்ச்சி இப்படித்தான் இருக்கும்” என்றான் பாண்டியன்.

குகை மேலும் இருட்டாக மாறியது. “இருட்டு அதிகமாகி விட்டது விளக்கை எடுங்கள்.” என்றார் டாக்டர்.

கிம் விளக்கை எடுத்தான். விளக்கை அடித்ததும் குகையில் ஒளி பரவியது.

அப்போது ஓர் அற்புதக் காட்சி தெரிய ஆரம்பித்தது.

பிரம்மாவின் மனம்

இமயமலையின் உச்சியில் இருக்கும் ஓர் ஏரிக்கு மான சரோவர் என்று பெயர். தமிழில் இதை ‘மனத் தடாகம்’என்று மொழிபெயர்க்கலாம். இது மிக மிக சுத்தமான நீராலானது. எனவே இதை பிரம்மாவின் மனம் என்று புராணம் குறிப்பிடுகிறது.

மகாபாரதத்தில் பல இடங்களில் இந்த ஏரி பற்றிக் குறிப்பிடப்படுகிறது. பரசுராமன், வசிஷ்டர் முதலியவர்கள் இங்கு தவம் செய்ததாக அதில் கூறப்பட்டுள்ளது. அர்ச்சுனன் இங்கு சென்றதாகவும் கூறப்படுகிறது.

மானசரோவருக்குப் புனித யாத்திரை செல்வது மிகவும் சிரமம். விசேஷ அனுமதி பெற்று நெடுந்தூரம் மலையேறி இங்கு சென்று சேர வேண்டும். ஆயினும் ஆண்டு தோறும் பலர் இங்கு செல்கிறார்கள். இந்த ஏரியில் நீராடுவது பாவங்களை அகற்றும் என்பது நம்பிக்கை.

# அத்தியாயம் 28

டாக்டரின் மின் விளக்கில் இருந்து வந்த ஒளி குகைக்குள் பரவியது. பனிப்பாளங்கள் கண்ணாடித் தகடுகள் மாதிரி அந்த ஒளியை எதிரொளித்தன. ஒளி பரவிப் பரவி எங்கும் நிறைந்தது.

அந்தக் குகையின் மேற்பகுதியைப் பார்த்த பாண்டியன் வியந்து நின்று விட்டான்.

கூரையில் இருந்து வெண்ணிறமான விழுதுகள் போல பனிதொங்கி நின்றது. கண்ணாடியாலான அலங்காரம் போல அது காணப்பட்டது. சில பனி விழுதுகள் பெரிய வாள்களைத் தொங்கவிட்டது போல இருந்தன. சில பனி விழுதுகள் பெரிய தூண்களை போல இருந்தன. அவையெல்லாம் ஒளிபட்டு தகதகவென ஜொலித்தன.

அந்தப் பனிவிழுதுகளில் இளநீல நிறம் உடையவை காணப்பட்டன. சிவப்புநிற, மஞ்சள் நிற விழுதுகளும் இருந்தன.

கண்ணாடியில் அலங்காரம் செய்யும் நிபுணர்கள் செய்த அலங்காரக் கூரை போல் இருந்தது அது.

“எத்தனை அழகு! இதைப் பார்த்துக் கொண்டு இங்கேயே இருந்து விடலாம் போல இருக்கிறது! இதைப் போன்ற ஒரு கூரையை மனிதனால் அமைத்து விட முடியுமா? அதற்கு எத்தனை ஆயிரம் பேர் எத்தனை ஆண்டு உழைக்க வேண்டியிருக்கும்!” என்றான் பாண்டியன்.

“இயற்கையில் கண்ணுக்குத் தெரியாத சிற்பிகள் கோடி கோடியாக உள்ளனர். அவர்களின் திறமையுடன் ஒப்பிட்டால் மனித சிற்பிகள் வெறும் தூசு” என்றார் டாக்டர்.

மண்ணில் இருந்து ஊறி வரும் நீர், குளிரில் உறைந்து அந்தப் பனி விழுதுதான் உருவாயின என்று பாண்டியனுக்குப் புரிந்தது. ஆனால் அந்த பலவிதமான நிறங்கள் எப்படி வந்தன? அதை டாக்டரிடம் கேட்டான்.

“இமயமலைப்பகுதி மண் இறுகாத சேறு போன்றது. எனவே இங்கு ஊறும் நீர் கலங்கித்தான் இருக்கும். மண்ணின் தாதுக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறம். இரும்புத்தாது கலந்த மண்ணில் இருந்து செந்நிறம் ஏற்படுகிறது”- டாக்டர் விளக்கினார்.

அந்த அற்புதமான குகை வழியாக அவர்கள் நடந்தார்கள். அது கனவுபோல இருந்தது. அவர்கள் பிரமித்துப் போயிருந்தார்கள். அந்தக் குகைக்குள் அமைதி நிரம்பியிருந்தது. ஆழமான ஞானம் உடையவர்களின் உள்ளமும் அதைப் போன்றதுதான். அங்கு அற்புதங்கள் நிரம்பியிருக்கும். அந்த அற்புதங்கள் மௌனத்தில் மறைந்திருக்கும். அவை அவற்றைத் தேடிச் செல்பவர்களுக்கு மட்டுமே காணக்கிடைக்கக்கூடியவை. அவர்களிடம் உள்ள கைவிளக்கால் மட்டுமே அந்த அற்புதமான பேரழகைக் காண முடியும். அங்கு ஆர்வமும் பணிவுமே நமக்கு கைவிளக்காக இருக்க முடியும்.

அந்தக் குகை மெல்லச் சிறிதாகியது. அதன் மறுநுனியில் ஒளி தெரிய ஆரம்பித்தது.

வெளியே வந்ததும் பாண்டியன் முதலில் மலையுச்சிகளைத்தான் பார்த்தான். தன் மனமும் அம்மலைகள் போல உயர்ந்து விட்டது என்று அவனுக்குப்பட்டது.

மன்னும் இமய மலை எங்கள் மலையே

மாநில மீதினில் இது போல் பிறிதிலையே!

என்று பாண்டியன் பாடினான்.

“என்ன பாட்டு அது?” என்றார் டாக்டர்.

“இதுவும் பாரதியார் பாடல்தான்” என்றான் பாண்டியன்.

பனியில் அவர்கள் நடந்தார்கள். பாண்டியன் மனம் உற்சாகமாக இருந்தது.

“பனியுகத்தில் இந்தப் பகுதியில் பெரிய ஆறு ஒன்று ஓடியிருக்கிறது. அநேகமாக அது சிவாலிக் நதியின் கிளையாக இருக்கலாம்” என்றார் டாக்டர்.

“பனியுகமா?” என்றான் பாண்டியன்.

“ஆமாம். நிலவியல் அறிஞர்கள் இதுவரை பூமியில் பல முறை பனியுகம் வந்திருக்கிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்” என்றார் டாக்டர்.

“பனியுகத்தில் என்ன நடக்கும்?” என்றான் பாண்டியன்.

“இப்போது கனமான பனிப்பாளங்கள் துருவப்பகுதியில்தான் உள்ளன. இவ்வாறு பனி மூடியிருக்கும் பகுதி வெறும் பத்து சதவீதம்தான். ஏதாவது காரணத்தால் பூமியின் வெப்பநிலை குறைந்தால் அந்தப் பனிப்பரப்பு அதிகமாகும். முப்பது சதவீதம் நிலப்பரப்பு வரை அப்போது உறைபனியால் மூடப்படும். அதற்குத்தான் பனியுகம் என்று பெயர்”- டாக்டர் விளக்கினார்.

“பூமியின் வெப்பநிலை எப்படி குறைகிறது?” பாண்டியன் கேட்பதை நிறுத்தவில்லை.

“சூரிய ஒளியால்தான் பூமியன் மேற்பரப்பு சூடாக இருக்கிறது. சூரிய ஒளி குறைந்தால் வெப்ப நிலையும் குறையும். சூரிய ஒளி குறைய பல காரணங்கள் இருக்கலாம். முன்பு ஒரு முறை பெரிய வால் நட்சத்திரம் ஒன்று வானத்தில் உடைந்தது. அது தூள்தூளாக சிதறியது. அந்தத் தூளில் வானத்தில் பெரிய திரை மாதிரி பரவியது. எனவே பூமியில் போதிய அளவு வெயில் படவில்லை. அப்போது ஒரு நாளில் சில மணி நேரம் மட்டும்தான் லேசான வெயில் இருக்கும். அதனால்தான் அப்போது பனியுகம் ஏற்பட்டது” என்றார் டாக்டர்.

“கடைசியாகப் பனியுகம் எப்போது வந்தது?”

“பதினைந்தாயிரம் ஆண்டு முன்பு. அப்போது பூமியில் இருந்த பல உயிரினங்கள் குளிரில் அழிந்தன. குளிருக்கு ஏற்ப தங்கள் உடலை மாற்றிக் கொண்டவை மட்டும் உயிர் பிழைத்தன. இந்தப் பனிமனிதன்கூட அவ்வாறு ஏதோ ஒரு பனியுகத்தில் உருவானவன்தான் என்று தோன்றுகிறது” டாக்டர் கூறினார்.

“எப்படி?” என்றான் பாண்டியன்.

“பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பனியுகம் வந்தபோது இராமபிதாகஸ் குரங்கு மனிதர்கள் குளிர்தாங்காமல் அழிந்திருக்கலாம். சில குரங்கு மனிதர்கள் தீயின் உபயோகத்தைக் கண்டுபிடித்திருக்கலாம். அவர்கள் மட்டும் தப்பிப் பிழைத்திருக்கிறார்கள். படிப்படியாக அவர்கள் மனிதர்களாக மாறினார்கள். வேறு சில இராமபிதாகஸ்கள் இங்கு பனிமலைக்கு மேலே படிப்படியாக எப்படியோ தப்பிப் பிழைத்திருக்கிறார்கள்...” என்றார் டாக்டர்.

“அதாவது இந்தியாவில் உள்ள மனிதர்கள் எல்லோருமே இராமபிதாகஸ் குரங்கின் வம்சம்தான். நாம் ஒரு கிளை. பனிமனிதன் வேறு ஒரு கிளை இல்லையா?” பாண்டியன் கேட்டான்.

“ஆமாம். பனிமலை மீது இருந்த இராமபிதாகஸ்கள் கடும் குளிருக்கு ஏற்பத் தங்களை மாற்றிக்

கொண்டன. கடும் குளிரில் வாழ்வதற்காக அவை பெரிய விலங்குளாக மாறின. அவற்றின் உடம்பு முழுக்க முடி முளைத்தது. அவை படிப்படியாக பனிமனிதனாக மாறின”- டாக்டர் விளக்கினார்.

“அவை அங்கு எப்படி தப்பிப் பிழைத்தன?”

“அதுதான் மர்மமாக இருக்கிறது. அவை தங்குமிடத்தில் குளிரில் இருந்து தப்ப ஏதாவது வசதி இருக்கவேண்டும்.”

“என்ன வசதி?” என்றான் பாண்டியன்.

“அது அங்கு போய் பார்த்தால்தான் தெரியும்”-டாக்டர் கூறினார்.

மறுநாள் அவர்கள் ஒரு மலை விளம்பை அடைந்தார்கள். அங்கு நின்று பார்த்தபோது ஒரு விசித்திரமான காட்சி தெரிந்தது.

அது நெருப்பாலான ஒரு நதி!

முகத்தில் ஒரு ஆன்டெனா!
மிருகங்களில் உள்ள ஒரு முக்கியமான உறுப்பு மனிதனுக்கு இல்லை. அது என்ன?
மிருகங்களின் மூக்குக்குக் கீழே நீண்ட மயிர்கள் சில உண்டு. இவை உணர்மயிர்கள். இவை மிருகங்களின் முகத்தைப் பாதுகாக்கின்றன. மிக மெல்லியவை. முகத்தில் ஒரு சிறு பூச்சி வந்து அமரப்போனால்கூட இவற்றில் பட்டுவிடும். உடனே மிருகத்துக்கு அது தெரிந்து விடும். மனிதனுக்கு மட்டும் இவை ஏன் இல்லை? மனித முகத்தில் மிருகங்களின் முகம் போல மயிர் அடர்ந்து இருக்கவில்லை. மனிதர்களின் முகத்தின் சருமம் மிகமிக மென்மையானது. அதில் ஒரு தூசி பட்டால்கூட நமக்குத் தெரிந்து விடும்.
ஆகவே உணர்மயிரின் அவசியம் நமக்கு இல்லை. எனவே படிப்படியாக அது இல்லாமல் ஆயிற்று.

# அத்தியாயம் 29

தொடுவானம் வரை பனிப்பரப்பு விரிந்த கிடந்தது. அதில் தீயாலான ஆறு ஓடி வந்தது.

டாக்டர் “விசித்திரமான ஆறு’ என்றார்.

உடனே பாண்டியனுக்கு ஞாபகம் வந்தது. “டாக்டர் இது அந்த பிட்சு கூறியதுதான். இது நெருப்பாலான ஆறு” என்றான்.

“யதிக்கள் வாழும் தர்மஸ்தலத்தைச் சுற்றி புத்தர் கட்டிய நெருப்பு வேலி உள்ளது என்று அந்தப் பிட்சு கூறினாரே” என்றான் கிம்.

“அது லாவா என்று நினைக்கிறேன். பூமி வெடித்து லாவா உருகிக் கொதிப்பதுதான் நெருப்பாலான ஆறாகத் தெரிகிறது’ என்றான் பாண்டியன்.

டாக்டர் அந்தப் பகுதியின் வரைபடத்தை எடுத்து கூர்ந்து பார்த்தார். அவர் முகம் வியப்பைக் காட்டியது.

“என்ன டாக்டர்?” என்றான் பாண்டியன்.

“இந்த நெருப்பாலான ஆறு உண்மையில் இந்திய நிலப்பகுதிக்கும் லாரேஷியா கண்டத்துக்கும் நடுவே உள்ள இடைவெளி” என்றார் டாக்டர். வரைபடத்தைக் காட்டினார். அதில் அந்த எல்லை அடையாளப்படுத்தப்பட்டிருந்தது.

“ஆச்சரிம் தான்” என்றான் பாண்டியன்.

“இரு பெரும் நிலப்பகுதிகளும் முட்டிக்கொண்ட இடம் இது. ஒரு பெரிய நிலப்பிளவு” என்றார் டாக்டர்.

அவர்கள் கயிறு கட்டி செங்குத்தான பாறையில் இறங்கினார்கள். அந்த நெருப்பாறு நோக்கி நடந்தார்கள்.

“இந்த நெருப்பாற்றில் நாம் நடக்கலாம்” என்றார் டாக்டர்.

“எப்படி?” என்றான் பாண்டியன்.

“அங்கே பாருங்கள். அந்த நெருப்பாற்றின் கரையில் பனி உருகவேயில்லை” - டாக்டர் சுட்டிக் காட்டினார்.

அவர்கள் அந்த நதியை நெருங்கினார்கள். அந்த நதி ஒரு பெரிய தீக்குண்டம் போல சிவப்பாக ஒளிவிட்டது.

ஆனால் அதை நெருங்க நெருங்க அதற்கு வெப்பமே இல்லை என்பது தெரிந்தது.

டாக்டர் குனிந்து பார்த்தார். “ஆச்சரியம்!” என்றார்.

“என்ன?” என்றான் பாண்டியன்.

“இது செவ்வைரம்!” டாக்டர் சொன்னார்.

“வைரமா?” பாண்டியன் கூவிவிட்டான்.

“உண்மை. இது வைரக்கற் படுகை” என்றார் டாக்டர்.

பாண்டியன் கதிகலங்கி விட்டான். மலைமலையாக வைரம்!

“இந்த வைரம் எப்படி உருவாயிற்று டாக்டர்?” என்றான் பாண்டியன்.

“இப்பகுதியில் அடர்ந்த காடு இருந்திருக்கிறது. அதன்மீது இந்திய நிலப்பகுதி வந்து மோதியது. படிப்படியாக இறுகியது. பல நூறு கிலோ மீட்டர் அகலம் உள்ள காடு நெருங்கி இறுகி சிறிய ஆறு அளவுக்கு ஆயிற்று. பூமிக்கு அடியில் உள்ள வெப்பமும் அழுத்தமும் தானே கரியை வைரமாக மாற்றுகின்றன. இந்தக் காடு இந்தப் பிளவில் சிக்கிக் கரியாகியது. இரண்டு பெரிய நிலப்பகுதிகளின் அழுத்தத்தில் படிப்படியாக அது வைரமாக ஆயிற்று” என்றார் டாக்டர்.

பாண்டியன் கண்களைத் திருப்பித் திருப்பிப் பார்த்தான். வைரப்பரப்பு அப்படியே விரிந்து கிடந்தது. சிவப்பு நிறமான ஒளி தகதகவென்று எழுந்தது.

“எவ்வளவு வைரம்! மலை மலையாக வைரம்!” என்றான் பாண்டியன்.‘

“இவ்வளவு வைரம் இருப்பது உலகத்துக்குத் தெரிந்தால் அவ்வளவுதான்” என்றார் டாக்டர்.

“உலகில் உள்ள எல்லோருமே பணக்காரர்கள் ஆகிவிடுவார்கள் இல்லையா?” என்றான் பாண்டியன்.

“அதுதான் இல்லை. வைரம் மண்ணுக்கு அடியில் கிடக்கிறது. மிகமிக ஆழமாகத் தோண்டினால்தான் கிடைக்கும். அதுவும் மிகவும் குறைவாகவே கிடைக்கும். அபூர்வமாக மட்டும் கிடைப்பதனால்தான் அதற்கு அதிகமான விலை உள்ளது. மலைமலையாக வைரம் கிடைத்தால் பிறகு அதற்கு மதிப்பே இருக்காது. நாம் வீடு கட்டுவதற்குக் கூட வைரத்தையே பயன்படுத்த ஆரம்பித்து விடுவோம்” என்றார் டாக்டர்.

“இங்கிருந்து சிறிது சிறிதாக வைரத்தை எடுத்துச் சென்று விட்டால் பெரும் கோடீஸ்வரர் ஆகிவிடலாம்” என்றான் பாண்டியன்.

“அத்தகைய ஆசையை அடக்கிக் கொண்டால்தான் நாம் பனிமனிதனைக் காண முடியும்” என்றார் டாக்டர்.

அவர்கள் மூவரும் வைரத்தின் மீது ஏறினார்கள்.

பண்டிகையில் தீ மிதிப்பது போல அது பாண்டியனுக்குத் தென்பட்டது.

அந்த சிவந்த ஒளியில் தன் உடம்பே தீப்பற்றி எரிவது போல தெரிந்தது பாண்டியனுக்கு.

தீயும் வைரமும் ஒன்றுதான் என்று பாண்டியன் நினைத்தான்.

தீ என்று எதுவும் இல்லை. ஒவ்வொரு பொருளுக்கு உள்ளேயும் ஒளியும் வெப்பமும் இருக்கிறது. அவை வெளிவரும் போதுதான் தீ உருவாகிறது.

விறகில் இருந்து தீ வெளிவருகிறது. எண்ணெயிலிருந்து தீ வெளிவருகிறது.

கற்களை உரசினால் தீ வெளிவருகிறது. காய்ச்சிய உலோகங்கள் தீயாக மாறிவிடுகின்றன.

சூரியனில் தீ உள்ளது. நட்சத்திரங்களில் தீ உள்ளது. மண்ணுக்கடியில் கூட தீ கொதித்தபடி உள்ளது.

எங்கும் தீதான் நிரம்பியுள்ளது. தீயே ஒளி! தீயே சக்தி!

எனவேதான் நம் மூதாதையார் தீயை வழிபட்டார்கள். தீயை கடவுள் என்றார்கள்.

மனிதனுக்குள் தீ இல்லையா? மனிதனின் எண்ணங்களில் தீ இல்லையா?

என்னுள் இருந்து தீ பொங்கி எழ வேண்டும். என் உடல் ஒளியாக மாற வேண்டும். என்

நினைப்புகள் எல்லாம் சுடராக மாற வேண்டும்!

பாண்டியன் தன் உடலும் மனமும் தீயாக மாறி எரிவதுபோல எண்ணினான்.

தீயில் எல்லாவிதமான குப்பைகளும் எரிந்து சாம்பலாகி விடுகின்றன. அதேபோல தன் மனத்தில் உள்ள தீய எண்ணங்கள் எல்லாமே எரிந்து சாம்பலாகிவிட்டன என்று பாண்டியன் நினைத்தான்.

மூவரும் மறுபக்கம் சென்று சேர்ந்தனர். அப்போது தன் மனமும் உடம்பும் பரிசுத்தமாக ஆகிவிட்டன என்று பாண்டியனுக்குத் தோன்றியது.

"டாக்டர் அந்தப் பிட்சுக்கள் கூறியது எல்லாம் சரியாகி வருகின்றன. அவர்கள் கடல் மீது நடக்க வேண்டும் என்றார்கள். பிறகு நெருப்பில் நீந்த வேண்டும் என்றார்கள். இரண்டுமே உண்மையில் நடந்து விட்டன பார்த்தீர்களா?" என்றான் பாண்டியன்.

"அப்படியானால் அந்தப் பிட்சுக்கள் சொன்ன மீதி விபரங்களும் சரியாகவே இருக்கும். அவர்களில் பலர் இங்கு வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இந்தப் பகுதியைப் பற்றி அவர்கள் நன்றாக அறிந்திருக்கிறார்கள்!" என்றார் டாக்டர்.

அவர்கள் பனிப்பாறைகள் வழியாக ஏறினார்கள். பிறகு அப்பனிப்பாறை கீழே இறங்கியது. சற்றுக் கழிந்து அது மேலே ஏறியது. கடைசியாக அவர்கள் ஒரு பெரிய மலையின் விளிம்பைச் சென்றடைந்தார்கள்.

அங்கு தெரிந்த காட்சி மிக மிக அற்புதமானதாக இருந்தது.

நான்கு பக்கமும் வெண்பனிபடர்ந்த மிகப் பெரிய மலைகள் இருந்தன. அவை நல்ல வட்டவடிவில் காணப்பட்டன. அவற்றின் நடுவே உள்ள பள்ளத்தாக்கில் ஒரு அடர்ந்த காடு இருந்தது. அங்கு பறவைகள் எழுப்பும் ஒலி கேட்டது.

"காடு! எப்படி இங்கு காடு வந்தது? இமயமலை உச்சியின் கடும் குளிர்ப் பகுதிகளில் காடு வளர்வதா? நம்பவே முடியவில்லை" என்றான் பாண்டியன்.

"எல்லாவற்றுக்கும் காரணம் இருக்கும்" என்றார் டாக்டர். தன் தொலைநோக்கியால் அந்த மலைகளைக் கூர்ந்து பார்த்தார்.

"டாக்டர் ஒரு விஷயம் கவனித்தீர்களா? இந்த மலைகளுக்கு நடுவே மட்டும் நல்ல வெயில் அடிக்கிறது" என்றான் பாண்டியன்.

டாக்டர் புன்னகையுடன், "ஆம் கவனித்தேன். அப்படி வெயில் அடிப்பதனால்தான் அங்கு காடுகள் வளர்ந்துள்ளன" என்றார்.

"எப்படி அங்கு மட்டும் அத்தகைய வெயில் அடிக்க முடியும்?" என்றான் பாண்டியன்.

"இந்த மலைகளைக் கூர்ந்து பாருங்கள்" என்றார் டாக்டர்.

பாண்டியன் தன் தொலைநோககியால் மலைகளைக் கூர்ந்து பார்த்தான்.

"என்ன தெரிகிறது?" என்றார் டாக்டர்.

"இந்த மலைகளில் ஒரு வித்தியாசம் இருக்கிறது" என்றான் பாண்டியன்.

"என்ன வித்தியாசம்?" டாக்டர் கேட்டார்.

"இந்த மலைகளின் சரிவுகள் குழிவாக இருக்கின்றன. ஒரு பெரிய கிண்ணத்தின் உட்பக்கம்போல இவை உள்ளன"என்றான் பாண்டியன்.

"ஆமாம். அந்தக் குழிந்த மலைச்சரிவில் வெண்பனி மூடியிருக்கிறது. ஆகவே மலைச்சரிவுகள் பிரம்மாண்டமான குழியாடிகள் போல ஆகிவிட்டன" என்றார் டாக்டர்.

“புரிகிறது டாக்டர். அந்தக் குழியாடிகளில் படும் சூரிய ஒளியெல்லாம் குவிந்து இந்தப் பள்ளத்தாக்கில் விழுகிறது. எனவே தான் இங்கு வெயில் அதிகமாக அடிக்கிறது!” என்றான் பாண்டியன்.

“இமயமலையின் உச்சியில் ஒரு வெப்பமண்டலக்காடு உருவாகியிருக்கிறது. இயற்கையின் விளையாட்டுதான் இது!” என்றார் டாக்டர்.

பவளம் எவ்வாறு மதிப்பு இழந்தது?
நவமணிகள் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அதில் ஒன்று வைரம். இன்னொன்று பவளம். பவளம் பண்டைக்காலத்தில் கடற்கரை மணலில் மிக அபூர்வமாகக் கிடைக்கும். சிவப்பாகவோ மஞ்சளாவோ இருக்கும். அதை நகைகளில் பதித்து அணிவார்கள். வைரம் போலவே அதுவும் மிக விலைமதிப்புள்ள ஒன்றாக இருந்தது.
பிற்பாடு விஞ்ஞானம் வளர்ந்தது. கடலுக்கு அடியில் மூழ்கி ஆராய்ச்சி செய்யும் வசதிகள் வந்தன. அப்போதுதான் பவளம் என்றால் என்ன என்று தெரிந்தது. பவளம் உண்மையில் ஒரு பூச்சியின் ஓடு. அந்தப் பூச்சிகள் கோடி கோடியாகக் கடலில் வாழ்கின்றன.
பழங்காலத்தில் பனியுகம் ஒன்று வந்தது. எனவே கடல் குளிர்ந்து போனது. உடனே பவளப் பூச்சிகள் கூட்டம் கூட்டமாக வெப்பமான பகுதி நோக்கி நகர்ந்தன. பூமத்திய ரேகையை ஒட்டிய பகுதிகள்தானே வெயில் அதிகம் உள்ள இடங்கள்? அவை அப்பகுதிகளுக்கு வந்தன. அங்கு மலை மலையாக கடலுக்கு அடியில் குவிந்தன. அது பிற்பாடு பெரிய பாறைகளாக ஆயிற்று.
அந்தப் பாறைகளுக்கு பவளப் பாறைகள் என்று பெயர். பிறகு அந்தப் பாறைகளின் மீது மண் படிந்தது. அதன் மீது தாவரங்கள் முளைத்தன. அவை தீவுகளாக ஆயின. அவற்றில் மக்கள் வாழ ஆரம்பித்தார்கள்.
இந்தியாவுக்குத் தெற்கே அப்படி பல பவளப்பாறைத் தீவுகள் உள்ளன. மாலத்தீவுகள் அவற்றில் முக்கியமானவை.
இன்று பவளத்துக்கு விலையே இல்லை. வெறும் கூழாங்கல் போல ஆகிவிட்டது. காரணம் ஏராளமாக அது கிடைப்பதுதான்.

# அத்தியாயம் 30

“டாக்டர் நாம் சீக்கிரம் அங்கு போகலாம். மிகவும் துடிப்பாக இருக்கிறது” என்றான் பாண்டியன்.

“இருங்கள்! அது நாம் நினைப்பதை விடவும் பெரிய காடு” என்றார் டாக்டர்.

அவர்கள் மலையின் விளிம்பை அடைந்து இறங்க வழி உண்டா என்று பார்த்தார்கள்.

“இந்த இடம் எப்படி உருவாயிற்று என்று இப்போது தெரிகிறது” என்றார் டாக்டர்.

“எப்படி?”

“இது ஒரு பெரிய எரிமலையின் வாய்.”

“எரிமலையா?”

“ஆமாம். இது ஆறிப்போன ஒரு புராதனமான எரிமலை. பல கோடி வருடங்களுக்கு முன்பு பூமி மீது இதைப்போல பல்லாயிரம் எரிமலைகள் இருந்தன. அவற்றிலிருந்து பீறிட்டு வந்த லாவாக்குழம்பு உறைந்துதான் இன்று நாம் காணும் பல மலைகள் உருவாயின” என்றார் டாக்டர்.

“இது எரிமலையின் வாய் என்று எப்படித் தெரியும்?” பாண்டியன் கேட்டான்.

“இந்த மலைகளைப் பாருங்கள். இவை நல்ல வட்ட வடிவில் உள்ளன. இவற்றின் உட்பக்கம் குழிவாக உள்ளது. வெளிப்பக்கம் கரடு முரடாக உள்ளது” என்றார் டாக்டர்.

“ஆமாம் டாக்டர். எரியும் மெழுகுவர்த்தியின் மேலே ஏற்படும் குழி போல உள்ளது இது. மெழுகு உருகி வழிந்தது போல இந்த மலைகள் உள்ளன.”

அவர்கள் எப்படி இறங்குவது என்று யோசித்தார்கள். மலையின் உட்பக்கச் சரிவு உள்வளைவாக இருந்தது. எனவே இறங்கவே முடியவில்லை.

“வாருங்கள் நடந்து பார்ப்போம். ஏதாவது வழி தெரியும்” என்றார் டாக்டர். ஒரு இடத்தில் மலையின் உச்சியிலிருந்து பனி அலையலையாக இறங்கிச் சென்றது. ஒவ்வொரு அலையும் ஒரு படி போல இருந்தது.

“மலையுச்சியில் உள்ள பனி உருகி வழிந்து பிறகு மீண்டும் பனியாக மாறியிருக்கிறது. அவ்வாறு உருவானதுதான் இந்தபனிச் சரிவு” என்றார் டாக்டர்.

அவர்கள் அதன் வழியாக இறங்கினார்கள். மிகவும் எளிதாக இருந்தது அது.

ஒரு இடத்தில் பனிக்கட்டி மென்மையாக ஆகத் தொடங்கியது. பிறகு பனி ஐஸ்கிரீம் போல ஆயிற்று.

“இனிமேல் நாம் இறங்க முடியாது. பனியில் புதைந்து விடுவோம்” என்றான் பாண்டியன்.

“வாருங்கள். பனி மீது இனி நிற்பது ஆபத்து” என்றார் டாக்டர்.

அதற்குள் அவர்கள் நின்ற பனிப்பரப்பு பிய்ந்துவிட்டது. அவர்கள் அலறினார்கள். பிய்ந்த

பனிப்பரப்பு கீழ் நோக்கி சரிந்தது. அவர்கள் வேகமாகக் கீழே விழத் தொடங்கினார்கள்.

அந்தப் பனிச்சரிவு ஒரு பெரிய நதியாக மாறியது. பாறைகளில் மோதியபடி அந்த நதி மலையிறங்கியது.

அந்த நதி ஒரு பெரிய நீர்வீழ்ச்சி போல மலையிலிருந்து இறங்கியது.

அந்த நதி அவர்களைப் புரட்டி எடுத்துச் சென்றது. அவர்களுடைய வண்டியையும் நீர் அடித்துச் சென்றது.

அந்தப் பெரிய அருவி ஒரு இடத்தில் செங்குத்தான பாறையின் மீதிருந்து கொட்டியது. அந்த ஒலி மிகப் பயங்கரமாக இருந்தது. தண்ணீர்த் துளிகள் புகை போல எழுந்தன.

அங்கு போய் விழுந்தால் மரணம் நிச்சயம் என்று பாண்டியனுக்குப் புரிந்தது. மிக உயரத்திலிருந்து நீர் விழும் இடம் ஆபத்தானது. அங்கு விழுபவை எல்லாம் விழுந்த வேகத்தில் மிக ஆழத்துக்குப் போய்விடும். மேலே மேலே நீர் வந்து விழுவதால் நீந்தி மேலே வர முடியாது. வெகுதூரம் தள்ளித்தான் மேலே வர முடியும். அதற்குள் மூச்சுத் திணறி உயிர் பிரிந்திருக்கும்.

பாண்டியன் சட்டென்று ஒரு பாறையை எட்டிப் பிடித்தான்.

மற்ற பாறைகள் எல்லாம் நீரில் பட்டு பட்டு உருண்டையாகவும் வழவழப்பாகவும் இருந்தன. அவற்றை எட்டிப் பிடிக்க முடியாது. ஆனால் அந்தப் பாறை மட்டும் பிளந்து இருந்தது. நீரில் புரண்டு வந்து வேறு பாறை மோதியதனால் அது பிளந்திருக்கலாம்.

அந்த உடைந்த பாறையின் நுனி மிகவும் கூர்மையாக இருந்தது. அது கையை அறுத்தது. பாண்டியனுக்கு மிகவும் வலித்தது. ஆனாலும் அவன் பிடியை விடவில்லை.

டாக்டர் பாண்டியனின் காலைப் பிடித்துக் கொண்டார். கிம் டாக்டரின் காலைப் பிடித்தான்.

மூவரும் சேர்ந்து மிகவும் கனமாக இருந்தார்கள். அந்தக் கனம் பாண்டியனின் கையை இழுத்தது. கை அறுந்து துண்டாகிவிடும் என்று தோன்றியது. இருந்தாலும் அவன் பிடியை விடவில்லை.

கிம் டாக்டரின் உடம்பு வழியாகப் பற்றி ஏறினான். மரத்தில் ஓணான் ஏறுவது போல ஏறி பாறையை அடைந்தான்.

டாக்டரும் பாண்டியன் உடல் வழியாக ஏறி பாறையை அடைந்தார்.



கடைசியாக இருவரும் சேர்ந்து பாண்டியனை இழுத்தார்கள். அவனும் ஏறினான்.

அவன் கையிலிருந்து ரத்தம் கொட்டியது. கையை அரிவாளால் வெட்டியதுபோல இருந்தது.

“மிகப் பெரிய காயம்தான். ஆனால் குளிர்ந்த நீர் பட்டதனால் ரத்தக் குழாய்கள் சுருங்கி உள்ளன. ரத்தம் அதிகமாகக் கொட்டாது” என்றார் டாக்டர்.

அங்கிருந்து பார்த்தபோது மலையின் எல்லாப் பக்கத்திலிருந்தும் ஏராளமான அருவிகள்

விழுவது தெரிந்தது. கொடியில் காயப்போடப்பட்ட வெண்மையான துண்டுகள் போல அருவிகள் காணப்பட்டன. மலையிலிருந்து அவை தொங்கி ஆடின.

“இந்தப் பள்ளத்தாக்கு வெப்பமானது. எனவேதான் மலை உச்சியிலிருந்த பனி உருகிக் கொட்டுகிறது” என்றார் டாக்டர்.

“குளிர் குறைந்திருக்கிறது” என்றான் பாண்டியன்.

“இனி மேல் பனிப்பாளங்கள் இல்லை. பாறைகள் வழியாக நாம் இறங்கிவிடலாம்” என்றார் டாக்டர்.

அவர்கள் இறங்க ஆரம்பித்தார்கள். பாறைகள் ஈரமாகிப் பாசி படர்ந்து இருந்தன. கையும் காலும் மிவும் வழுக்கியது. கீழே மிக ஆழத்தில் மரங்களின் உச்சி தெரிந்தது.

“பிடி நழுவினால் எலும்புகூட மிஞ்சாது” என்றான் பாண்டியன்.

“நாம் நமது கைகளையும் கால்களையும் பற்றி மட்டுமே நினைக்க வேண்டும். மற்ற விஷயங்களைப் புத்தர் பார்த்துக் கொள்வார்” என்றான் கிம்.

அவர்கள் பாறைகளினூடாக இறங்கிச் சென்றார்கள். செல்லச் செல்ல அப்பகுதியின் வெப்பம் தெரிய வந்தது.

கீழே மரங்களின் மீது ஏராளமான பறவைகள் இருந்தன. அவை கலைந்து கூவியபடி பறந்தன. அவற்றுள் ஒன்று சிறகடித்து மேலேறி வந்தது.

அந்தப் பறவை அவர்கள் அருகே வந்து பாறை மீது அமர்ந்தது.

“ஆ! இது பறவையல்ல. பறக்கும் ஓணான்!” என்று பாண்டியன் அலறினான்.

“ஆமாம். இதன் பெயர் ஆர்கியோடெரிகிஸ். இது டைனோசர் வம்சத்தைச் சார்ந்தது” என்றார் டாக்டர்.

ஓணான் பறவை “குவாக்! குவாக்!” என்று பயங்கரமாகக் கூவியபடி சிறகடித்தது.

“டைனோசர் வம்சமா?” என்றான் பாண்டியன்.

“ஆமாம். டைனசோர்கள் ஒரு காலத்தில் பூமி முழுக்கப் பரவி வாழ்ந்தன. அதை ஜுராசிக் கால கட்டம் என்கிறார்கள். அது ஏறத்தாழ பதினெட்டு கோடி வருடங்களுக்கு முன்பு. பலவகையான டைனோசர்கள் உண்டு. யானையை விடப் பத்து மடங்கு பெரிய டைனோசர்கள் உண்டு. சிறிய ஓணான் அளவுள்ள டைனோசர்களும் உண்டு. நம்முடைய முதலை, பல்லி, உடும்பு, எறும்புத்திண்ணி எல்லாமே டைனோசரின் வம்சம்தான். இது இங்கு அழியாமல் அப்படியே இருக்கிறது. ஆச்சரியம்தான்” என்றார் டாக்டர்.

ஓணான் பறவை பறந்து போயிற்று.

“இது ஒரு விசித்திரமான பூமி. இங்கு பதினைந்து கோடி வருடமாகப் பரிணாமமே நடைபெறவில்லை போலிருக்கிறது. இன்னும் பல அற்புதமான உயிரினங்கள் இங்கு இருக்கலாம்” என்றார் டாக்டர்.

பறக்கும் டைனோசர்

ஜெர்மனியில் உள்ள கோலன் ஹோவர் நகர் அருகே ஒரு புதை பொருள் ஆய்வு நடந்தது. அங்கு மண்ணுக்கு அடியில் சுண்ணாம்புப் பாறைகளில் ஒரு பறவையின் எலும்புக் கூட்டின் தடம் தெரிந்தது.

அந்த எலும்புக் கூட்டை ஆராய்ந்தபோது அது ஒரு விசித்திரமான பறவை என்று தெரிந்தது. அதற்கு கைகளில் மூன்று விரல்களும் நகங்களும் இருந்தன. பெரிய தாடையும் இருந்தது. வாயில் பற்கள் இருந்தன. உடம்பில் செதில்கள் இருந்தன. நீண்ட வால் இருந்தது. அதே

சமயம் அது பறவையாகவும் இருந்தது.
அந்தப் பறவையின் எலும்புக் கூடு ‘தீரோபாட்’ என்ற டைனோசரின் எலும்புக் கூட்டை ஒத்து இருந்தது. அதாவது இந்தப் பறவை டைனோசர்களுக்கும் பறவை இனத்துக்குள் நடுவே உள்ள ஒரு இனம் ஆகும். இந்தப் பறவைக்கு விஞ்ஞானிகள் ‘ஆர்கியோடெரிகஸ்’ என்று பெயரிட்டார்கள்.

# அத்தியாயம் 31

பாண்டியன் மெதுவாகப் பாறைகளின் வழியாக இறங்கினான். அங்கு ஒரு பெரிய மரம் நின்றது. அவன் நேராக அந்த மரத்தின் கிளைகளில் இறங்கி விட்டான்.

பிறகு கிம்மும் டாக்டரும் அந்த மரத்தின் மீது இறங்கினார்கள். மேலேயிருந்து பார்த்த போது அந்தப்பகுதி மரங்கள் அடர்ந்த காடு மாதிரி இருந்தது. கீழே இறங்கிய பிறகுதான் எவ்வளவு பெரிய காடு அது என்று புரிந்தது.

அங்கு நின்ற ஒவ்வொரு மரமும் மிகமிகப் பெரியவையாக இருந்தன. நமது ஊரில் உள்ள ஒரு மிகப் பெரிய மரத்தின் அடிமரம் அளவுக்கு அந்த மரங்களின் கிளைகள் காணப்பட்டன. அம்மரங்களில் பலவகையான கொடிகள் அடர்த்தியாகப் பின்னிப் பிணைந்து காணப்பட்டன.

பாண்டியன் மரத்தில் அமர்ந்து கொண்டு கீழே பார்த்தான். மிக அடர்த்தியான செடிகொடிகள்தான் தெரிந்தன. தரையே தென்படவில்லை.

கொடிகளைப் பிடித்தபடி எளிதாக மரத்தில் ஏற முடிந்தது.

“எத்தனை நதிகள் அருவியாக மாறி இந்தப் பள்ளத்தாக்குக்கு உள்ளே விழுகின்றன என்று பார்த்தீர்களல்லவா? ஏராளமான நீர்வளம் இருப்பதால்தான் காடு அடர்ந்து விட்டது” என்றார் டாக்டர்.

“மனிதனின் கண்படாமலிருந்தாலே போதும், காடு அடர்ந்து விடும். இதோ இந்தப் பகுதியில் ஒரு சாலை போட்டால் போதும். மக்கள் உடனே லாரிகளைக் கொண்டு வந்து விடுவார்கள். எல்லா மரங்களையும் முறித்து விற்க ஆரம்பித்து விடுவார்கள். பத்து ஆண்டில் இந்த இடம் மரமே இல்லாமல் ஆகிவிடும்” என்றான் பாண்டியன்.

“ஆமாம். மனிதனின் பேராசைதான் பூமி மீது இருந்த காடுகளை நாசம் செய்தது. காடு அழிய அழிய மண்ணின் வளம் குறைகிறது. மழை பெய்வதும் குறைகிறது. விவசாயம் நலிவடைய ஆரம்பிக்கிறது” என்றார் டாக்டர்.

அவர்களுக்குப் பசித்தது. அந்த மரங்களின் கிளைகளிலும் கொடிகளிலும் பலவகையான பழங்கள் பழுத்துத் தொங்கின. ஆனால் அதைச் சாப்பிட டாக்டரும் பாண்டியனும் தயங்கினார்கள்.

கிம் பயப்படவில்லை.“டாக்டர்! பிட்சுக்கள் இதை தர்மஸ்தலம் என்றுதானே சொன்னார்கள்? இங்குள்ள எல்லாப் பழமும் அமுதம்தான். எதை வேண்டுமானாலும் சாப்பிடலாம்” என்றான் கிம். அவன் ஒரு பழத்தைப் பறித்துச் சாப்பிட ஆரம்பித்தான்.

பாண்டியனும் அந்தப் பழத்தைப் பறித்துச்சாப்பிட ஆரம்பித்தான். அது பழம் போலவே இல்லை. இனிப்பான கேக் போலவே இருந்தது.

“மாவுச்சத்து அதிகம் உள்ள பழம் இது. அதனால்தான் இப்படி இருக்கிறது” என்றார் டாக்டர்.

பழங்களை உண்டு முடித்ததும் கிம் மரத்தின் மீது ஏறி மேலே சென்றான். அந்த மரத்தில் இலைகள் மிக நெருக்கமாக இருந்தன. இலைகளின் ஊடாக கொடிகள் வளர்ந்து பின்னி அடர்ந்திருந்தன. எனவே அது ஒரு வலை போல இருந்தது. கிம் அந்த இலைப்பரப்பு மீது

படுத்துக் கொண்டான். மெத்தை மீது படுப்பது போல இருந்தது. அங்கு நல்ல சுகமான வெயில் அடித்தது.

பாண்டியனும் டாக்டரும் கூட அவ்வாறு படுத்துக் கொண்டார்கள். பாண்டியன் தன் உடைகளைக் கழற்றினான். டாக்டரும் கழற்றினார்.

அவர்களுடைய தோல் மிக வெண்மையாகக் காணப்பட்டது. அதில் வெயில் பட்டபோது சுரீர் என்று உறைத்தது.

"நமது தோலுக்கு வெயிலும் காற்றும் மிகவும் அவசியம். நம் தோலில் உள்ள நிறமிகள் வெயில் படாவிட்டால் அழிந்து போகும். எனவே தோலின் ஆரோக்கியம் குறையும்" என்றார் டாக்டர்.

பேசிக் கொண்டே அவர்கள் மூவரும் தூங்கி விட்டார்கள்.

சரசரவென்று ஒரு ஒலி கேட்டு பாண்டியன் விழித்துக் கொண்டான்.

அவனருகே ஒரு விலங்கு நின்றிருந்தது. அதைப் பார்த்தும் அது குதிரை என்ற எண்ணம் ஏற்பட்டது. ஆனால் அதன் கழுத்து குட்டையாக இருந்தது. கால்கள் குரங்கின் கால்கள் போல இருந்தன. தன் கால் விரல்களால் மரங்களைப் பிடித்தபடி நடந்து இலைகளை மேய்ந்தது அது.

டாக்டரும் விழித்துக் கொண்டார். அந்த மிருகத்தைக் கூர்ந்து பார்த்தார்.

"டாக்டர், இது என்ன குரங்கா இல்லை குதிரையா?" என்றான் பாண்டியன்.

"குதிரையேதான். இங்குள்ள உயிர்கள் அனைத்துமே பரிணாமம் அடையாத பண்புடைய நிலையிலேயே உள்ளன. பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு குதிரை இப்படித்தான் இருந்தது. அதன் கால்களில் ஐந்து விரல்கள் இருந்தன. மரங்களில் ஏறி இலைகளைத் தின்று வாழ்ந்து வந்தது அது" என்றார் டாக்டர்.

"பிறகு எப்படி அதன் காலில் குளம்பு வந்தது?" என்றான் பாண்டியன்.

"குளம்பு என்பது நகம்தான். காட்டில் மரங்கள் குறைந்து புல்வெளிகள் உருவாகின. குதிரைகள் புல்வெளியில் வாழ ஆரம்பித்தன. எனவே அவை நீண்ட தூரம் ஓட வேண்டியிருந்தது. வேகமாக ஓடுவதற்காக அவை ஒரே ஒரு விரலை மட்டும் ஊன்றி ஓடின. அந்த விரலில் உள்ள நகம் தடித்து குளம்பாக ஆயிற்று" என்றார் டாக்டர்.

"ஆனால் குதிரையின் கழுத்து நீளமாக இருக்குமே?" என்றான் பாண்டியன்.

"ஆமாம். குதிரை வேகமாக ஓட ஆரம்பித்தபோது அதன் கால்கள் நீளமாக மாறின. கால் நீளமாக மாறிய போது கழுத்தும் நீளமாக ஆயிற்று. அப்படி இருந்தால்தானே குனிந்து மேய முடியும்?" டாக்டர் கூறினார்.

பாண்டியன் அந்தக் குதிரையையே உற்றுப் பார்த்தான். அது வாலைச் சுழற்றிக் களைத்தது. பிடரி மயிரை சிலிர்த்துக் கொண்டது. ஆனால் குரங்கு மாதிரி மரம் விட்டு மரம் தாவியது.

இந்தக் குதிரையைப் பழக்கினால் மரங்கள் மேல் சவாரி செய்யலாம் என்று பாண்டியன் நினைத்தான். சென்னை நகரில் இதன் மீது ஏறி சவாரி செய்தால் பெரிய கட்டடங்கள்மீதுகூட குரங்கு மாதிரி ஏறி இது செல்லும்!

பாண்டியனுக்குச் சிரிப்பாக இருந்தது. ஏராளமாக குதிரைகள் வரஆரம்பித்தன. அவை மரங்களின் மீது மேய்ந்து திரிந்தன.

"இங்குள்ள மற்ற மிருகங்களைப் பார்க்க ஆசையாக இருக்கிறது" என்றான் பாண்டியன்.

குதிரை எப்படி உருவாயிற்று?
விகொவலோஸ்கி என்ற ரஷ்ய விலங்கியல் நிபுணர் குதிரையின் பரிணாம வரலாற்றை

ஆராய்ச்சி செய்தவர்.
ஐந்து கோடி ஆண்டுகளுக்கு முன்பு பூமி மீது வாழ்ந்த ஒரு விலங்கினத்தின் எலும்புக் கூடு கிடைத்தது. அதற்கு ஐந்து விரல்கள் கொண்ட கால்கள் இருந்தன. அதுவே குதிரையின் முன்னோடியான மிருகம். அதற்கு பிரோ எரோனிபஸ் என்று பெயர்.
பிறகு இந்த மிருகம் புல்வெளியில் வசிக்க ஆரம்பித்தது. அது நீளமான கால்கள் உடைய மேஸனிப்பஸ் என்ற மிருகமாக மாறியது.
அந்த மிருகத்தின் கழுத்து நீண்டது. அதற்கு பிலியோனிப்பஸ் என்று பெயர்.
கடைசியில் நாம் இப்போது பார்க்கும் குதிரை உருவாகியது. இதற்கு இலத்தீனிஸ் ஈக்கஸ் என்று பெயர்.

# அத்தியாயம் 32

அந்தக் குதிரைகள் மேய்ந்த படியே நகர்ந்து சென்றன.

“இவற்றுக்கு இங்கு உணவுக்குப் பஞ்சமே இல்லை. எவ்வளவு கொழுகொழுவென்று இருக்கின்றன பாருங்கள்”- பாண்டியன் வியந்தான்.

கிம், “கீழே பாருங்கள்... பசுக்கள்!” என்றான்.

மூவரும் பார்த்தார்கள். தரையில் யானை அளவுக்குப் பெரிய பாசுமாடுகள் கூட்டம் கூட்டமாகச் சென்றன. அவற்றின் கொம்புகள் மிக நீளமாக வளைந்து காணப்பட்டன.

“அவற்றின் கால்களைப் பாருங்கள். குரங்குக் கால்களாகத்தான் இருக்கின்றன. இங்கு மண் எங்குமே தென்படவில்லை. தரை முழுக்க முறிந்து விழுந்த மரக்கிளைகள் பரவியிருக்கலாம். அவற்றின் மீது பலவகையான புதர்செடிகள் அடர்த்தியாக வளர்ந்துள்ளன. குரங்கு போல கால்களால் பிடித்துக் கொண்டால் தான் இங்கு நடக்கவே முடியும்” என்றார் டாக்டர்.

அந்த மரங்களின் மேற்பரப்பு இலைகளும் கொடிகளும் அடர்ந்த தரைப்பரப்பு மாதிரியே இருந்தது. கிம் அதில் கால்தூக்கி வைத்தான். கால் சற்றுப் புதைந்தது. ஆனால் விழவில்லை.

“டாக்டர், நன்றாக நடக்க முடிகிறது” என்றான் கிம்.

பாண்டியனும் நடந்து பார்த்தான். வைக்கோல் போரின் மீது நடப்பது போல இருந்தது. அவர்கள் மூவரும் ஓடினார்கள். தள்ளாடியபடி ஓடமுடிந்தது.

மரங்களின் மீது பலவகையான பறவைகள் இருந்தன. பச்சை நிறமான காகங்கள் “கா!கா!” என்று கரைந்தபடி கூட்டம் கூட்டமாகப் பறந்தன.

ஒரு விசித்திரமான குருவி அவர்களை மிகவும் கவர்ந்தது. அது மரக்கிளைகளில் இருந்த போது பச்சை நிறமாக இருந்தது. மேலே எழுந்து பறந்த போது இளநீலநிறமாக ஆயிற்று.

பாண்டியன் பாய்ந்து ஒரு கிளியைப் பிடித்தான். அந்தக் கிளிக்கு நிறமே இல்லை. கண்ணாடியால் செய்யப்பட்ட கிளி மாதிரி இருந்தது. அதன் உடம்பு வழியாக மறுபக்கம் பார்க்க முடிந்தது.

“எவ்வளவு விசித்திரம்!” என்றான் பாண்டியன்.

சிவப்பு நிறத்திலும் பச்சை நிறத்திலும் பல வகையான குருவிகள் பறந்தன. சில குருவிகளுக்கு பல்லி போன்ற அகலமான தாடை இருந்தது. வாய்க்குள் பற்களும் இருந்தன.

சிவப்பு நிறமான சில மயில்கள் அகவுவதை அவர்கள் பிறகு கண்டார்கள். ஆண்மயில் தன் தோகையை விரித்தது. சிவப்பு நிற மயிற்பீலியை பார்த்த போது மிக வியப்பாக இருந்தது.

பாண்டியன் திடீரென்று ஒரு பறவையைப் பார்த்து வியந்து கூவிவிட்டான். “டாக்டர், அதோ பாருங்கள்!”

அவன் காட்டிய பறவை மிக நீளமான உடலுடன் இருந்தது. அதற்கு நான்கு சிறகுகள் இருந்தன. மிகப் பெரிய வண்ணத்துப் பூச்சி போல இருந்தது அது. அதன் சிறகுகளுக்கு இளஞ்சிவப்பு நிறம் இருந்தது.

“இங்குள்ள பறவைகளை பூச்சிகளா இல்லை பல்லிகளா இல்லை பறவைகளா என்று பிரிக்கவே முடியவில்லை” என்றான் பாண்டியன்.

“இம்மூன்று உயிரினங்களும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையவை. பறவைகளின் எலும்புக் கூட்டையும் பல்லிகளின் எலும்புக் கூட்டையும் எடுத்துப் பார்த்தால் வித்தியாசம் மிகக் குறைவாகவே இருக்கும். பல்லிகளின் முன்னங்கால்கள்தான் படிப்படியாக சிறகாக மாறின” என்றார் டாக்டர்.

அப்போது ஒரு பறவை அவர்களைத் தாண்டிப் பறந்து போயிற்று. பாண்டியன், “அட! இதோ பறக்கும் மீன்” என்றான். அந்தப் பறவை வாளை மீன் போலவே இருந்தது. உடம்பெல்லாம் வெள்ளி நிறமான செதில்கள் இருந்தன. மீனுக்குரிய துடுப்புகள்தான் பெரியதாக மாறி சிறகாக ஆகியிருந்தன. அதன் வாய் பிளந்திருந்தது. அதில் நிறைய பற்கள் இருந்தன. ஆனால் அதன் மூக்கு நுனி நீண்டு அலகு போல இருந்தது.

“பரிணாமத்தில் மீன்களும் பறவைகள் ஆகியுள்ளன. எல்லா உயிரினங்களும் ஒன்றோடொன்று தொடர்பு உடையவையே” என்றார் டாக்டர்.

அதன் பிறகு அவர்கள் பல விந்தையான உயிரினங்களைப் பார்த்தபடியே சென்றார்கள்.

சிறகு முளைத்த அணில்களை அவர்கள் கண்டார்கள். பூனையின் முகம் கொண்ட பல்லிகளைப் பார்த்தார்கள். அவை மரங்களில் ஒட்டி இருந்தன.

ஒரு இடத்தில் ஏராளமான நாய்கள் மரங்கள் மீது துள்ளித்துள்ளி விளையாடின. அவற்றுக்கு ஆடுகள் போல கொம்புகள் இருந்தன. அவற்றின் கால்களும் குரங்குக் கால்கள் மாதிரி இருந்தன.

மிகப் பெரிய சிலந்தியைப் பார்த்தார்கள். அது தன் முன்னங்கால்களில் தேங்காய் போன்ற காய் ஒன்றைப் பறித்தது. அதை உடைத்துப் பருக்கை எடுத்துத் தின்றது.

இன்னொரு மரத்தில் ஏராளமான மீன்கள் இருந்தன. அவற்றுக்கு நண்டு போல கால்கள் இருந்தன. மரக்கிளைகளில் அவை கால்களை ஊன்றி ஏறின.

பலவகையான பாம்புகளை அவர்கள் கண்டார்கள். ஒரு பாம்பு அவர்களைக் கண்டதும் படமெடுத்தது. அதன் படம் விரிந்து விரிந்து சிறகு போல மாறியது. அது பறந்து எழுந்து சென்றது.

கண்ணாடிக் குண்டுகள் பறப்பது போல பல நிறம் கொண்ட பூச்சிகள் பறப்பதைக் கண்டார்கள். மரக்கிளைகளைப் பிடித்தபடி சிறிய கால்கள் கொண்ட பன்றிகள் அமர்ந்திருப்பதைக் கண்டார்கள்.

ஒரு விலங்கைப் பார்த்து அவர்கள் பயமும் அதிர்ச்சியும் அடைந்தார்கள். அது ஒரு எருமை. ஆனால் அதற்கு இரண்டு பக்கங்களிலும் சேர்த்து எட்டுக் கால்கள் இருந்தன. அக்கால்கள் முதலையின் கால்கள் போல குறுகியவையாக இருந்தன. அவற்றில் கூரிய நகங்கள் கொண்ட மூன்று மூன்று விரல்கள் வீதம் காணப்பட்டன. அந்த எருமைப் பிராணி மரங்களில் ஏறி இலைகளை மேய்ந்தது. அவர்களைப் பார்த்தும் கொம்புகளைச் சரித்து, “ம்ரே! ” என்று எருமை போலவே உறுமியது. அதன் அருகே அதைப் போலவே சிறிய குட்டிகள் இரண்டு காணப்பட்டன.

பிறகு இன்னமும் விசித்திரமான ஒரு பிராணியைக் கண்டார்கள் அது ஒரு மலைப்பாம்பு. ஆனால் அதற்கு அட்டை போல இரு பக்கமும் ஏராளமான சிறு கால்கள் இருந்தன. அந்தக் கால்களை வரிசையாக அமைத்தபடி அது கிளைகள் மீது ஊர்ந்து சென்றது.

அதைவிட விசித்திரமான ஒன்றை அடுத்தபடியாகக் கண்டார்கள். அது ஒரு மிகப் பெரிய நண்டு! அதன் கால்கள் நண்டைப் போலவே இருந்தன. ஆனால் அதற்கு பசுமாடு போல தலை

இருந்தது. அந்தத் தலையில் இரு கொம்புகள் கூட இருந்தன. பசு மாடு போல அது அசை போட்டபடியே இருந்தது. அவர்களைப் பார்த்ததும் பசு மாதிரியே அது “ம்மா” என்று கூவியது.

“இது கனவா நனவா என்று புரியவில்லை” என்றான் பாண்டியன்.

“புத்தரின் ஓவியக் கூடம் இது. விதவிதமாக அவர் வரைந்து பார்க்கிறார்” என்றான் கிம்.

“உளறாதே” என்றான் பாண்டியன்.

“அவன் கூறுவது உண்மைதான். இயற்கை பல விதமான வடிவங்களை அமைத்துப் பார்க்கிறது. பரிணாம வளர்ச்சியில் எவையெல்லாம் சிறப்பாக உள்ளனவோ அவையெல்லாம் நீடித்து நிற்கின்றன. சிறப்பாக இல்லாதவை அழிந்து விடுகின்றன. இவையெல்லாம் கால ஓட்டத்தில் படிப்படியாக அழிந்து போன உயிரினங்கள்” என்றார் டாக்டர்.

அப்போது மேலும் விசித்திரமான ஒரு பிராணியை அவர்கள் கண்டார்கள்.

பறக்கும் விலங்குகள்!
ஆப்பிரிக்காவில் உள்ள ஒருவகை அணில்கள் பறக்கும்! அவை மரங்களிலிருந்து குதிக்கும்போது கால்களை நன்றாக விரித்துக் கொள்ளும். அப்போது இரண்டு பக்கமும் உள்ள இரண்டு கால்களுக்கு நடுவே இருக்கும் தோல் பரப்பு விரிந்துகொள்ளும். எனவே அவை பட்டம் போலப் பறந்து மெதுவாகத் தரையில் இறங்கிவிடும்.
இலங்கையிலும் கிழக்கிந்தியத் தீவுகளிலும் கஜுவான் என்ற பிராணி உள்ளது. இது அணில் மாதிரி இருக்கும். இதுவும் பறக்கும் திறன் உடைய பிராணியாகும். இது கிட்டத்தட்ட ஒரு பூனை அளவுக்குப் பெரிய பிராணி.
பிலிப்பைன் தீவுகளில் வசிக்கும் ‘பலாஞ்சர்கல்’ என்று பிராணி கங்காரு போல இருக்கும். இதன் வயிற்றிலும் பை உண்டு. அதில் தன் குட்டியை வைத்திருக்கும். மிக உயரமான மரத்தில் இருந்து இது குதிக்கும். பட்டம் போலப் பறந்து கீழே இறங்கிவிடும்.

# அத்தியாயம் 33

அந்தப் பிராணியைக் கண்டதும் பாண்டியன் முதலில் திகைத்தான். பிறகு வாய்விட்டுச் சிரித்து விட்டான்.

பலவிதமான பிராணிகளை ஒன்றாகச் சேர்த்துச் செய்தது போல இருந்தது அது. அதன் கால்களும் கைகளும் குரங்கு மாதிரி இருந்தன. ஆனால் முகம் நரி மாதிரி இருந்தது. அதன் தலையில் வெள்ளாட்டுக்கு இருப்பது போலக் கொம்பு இருந்தது. அதன் வால் ஓணானின் வால் போல இருந்தது.

அந்தப் பிராணி ஒரு மரக்கிளையில் அமர்ந்து ஆனந்தமாக வெயில் காய்ந்து கொண்டிருந்தது. பாண்டியனின் சிரிப்பைப் பார்த்ததும் அது திரும்பியது. பிறகு 'மியாவ்!' என்று கூறியது.

பாண்டியனால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை.

"இதில் சிரிப்பதற்கு ஏதுமில்லை பாண்டியன். ஹென்றி ஃபோர்டு முதன் முதலாக உருவாக்கிய கார் எப்படி இருக்கும் தெரியுமா? சாரட் வண்டி மாதிரி இருக்கும். ஆனால் சைக்கிள் சக்கரம் மாட்டியிருப்பார்கள் அதற்கு! இன்றைக்கு உள்ள காரைப் பார்த்து விட்டு அதைப் பார்த்தால் சிரிப்புத்தான் வரும். ஆனால் அந்தக் காரில் இருந்துதான் இன்றைய கார் உருவாகி வந்தது. பரிணாம வளர்ச்சியும் இவ்வாறுதான் நடைபெறுகிறது" என்றார் டாக்டர்.

அந்தப் பிராணி 'மியாவ்' என்றபடி ஓடிப் போயிற்று.

அதைப் போல இன்னும் சில விசித்திர மிருகங்களைப் பார்த்தார்கள்.

"இப்படியே இன்னும் சில மிருகங்களைப் பார்த்தால் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும்" என்றான் பாண்டியன்.

அவ்வளவு நேரம் அமைதியாக இருந்த கிம் பேசத் தொடங்கினான்:

"எங்கள் பௌத்த மடாலயத்தின் சுவர்களில் இது போன்ற விசித்திர உருவங்களை ஓவியங்களாகத் தீட்டி வைத்திருக்கிறார்கள். அவையெல்லாம் புத்தர் மீண்டும் பிறக்கும் போது கூடவே வரும் விலங்குகள்" என்றான் கிம்.

"புத்தர் மீண்டும் பிறப்பாரா?" பாண்டியன் ஆச்சர்யத்துடன் கேட்டான்.

"பௌத்த மதத்தில் அப்படி ஒரு நம்பிக்கை உண்டு. அவ்வாறு மீண்டும் பிறக்கும் புத்தருக்கு மைத்ரேயர் என்று பெயர்" என்றார் டாக்டர்.

"அவர் ஏன் மீண்டும் பிறக்க வேண்டும்?"- பாண்டியன்.

"உலகில் தீமை மிகும் போது பூமி அழியும். அதன் பிறகு புதிய பூமியை மைத்ரேயர் படைப்பார். அவருடன் இந்த உயிரினங்களும் கூடவே பிறக்கும் என்று கிம் கூறுகிறான்" - டாக்டர் விளக்கினார்.

"பனிமனிதர்களும்கூட அவ்வாறு உலகம் அழிந்த பிறகு பூமி மீது பரவுவார்கள் என்று பிட்சு கூறினாரே" என்றான் பாண்டியன்.

"ஆமாம்" என்றார் டாக்டர்.

“அப்படியானால் மைத்ரேயர் பிறக்கும்போது பனிமனிதர்களும் இந்த உயிரினங்களும் எல்லாம் பூமி மீது பரவிவிடுவார்களா?” பாண்டியன் கேட்டான்.

“ஆமாம். இதில் நாமறியாத ஏதோ ஒரு மர்மமான விஷயம் உள்ளது” என்றார் டாக்டர்.

“பனிமனிதன் எங்கே? இது வரை நாம் அவனைப் பார்க்கவில்லையே’ என்றான் பாண்டியன்.

“நாம் அவரைப் பார்க்கவில்லை. ஆனால் யதிகள் நம்மைப் பார்க்கிறார்கள்” என்றான் கிம்.

“ஆமாம். எனக்கும் அந்த உணர்வு இருக்கிறது. பனிமனிதர்கள் மிக மிக வளர்ச்சி அடைந்த மனம் உடையவர்கள். இந்தக் காட்டை நோக்கி நாம் வருவது அவர்களுக்கு முதலிலேயே தெரியும். அது எப்படித் தெரியும் என்று என்னால் ஊகிக்கவே முடியவில்லை. ஆனால் கண்டிப்பாக அவர்களுக்குத் தெரியும்...”

“நம்மை அவர்கள் ஆபத்துகளில் இருந்து காப்பாற்றினார்கள். அந்தப் பனிமலையின் அடியில் இருந்து நமது கூடாரத்தைத் தூக்கி நகர்த்தி வைத்தார்கள். அதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்”- டாக்டர் கூறினார்.

“அவர்கள் ஏன் நம்மைக் காப்பாற்ற வேண்டும்” என்றான் பாண்டியன்.

“நாம் இங்கு வருவது அவர்களுக்கு பிடித்திருக்கிறது. அவர்களுக்குப் பிடிக்காத எவரும் இங்கு வந்துவிட முடியாது” என்றார் டாக்டர்.

“ஏன்? எதற்காக அவர்கள் நாம் இங்கு வர வேண்டுமென விரும்புகிறார்கள்?” பாண்டியன் கேள்விகளை நிறுத்தவில்லை.

“நாம் மூவரையுமே அவர்கள் விரும்பினார்களா இல்லை யாராவது ஒருவரை மட்டுமா என்றுதான் தெரியவில்லை”- டாக்டர் கூறினார்.

அப்போது அவர்கள் எதிரே பனிமனிதன் தோன்றினான். ஒரு மரத்தின் மீது எழுந்து வந்தான். மௌனமாக நின்றான்.

பாண்டியன் பயந்து விட்டான். “டாக்டர் இப்போது புரிகிறது நம்மைப் பிடிப்பதற்காக திட்டம் போட்டு இங்கு வரவழைத்திருக்கிறார்கள். சரியாக மாட்டிக் கொண்டோம்” என்று கூவியபடி தன் துப்பாக்கியை உருவினான். பனிமனிதனை நோக்கிக் குறிவைத்தான்.

பனிமனிதன் அவர்களை நோக்கி மெதுவாக நடந்து வந்தான். அவன் துப்பாக்கியைக் கண்டு பயப்படவில்லை.

பாண்டியன் துப்பாக்கி விசையை அழுத்தினான். அதே சமயம் அவன் கையை யாரோ பிடித்துத் திருப்பியது போல இருந்தது. குண்டு திசைமாறிச் சென்றது.

பாண்டியன் மீண்டும் சுடப் போனான். அவனால் தன் கையை அசைக்கவே முடியவில்லை.

அவனுடைய கரங்கள் கனமாக இருந்தன. அவற்றில் உயிர் இருப்பது போலவே தோன்றவில்லை.

துப்பாக்கி பிடி நழுவி கீழே விழுந்தது. உடனே அவன் கைகளுக்கு உயிரும் திரும்பியது.

பனிமனிதன் நெருங்கி வந்தான். அவன் மிக உயரமாக இருந்தான்.

அவன் உடம்பு முழுக்க சாம்பல் நிறமாக மயிர் அடர்ந்திருந்தது. பாமரேனியன் நாயின் மயிர் போல அது மென்மையாகவும் அடர்த்தியாகவும் இருந்தது.

அவன் மரங்களின் இலைகள் மீது நடந்த போது சற்றும் தள்ளாடவில்லை. அவனுடைய கால்களை உடனே பாண்டியன் கவனித்தான். அவை குரங்குகளின் கால்கள் போல இருந்தன. அக்கால்களை சற்றுத் திருப்பி வைத்து அவன் நடந்தான்.

முதன் முதலில் பனிமனிதன் பாதங்களின் தடத்தை புகைப்படத்தில் பார்த்தது பாண்டியனுக்கு ஞாபகம் வந்தது. அந்தப் பாதத் தடங்கள் வெளிப்பக்கமாக திருப்பி இருந்ததை அவன் அன்று கவனித்தான். அதில் இருந்து அவன் பனிமனிதன் ஒரு குரங்குதான் என்று ஊகித்தான்.

பனிமனிதன் உண்மையில் குரங்கு அல்ல என்று இப்போது தெரிந்தது. பனிமனிதன் கைகளும் கால்களும் மட்டும்தான் குரங்கு போல இருந்தன. பனிமனிதன் மரங்கள் மீதே வாழ்வதனால்தான் அவ்வாறு இருக்கிறது என்று புரிந்தது பாண்டியனுக்கு.

பனிமனிதன் அவர்கள் அருகே வந்தான்.

நடக்கும் மீன்!
ஸ்டிகொ செஃபாலஸ் என்றால் என்ன தெரியுமா? இது ஒரு பழங்கால உயிரினம்.
இதன் உருவம் புராதனமான பவளப் பாறைகளில் பதிந்திருந்தது.
இந்த உயிரினத்துக்கு நுரையீரல் இருந்தது. பல்லி மாதிரி கால்கள் இருந்தன. அக்கால்களில் ஐந்து விரல்கள் காணப்பட்டன.
ஆனால் அது ஒரு மீன்! ஆம். பல லட்சம் வருடம் முன்பு கரையில் ஏறி நடமாடும் மீன்கள் வாழ்ந்திருந்தன.

# அத்தியாயம் 34

பனிமனிதன் அருகே வந்ததும் கிம் முழந்தாளிட்டான். பௌத்த மரபுப்படி வணங்கினான். பனிமனிதன் கரங்கள் கிம்மின் தலையைத் தொட்டன.

பனிமனிதன் ஏதோ கூறினான். அந்தக் குரல் மிக மிக இனிமையாக இருந்தது. மிகப் பெரிய தம்பூராவை மீட்டுவது போல அது இருந்தது.

“கிம் வணங்கிய முறையைக் கவனித்தாயா? குருநாதர்களை மட்டும்தான் பௌத்தர்கள் அவ்வாறு வணங்குவார்கள்” என்றார் டாக்டர்.

பாண்டியன் வியப்பபுடன், “அப்படியா?” என்றான்.

கிம் எழுந்தான். பனிமனிதன்தான் இரு கைகளையும் தூக்கினான். உடனே நான்கு திசைகளிலும் ஏராளமான பனிமனிதர்களின் குரல்கள் கேட்டன.

ஏராளமான இசைக் கருவிகள் சேர்ந்து ஒலிப்பது போல இருந்தது அது.

ஏராளமான பனி மனிதர்கள் மரங்கள் மீது எழுந்தார்கள். அவர்களுள் பெண்களும் குழந்தைகளும் இருந்தார்கள். உற்சாகமாக ஒலியெழுப்பியபடி அவர்களை நோக்கி வந்தார்கள்.

அவர்கள் ஒலியெழுப்பிய போது ஒரு விஷயத்தைப் பாண்டியன் கவனித்தான். மிருகங்கள் ஒலியெழுப்பும் போதும் சரி. பறவைகள் ஒலியெழுப்பும் போது சரி, ஒலி இரைச்சலாக இருக்கும். மனிதர்கள் பலர் ஒரே சமயம் பேசும் போதும் அப்படித்தான் இருக்கும். ஒவ்வொரு பறவையும் மிருகமும் மனிதனும் தனித் தனியாகவே ஒலி எழுப்புவார்கள். அந்த ஒலிகள் சேர்ந்தால் வெறும் இரைச்சல்கள் மட்டும்தான் மிஞ்சும்.

ஆனால் பூச்சிகள் ஒலியெழுப்பும் போது அப்படி இருப்பதில்லை. கோடிக்கணக்கான பூச்சிகள் சேர்ந்து ஒரே குரலில் ஒலியெழுப்பும். ஒரே சமயம் நிறுத்தி விடும். ஒரே சமயம் தொடங்கும்.

இப்போது பனிமனிதர்களும் அந்தப் பூச்சிகளைப் போல ஒரே குரலில் ஒலியெழுப்புவதை பாண்டியன் கண்டான். அத்தனை பேர் சேர்ந்து பேசிய போது அது ஒரே குரலாக இருந்தது. அவனுக்கு வியப்பு தாங்க முடியவில்லை.

பனிமனிதர்கள் ஓடி வந்து அவர்களைப் பிடித்துத் தூக்கினார்கள். குழந்தைப் பனிமனிதர்கள் கும்மாளமிட்டார்கள். உற்சாகம் தாங்க முடியாது குட்டிப் பனிமனிதர்கள் எம்பி எம்பிக் குதித்தார்கள்.

“இவர்களுக்கு நம்மைப் பார்த்தில்தான் எத்தனை மகிழ்ச்சி!” என்று வியந்தார் டாக்டர்.

“இவர்களைப் போய் தவறாக நினைத்தேனே” என்றான் பாண்டியன்.

அவர்களைப் பனிமனிதர்கள் தூக்கிச் சென்றார்கள்.

ஒரு பெரிய மைதானம் தெரிந்தது. ஆனால் அது பச்சை நிறமான மைதானம். அங்கு ஏராளமான பனி மனிதர்கள் இருந்தார்கள்.

ஆனால் அது மைதானம் இல்லை. அதுவும் ஒரு அடர்ந்த காட்டின் மேல் பகுதிதான். அங்கு பனிமனிதர்களின் ஊடாக ஏராளமான பசுக்களும் மேய்ந்தன.

அவர்களைப் பனிமனிதர்கள் இறக்கிவிட்டார்கள். பனிமனிதக் குழந்தைகள் பல வகையான பழங்களை அவர்களுக்குத் தந்தார்கள்.

மீன்கள் நீரில் துள்ளி விழுவது போல பனிமனிதர்கள் வெயிலில் துள்ளிக் குதித்து விளையாடினார்கள்.

மெதுவாக வெயில் மங்க ஆரம்பித்ததும் சுற்றிலும் பனிமலைகள் முதலில் இளமஞ்சள் நிறமாக மாறின. பிறகு சிவப்பு நிறம் கொண்டன. அதன் பிறகு அவை கடும் சிவப்பு நிறமாக மாறின.

ஒவ்வொரு பனிமனிதனாக வந்து மேற்குத் திசை நோக்கி அமரத் தொடங்கினார்கள். சற்று நேரத்தில் அங்கு ஏராளமான பனி மனிதர்கள் வந்து கூடி விட்டார்கள்.

“எப்படியும் இவை மூவாயிரத்துக்குக் குறையாது” என்றார் டாக்டர்.

பனிமனிதர்கள் மறையும் சூரியனைப் பார்த்தபடி அமர்ந்தார்கள். அவர்களுடைய முகமெல்லாம் சிவப்பபாக அந்தியின் ஒளி பரவியது.

மிக மெதுவாக அவர்கள் பாட ஆரம்பித்தார்கள். அது பாட்டு இல்லை. வெறும் ரீங்காரம் மட்டும் தான். ஆனால் அத்தனை பேரும் சேர்ந்து ஒரே குரலாக அதை எழுப்பினார்கள். ஒரு குரல் கூட விலகவேயில்லை.

மூவாயிரம் இசைக் கலைஞர்கள் இணைந்து மூவாயிரம் வயிலின் வாத்தியங்களை சுருதிமாறாமல் இசைப்பது போல அது காணப்பட்டது.

கிம் மெதுவாக நடந்துபோய் அவர்கள் அருகில் அமர்ந்து கொண்டான். கண்களைச் சூரியனை நோக்கித் திறந்து கொண்டான். மெதுவாக முனக ஆரம்பித்தான்.

“டாக்டர், நாமும் அந்த இசையில் கலந்து கொள்ளலாம். எத்தனை அற்புதமான இசை! நமது வாழ்நாளில் இத்தனை அற்புதமான இசையை ஒரு போதும் கேட்கப் போவதில்லை” என்றான் பாண்டியன்.

“ஆமாம்” என்றார் டாக்டர். அவர்களும் போய் அமர்ந்து கொண்டார்கள்.

அந்த இசை மிக அற்புதமாக இருந்தது. அது உயர்ந்தது. பிறகு தணிந்தது. பிறகு சுழன்றது.

ஆனால் அதில் இணைந்து கொள்ள பாண்டியனால் முடியவில்லை. சிறிது நேரம் அவனும் அந்த இசையை முனகினான். உடனே வேறு ஒரு விஷயம் ஞாபகம் வந்தது. அதைத் தொடர்ந்து இன்னொரு விஷயம் ஞாபகத்துக்கு வந்தது.

அதன் பிறகு இசையைப் பற்றிய நினைவு ஏற்பட்டது. உடனே இசையில் சேர்ந்து கொண்டான். ஆனால் உடனே மீண்டும் இன்னொரு ஞாபகம் வந்தது.

எத்தனை முயற்சி செய்தபோதிலும்கூட பாண்டியனால் தொடர்ந்து பாடமுடியவில்லை.

எனவே அவன் முனகுவதை நிறுத்தி விட்டான். பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தான்.

டாக்டரும் அதைப் போல இசையிலிருந்து விலகி விட்டார்.

ஆனால் கிம் முற்றிலுமாக இசையில் ஒன்றி விட்டான். அவனும் அந்தப் பனி மனிதர்களில் ஒருவன் போலவே ஆகிவிட்டான்.

மெதுவாக அடர்ந்த இருள் ஏற்பட்டது. பனிமனிதர்கள் அப்படியே படுத்துத் தூங்கிவிட்டார்கள். கிம்மும் கூடவே படுத்துக் தூங்கிவிட்டான்.

டாக்டரும் பாண்டியனும் படுத்துக் கொண்டார்கள்.

“இதெல்லாம் என்ன என்று எனக்குப் புரியவேயில்லை” என்றான் பாண்டியன்.

“இந்தப் பனி மனிதர்கள் பூச்சிகளைப் போல ஒரே குரலில் ஒலியெழுப்புவதைக் கவனித்தீர்களா?” என்றார் டாக்டர்.

“ஆமாம்” என்றான் பாண்டியன்.

“இவர்களும் ஒரு வகையில் பூச்சிகளைப் போலத்தான். மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் மனிதர்களுக்கும் தனித்தனியாக மனம் உண்டு. தனித்தனியாக யோசிக்கவும் அவர்களால் முடியும். ஆனால் பூச்சிகளுக்கு தனித்தனியாக மனம் இல்லை. அவற்றுக்கு உள்ளுணர்வு மட்டும்தான் உண்டு. அந்த உள்ளுணர்வு எல்லாப் பூச்சிகளுக்கும் சேர்த்து ஒன்றாக உள்ளது. அதாவது எல்லாப் பூச்சிகளுக்கும் சேர்த்து ஒரே மனம்தான்” என்றார் டாக்டர்.

“இந்தப் பனி மனிதர்களுக்கு?” என்றான் பாண்டியன்.

“எனக்குப் புரியவில்லை. ஆனால் இவர்களுடைய மனங்கள் எல்லாம் சேர்ந்து ஒரே மனம் ஆக மாறி இருக்கின்றன” என்றார் டாக்டர்.

“எப்படி? ஆச்சரியமாக இருக்கிறதே?” என்றான் பாண்டியன்.

“நமக்கு மிக மிக நெருக்கமான ஒருவர் உண்டு என்று வைத்துக் கொள்வோம். அவரும் நாமும் மிக அன்பாக இருக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். சில சமயம் நாம் யோசிப்பதையே அவரும் யோசிப்பதைக் காணலாம்.” என்றார் டாக்டர்.

“ஆமாம் டாக்டர். நான் பள்ளியில் படிக்கும் போது ஒரு நெருங்கிய நண்பன் இருந்தான். பாலு என்று பெயர். சில சமயம் நான் ஒரு விஷயத்தை நினைப்பேன். அதைச் சொல்வதற்குள் அவனே சொல்லிவிடுவான்” என்றான் பாண்டியன்.

“அதேதான். அப்போது உங்கள் இரண்டு பேருடைய மனங்களும் ஒன்றாகிவிட்டன. அதே மாதிரி இந்தப் பனிமனிதர்கள் அத்தனை பேர் மனங்களும் ஒன்றாக உள்ளன” என்றார் டாக்டர்.

“எப்படி டாக்டர்? என்னால நம்பவே முடியவில்லை” என்றான் பாண்டியன்.

“எனக்கும் புரியவில்லை. நாளை கிம் தூங்கி எழும்போத அவனிடம் கேட்போம்.”

பரிணாமம் அடையும் தாவரங்கள்!
ரஷ்ய பரிணாம ஆய்வாளரான செ. திமிர்யாஸெவ் என்பவர் ஒரு ஆய்வு செய்தார். பாலைவனமாகிய ஜெருசலேம் பகுதியில் வளரும் ஒரு முள் செடியை எடுத்துக் கொண்டார். அது உறுதியான காம்பு உடையது. அதன் இலைகள் அடர்த்தியாக இருக்கும். அது உயரமாக வளர்வது.
அச்செடியை அவர் மலையுச்சியில் நட்டார். அங்கு குளிர் அதிகம். எனவே அங்கு அந்தச் செடி வளர்ச்சி குறைந்து குறுகியது. அதன் இலைகள் பக்கவாட்டில் படர்ந்து வளர்ந்தன. அதாவது குளிரைச் சமாளிக்கும்படியாக அந்தச் செடி மாறியது! உலகம் முழுக்க உள்ள பலவகையான செடிகள் இவ்வாறு பலவிதமாகப் பரிணாம வளர்ச்சி பெற்றவைதான்.

# அத்தியாயம் 35

அவர்கள் மல்லாந்து படுத்து வானத்தையே பார்த்தார்கள். பாண்டியன் நட்சத்திரங்களை வியப்புடன் பார்த்தான். நட்சத்திரங்கள் இளநீல நிறமாக இருந்தன. அவை மிக அருகே தெரிந்தன.

மிகப் பெரிய நீல நிற மின்மினிகள் கூட்டம் கூட்டமாக எழுந்து பறந்தன. ஒவ்வொரு மின்மினியும் ஒரு ஜீரோ வாட் பல்ப் அளவுக்கு இருந்தது. அவை அவ்வாறு பறந்தது நட்சத்திரங்கள் பறப்பது போல இருந்தது.

சிறிது நேரம் கழித்து வேறு வகையான மின்மினிகள் கூட்டம் கூட்டமாக கிளம்பி வந்தன. அவை சிவப்பாக இருந்தன. அவற்றின் ஒளி நீலமாக இருந்தது.

தன் மீது வந்து விழுந்த ஒரு நீல நிற மின்மினியை பாண்டியன் பிடித்தான். அது அவர்கள் காலையில் பார்த்த அந்த வண்டுதான். அதன் உடலின் உள்ளே நீல நிற ஒளி காணப்பட்டது.

“காலையில் பார்த்தோமே வாளை மீன்? இது அதேதான்” என்றார் டாக்டர். ஒரு ஒளியை சுட்டிக் காட்டினார்.

அப்போது இன்னும் சில வண்ண வண்ண மின்மினிகள் கூட்டம் கூட்டமாக கிளம்பின. மஞ்சள்நிறமான மின்மினிகள் உண்மையில் பறக்கும் ஓணான்கள் என்று தெரிந்தது. அவற்றின் அடிவயிற்றின் சருமம்தான் மஞ்சள் நிறமான ஒளியுடன் இருந்தது.

பச்சைநிற ஒளியுடன் இருந்தவை ஒரு வகையான குருவிகள் என்று தெரிந்தது. வெண்ணிற ஒளியுடன் இருந்த அவைகள் பகலில் பார்க்கத் திறமில்லாத குருவிகள்.

பிறகு அவர்கள் மெதுவாக தூங்கி விட்டார்கள்.

காலையில் இளவெயில் அவர்கள் மீது பட்டது. உடனே அவர்கள் கண் விழித்தார்கள்.



கிம்மையும் பனிமனிதர்களையும் காணவில்லை.

“எங்கே போனார்கள்?” என்றார் டாக்டர்.

அப்போது ஒரு பனிமனிதக் குழந்தை ஓடி வந்தது. அது சிரித்த படி லடாக்கிய மொழியில், அவர்களிடம் “குளிக்கப் போகலாம் வாருங்கள்” என்றது.

பாண்டியன் வியப்புடன், “லடாக் மொழி பேசுகிறது!” என்றான்.

“எனக்கும் வியப்பாகத்தான்இருக்கிறது” என்றார் டாக்டர்.

அவர்கள் அந்தக் குழந்தையைத் தொடர்ந்து ஓடினார்கள்.

மரங்களின் மீதாக ஓடி அவர்கள் ஒரு பெரிய நதிக்கரையை அடைந்தார்கள்.

மிக அகலமான நதி அது. அதில் நீலநிறமான தண்ணீர் அலையலையாக நெளிந்து சென்றது. அது மிக ஆழமான நதி என்று தெரிந்தது.

அந்த நதியில் ஏராளமான பனிமனிதர்கள் நீராடியபடி இருந்தார்கள். நீரில் மூழ்கியும் எழுந்தும் நீந்தினார்கள். நீரை அள்ளி வீசி கும்மாளம் அடித்தார்கள்.

“வாருங்கள் நீராடலாம்” என்றான் பாண்டியன்.

இருவரும் உடைகளைக் கழற்றினார்கள். நீரில் மெதுவாக இறங்கினார்கள். நீர் இதமான சூட்டுடன் இருந்தது. எதிரே ஒரு பாறை தெரிந்தது. அந்தப் பாறை மீது சில பனிமனிதக் குழந்தைகள் ஏறி நின்று கும்மாளமிட்டார்கள். பாண்டியன் அந்தப் பாறையை நோக்கி நீந்தினான்.

அந்தப் பாறை மீது நின்ற பனிமனிதக் குழந்தைகளின் நடுவே கிம் நிற்பதை பாண்டியன் கவனித்தான். மற்ற பனிமனிதர்களைப் போலவே கிம்மும் உடை ஏதும் அணியவில்லை. அவனும் அந்தப் பனிமனிதக் குழந்தைகளுடன் சேர்ந்து கும்மாளமிட்டான்.

திடீரென்று அந்தப் பாறை நீரில் மூழ்கியது. குழந்தைகள் உரக்கச் சிரித்தன. அவையும் நீரில் மூழ்கின. வெகு தூரம் தள்ளி அந்தப் பாறை மேலெழுந்தது.

அது பாறை அல்ல. அது ஒரு பெரிய ஆமை! பாண்டியன் வியப்புடன் அதைப் பார்த்தான்.

அந்த நதியில் தெரிந்த பாறைகள் எல்லாமே உண்மையில் மிகப் பெரிய ஆமைகள். அது பாண்டியனுக்கு அப்போதுதான் தெரிந்தது.

ஒரு பெரிய ஆமை நீந்தி வந்தது. அதன் மீது ஒரு பனிமனிதன் நின்றிருந்தான். அவன், “ஏறுங்கள்’ என்று லடாக் மொழியில் கூறினான்

பாண்டியன் அந்த ஆமையை நெருங்கினான். மிகப் பெரிய ஆமை அது. அதன் கால்கள் பெரிய மரத்தின் அடிமரம் போல இருந்தன. முதலையின் செதில்கள் மாதிரி அவற்றின் மீது செதில்கள் காணப்பட்டன.

பாண்டியன் அந்தச் செதில்களைப் பிடித்து கால் வைத்து ஏறினான். ஆமை மீது ஏறி நின்றதும் பனிமனிதன் “இங்கு நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமே இல்லை” என்றான்.

“உங்களுக்கு எப்படி லடாக் மொழி தெரியும்?” என்றான்.

“லடாக் மொழியா? எனக்கு அப்படி ஏதும் தெரியாதே. நான் உங்களிடம் பேச விரும்புகிறேன். அப்போது இந்த மாதிரி பேச வருகிறது. இது என்ன மொழி என்று எனக்குத் தெரியாது” என்றான் பனிமனிதன்.

அப்போது அவர்கள் அருகே நீரில் மிகப் பெரிய அலைகள் எழுந்தன. நீருக்குள் இருந்து ஒரு மிகமிகப் பெரிய சிங்கத்தின் முகம் எழுந்தது.

அந்தச் சிங்கத்தின் முகத்தில் இரு பெரிய விழிகள் இருந்தன. அதன் மூக்கு அகலமாக இருந்தது. அதன்வாய் பிளந்து தெரிந்தது. வாய்க்குள் வெண்ணிறமான பற்கள் தெரிந்தன. பற்களுக்கு நடுவே சிவப்பு நிறமான நீளமான நாக்கு காணப்பட்டது.

ஆனால் அந்தச் சிங்கத்துக்கு பிடரி மயிர் இருக்கவில்லை. அந்தச் சிங்கம் “உர்ர்” என்று பயங்கரமாக உறுமியது.

*பாண்டியன் நீருக்குள் எப்படி சிங்கம் வாழ முடியும் என்று நினைத்து பிரமித்தான். அந்தச் சிங்கத்தின் தலை மட்டும் ஒரு பெரிய பாறை போல காணப்பட்டது.*

*சிங்கத்தின் தலை மேலே எழுந்தது. பிறகு அதன் உடலும் நீருக்கு வெளியே தெரிந்தது.*

*அதன் உடல் பாம்பின் உடல் போல இருந்தது. அதே சமயம் அதற்கு முதலையின் கால்கள் போல நான்கு கால்கள் இருந்தன. அந்தக் கால்களில் விரல்கள் இல்லை. அதற்குப் பதிலாக வாத்தின் கால்களில் இருப்பது போல பெரிய துடுப்புகள்தான் இருந்தன.*

*அந்தப் பிராணி தன் கால்களால் நீரைத் துழாவியபடி நீந்தியது. அது நீருக்கு வெளியே வந்த பிறகு அதைப் பார்க்க வியப்பாக இருந்தது. பூங்காக்களில் குழந்தைகளுக்காக் குட்டி ரயில் விட்டிருப்பார்கள் அல்லவா? அது மாதிரி இருந்தது அது.*

*அந்தப் பிராணியை எங்கோ பார்த்திருப்பது போலத் தோன்றியது பாண்டியனுக்கு.*

*நாகரிகம் என்பது என்ன?*
*டேவிட் லிவிங்ஸ்டன் என்ற ஸ்காட்லாந்துக்காரர் முன்னூறு வருடம் முன்பு ஆப்பிரிக்காவுக்குச் சென்று சேர்ந்தார். ஆப்பிரிக்காவை இருண்ட கண்டம் என்று இவர் அழைத்தார். இவர்தான் ஆப்பிரிக்காவைக் கண்டுபிடித்தார் என்று ஐரோப்பியர்கள் கூறினார்கள்.*
*ஆனால் ஆப்பிரிக்காவில் பல ஆயிரம் வருடங்களாகவே மக்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்தார்கள்.*
*ஆப்பிரிக்க மக்களை வெள்ளையர்கள் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர். அம்மக்களைப் பிடித்து கப்பலில் ஏற்றி அமெரிக்காவுக்குக் கொண்டு சென்றனர். அங்கு அவர்களை ஆடு, மாடுகள் போல விற்றனர். சங்கிலிகளில் கட்டி வைத்த வேலை வாங்கினார்கள். அடிமைகளாக அவர்களை வைத்திருந்தார்கள். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளையும் அடிமைகளாக வைத்துக் கொண்டார்கள்.*
*ஆப்பிரிக்க மக்களா, வெள்ளையர்களா, யார் நாகரிகம் அடைந்த மக்கள்?*

# அத்தியாயம் 36

சிங்கத் தலையும் பாம்பின் வாலும் கொண்ட அந்த விநோத விலங்கு நீரில் வேகமாக நீந்தியது. திடீரென்று தலையைத் திருப்பி 'உஸ்ஸ்' என்று பாம்பு போலவே சீறியது. அப்போது அதன் மூக்கில் இருந்து நீராவிப் புகை வருவதுபோல் இருந்தது.

பாண்டினுக்கு அது என்ன மிருகம் என்று புரிந்தது. அது ஒரு ட்ராகன்! சீனாவிலும் ஜப்பானிலும் அந்தப் பிராணியின் ஏராளமான ஓவியங்கள் உண்டு. திருவிழாக் காலங்களில் சீனர்கள் ட்ராகன் மாதிரி துணியில் பெரிய பொம்மைகளைச் செய்வார்கள். அதை ஏழெட்டு பேர் தூக்கிக் கொண்டு நடனமாடுவார்கள். அது ட்ராகன் நெளிந்து ஆடுவது மாதிரியே இருக்கும்.

ஆனால் ட்ராகன் என்பது ஒரு கற்பனை மிருகம். புராணங்களில் உள்ள ஒரு மாயப் பிராணி. அப்படித்தான் கேள்விப்பட்டிருந்தான். இதோ உண்மையான ட்ராகன் நீரில் நீந்தி விளையாடுகிறது.

அப்படியானால் ட்ராகன் வெகுகாலம் முன்பு சீனாவில் நிறைய இருந்திருக்க வேண்டும். பிறகு அவை அழிந்திருக்கலாம். அவற்றைப் பற்றிய கதைகள் மட்டும் மிஞ்சியிருக்கின்றன. பிற்கால மக்கள் அக்கதைகளை வெறும் கற்பனை என்று நினைத்து விட்டார்கள்.

'ட்ராகன் மூக்கு வழியாக நெருப்பைக் கக்கும் என்று புராணங்களில் கூறப்பட்டிருக்கிறது. அது ஏன் என்று பாண்டியனுக்குப் புரிந்தது. அதன் மூக்கில் இருந்து வரும் நீராவியைத்தான் நெருப்பு என்று சொல்லியிருக்கிறார்கள்.

பனிமனிதர்களின் குழந்தைகள் ஆமைகள் மீதிருந்து குதித்தன. அவை ட்ராகனின் வாலில் இருந்த ரோமங்களைப் பிடித்துக் கொண்டன. ஒவ்வொரு ரோமமும் ஒரு கயிறு மாதிரி கனமாக இருந்தது. பாண்டியனும் ஒரு ரோமத்தைப் பிடித்துக் கொண்டான்.

ட்ராகன் நீரில் மூழ்கியது. நீரின் ஆழம் இளநீல நிறமாக இருந்தது. அந்த நீல நிறமான பரப்பில் சிறிய மின்னல்கள் போல ஒளிக்கதிர்கள் தெரிந்தன.

ட்ராகன் நீரின் ஆழத்துக்குள் சென்றது. மேலும் மேலும் ஆழத்தை நோக்கிச் சென்றது. பல்வேறு வண்ண, விநோத மீன்கள் எல்லாம் அங்கு வலம் வந்தன. இன்னும் ஆழத்தை நோக்கி ட்ராகன் சென்றது. நீரின் அடித்தளம் தெரிந்தது. அது மஞ்சள் நிறமான பாறைகளினால் ஆனதாக இருந்தது. பாண்டியன் கூர்ந்து பார்த்தான். மஞ்சள் நிறமான பாறைகள் பளபளவென்று ஒளிவிட்டன. அவற்றைத் தொட முடிந்தது. உடனே பாண்டியன் ஒரு கூழாங்கல்லை எடுத்துக் கொண்டான்.

ட்ராகன் மேலே எழுந்தது. நீருக்குள்ளிலிருந்து அது வேகமாகக் குதித்து எழும்பியது. பாண்டியன் வேகமாக மூச்சை இழுத்துக் கொண்டான். ட்ராகனும் மூச்சு விட்டது. மனிதர்கள் மாதிரியே அதுவும் வெளியே வந்துதான் மூச்சு விடமுடியும் என்று பாண்டியனுக்குப் புரிந்தது.

பாண்டியன் இன்னொரு ஆமை மீது ஏறிக் கொண்டான். தன் கையில் இருந்த கூழாங்கல்லைப் பார்த்தான்.

அது ஒரு தங்கக் கட்டி! பாண்டியனுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. அந்த நதியின்

அடிப்பரப்பு முழுக்க தங்கத்தாலான பாறைகள் நிரம்பியிருக்கின்றன! தங்க மலைகள் அவை!

பனிமனிதர்கள் கரையேற ஆரம்பித்தார்கள். பாண்டியனுக்கு மிகவும் பசித்தது. அவனும் நீந்திச் சென்று கரையில் ஏறினான். கரையில் ஏறியதும் பாண்டியனை ஒரு பனிமனிதன் தூக்கினான். சுழற்றி வீசினான். பாண்டியன் பறந்து போய் மரங்களின் மீது விழுந்தான். வைக்கோல் போர் மீது விழுந்தது போல இருந்தது.

அங்கும் பனிமனிதர்கள் பழங்களைப் பறித்து உண்டு கொண்டிருந்தனர். அந்தப் பழம் இனிப்பான தேங்காய் மாதிரி இருந்தது. அங்கு நல்ல வெயில் அடித்தது. தின்று முடிப்பதற்குள் உடல் காய்ந்துவிட்டது.

பாண்டியனின் அருகே டாக்டர் வந்தார் "என்ன பாண்டியன், அருமையான குளியலா?" என்று கேட்டார்.

"ஆமாம் டாக்டர். இதோ இதைப் பார்த்தீர்களா?" என்றான் பாண்டியன். தங்கக் கட்டியை டாக்டருக்குக் காட்டினான்.

"நானும் பார்த்தேன். இங்கு ஏராளமான தங்கப் பாறைகள் உள்ளன. ஆற்றின் அடித்தட்டு முழுக்க தங்கம்தான். தூய்மையான தங்கம்" என்றார் டாக்டர்.

"தங்கம் தனியாக எங்குமே கிடைப்பதில்லையே? பிற உலோகங்களுடனும் மண்ணுடனும் கலந்து தானே கிடைக்கும்?" என்றான் பாண்டியன்.

"நாம் இருப்பது ஒரு எரிமலையின் வாய்க்கு உள்ளே என்பதை மறந்து விட்டாயா? எரிமலையின் வெப்பத்தில் தங்கம் உருகித் தனியாகப் பிரிந்திருக்கலாம்" என்றார் டாக்டர்.

அப்போது அந்த வழியாக பனிமனிதர்களின் குழந்தைகள் ஓடினார்கள். அவர்களுடன் கிம்மும் ஓடினான். பாண்டியன் பாய்ந்து கிம்மைப் பிடித்தான்.

கிம் முதலில் அவர்களை அடையாளமே கண்டு கொள்ளவில்லை. தூக்கத்தில் இருந்து திடீரென்று விழித்தவன் போல திரு திருவென்று விழித்தான்.

"கிம், இங்கே பார்" என்றார் டாக்டர்.

கிம் விழித்துக் கொண்டான். "டாக்டர் சாப்!" என்றான்.

"என்ன ஆயிற்று உனக்கு? ஏன் இப்படி மலங்க மலங்க விழிக்கிறாய்?" என்றான் பாண்டியன்.

"நான் நேற்று மாலை யதிகளுடன் போய் உட்கார்ந்தேன். அவர்களின் இசையைக் கேட்டேன். பிறகு நானும் இசைக்க ஆரம்பித்தேன். பிறகு எதுவுமே ஞாபகம் இல்லை" என்றான் கிம்.

"என்ன நடந்தது? நன்றாக ஞாபகப்படுத்திச் சொல்லு" என்றார் டாக்டர்.

"ஒரு பெரிய கனவு கண்டது மாதிரி இருக்கிறது. அது மிக மிக நீளமான கனவு" என்றான் கிம்.

"என்ன?" என்றார் டாக்டர்.

"அந்தக் கனவில் நான் ஒரே சமயம் ஏராளமான விஷயங்களை செய்ய முடிந்தது. இந்தக் காடு முழுக்க நான்தான் பரவி இருந்தேன். நான் பழங்களைத் தின்றேன். நதி நீரில் ஆட்டம் போட்டேன். விளையாடினேன். வானத்தில் பறந்தேன். தாவரங்களில் ஒட்டி இருந்தேன். பழங்களில் துளை போட்டு உள்ளே சென்றேன். மண்ணுக்கு அடியில்கூட நான்தான் பரவி இருந்தேன்"

"இது என்ன, விசித்திரமான கனவாக இருக்கிறதே?" என்றான் பாண்டியன்.

"சொல்லு" என்றார் டாக்டர் கிம்மிடம்.

"நான் செய்ய முடியாத விஷயமே இல்லை என்று அப்போது தோன்றியது. எனக்கு தெரியாத

விஷயமே இல்லை என்றும் தோன்றியது” என்றான் கிம்.

“சரி, நீ போகலாம்” என்றார் டாக்டர்.

கிம் ஓடிப் போனான்.

“என்ன இது பைத்தியம் மாதிரி உளறுகிறான்?” என்று பாண்டியன் கேட்டான்.

“பனிமனிதர்களின் மனம் எப்படி இயங்குகிறது என்று இப்போது புரிகிறது” என்றார் டாக்டர்.

“எப்படி?” என்றான் பாண்டியன்.

“சொல்கிறேன். அவர்களுக்கு லடாக் மொழி தெரிய வந்தது எப்படி என்பதும் புரிந்து விட்டது” என்றார் டாக்டர்.

மெக்ஸிகோவின் தங்க மலைகள்!

பழங்காலத்தில் மெக்ஸிகோவில் தங்கம் ஏராளமாக கிடைத்தது. எனவே அங்கு வாழ்ந்த அஸ்டெக் இனத்தைச் சேர்ந்த பழங்குடி மக்களுக்கு தங்கம் ஒரு பெரிய விஷயமாகத் தெரியவில்லை. அவர்கள் அதை கல், மண் போன்று மதித்தார்கள். காரணம் அதனால் அவர்களுக்கு எந்தப் பலனும் இல்லை.

1519-ல் கோர்டெஸ் என்ற மாலுமி ஸ்பெயினில் இருந்து மெக்ஸிகோவுக்கு வந்தான். மெக்ஸிகோவில், தங்கம் நிறையக் கிடைக்கும் என்று கேள்விப்பட்டுதான் அவன் வந்தான். தங்கத்துக்காகத்தான் அவ்வளவு தூரம் வந்திருக்கிறான் என்பதை அஸ்டெக் மக்கள் அறிந்திருந்தனர். ஒரு மாட்டு வண்டியின் சக்கரம் அளவுக்கு தங்கத்தைக் கொண்டு சென்று கோர்டெஸுக்குக் கொடுத்தனர்.

அதைக் கண்டதும் கோர்டெஸுக்குப் பேராசை ஏற்பட்டது. அவன் அஸ்டெக் மக்களைக் கொன்று குவித்து மெக்ஸிகோவைக் கைப்பற்றினான்.

தொடர்ந்து முன்னூறு ஆண்டு ஸ்பெயின் நாடு மெக்ஸிகோவின் தங்கத்தைக் கொள்ளையடித்தது. அதற்காக லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள்.

# அத்தியாயம் 37

‘பனிமனிதர்களின் மனம் எப்படிஇயங்குகிறது? என்றான் பாண்டியன்.

“நாம் மனம் என்று சொல்வது எதை?” கேட்டார் டாக்டர்.

“எப்போது பார்த்தாலும் நமக்குள் சிந்தனைகள் ஓடிக் கொண்டே இருக்கின்றன. நாம் எதைச் செய்தாலும் சரி, எங்கு போனாலும் சரி, அந்த சிந்தனைகள் நிற்பதே இல்லை. அந்த சிந்தனைகளின் ஓட்டத்தைத்தான் மனம் என்கிறோம்.”

“அந்தச் சிந்தனைகளை நீங்கள் வெளியே சொல்லாமல் பிறர் அறிந்து கொள்ள முடியுமா?”

“முடியாது.”

“அதாவது அந்தச் சிந்தனைகள் உங்களுக்கு மட்டும் உரியவை. அவைதான் உங்களுடைய மனம் இல்லையா?”

“ஆமாம்” பாண்டியன் கூறினான்.

இவ்வாறு நம்முடைய சொந்த மனம் என்று நாம் கூறுவது நமது மனத்தின் மேல்மட்டத்தை மட்டும்தான். அதற்கு அடியில் மேலும் சில மனங்கள் உள்ளன” என்றார் டாக்டர்.

“அப்படியா?”

“இதை நீங்களே யோசித்துப் பார்க்கலாம். பத்து வருடம் முன்பு நீங்கள் ஒரு நூலைப் படித்தீர்கள். பிறகு அதை மறந்தே விட்டீர்கள். இப்போது அது திடீரென்று ஞாபகத்துக்கு வருகிறது. அப்ப்டியானால் இத்தனை நாள் அது எங்கே இருந்தது?”

“தெரியவில்லை.”

“அது உங்களுக்குள்தானே இருந்தது? எங்கோ மறைந்து இருந்தது அல்லவா? அதாவது உங்களுக்குள் நீங்கள் அறிய முடியாத வேறு ஒரு மனமும் உள்ளது! அதுதான் அடி மனம்” என்றார் டாக்டர்.

“ஆச்சரியம்தான்” என்றான் பாண்டியன்.

“அதற்கும் அடியில் ஒரு ஆழ்மனமும் உள்ளது. அதை சாதாரணமாக நாம் அறிய முடியாது.”

“அதை அறியவே முடியாதா?”

“முழுக்க அறிய முடியாது. ஓரளவுக்கு அறியலாம். நமது கனவுகள் எல்லாமே இந்த ஆழ்மனத்திலிருந்து தான் வருகின்றன.”

“ஆமாம் டாக்டர்.சில சமயம் என் கனவில் எனக்கே தெரியாத விஷயங்கள் கூட வந்து விடுகின்றன” என்றான் பாண்டியன்.

“இந்த ஆழ்மனம் ஒரு மனிதனுக்கு மட்டும் உரியது அல்ல. அது எல்லா மனிதர்களிலும் பரவி இருக்கிறது. மேல் மட்ட மனம் தான் தனித்தனியாக இருக்கிறது” என்றார் டாக்டர்.

“அதாவது எனக்கும் உங்களுக்கும் மற்ற எல்லா மனிதர்களுக்கும் சேர்த்து ஒரே ஆழ்மனம்தான்.

இல்லையா?"

"ஆமாம். சிறிய உயிரினங்களுக்கு ஆழ்மனம் மட்டும்தான் உண்டு. தனித்தனியாக மனம் கிடையாது. உங்கள் மேல் மட்ட மனதை நீங்கள் சொன்னால்தான் நான் அறிய முடியும். ஆனால் பூச்சிக்கு மேல் மட்ட மனம் இல்லை. எனவே அவை ஒன்று போலவே யோசிக்கின்றன. பேசவேண்டிய அவசியமே இல்லை.

"புரிகிறது டாக்டர்! இந்தப் பனி மனிதர்களும் அப்படித்தான் இல்லையா? இவர்களுக்கும் மேல்மட்ட மனம் இல்லை. இவர்கள் அனைவருக்கும் சேர்த்து ஒரே மனம்தான். எனவே இவர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. அவர்கள் சேர்ந்து ஒன்றாகவே யோசிக்கிறார்கள் இல்லையா? என்றான் பாண்டியன்.

"ஆமாம். அதனால்தான் அவர்கள் அத்தனை பேரும் ஒரேசமயம். ஒரே குரலில் பேச முடிகிறது. பூச்சிகள் மட்டும்தான் அப்படிப் பேச முடியும்" என்றார் டாக்டர்.

அப்போது அவர்கள் கால்களுக்குக் கீழே பயங்கரமான பிளிறல் ஒலிகள் கேட்டன. ஏராளமான விலங்குகள் போவது போல அசைவுகள் எழுந்தன.



டாக்டர் உடனே மரங்களின் மேற்பரப்பிலிருந்து கீழே இறங்கினார். பாண்டியனும் இறங்கினான்.

மரங்களுக்கு அடியில் காட்டுக்குள், மிகப் பெரிய யானைகள் சென்றன. அவற்றின் உடல் முழுக்க கனமான, கரிய மயிர் அடர்ந்து தொங்கியது. அவற்றின் தந்தங்கள் மிகவும் நீளமாக வளைந்து காணப்பட்டன. அந்த யானைகள் சாதாரண யானைகளை விட ஐந்து மடங்கு

பெரியவையாக இருந்தன.

"டாக்டர், இது யானை தானா?" என்றான் பாண்டியன்.

"'யானையேதான். புராதனமான, பனியுகங்களில் வாழ்ந்த பனியானை இது. இதற்கு மாமதம் என்று பெயர் இவ்வகை யானைகளின் முழு எலும்புக் கூட்டையே தோண்டி எடுத்திருக்கிறார்கள்" என்றார் டாக்டர்.

"ஆனால் இவற்றின் கால்கள் வித்தியாசமாக இருக்கின்றனவே? டைனோசரின் கால்கள் போல உள்ளன இவை" என்றான் பாண்டியன்.

அந்த மாமதங்களின் கால்களில் மிகப் பெரிய மூன்று விரல்கள் காணப்பட்டன. அவ்விரல்களில் பெரிய நகங்களும் இருந்தன.

"இந்தக் காட்டில் நடமாடுவதற்குக் கால்கள் இப்படி இருந்தாக வேண்டும் என்று படுகிறது" என்றார் டாக்டர்.

மரங்களின் மேற்பரப்பில் மாமதங்கள் போகும்பாதை மரங்களின் அசைவின்மூலம் தெரிந்தது.

"இந்தக் காட்டை நாம் முழுமையாக இன்னும் பார்க்கவில்லை. பனிமனிதர்கள் உதவி செய்தால் பார்த்துவிடலாம்"

"அவர்களிடமே கேட்டுவிடலாம். இப்போது அவர்களுக்கும் லடாக் மொழி தெரிகிறதே" என்றான் பாண்டியன்.

அப்போது இரண்டு விமானங்கள் அவர்களை நோக்கிப் பறந்து வந்தன. அவை கரிய நிறத்தில் இருந்தன. வானில் சறுக்கிப் போகும் கிளைடர் விமானங்கள் அவை.

அருகே வந்த போதுதான் அவை விமானங்களல்ல என்று தெரிந்தது. அவை மிகப் பெரிய பறவைகள்!

அவை வந்து சரிந்து இறங்கின. சிறகுகளை மடக்கிய போதுதான் அவை வௌவால்கள் என்று தெரிந்தது. மிகப் பெரிய வௌவால்கள் அவை.

ஒரு வௌவாலின் மீது பனி மனிதக் குழந்தை உட்கார்ந்திருந்தது. அது பாய்ந்து இறங்கியது. டாக்டரிம் "காட்டைச் சுற்றிப் பார்க்க நீங்கள் விரும்பினீர்கள். அதனால்தான் இவற்றைக் கூட்டி வந்தேன். நீங்கள் இவற்றில் ஏறிப் பறந்து போய்ப் பார்க்கலாம்" என்று கூறியது.

"நாங்கள் நினைத்தது எப்படி உனக்குத் தெரியும்?" என்றான் பாண்டியன்.

பனிக்குழந்தை, "தெரியும் இதில் வியப்படைய என்ன உள்ளது?" என்றது.

இருவரும் அந்த வௌவால்கள் மீது ஏறி அமர்ந்தார்கள்.

"இவற்றை எப்படி ஓட்டுவது?" என்றான் பாண்டியன்.

அவர்கள் வௌவால்களின் கழுத்தில் இருந்த சதையை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டார்கள்.

பறக்கலாம் என்று பாண்டியன் நினைத்தான். அதைச் சொல்வதற்கு வௌவால் எழுந்த பறக்க ஆரம்பித்தது.

டாக்டர் அமர்ந்திருந்த வௌவாலும் கூடவே வந்தது.

அந்த வௌவால் மீது அமர்ந்து போவது கிளைடர் விமானத்தில் பறப்பது போலவே இருந்தது.

கிளைடர் விமானம் என்பது ஒரு பெரிய பட்டம் போன்றது. மிகச் சிறிய இயந்திரம் ஒன்று

அதில் பொருத்தப்பட்டிருக்கும். அந்த விமானத்துடன் ஒரு மனிதர் தன் உடம்பைச் சேர்த்துக் கட்டிக் கொள்ள வேண்டும். பட்டம் போல விமானம் சரிவாகப் பறந்து கிழே விழ ஆரம்பிக்கும். உடனே இயந்திரத்தை ஓட விட வேண்டும். விமானம் பறக்க ஆரம்பிக்கும். ஒரு பட்டத்தைப் பிடித்தபடி பறந்து கொண்டிருப்பது போல இருக்கும் அப்போது.

ஆனால் வௌவால் மீது பறக்கும் போது ஒரு விசித்திரம் இருந்தது. கிளைடர் விமானத்தைக் கைகளாலும் கால்களாலும் கருவிகளை இயக்கித் திரும்ப வைக்க வேண்டும். ஆனால் திரும்ப வேண்டும் என்று நினைத்ததுமே வௌவால் திரும்பியது.

பாண்டியன் கீழே போக வேண்டும் என நினைத்தான். வௌவால் கீழே இறங்க ஆரம்பித்தது. கீழே காடு அடர்ந்து தெரிந்தது. அதன் நடுவே தலையில் வகிடு எடுத்திருப்பது போல ஆறு ஓடுவதும் தெரிந்தது.

உளவியலின் தந்தை
ஆஸ்திரிய நாட்டைச் சேர்ந்த அறிஞர் சிக்மண்ட் ஃபிராய்ட்.
மனிதர்களின் மனம் மூன்று பகுதிகள் உடையது என்று கண்டுபிடித்துச் சொன்னவர்.
நாம் சாதாரணமாக மனம் என்று கூறுவது நமது மேல் மட்ட மனம்தான். இதை ஃபிராய்ட் 'கான்சியஸ்' என்றார்.
கனவுகளில் வெளிப்படுவது நமது அடிமனம். நாம் மறந்து போன விஷயங்களினால் ஆனது இந்த மனம். இதை ஃபிராய்ட், 'சப்கான்சியஸ்' என்றார்.
நமது மனம் மற்ற அனைத்து மனிதர்களின் மனத்துடனும் தொடர்பு கொண்டிருக்கிறது. இதை நாம் அறிவதே இல்லை. இதை ஆழ்மனம் என்று கூறலாம். ஃபிராய்ட் இதை 'அன்கான்சியஸ்' என்றார்.
ஃபிராய்ட் 'நவீன உளவியலின் தந்தை' என்று அழைக்கப்படுகிறார்.

# அத்தியாயம் 38

காட்டுக்கு மேலாக வௌவாலின் மீது அமர்ந்து பறந்தான் பாண்டியன். அந்தக் காடு எத்தனை பெரியது என்று அப்போது தெரிந்தது.

எங்கு பார்த்தாலும் மரக்கூட்டங்கள்தான் இருந்தன. பலவகையான மரங்கள். அவற்றின் மீது பறவைகளும் விலங்குகளும் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தன.

“இங்குள்ள மிருகங்களையும் பறவைகளையம் நாம் பார்த்து முடிக்கவே முடியாது. இங்கு ஆயிரக்கணக்கான பறவைகள் உள்ளன. பல்லாயிரக்கணக்கான விலங்குகள் உள்ளன” என்று பாண்டியன் நினைத்தான்.

தன்னருகே பறக்கும் விசித்திரமான சிறு பறவை ஒன்றை பாண்டியன் கவனித்தான். அது ஒரு கொசு! அந்தச் கொசு ஒரு சிட்டுக் குருவியின் அளவுக்கு பெரியதாக இருந்தது. அக்கொசு ஒரு காய் மீது அமர்ந்து சாறை உறிஞ்சுவதைப் பாண்டியன் கண்டான்.

நதிக்ரையில் பொன்னிறமான சேற்றுப் பரப்பு காணப்பட்டது. அங்கு இறங்கலாம் என்று பாண்டியன் நினைத்தான். உடனே வௌவால் அங்கு சென்று இறங்கியத. டாக்டரும் அவனருகே வந்து இறங்கினார். வௌவால்கள் அவர்களை விட்டுவிட்டு பறந்து சென்றன.

“நாம் திரும்பிப்போக வேண்டும் என்று நினைத்த உடனே அவை மீண்டும் வந்து விடும்”என்றார் டாக்டர்.

ஆற்றின் கரையில் கனமான சேறு காணப்பட்டது. அந்தச் சேற்றில் முயல் அளவுக்கு இருந்த சிறு பிராணிகள் ஏராளமாக முண்டியடித்து கும்மாளமிட்டன.

“பெருச்சாளிகளா?” என்றான் பாண்டியன்.

“அடடா!” என்று டாக்டர் கூவினார்.

பாண்டியன் கூர்ந்து பார்த்தான். அவனுக்கு வியப்பு தாளவில்லை. காரணம் அவை யானைகள்! அவற்றுக்கு யானை போலவே துதிக்கைகளும் கால்களும் இருந்தன. சில வற்றுக்கு கொம்புகளும் இருந்தன. அவை அச்சு அசலாக யானை மாதிரியே இருந்தன.

“பொம்மை யானைகள் போல இருக்கின்றன” என்றான் பாண்டியன்.

பாண்டியன் ஒரு யானையைத் தூக்கினான். அது முயல் போலத் திமிறியது. தன் சிறிய மத்தகத்தால் அவனை முட்டியது. துதிக்கையைத் தூக்கிப் பிளிறியது. மிக மெலிதாகத்தான் அந்த ஒலி கேட்டது.

“அது பயந்து விட்டது! அதைக் கீழே விட்டுவிடுங்கள்” என்றார் டாக்டர்.

பாண்டியன் யானையைக் கீழே விட்டான். அது வாலைச் சுழற்றியபடி ஓடிப்போய் மற்ற யானைகளுடன் சேர்ந்துகொண்டது. யானைகள் காதுகளை ஆட்டியபடி கூட்டம் கூட்டமாகச் சேற்றில் விளையாடின. சில யானைகள் நீரில் நீந்தி விளையாடின.

டாக்டர் ஒரு பாறை மீது அமர்ந்தார். பாண்டியன் இன்னொரு பாறை மீது அமர்ந்து கொண்டான்.

“எனக்கு இங்கு எதுவுமே புரியவில்லை டாக்டர். எப்படி நாம் நினைப்பவை எல்லாம் பனிமனிதர்களுக்குத் தெரிகிறது?” என்றான் பாண்டியன்.

“நம்முடைய உடல் எவ்வாறு பல லட்சம் ஆண்டுகளாக பரிணாமம் பெற்று மாறி வந்திருக்கிறது. அதே போல நமது மனமும் பரிணாம் அடைந்திருக்க வேண்டும் அல்லவா?” என்றார் டாக்டர்.

“ஆமாம். அப்படியானால் எல்லா மனிதர்களும் பழங்காலத்தில் இந்தப் பனிமனிதர்களைப் போன்று ஒரே மனம் உடையவர்களாக இருந்தார்களா?” என்றான் பாண்டியன்.

“இருக்கலாம். பரிணாம வளர்ச்சி அடையாத எளிய உயிர்களான பூச்சிகள் தான் ஒரே மனதுடன் உள்ளன. நமது தனித்தனியான மனம் என்பது படிப்படியாக நமக்குள் உருவாகி வந்தது தான்...” டாக்டர் தொடர்ந்து பேசினார்.

“...நாகரிக வளர்ச்சி அடையாத பல பழங்குடி மக்களை விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். அவர்கள் மொழியில் நான் என்ற வார்த்தையே கிடையாது. காரணம் அப்படி அவர்கள் தங்களைப் பிரித்துப் பார்ப்பதே இல்லை” என்றார் டாக்டர்.

“அந்தத் தனி அடையாளம் எப்படி மனிதனால் ஏற்பட்டது?” என்றான் பாண்டியன்.

“பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதன் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தான். அப்போது அவனுக்கு நான் என்ற உணர்வு இருக்கவில்லை. பிறகு உணவுக்காக அவன் தனித்தனியாகப் போக ஆரம்பித்தான். அப்போது அவன் தனித்தனியாக யோசிக்க வேண்டியிருந்தது. அவ்வாறு படிப்படியாகத் தனி மனம் உருவாகி வந்தது” என்றார் டாக்டர்.

பாண்டியன் குறுக்கிட்டு, “அதன் பிறகுதான் மனிதர்கள் தனித்தனியாக ஆசைப் பட ஆரம்பித்தார்கள். தனித்தனியாகப் பொருட்களை வைத்துக் கொள்ள ஆரம்பித்தார்கள் இல்லையா டாக்டர்?” என்றான்.

“ஆமாம். இதெல்லாம் பனிமனிதனின் பரிணாம வளர்ச்சியின் ஒரு விளைவுதான். பிறகு மனிதர்கள் உலகத்தையே பங்கு போட்டுக் கொண்டார்கள்” என்றார் டாக்டர்.

“இந்தப் பனிமனிதர்கள் எதையுமே சொந்தமாக வைத்துக் கொள்ளவில்லை” என்றான் பாண்டியன்.

“ஆமாம்.காரணம் இவர்களுக்கு மேல்மனமே இல்லை. நான் என்ற உணர்வே இல்லை. ஆழ்மனம் மட்டும்தான் உள்ளது’ என்றார் டாக்டர்.

“அப்படியா?” என்றான் பாண்டியன்.

“ஆமாம். கிம் அன்று மாலை, அவர்களுடன் போய் உட்கார்ந்து பாடினான் இல்லையா? அப்போது அவனுடைய ஆழ்மனம் அவர்கள் ஆழ்மனத்துடன் கலந்துவிட்டது. உடனே அவர்களுக்கு அவன் மொழியும் தெரிந்துவிட்டது” டாக்டர் கூறினார்.

“ஆனால் நம்மால் அப்படி அவர்களுடன் கலக்க முடியவில்லை” என்றான் பாண்டியன்.

“ஆமாம். அதனால்தான் அவர்களுக்கு நமது மொழி தெரியவில்லை. பனிமனிதர்களுக்கு இங்குள்ள எல்லா உயிரினங்களுடனும் பேசாமலேயே உரையாட முடிகிறது” என்றார் டாக்டர்.

“எப்படித் தெரியும்?” என்றான் பாண்டியன்.

“நாம் நினைப்பதெல்லாம் பனிமனிதர்களுக்குத் தெரிகிறது. அதை அவர்கள் இந்த வௌவால்களுக்கு சொல்கிறார்கள்” டாக்டர் கூறினார்.

“அப்படியானால் இங்குள்ள எல்லா உயிரினங்களுடனும் அவர்களுடைய ஆழ்மனம் கலந்திருக்கிறது இல்லையா?” பாண்டியன் கேட்டான்.

“ஆமாம். அதுதான் ஆச்சரியமாக உள்ளது. ஆழ்மனம் என்றால் மனிதர்களின் ஆழ்மனம் என்றுதான்உளவியலாளர்கள் குறிப்பிடுகிறார்கள். மிருகங்களின் ஆழ்மனதை அவர்கள் கணக்கிடுவதில்லை” என்றார் டாக்டர்.

அப்போது பாண்டியன் மிக வியப்பூட்டும் ஒன்றை பார்த்தான். மேற்கு திசையில் பனிமலையில் இருந்து ஒரு கழுகு பறந்து வந்தது.

ஆனால் அது மிக மிகப் பெரிய கழுகு! மேற்கு திசையையே அது நிரப்பிவிட்டது!

“டாக்டர், இது என்ன விந்தை!” என்று பாண்டியன் கூவினான்.

அந்தக் கழுகு பற்பல கிலோமீட்டர் அகலம் உடையதாக இருந்தது. பெரிய மலைகளைக் கூட அது தன் கால்களால் தூக்கிச் சென்று விடும் என்று தோன்றியது!

குழந்தை எப்போது தன்னை அறிகிறது?
உளவியல் அறிஞர்கள் குழந்தையின் மனம் பற்றி ஆராய்ச்சி செய்தார்கள். இவர்களில் ‘ழாக் லக்கான்’ என்ற அறிஞர் முக்கியமானவர்.
குழந்தைக்கு பதினெட்டு மாதம் வரை ‘நான்’ என்ற உணர்வே இல்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். அதுவரை குழந்தை தன்னை மற்ற அனைத்து மனிதர்களிடமும் பொருட்களிடமும் சேர்த்துத்தான் புரிந்து கொள்கிறது.
அதாவது ஒரு குழந்தையின் அருகே உள்ள மேஜையை நாம் அடித்தால் தன்னை அடித்ததாகவே அந்தக் குழந்தை நினைக்கும்!
பதினெட்டு மாதம் கழித்து குழந்தை தன் கையையும் காலையும் பார்த்து அடையாளம் கண்டு கொள்கிறது. அப்போதுதான் ‘நான்’ என்ற நினைப்பு ஏற்படுகிறது அதற்கு.

# அத்தியாயம் 39

அந்த வானளாவிய கழுகு வேகமாக வந்தது. அதன் சிறகுகள் இரண்டு மேகங்கள் போலக் கருமையாகத் தெரிந்தன.

பிறகு அந்தக் கழுகு மறைந்தது.

"டாக்டர். அது எங்கே போயிற்று" என்றான் பாண்டியன்.

"இருங்கள்" என்றார் டாக்டர். பிறகு தலையை வருடியபடியோசித்தார். அவர் முகம் மலர்ந்தது.

"வாருங்கள். ஒரு விந்தையைக் காட்டுகிறேன்" என்றார்.

உடனே வௌவால்கள் திரும்பி அவர்களிடம் வந்து சேர்ந்தன. அவர்கள் அவற்றின் மீது ஏறிக் கொண்டார்களா. அவை பனிமலை நோக்கிப் பறந்து சென்றன.

'டாக்டர் இங்கிருந்து தானே அந்த பிரமாண்டமான கழுகு பறந்து வந்தது?" பயத்துடன் கேட்டான் பாண்டியன்.

"பயப்பட வேண்டாம்"என்றார் டாக்டர்.

அவர்கள் வானில் எழுந்தார்கள். பனிமலையை நோக்கி நெருங்கிச் சென்றார்கள். அந்தப் பனிமலைகளின் சரிவுகள் பெரிய கிண்ணமொன்றின் உட்பக்கக் குழிவு போல இருந்தன. வெண்பனி அவற்றில் பரவி இருந்தது. எனவே அவை கண்ணாடி போல காணப்பட்டன.

அந்த மலைச் சரிவை வௌவால்கள் நெருங்கிய போது பாண்டியன் ஒரு அற்புதக் காட்சியைக் கண்டான்.

அவனுடைய பிம்பம் அந்த மலையின் மீது மிகப் பிரமாண்டமாக பிரதிபலித்தது. மலையளவுக்குப் பெரிய பிம்பம் அது.

பாண்டியனுக்கு விஷயம் புரிந்து விட்டது. அந்த மலை ஒரு பெரிய குழி ஆடி மாதிரி இருந்தது. குழி ஆடியின் மிக அருகே நாம் சென்றால் அது நம்மை பூதக் கண்ணாடி மாதிரி மிகப் பெரியதாகக் காட்டும்.

பாண்டியன் தன் கைகளை அந்த பிம்பத்தில் பார்த்தான், அவனுடைய கை ஒரு பெரிய மண்மேடு போல தெரிந்தது. கையில் உள்ள ரோமங்கள் மரங்கள் போலத் தெரிந்தன. ஏரியின் வரப்பில் வரிசையாகக் கரிய பனை மரங்கள் நிற்பது போல இருந்தது அது.

பாண்யடியனின் கண்கள் பெரிய குளங்கள் போலத் தெரிந்தன. அவன் புருவங்கள்அந்தக் குளத்தின் மேடான வரப்பு போல இருந்தன. அவன் இமை மயிர்கள் குளத்தின் கரையில் உள்ள பனை மரங்கள் போலத் தெரிந்தன.

அந்தக் குளங்களில் வெண்ணிறமான நீர் நிரம்பியிருப்பது போலத் தெரிந்தது. அது தன் வெண் விழிப்படலத்தின் பிம்பம் என்று பாண்டியன் அறிந்தான்.

அந்த வெண்ணிற நீரின் நடுவே ஒரு கரிய நிறமான பாறை கிடந்தது. அது அசைந்தாடியது. அது தன் கருவிழியின் பிம்பம் என்று பாண்டியனுக்குத் தெரிந்தது.

அந்தக் கரிய பாறை மீது கண்ணாடியைப் பதித்தது மாதிரி காணப்பட்டது. அது தன் கண்மணி என்று பாண்டியன் புரிந்து கொண்டான்.

அந்தக் கண்ணாடியில் பாண்டியன் தன் சிறிய பிம்பத்தைக் கண்டான். வௌவால் மீது ஏறி அவன் பறப்பது அதில் தெரிந்தது.

பாண்டியன் தன் பிம்பத்தையே மீண்டும் பார்த்தான். விலகிச் சென்று அதைப் பார்த்தான். பிறகு அருகே சென்று பார்த்தான்.

அந்த பிரமாண்டமான பிம்பத்திலிருந்து தன் பார்வையை விலக்கவே பாண்டியனால் முடியவில்லை. அவன் மனதில் வேறு நினைப்பே இருக்கவில்லை.

தன்னுடைய உதடுகள் ஒரு செம்மண் வயல் போலத் தெரிவதை அவன் கவனித்தான்.

அவனுடைய மூக்குத் துளைகள் இரண்டு பெரிய குகைகள் போல இருந்தன. அவற்றுக்குக் கீழே அவனுடைய மீசை பெரிய காடு மாதிரி இருந்தது.

பாண்டியன் மீண்டும் மீண்டும் அதைப் பார்த்தபடியே இருந்தான்.

டாக்டர் “பாண்டியன், வாருங்கள் கீழே போகலாம்” என்று கூப்பிட்டார்.

பாண்டியன் காதில் அது விழவே இல்லை.

“பாண்டியன், என்ன இது? கீழே போகலாம் வாருங்கள்.”

பாண்டியன் அதைச் சற்றும கவனிக்கவே இல்லை.

“பாண்டியன் உங்களுக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? வாருங்கள் கீழே போகலாம் ”- கூவினார் டாக்டர்.

பாண்டியன் எதையுமே கேட்கவில்லை. அவன் தன் பிம்பத்தை மட்டுமே கவனித்தான். அதிலேயே ஈடுபட்டிருந்தான். டாக்டர் எவ்வளவு முயன்றபோதிலும் கூட அவன் கவனத்தைத் திருப்ப முடியவில்லை.

டாக்டரின் வௌவால் கீழே இறங்கியது. கீழே சென்று மரக்கிளைகள் மீது நின்ற படி டாக்டர் பாண்டியனையே கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்.

பாண்டியன் அந்த பிம்பத்தை நோக்கிப் பறப்பதும் விலகுவதும் மீண்டும் நெருங்குவதுமாக இருந்தான்.

இனிப்பான பண்டத்தை ஈ மொய்ப்பது போல அவன் காணப்பட்டான்.

பாண்டியன் ஏறிப் பறந்த வௌவால் மெல்ல மெல்லக் களைப்படைந்து கீழே சரிய ஆரம்பித்தது.

பட்டம் கீழிறங்குவது போல அந்த வௌவால் கீழே வந்தது. பாண்டியனைச் சரித்துக் கீழே போட்டது.

பாண்டியன் தொப்பென்று மரக்கூட்டங்களின் மீது விழுந்தான். அந்த அதிர்ச்சியில் அவன் விழித்துக் கொண்டான்.

உடனே பாண்டியன் பதறி எழுந்தான். தன் கரங்களைத் தூக்கிப் பார்த்தான். தன் கால்களைக் குனிந்து பார்த்தான்.

“இல்லை! இது நான் இல்லை! நான் மிகவும் பெரியவன்! கீழே விழுந்த போது சிறியனவாகி விட்டேன்!” என்று பாண்டியன் கதறி அழுதான்.

டாக்டர் ஓடிச்சென்று பாண்டியனைப் பார்த்தார், “பாண்டியன் என்ன இது? ஏன்

உளறுகிறீர்கள?” என்றார்.

பாண்டியன் பைத்தியக்காரன் மாதிரி விழித்தான்.

“டாக்டர்,என் உடம்பு சிறியதாகி விட்டது! நான் எறும்பாக மாறிவிட்டேன்!” என்று அழுதான்.

“பாண்டியன், பாண்டியன்” என்று டாக்டர் அவனை உலுக்கினார்.

பாண்டியன் உடனே விழித்துக் கொண்டான். அவன் எங்கு இருக்கிறான் என்று புரிந்தது அவனுக்கு.

“அந்த பெரிய பிம்பம் உங்களைக் குழப்பிவிட்டது பாண்டியன்” என்றார் டாக்டர்.

“ஆமாம். மிகப் பயங்கரமான அனுபவம் அது!”

“அங்கு பறக்கும் போது நீங்கள் எதைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தீர்கள்?”

“எதைப் பற்றியும் நினைக்கவில்லை டாக்டர். நான் நான் நான் என்று என் மனம் திரும்பத் திரும்பச் சொன்னபடியே இருந்தது.”

“நீங்கள் அப்படியே மயங்கிவிட்டீர்கள். அந்த வௌவால் மட்டும் உங்களைக் கீழே தள்ளாவிட்டால் நீங்கள் அங்கேயே இருந்திருப்பீர்ள். சாப்பிடாமல் தூங்காமல் அங்கேயே இருந்து செத்திருப்பீர்கள்.”

“நல்ல வேளை தப்பித்தேன்.”

“நாமெல்லாம் பெரும்பாலான நேரங்களில் நம்மைப் பற்றித்தான் நினைத்தபடி இருக்கிறோம்.”

பாண்டியனுக்குக் களைப்பாக இருந்தது. அவர்கள் சிறிது நேரம் அமர்ந்து பழங்கள் சாப்பிட்டார்கள். பிறகு நடந்து சென்றார்கள்.

ஒரு இடத்தில் ஏராளமான பனி மனிதர்கள் விளையாடியபடி இருந்தார்கள். ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் சேர்ந்து கும்மாளமிட்டு விளையாடினார்கள்.

அந்த விளையாட்டு சின்னஞ்சிறு குழந்தைகள் விளையாடுவது போலவே இருந்தது. அதில் போட்டி இல்லை. எனவே வெற்றியோ தோல்வியோ இல்லை.

சும்மா சிரித்த படி குதித்துக் குதித்து விளையாடினார்கள். குட்டிக்கரணம் அடித்தார்கள். பிடித்துத் தள்ளிக் கொண்டார்கள். ஒரே மகிழ்ச்சியும், கும்மாளமுமாக இருந்தது.

“எந்நேரமும் விளையாட்டு. விளையாட்டு, விளையாட்டு வேறு எந்தச் செயலையும் இவர்கள் செய்வதே இல்லை” என்றார் டாக்டர்.

பாண்டியனுக்கு ஏக்கமாக இருந்தது. சிறு குழந்தையாக இருந்தபோதுதான் அவன் அப்படி மகிழ்ச்சியாக விளையாடினான். பிறகு பள்ளிக் கூடப் படிப்பு வந்து விட்டது.

“இவர்களுக்குத் தங்களைப் பற்றிய நினைப்பே இல்லை. அது தான் இத்தனை உற்சாகம்” என்றார் டாக்டர்.

அவர்கள் காட்டின் உட்பகுதிக்கு நடந்தார்கள்.

பனிக்கட்டியை லென்சாக மாற்றலாம்!
ஒரு சிறு கிண்ணத்தில் சுத்தமான நீரை எடுத்துக் கொள்ளவும். அந்தக் கிண்ணத்தை அப்படியே குளிர்சாதனப்பெட்டியில் வைக்கவும்.
மறுநாள் அந்தத் தண்ணீர் பனிக்கட்டியாக உறைந்திருக்கும். கிண்ணத்தை சூடான நீரில் ஒரு சில நொடி வைக்கவும். பிறகு அதைத் தலைகீழாகக் கவிழ்த்து லேசாகத் தட்டவும். பனிக்கட்டி வெளியே வந்து விழும்.

அந்தப் பனிக்கட்டி இட்டிலியின் வடிவில் இருக்கும். நாம் அதை பூதக் கண்ணாடி மாதிரி பயன்படுத்தலாம். அதன் வழியாகப் பார்த்தால் பொருள்கள் பெரிதாகத் தெரியும். அந்தப் பனிக்கட்டியைக் குவிலென்சாகப் பயன்படுத்திப் பஞ்சை வெயிலில் வைத்து எரிக்கலாம்!

# அத்தியாயம் 40

காட்டின் நடுவே ஏராளமான பனிமனிதக் குழந்தைகள் விளையாடியபடி இருந்தன. அவற்றின் நடுவே கிம் இருந்தான்.

அவர்கள் விசித்திரமான ஒரு மிருகத்துடன் விளையாடினார்கள். அதற்கு துதிக்கை இருந்தது. அதன் வாயும் முகமும் சிங்கம் போல இருந்தன. ஆனால் அதன் உடல் நீளமாக பாம்பு போல இருந்தது. ஆனால் அதன் கால்கள் சிங்கத்தின் கால்கள் போல இருந்தன. அதற்கு சிறிய சிறகுகளும் இருந்தன.

சிறகுகளை வீசியபடி அம்மிருகம் எம்பிக் குதித்தது. துதிக்கையை வீசியபடி விளையாடியது.

அதை உடனே பாண்டியன் அடையாளம் கண்டு கொண்டான்.

“டாக்டர் இது என்ன தெரியுமா? இது யாளி! எங்களூரில் கோயில்களில் இதைக் கல்லில் செதுக்கி வைத்திருப்பார்கள்.”

“பழங்கால மிருகம்!”

“சிங்கம் மாதிரி இருக்கிறதே?” என்றான் பாண்டியன்.

“இங்குள்ள எல்லா மிருகங்களும் தாவரங்களை மட்டுமே உண்பவை. இங்கு பிற உயிரினங்களை உண்ணக்கூடிய உயிரினமே இல்லை” என்றார் டாக்டர்.

“ஆமாம். அதனால்தான் இங்கு எதற்குமே பயப்பட வேண்டியதில்லை. கொசுக்கடிகூட இங்கு இல்லை!” பாண்டியன் சொன்னான்.

“பரிணாமத்தின் மிக ஆரம்பக் காலத்தில் பூமி மீது எல்லா உயிரினமும் இவ்வாறு இருந்திருக்கலாம். பிறகு உணவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்ட போது தான் உயிரினங்கள் ஒன்றையொன்று சாப்பிட ஆரம்பித்தன. உதாரணமாக இப்போதுகூட நம் ஊரில் குரங்குகள் போதிய தாவர உணவு கிடைக்காத போது பூச்சிகளைப் பிடித்துத் தின்ன ஆரம்பித்து விடும்.” டாக்டர் கூறினார்.

“இங்குதான் உணவுக்குப் பஞ்சமே இல்லையே?” என்றான் பாண்டியன்.

“இங்குள்ள உயிரினங்களின் கழிவுகளை சோதித்துப் பார்த்தேன். எல்லா உயிரினங்களும் சாணிதான் போடுகின்றன. எதுவுமே மலம் கழிப்பது இல்லை” என்றார் டாக்டர்.

“மலத்துக்கும் சாணிக்கும் என்ன வித்தியாசம்?” என்றான் பாண்டியன்.

“தாவரங்களை உண்ணும் பசு. குதிரை போன்ற உயிரினங்களின் இரைப்பை வேறு விதமானது. அங்கு உணவு சென்று சேர்ந்து அது எச்சிலோடு சேர்ந்து நொதிக்க ஆரம்பிக்கிறது. அவற்றின் இரைப்பையில் ஒரு குறிப்பிட்ட வகை பாக்டீரியாக்கள் உள்ளன. அந்த பாக்டீரியாக்கள் உணவைப் பலவிதமான சத்துக்களாகப் பிரிக்கின்றன. அந்தச் சத்துக்கள் குடலுக்குப் போகின்றன. குடல் அவற்றை எடுத்து உடலுக்கு அனுப்புகிறது.”

“மற்ற உயிரினங்களுக்கு எப்படி செரிமானம் நடை பெறுகிறது?” என்று கேட்டான் பாண்டியன்.

“மனிதர்களைப் போன்ற ஊன் உண்ணும் மிருகங்களுக்கு வயிற்றில் பலவிதமான செரிமான நீர்கள் சுரக்கின்றன. அவற்றில் பலவிதமான அமிலங்கள் உள்ளன. அந்த அமிலங்கள்தான் உணவைச் சத்துக்களாகப் பிரிக்கின்றன.” டாக்டர் விளக்கினார்.

“அதனால் தான் நமது மலம் இத்தனை நாற்றம் அடிக்கிறதா?”

“ஆமாம். இங்கு மலமே இல்லை” என்றார் டாக்டர்.

அவர்கள் இருவரும் வெயிலில் மல்லாந்து படுத்துக் கொண்டார்கள்.

அப்போது கிம் வந்து அவர்கள் அருகே அமர்ந்தான். அவன் தன் உடைகளை அணிந்திருந்தான்.

டாக்டர், “என்ன கிம். மீண்டும் உடைகளை அணிந்திருக்கிறாய்?” என்று கேட்டார்.

“நாம் இங்கிருந்து திரும்பி விடலாம். டாக்டர் சாப்” என்றான் கிம்.

“ஏன்? இந்த இடம் சலித்து விட்டதா?” என்று கேட்டார் டாக்டர்.

“இது தர்ம ஸ்தலம். இங்கு சலிப்போ தூக்கமோ இல்லை. ஆனால் நாம் மனிதர்கள். நம்மை பூமியில் வாழும் விதமாகத்தான் புத்தர் படைத்திருக்கிறார். பூமியில்தான் நமது கடமைகள் உள்ளன” என்றான் கிம்.

டாக்டர் யோசித்தார். பிறகு, உண்மைதான். நாம் கிளம்பி விடுவோம்” என்றார்.

“எனக்கு இங்கிருந்து போகவே மனம் இல்லை” என்றான் பாண்டியன்.

“அப்படிச் சொன்னால் முடியுமா? இந்தக் காட்டை எத்தனை வருடங்கள் ஆனாலும் நாம் பார்த்து முடிக்க முடியாது. நாம் போகலாம்” என்றார் டாக்டர்.

பாண்டியன் தயக்கத்துடன் எழுந்தான். “போக வேண்டும் என்று நாம் நினைத்தாலே போதும் அது யதிகளுக்குத் தெரிந்து விடும்” என்றான் பாண்டியன்.

“ஆமாம். நாம் போவதில் அவர்களுக்கு சம்மதம் இருக்க வேண்டும். கிம், நீ வந்த வேலை முடிந்து விட்டதா? என்றார் டாக்டர்.

“ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?” என்று கிம் கேட்டான்.

“நாம் இங்கு வருவதை பனிமனிதர்கள் விரும்பினார்கள். அதற்குக் காரணம் நானோ பாண்டியனோ அல்ல. அதை இங்கு வந்ததுமே புரிந்து கொண்டேன். நீ இங்கு வருவதையே அவர்கள் விரும்பினார்கள்” என்றார் டாக்டர்.

“அது உண்மைதான். என்னை மன்னித்து விடுங்கள். உங்களிடம் சில விஷயங்களை நான் மறைத்து விட்டேன்” என்றான் கிம்.

“அதையும் நான் ஊகித்தேன். பனிமனிதர்களைப் பார்த்ததும் நேராகச் சென்று அவர்களை வணங்கினாய். அவர்களுடன் சேர்ந்து கொண்டாய். அதவாது முன்பு இங்கு நீ வந்த போது உனக்கு நல்ல சுய நினைவு இருந்திருக்கிறது.”

“ஆம்.நான் எல்லாவற்றையும் கூறிவிடுகிறேன். என்னை என் தந்தை உண்மையில் அவராகவே கைவிட்டுச் செல்லவில்லை.”

“உண்மையாகவா?” என்றான் பாண்டியன் வியப்புடன்.

“ஆமாம். நானும் எங்கள் குலமும் காட்டில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தோம். அப்போது யாரோ எங்களை அழைப்பது போல இருந்தது. அந்தக் குரலை நாங்கள் பின்தொடர்ந்து சென்றோம். அப்படியே பனிமலைக்கு வந்து விட்டோம். அங்கு வந்ததும் என்னை உற்றுப் பார்ப்பது போல இருந்தது. உடனே என் உடம்பு சூடாக ஆரம்பித்தது. எனக்கு கடுமையான

காய்ச்சல் ஏற்பட்டது. என் தந்தைக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை...”

“அப்போது என்ன நடந்தது?” பாண்டியன் குறுக்கிட்டான்.

“அப்போது பனிப்பாறைக்கு அப்பாலிருந்து ஒரு பெரிய குரல் கேட்டது. என்னை விட்டு விட்டு ஓடும் படி அது கூறியது. உடனே என் கூட்டத்தினர் என்னை விட்டுவிட்டு ஓடி விட்டார்கள்” என்றான் கிம்.

“அதாவது உன்னைப் பனிமனிதன் திட்டம் போட்டு இங்கே கூட்டி வந்தான்” என்றார் டாக்டர்.

“ஆமாம்... இங்கு வந்ததும் என்னை அவர்களுடன் அமர வைத்தார்கள். ஆனால் என்னால் அவர்களுடன் கலக்க முடியவில்லை. எனக்கு என் அம்மாவின் நினைவுதான் வந்தது. அம்மாவிடம் திரும்பிச் செல்ல வேண்டும் என்று நினைத்தேன். உடனே யதிகள் என்னைத் திரும்பக் கொண்டு வந்து விட்டு விட்டார்கள்” என்றான் கிம்.

“அதன் பிறகுதான் பாண்டியன் உன்னைக் காப்பாற்றினார் இல்லையா?” என்று கேட்டார் டாக்டர்.

“ஆமாம். அப்போதுதான் எனக்கு ஒரு விஷயம் தெரிந்தது. என்னை என் அப்பா அம்மா இருவருமே உதறி விட்டு விட்டார்கள். என்னைத் திரும்பச் சேர்த்துக் கொண்டால் அவர்களுடைய குலம் அழிந்துவிடும் என்று அவர்கள் பயப்பட்டார்கள். அவர்களுடைய குலம்தான் என்னை விட முக்கியமானது என்று நினைத்தார்கள்” என்றான் கிம்.

“எனவே நீ மீண்டும் பனிமனிதர்களிடம் திரும்பிவிட முடிவு செய்தாய் இல்லையா?” என்றார் டாக்டர்.

“ஆமாம். ஆனால் என்னால் தனியாக இங்கு வர முடியாது. ஆகவேதான் உங்களுடன் சேர்ந்து கொண்டேன்” என்கிறார் கிம்.

“நீ இங்கு வந்த வேலை முடிந்துவிட்டதா?” என்றார் டாக்டர்.

“ஆம். முடிந்து விட்டது” என்றான் கிம்.

“அப்படியானால் நாம் கிளம்பலாம்” என்று டாக்டர் சொன்னார்.

உடனே மூன்று வௌவால்கள் பறந்து வந்தன.

“யதிகள் அனுமதி அளித்து விட்டார்கள். நாம் போகலாம்” என்றான் கிம்.

இந்திய ஞானிகளின் கூற்றுப்படி நான்கு மனங்கள் உண்டு!
ஃபிராய்ட் மூன்று வகை மனங்கள் இருப்பதைத்தான் கண்டுபிடித்தார். ஆனால் அதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்திய ஞானிகள் நான்கு வகை மனங்கள் உண்டு என்று கண்டுபிடித்துக் கூறினார்கள்.
மேல் மனதை இந்திய ஞானிகள் ‘ஜாக்ரத்’ என்கிறார்கள். அடிமனதை ‘ஸ்வப்னம்’ என்கிறார்கள். ஆழ் மனதை ‘சுஷுப்தி’ என்கிறார்கள்.
நான்காவது மனம் மேலும் ஆழமும் விரிவும் உடையது. இதன் பெயர் ‘துரியம்’. இது மிருகங்கள், பறவைகள், பூச்சிகள், கிருமிகள் உட்பட எல்லா உயிரினங்களின் மனங்களும் அடங்கியதாகும்.
துரியத்தை பௌத்தர்கள் ‘ஆலய விஞ்ஞானம்’ என்கிறார்கள்.

# அத்தியாயம் 41

கிம் பாண்டினிடமும் டாக்டரிடமும் சில விதைகளைக் கொடுத்தான். அவை பதாம் பருப்பு போல இருந்தன.

“இவை இங்குள்ள மிக அபூர்வமான மூலிகை ஒன்றின் விதைகள். இவற்றை சாப்பிட்டால் பசியோ தாகமோ இருக்காது. எல்லாவகையான சத்துக்களும் இந்த மூலிகை விதைகளில் உண்டு’ என்றான்.

பாண்டியனும் டாக்டரும் அவற்றை வாயிலிட்டு மென்றார்கள். அவை மின்ட் மிட்டாய் போல இருந்தன.

கிம்மிடம் ஒரு சிறு பை இருந்தது. அதில் நிறைய மூலிகை விதைகளை அவன் வைத்திருந்தான். “நாம் ஊருக்குச் சென்று சேரும் வரை சாப்பிடத் தேவையான விதைகள் இதில் உள்ளன” என்றான் கிம்.

பாண்டியன் ஓடிப்போய் ஒரு பெட்டியை எடுத்து வந்தான்.

“எங்கிருந்து கிடைத்தது இது? நாம் ஆற்றில் விட்டு விட்ட பையல்லவா இது?” என்றார் டாக்டர் வியப்புடன்.

“ஆமாம். இதை நான் ஆற்றின் கரையில் கண்டு எடுத்தேன்” என்றான் பாண்டியன்.

“இதில் என்ன இருக்கிறது?” என்றார் டாக்டர்.

“இங்கு நான் சேகரித்த பொருட்கள் பூச்சிகள், பூக்கள், கற்கள், இலைகள் எல்லாம் உள்ளன” என்றான் பாண்டியன்.

அவர்கள் வௌவால்கள் மீது ஏறினார்கள். அவை பறந்து எழுந்தன.

“யதிகளிடம் விடை பெற வேண்டாமா?” என்று பாண்டியன் கேட்டான்.

“அவர்களுக்கும் தெரியும். நமக்கு எப்படி விடைகொடுப்பது என்று” என்றான் கிம்.

அவர்கள் வானத்தில் ஏறினார்கள். எதிரே தெரிந்த பனி மலையின் கண்ணாடிப் பரப்பில் ஒரு பனிமனிதனின் முகம் மிகப் பெரிதாகத் தெரிந்தது. அவன் கண்கள் இரண்டு நீலநிறக் குளங்கள் போல இருந்தன கண்களாலேயே அவன் அவர்களுக்கு விடை அளித்தான்.

இன்னொரு மலையில் இன்னொரு முகம் தெரிந்தது. வேறு ஒரு மலையில் வேறு பனிமனிதனின் முகம் தெரிந்தது. முகக் குறிப்பால் அவர்கள் அம்மூவரையும் வழியனுப்பினார்கள்.

அவர்கள் பறக்கும் தோறும் பார்வையின் கோணம் மாறுபட்டது. அதற்கேற்ப வேறு வேறு பனிமனிதர்களின் முகங்கள் மலைச்சரிவில் விரிந்தன.

அது மலைகளே முகங்களாக மாறி விடை தருவது போன்று இருந்தது.

அவர்கள் உறைந்த கடலைத் தாண்டியதும் வௌவால்கள் தரையில் இறங்கின. அவர்கள் இறங்கிக் கொண்டார்கள். வௌவால்கள் திரும்பிச் சென்றன.

“ஒரு கனவு விழித்தது போல இருக்கிறது!” என்று பாண்டியன் கூறினான்.

“ஆமாம் எத்தனை அற்புதமான கனவு! எத்தனை மகத்தான கனவு!” என்றார் டாக்டர்.

“கனவுகள் வெளியே இருந்து வருபவை அல்ல. அவை நமக்குள்ளேதான் இருக்கின்றன” என்றான் கிம்.

“நீ இங்கு வந்த நோக்கம் நிறைவேறியது என்றாயோ அது என்ன நோக்கம் என்று கூற முடியுமா?” என்று பாண்டியன் கேட்டான்.

“அதை எளிதாக விளக்கிவிட முடியாது. மனிதர்களால் அடையக் கூடிய ஞானத்திலேயே மிகச் சிறந்த ஞானத்தை நான் இங்கு அடைந்தேன்” என்றான் கிம்.

டாக்டர் “புரியவில்லை” என்றார்.

தியானத்தில் மூன்று நிலை உண்டு. முதல் நிலை விழிப்பு நிலை. இரண்டாவது நிலையை கனவு நிலை என்பார்கள். மூன்றாம் நிலையை பீமான நிலை என்பார்கள்.” கிம்கூறினான்.

“அப்படியா?” என்றார் டாக்டர்.

“இவை மூன்றையும் தாண்டி ஒரு நிலை உள்ளது. அதுதான் தியானத்தின் உச்சக்கட்டம். அதற்கு துரியநிலை என்று பெயர்” என்றான் கிம்.

“அது எப்படி இருக்கும்?” என்றார் டாக்டர்.

“அதை சொற்களால் கூறி விளக்குவது சிரமம். அந்நிலையில் நாம் நம்மை தனியாகப் பிரித்து அறிவதில்லை. நான் என்ற உணர்வே அப்போது இருக்காது. இந்த பூமி மீது உள்ள எல்லா உயிரினங்களும் ஒன்றாக இருக்கும் நிலை அது. புழுப் பூச்சிகள், மிருகங்கள், பறவைகள், மனிதர்கள் எல்லாம் ஒன்றாகிவிடும். அப்போது ஒரே ஒரு மனம்தான் இருக்கும். அது முதலும் முடிவும் இல்லாத மனம். அதில் நாம் கலந்து விடுவோம்.”



“ஒரு மழைத்துளி கடலில் விழுந்தால் என்ன ஆகும்? அது போலத்தான் இதுவும், இல்லையா?” என்றார் டாக்டர்.

“ஆமாம்” என்றான் கிம்.

“அந்த நிலை இங்கு ஏற்பட்டதா?” என்றான் பாண்டியன்.

“ஆமாம். அந்த நிலையை பற்பல வருடங்கள் தியானம் புரிந்தால் தான் நாம் அடைய முடியும்.

அதுவும் சற்று நேரம் தான் அந்த நிலை நீடிக்கும். ஆனால் இங்கு வந்த பிறகு நான் முழுமையாகவே அந்த நிலையில் இருந்தேன். நடுவே உங்களிடம் பேசிய போது மட்டும் தான் விழிப்பு ஏற்பட்டது" என்றான் கிம்.

"நீ யார்?" என்றான் பாண்டியன்.

"நான்தான் புத்தர். ஆனால் இந்த பூமியில் உள்ள ஒவ்வொரு புழுவும் எனக்கு சமமானது. ஒரு சிறு கிருமி கூட எனக்கு நிகரானதுதான்" என்றான் கிம்.

"புரியவில்லை" என்றான் பாண்டியன்.

"அத்தனை எளிதில் இது புரிந்துவிடாது" என்றான் கிம்.

"என்ன நாற்றம் அது?" என்றார் டாக்டர்.

"நாற்றமா?" என்றான் பாண்டியன்.

"ஆமாம். ஏதோ அழுகுவது மாதிரி இருக்கிறது"- டாக்டர் கூறினார்.

"ஆமாம். நாற்றம் அடிக்கிறது" என்றான் பாண்டியன். உடனே அவனுக்கு ஒரு ஐயம் ஏற்பட்டது. தன் பையை திறந்து உள்ளே பார்த்தான்.

உள்ளே அவன் சேகரித்து வைத்திருந்த பல, வகையான தாவரங்களும் பூக்களும் அழுகிக் காணப்பட்டன.

"அடாடா. எல்லாம் அழுகிவிட்டதே" என்றான் பாண்டியன்.

"அவற்றை எப்படி இங்கு கொண்டுவரமுடியும்? அவை அங்கு வேறுவகையான தட்பவெப்ப நிலையில் வளர்பவை அல்லவா?" என்றார் டாக்டர்.

அவர்கள் பனிப்பரப்பில் நடந்து கொண்டிருந்தார்கள். எனவே பாண்டியன் தன் பையிலிருந்த அழுகிய தாவரங்களை எடுத்து கீழே போட ஆரம்பித்தான். அழுகாத ஒரு பூ மட்டும் இருந்தது. அதை கிம்மின் கையில் தந்துவிட்டுப் பையைக் கவிழ்த்தான்.

"நாம் இங்கு வந்ததற்கு சாட்சியாக இவற்றை சேகரித்து கொண்டேன்" என்றான் பாண்டியன்.

"பரவாயில்லை. ஒரு பூவாவது மிஞ்சியதே" என்றார் டாக்டர்.

அப்போது எதிரே இருந்த பனிக்குன்றுக்கு அப்பாலிருந்து இரு பிட்சுக்கள் ஓடிவந்தார்கள்.

"போதி சத்துவர்! போதி சத்வ பத்ம பாணி!" என்று ஒருவர் கூவினார்.

"மகாலாமா! மகாலாமா!" என்று இன்னொருவர் கூவினார்.

பாண்டியன் வியப்புடன் திரும்பிப் பார்த்தான். கிம்மின் கையில் பொன்னிறமான தாமரை மலர் இருந்தது.

சற்று முன் பாண்டியன் பையிலிருந்து எடுத்துக் கொடுத்த மலர்தான் அது.

அந்த தாமரை மலர் பொன்னாலான தாமரை மலர் போலவே ஒளியுடன் இருந்தது. அதைப் போன்ற பற்பல அதிசயங்களை கண்டுவிட்டதனால் தான் பாண்டியன் அதை அதிகமாக கவனிக்கவில்லை. கிளம்பி வரும் அவசரத்தில் பறித்து பையில் போட்ட பூக்களில் ஒன்று அது.

இரண்டு பிட்சுக்களும் அவர்கள் ஏற்கனவே பார்த்தவர்கள் தான். பிட்சுக்கள் ஓடி வந்து கிம்மின் காலடியில் மண்டியிட்டு அமர்ந்தார்கள்.

"போதி சத்துவ பத்மபாணி! பொன் தாமரை ஏந்திய புத்தர்! எங்கள் மகாலாமா நீங்கள்!" என்றார்கள்.

“என் கடமை அது” என்று கிம் அமைதியாக பதில் கூறினார்.

பிட்சுக்கள் “புத்தம் சரணம் கச்சாமி! தர்மம் சரணம் கச்சாமி! சங்கம் சரணம் கச்சாமி!” என்று ஜெபித்தார்கள்.

கிம்மும் அதை திரும்ப ஜெபித்தான்.

உடனே ஒரு பிட்சு தன் துணி மூட்டையைப் பிரித்தார். உள்ளிருந்த ஒரு பொற்கிரீடத்தை எடுத்தார். அது லாமாக்கள் அணியும் கிரீடம். அதில் ஏராளமான வைர வைடூரியங்கள் பதிக்கப்பட்டிருந்தது. அது தகதகவென்று ஜொலித்தது.

“மகாலாமா அவர்கள் எங்களுடன் எங்கள் மடாலயத்துக்கு வர வேண்டும். எங்கள் தலைமை குருவாக அமர வேண்டும்” என்றார் ஒரு பிட்சு.

“அது புத்தர் எனக்கிட்ட கடமை” என்றான் கிம்.

டாக்டர் கிம்மின் பாதங்களில் விழுந்து வணங்கினார். “மகாலாமா அவர்கள் என்னை ஆசிர்வதிக்க வேண்டும்” என்றார்.

“உங்களுக்கு புத்தரின் ஆசி எப்போதும் உண்டு” என்றான் கிம்.

பாண்டியன் கைகூப்பினான். டாக்டர் அவ்வாறு விழுந்து வணங்கியது அவனுக்கு வியப்பாக இருந்தது.

கிம் பாண்டியனிம் “பார்ப்போம்” என்று கூறிவிட்டு திரும்பி நடந்தான். பிட்சுக்கள் அவனைப் பின் தொடர்ந்தார்கள்.

கூட்டு ஆழ்மனம்!
கால் குஸ்தாவ் யுங் என்ற உளவியல் மேதை இந்நூற்றாண்டின் முக்கியமான அறிஞர்களுள் ஒருவர்.
இவர் நாம் ஒவ்வொருவருடைய ஆழ்மனமும் எவ்வாறு ஒன்றோடொன்று தொடர்பு கொண்டுள்ளது என்று நிறுவினார். ஆழ்மனம் என்பது அனைவருக்கும் சேர்த்து ஒன்றுதான் உள்ளது. இதை இவர் கூட்டு ஆழ்மனம் (கலெக்டிவ் அன்கான்சியஸ்) என்று அழைத்தார்.
லட்சக்கணக்கான ஆண்டுகளாக கோடிக்கணக்கான மனிதர்கள் பிறந்து வாழ்ந்து இறந்து கொண்டிருக்கிறார்கள்.
ஆனால் அவர்களுடைய ஆழ்மனம் மட்டும் அழிவதில்லை. அது பிற ஆழ்மனங்களுடன் கலந்து விடுகிறது.
நதி ஓடியபடியே உள்ளது என்று வைத்துக் கொள்வோம். அந்த நீரின் மீது விழும் மரத்தின் நிழல் மட்டும் அப்படியே மாறாமல் இருக்கிறதல்லவா? அது போலத்தான் இதுவும்.

# அத்தியாயம் 42

பாண்டியனும் டாக்டரும் தொடர்ந்து நடந்தார்கள்.

“இனி நாம் நாமாகவே வழி கண்டு பிடித்து போக வேண்டும். மிகவும கவனமாக இருக்க வேண்டும்” என்றார் டாக்டர்.

பாண்டியன் “டாக்டர், நீங்கள் ஏன் கிம்மின் காலில் விழுந்து வணங்கினீர்கள்?” என்று கேட்டார்.

“அவர் மகாலாமா அல்லவா?” என்றார் டாக்டர்.

“அவன் சாதாரணமான மலை ஜாதி பையன் தானே? நீங்கள் ஏராளமாக படித்தவர்” என்றான் பாண்டியன்.

“படிப்பில் இருந்து அறிவு கிடைக்கிறது. அந்த அறிவை நமது வாழ்க்கையில் நடைமுறைப் படுத்தும்போதுதான் ஞானம் கிடைக்கிறது. ஞானம்தான் முக்கியம். அறிவை நடைமுறைப் படுத்தா விட்டால அதனால் எந்தப் பயனும் இல்லை. ஆகவே மிகப் பெரிய அறிவாளியை விட ஞானம் உடைய ஒருவர் மேலானவர்தான்” என்றார் டாக்டர்.

“ஞானம் உடையவர்களை எவ்வாறு அறிவது?” என்றான் பாண்டியன்.

“வளர்ச்சி அடைந்த மனம் உடையவர்கள்தான் ஞானிகள். அவர்களுக்கு நான் என்ற உணர்வு இருக்காது. எனவே பேராசை இருக்காது. பேராசை இல்லாததனால் அவர்கள் எதையுமே தனக்கென வைத்துக் கொள்ள மாட்டார்கள். சொந்தமாக ஏதும் இல்லாமல் இருப்பதனால் அவர்களுக்கு மற்றவர்கள் மீது பயம் இருக்காது. எனவே பொறாமையோ கோபமோ அடைய மாட்டார்கள். எதை இழந்தாலும் அவர்களுக்குத் துக்கம் ஏற்படாது. அதாவது மனம் எப்போதும் அமைதியாக இருப்பவர் எவரோ அவர்தான் ஞானி” என்றார் டாக்டர்.

“கிம்மின் தலையில் அவர்கள் வைரக் கிரீடத்தை சூட்டினார்களே?” என்றான் பாண்டியன்.

“ஆமாம். யாருக்கு பொருள் மீது சிறிதும் பற்று இல்லையோ அவரிடம்தான் பொருள் இருக்க வேண்டும். யாருக்கு புகழில் சிறிதும் ஆசை இல்லையோ அவரிடம்தான் புகழும் இருக்க வேண்டும்” என்று டாக்டர் கூறினார்.

சட்டென்று பாண்டியனுக்கு வழி தவறி விட்டது போல தோன்றியது.

“டாக்டர், நமக்கு வழி தவறிவிட்டது” என்றான் பாண்டியன்.

“நாம் சென்ற வழி அல்ல இது. வௌவால்கள் நம்மை வேறு ஒரு இடத்தில் இறக்கி விட்டிருக்கின்றன. அதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும். அது ஏன் என்று பார்ப்போம் என்றுதான் நான் பேசாமல் பார்த்தபடி வருகிறேன்” என்றார் டாக்டர்.

அவர்கள் பனிப்பாளம் மீது நடந்து நடந்து சென்றார்கள். பாண்டியனுக்கு களைப்பே தெரியவில்லை. எவ்வளவு நடந்த போதிலும் மூச்சு வாங்கவோ கால்கள் வலிக்கவோ இல்லை. அவனுடைய கையில் இருந்த காயம் முற்றிலும் ஆறிவிட்டது. அங்கு சிறு தழும்பு கூட இருக்கவில்லை.

ஒரு பனிமலையின் விளிம்பை அடைந்ததும் டாக்டர் “அதோ பாருங்கள்” என்று சுட்டிக் காட்டினார்.

அங்கு ஒரு பெரிய பீடம் இருந்தது. அது பனியால் மூடப்பட்டிருந்தது.

“அது என்ன பீடம்?” என்றான் பாண்டியன்.

“பார்ப்போம்” என்றான் டாக்டர். இருவரும் அதை நெருங்கினார்கள். அதன் மீது டாக்டர் ஏறி நின்று நான்கு பக்கமும் பார்த்தார். “அடடா!” என்று அவர் கூறினார்.

“என்ன டாக்டர்?” என்றான் பாண்டியன்.

“அங்கே பாருங்கள்” என்றார் டாக்டர்.

பாண்டியன் அவர் சுட்டிக் காட்டிய திசையில் பார்த்தான். அங்கு ஒரு பெரிய மலை இருந்தது. அதில் ஒரு மிகப் பெரிய காட்சி தெரிந்தது.

முதலில் அந்தக் காட்சி என்ன என்று பாண்டியனுக்குப் புரியவில்லை. அது வெறும் பச்சை நிறமான பிம்பம் போல் இருந்தது. பிறகு அது என்ன என்று புரிந்தது.

பனிமனிதர்கள் வாழும் காடுதான் அது. அந்த காட்டின் பிம்பம் அந்த பனிமலையின் குழிந்த பரப்பின் தலைகீழாகத் தெரிந்தது.

“குழி ஆடியில் தொலைவில் உள்ள பிம்பங்கள் தலைகீழாக தெரியும்” என்றார் டாக்டர்.

அந்தக் காட்டின் பிம்பத்தை பாண்டியன் கூர்ந்து பார்த்தான அவர்கள் போன இடங்களை அடையாளம் கண்டு கொண்டான்.

அங்கு பனிமனிதர்கள் கும்மாளமடித்துக் கொண்டிருந்தார்கள். பல விதமான விசித்திரமான பறவைகள் பறந்தன. விசித்திர மிருகங்கள் மேய்ந்து திரிந்தன.

பாண்டியனுக்கு மிகவும் ஏக்கமாக இருந்தது. அங்கு இருந்தபோது ஒரு கணம்கூட அவன் மனதில் துக்கம் ஏற்படவில்லை. மகிழ்ச்சி மட்டும்தான் அங்கு ஏற்பட்டது.

இனிமேல் அங்கு போக முடியுமா என்று நினைத்தான் பாண்டியன். உடனே அவனுக்கு அழுகை வருவது போல இருந்தது.

“இந்த பீடம் மனிதர்கள் கட்டியது தான். பனிமனிதர்கள் வாழும் காட்டை இங்கிருந்து பார்த்து வணங்கலாம். யாரோ இங்கு வந்து அவ்வாறு பனிமனிதர்களை வணங்கி வருகிறார்கள்” என்றார் டாக்டர்.

“அந்த பிட்சுக்கள்தான் வணங்கியிருப்பார்கள்” என்றான் பாண்டியன்.

“அப்படியானால் இங்கு எங்கேயோ பிட்சுக்கள் தங்கும் இடமும் இருக்கிறது” என்று கூறினார்.

“வாருங்கள் பார்ப்போம்” என்றான் பாண்டியன்.

அவர்கள் அந்தப் பகுதியெங்கும் சுற்றிப் பார்த்தார்கள். எங்குமே கட்டிடம் ஏதும் தென்படவில்லை.

திடீரென்று டாக்டர் “பாண்டியன், அதோ அந்த பனிப்பாறையைப் பார்த்தீர்களா?” என்றார்.

அந்தப் பாறையின் உச்சியில் ஒரு கலசம் தெரிந்தது. கோபுரங்களின் நுனியில் இருப்பது போன்ற கலசம் அது. ஆனால் அது பனியால் மூடப்பட்டிருந்தது.

“அப்படியானால் அது கோயில் பனியால் மூடப்பட்ட கோயில்” என்றான் பாண்டியன்.

இருவரும் அந்த பாறையை நெருங்கினார்கள். அதற்கு எல்லா பக்கமும் பனியாகவே இருந்தது.

“இதற்குள் கோயில் இருக்கிறதா? அப்படியானால் அதன் வாசல் எங்கே?” என்றான் பாண்டியன்.

“இதோ பாருங்கள். இங்கு பனியால் சிறிய காற்றுக்குமிழிகள் உள்ளன. அப்படியானால் இங்குதான் வாசல் உள்ளது. இந்த காற்று உள்ளே இருந்து வருவதுதான்” என்றார் டாக்டர்.

பாண்டியன் அந்த இடத்தை ஓங்கி அறைந்தான். கண்ணாடி மாதிரி பனி உடைந்து சரிந்தது.

அக்கோயிலின் வாசல்தான் அது. அதற்கு கதவுகள் ஏதும் காணப்படவில்லை. அங்கு கல்லாலான படிகள் தெரிந்தன.

அவர்கள் அதன் வழியாக ஏறிச் சென்றார்கள். ஒரு பெரிய அறையை அடைந்தார்கள்.

அந்த அறை நல்ல வட்ட வடிவில் இருந்தது. அதன் கூரை ஒரு கிண்ணத்தை கவிழ்த்தது மாதிரி இருந்தது.

எங்கிருந்தோ மென்மையான ஒளி அதற்குள் வந்தது. அங்கு இளங்காற்றும் வீசியது.

எங்கோ சிறிய துளைகள் இருக்க வேண்டும் என்று பாண்டியன் ஊகித்தான். அதன் வழியாக காற்று வீசிய போது மெல்லிய புல்லாங்குழல் இசை கேட்டது.

“எத்தனை அற்புதமான ஆலயம்!” என்று பாண்டியன் வியப்புடன் கூறினான்.

“இது இயற்கையான பாறையைக் குடைந்து செய்யப்பட்ட விகாரம். இதே மாதிரி குகைக் கோயில்களை நான் அஜந்தாவில் பார்த்திருக்கிறேன்” என்றான் பாண்டியன்.

“ஆம். இதை உருவாக்கி ஏராளமான வருடங்கள் ஆகியிருக்கலாம்” என்றார் டாக்டர்.

அந்த வட்டவடிவமான அறையின் சுவர்கள் வளைவாக இருந்தன. அவற்றில் ஏராளமான சிற்பங்கள் இருந்தன.

“இவையெல்லாம் போதி சத்துவர்கள் உருவங்கள். ஏராளமான போதி சத்துவர்கள் இருக்கிறார்கள்” என்றார் டாக்டர்.

“போதி சத்துவர்கள் என்றால் யார்?” என்றார் பாண்டியன்.

“புத்தர் கூறிய மெய்ஞானத்தை யார் முழுமையாக அடைக்கிறார்களோ அவர்களே போதி சத்துவர்கள். இருங்கள், இதோ என்னவோ எழுதியிருக்கிறதே...” டாக்டர் அதைப் படித்தார். அது திபெத் மொழியில் எழுதப்பட்டிருந்தது.

“பாண்டியன் இது என்ன தெரியுமா? இது புத்த மைத்ரேயரின் ஆலயம். அவர் வரும் போது அவரை வரவேற்க இதைக் கட்டியிருக்கிறார்கள்” என்றார் டாக்டர்.

“மைத்ரேயர் இங்கு எப்படி வருவார்?” என்றான் பாண்டியன்.

“இந்த ஆலயத்தை எப்படி கட்டியிருக்கிறார்கள் பாருங்கள். இது பனிமனிதர்களின் இடத்தை நோக்கி திறந்திருக்கிறது” என்றார் டாக்டர்.

“அப்படியானால் மைத்ரேயர் அங்கிருந்தா வருவார்கள்?” என்றான் பாண்டியன்.

“அவ்வாறுதான் இதைக் கட்டியவர்கள் நம்பியிருக்கிறார்கள்” என்றார் டாக்டர்.

சுவர்களைப் பார்த்தபடி அவர்கள் நடந்தார்கள்.

“இந்தச் சிற்பங்களைப் பாருங்கள்! நாம் பனிமனிதர்களின் இடத்தை பார்த்த எல்லா மிருகங்களும் இங்கு உள்ளன! என்றான் பாண்டியன்.

அப்போது அவர்கள் அருகே ஒரு கதவு திறக்கும் ஒலி கேட்டது.

டாக்டரும் பாண்டியனும் பயந்து போய் திரும்பினார்கள்.

கல்லாலான ஒரு கதவு விலகி திறந்தது. ஒரு வாசல் தெரிந்தது. அதற்குள் இருந்து ஒரு பிட்சு வெளியே வந்தார்.

அவரைப் பார்த்ததும் பாண்டியனும் டாக்டரும பயந்து விட்டார்கள்.

அவர் மிக மிக வயதானவர். அவருடைய உடம்பு நன்றாக வற்றி உலர்ந்திருந்தது. அவருடைய தோல் உலர்ந்த வாழைப் பட்டை போல சுருங்கி இருந்தது. அவருடைய தலையிலோ முகத்திலோ ரோமங்களே இல்லை. அவருடைய கண்கள் குழிந்து காணப்பட்டன. அவரது உடம்பு நடு நடுங்கிய படி இருந்தது.

“யார் நீங்கள்?” என்று டாக்டர் கேட்டார்.

“என் பெயர் டோர்ஜெ சம்யக்பா! நான் சிவ ஒ ரேபா மடாலயத்தின் நாநூற்று இருபதாவது மகாலாமா. நூறு வருடங்களாக இங்குதான் வாழ்கிறேன்” என்றார் அந்த வயோதிகர்.

குகைக் கோயில்கள்
அஜந்தா என்னும் இடம் மகாராஷ்ட்ர மாநிலத்தில் உள்ளது. இங்கு பெரிய மலைகளில் உள்ள பாறைகளைக் குடைந்து மிகப் பெரிய பௌத்த விகாரங்களைக் கட்டியுள்ளார்கள்.
அஜந்தாவை மகாயான பௌத்தர்கள் உருவாக்கினார்கள். இக்குகைகளின் சுவர்களில் சிறப்பான ஓவியங்கள் உள்ளன.
கருவறைக்குள் இருக்கும் புத்தரும், கோயில் சுவர்களும், படிகளும் எல்லாம் ஒரே கல்லால் ஆனவை என்பது இதன் சிறப்பம்சம் ஆகும்.

# அத்தியாயம் 43

பாண்டியன் வியப்புடன் “நூறு வருடங்களாகவா? அப்படியானால் உங்களுக்கு எத்தனை வயது?” என்று கேட்டான்.

“எனக்கு இருநூற்று ஐம்பது வயது ஆகிறது. சிவ ஒ ரேபா மடாலயத்தின் தலைமை லாமாக்கள் அனைவருமே இருநூற்று ஐம்பது வருடம் உயிர் வாழ்வார்கள்” என்றார் லாமா.

டாக்டர், “சிவ ஒ ரேபா மடத்தின் புதிய லாமாவை இங்கிருந்து நேற்றுதான் கூட்டிச் சென்றார்கள்” என்றார்.

“அது தெரியும் எனக்கு. இதோ இவர் தானே?” என்று லாமா சுவரைச் சுட்டிக் காட்டினார்.

சுவரில் கிம்மின் சிலை இருந்தது. வைரக் கிரீடம் அணிந்து கையில் பொன்னிறமான தாமரையுடன் அவன் நின்றிருந்தான். அவன் அருகே கிம் வயதான கோலத்தில் இருக்கும் சிலையும் இருந்தது.

“போதித்துவ பத்மபாணி திபெத்துக்கு போய்ச் சேர்ந்ததும் அவருடைய முந்தைய மகாலாமா இங்கு வந்துவிடுவார். இந்த இடத்தை அவருக்கு விட்டு விட்டு நான் தர்மஸ்தலத்துக்கு போய் விடுவேன்” என்றார் மகாலாமா.

“நீங்கள் ஏன் இங்கு தங்கியிருக்கிறீர்கள்? இங்கு வேறு மனித உயிரே இல்லையே?” என்று பாண்டியன் கேட்டான்.

“நான் புத்த மைத்ரேயரின் பூசாரி. இது புத்த மைத்ரேயரின் ஆலயம். கடந்த மூவாயிரம் வருடங்களாக இந்த வழக்கம் இப்படியே பின்பற்றப்படுகிறது” என்றார் லாமா.

டாக்டரும் பாண்டியனும் லாமாவின் காலில் விழுந்து வணங்கினார்கள். அவர் அவர்களை ஆசிர்வதித்தார்.

“நீங்கள் என் அறைக்கு வந்து ஓய்வு எடுக்கலாம்” என்று லாமா அழைத்தார்.

அந்த அறை சிறியதாக இருந்தது. அதில் பனியானையின் தோல் விரிக்கப்பட்டிருந்தது. அங்கு வெதுவெதுப்பாக இருந்தது.

“நான் உணவு ஏதும் உண்பதில்லை. தர்மஸ்தலத்தில் உள்ள ஒரு விதமான விதைகளை மட்டும் உண்பேன். ஒரு நாளைக்கு ஒரு விதை மட்டும் போதும்” என்றார் லாமா.

“அந்த விதை எங்களிடமும் உள்ளது” என்றார் டாக்டர்.

“எப்படி?” என்று லாமா கேட்டார்.

டாக்டர் அவர்கள் பனிமனிதனின் காட்டுக்கு போனதைப் பற்றி கூறினார்கள்.

“யதிகளை சந்திக்க நீங்கள் மிகவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும்” என்றார் லாமா.

“இந்த ஆலயம் ஏன் தர்மஸ்தலத்தைப் பார்க்கும்படியாகக் கட்டப்பட்டிருக்கிறது?” என்றார் டாக்டர்.

“ஏனெனில் மைத்ரேய புத்தர் அங்கிருந்துதான் வருவார்” என்றார் லாமா.

“ஏன்?” என்றார் டாக்டர்.

“மைத்ரி என்றால் ஒருமை என்ற பொருள். மைத்ரேயர் என்றால் ஒருமையே வடிவானவர் என்று அர்த்தம். நான், நீ அது, இது என்று பிரித்துப் பார்க்காமல் இருப்பதுதான் மைத்ரி. பனிமனிதர்களான யதிகள் அந்நிலையில் வாழ்பவர்கள்.” லாமா கூறினார்.

“அவர்கள் ஏன் அப்படி இருக்கிறார்கள்?” என்றான் பாண்டியன்.

“ஆமாம். அவை குரங்கின் கரங்கள். வளர்ச்சி பெறாத கரங்கள்” என்றார் டாக்டர்.

“அதுதான் காரணம், அவர்கள் எந்தச் செயலையும் செய்வது இல்லை. எனவே கைகள் வளர்ச்சி பெறவில்லை.”

“ஏன் அவர்கள் எந்தச் செயலையும் செயவதில்லை?” என்றான் பாண்டியன்.

“ஏனெனில் அவர்கள் எதையும் தனித்தனியாகப் பிரித்துப் பார்ப்பது இல்லை. நான் எனும் உணர்வே அவர்களுக்கு இல்லை. எனவே வீடு, உடை எதுவுமே அவர்களுக்குத் தேவை இல்லை. அவர்கள் இயற்கையுடன் ஒன்றி இருக்கிறார்கள்.”

“நாம் இயற்கையுடன் போட்டி போடுகிறோம். வீடு, உடை, மற்ற வசதிகள் அனைத்தையும் உருவாக்கிக் கொள்கிறோம்” என்றார் டாக்டர்.

“ஆமாம். இத்தகைய செயல்களைத்தான் கர்மம் என்கிறோம். கரம் என்ற வார்த்தையில் இருந்துதான் கர்மம் என்ற வார்த்தை உருவாயிற்று. யதிகளின் கர்மம் வளரவில்லை. எனவே ஞானம் வளர்ந்தது. நாம் கர்மத்தில் ஈடுபட்டதனால் ஞானம் ஏற்படவில்லை” என்றார் லாமா.

பாண்டியனுக்கு டாக்டர் கூறியது ஞாபகம் வந்தது. மொழியையும் கையையும் கட்டுப்படுத்துவது முன்மூளை தான். பனிமனிதனின் முன் மூளையில் கைக்குரிய பகுதி வளரவேயில்லை. அதற்கும் சேர்த்து மொழிக்கு உரிய பகுதி வளர்ந்துள்ளது.

மகா லாமா “நீங்கள் மைத்ரேய புத்தரை வணங்கி விட்டு கிளம்புங்கள்” என்றார் டாக்டர்.

அவர்கள் மீண்டும் விகார மண்டபத்துக்கு வந்தார்கள்.

விகாரத்தின் மறு எல்லையில்தான் கருவறை இருந்தது. பாண்டியனும் டாக்டரும் லாமாவைத் தொடர்ந்து அங்கு சென்றார்கள்.

கருவறை மிகவும் இருட்டாக இருந்தது. கூர்ந்து பார்த்த போது உள்ளே புத்தரின்பெரிய சிலை இருப்பது தெரிந்தது. தியானத்தில் இருப்பது போன்ற சிலை அது.

லாமா ஒரு குறிப்பிட்ட இடத்தில் நின்று அண்ணார்ந்து பார்த்தார். “சரணம்! சரணம்!” என்று கத்தினார்.

உடனே அந்த ஒலி கருவறையின் கூரையில் எதிரொலித்தது. அந்த ஒலியின் அதிர்வில் எங்கோ பனிப்பாளம் விரிசல் விடும் ஒலி கேட்டது. பிறகு அந்தப் பனிப்பாளம் பெயர்ந்து விழும் ஒலியும் கேட்டது. அது ஒரு பெரிய மணியின் மீது விழுந்தது. உடனே மிகப் பெரிய மணிநாதம் கேட்டது. கூடவே கருவறைக்குள் ஒளியும் வந்தது.

உள்ளே இருந்த புத்தரை பார்த்ததும் பாண்டியன் பிரமித்து விட்டான்.

அது பனிமனிதன்!

பனிமனிதனின் வடிவில் இருந்தது அந்த புத்தர் சிலை! அதன் கைவிரல்களும் கால் விரல்களும் குரங்களின் விரல்கள் போல இருந்தன.

அந்த சிலையின் தலையில் இளஞ்சிவப்பு நிறமான பனிக்கட்டியால் செய்யப்பட்ட கிரீடம் இருந்தது. அக்கிரீடம் மெதுவாக ஒளி விட ஆரம்பித்தது. பிறகுதான் அது தூய்மையான வைரம்

என்பது பாண்டியனுக்குத் தெரிந்தது. பனிக்கட்டி மாதிரியே இருந்தது அந்த வைரம்.

பனிமனிதனின் வடிவில் இருந்த அந்த புத்தரின் சிலையில் கண்களாக இரு நீல வைரங்கள் பதிக்கப்பட்டிருந்தன. அவை பனிமனிதனின் விழிகள் மாதிரியே இருந்தன. மைத்ரேய புத்தர் அவர்களைக் கூர்ந்து பார்ப்பது போல இருந்தது.

டாக்டரும் பாண்டியனும் மைத்ரேய புத்தரை வணங்கினார்கள்.

லாமா திபெத்திய மொழியில் ஒரு பாடலைப் பாடினார்.

தர்மத்தின் வடிவமான

புத்தனே உனக்கு வணக்கம்!

நீ நேற்று இன்று நாளை என்று

பிரிவு படாதவன்.

நான் நீ அது இது என்று

வேறு படாதவன்.

கர்மம் இல்லாதவன்

ஞானமே வடிவானவன்

துயரங்கள் இல்லாதவன்

தீமைகள் ஏதும் இல்லாதவன்

மரம் செடி புல் பூண்டு

புழு பூச்சி கிருமிகள்

பறவைகள் மிருகங்கள்

அனைத்துடனும் இரண்டறக் கலந்தவன்

மைத்ரி வடிவமானவனே!

மைத்ரேய புத்தனே!

உன்னை ஆயிரம் முறை வணங்குகிறேன்.

பிறகு பாண்டியனும் டாக்டரும் லாமாவிடம் விடை பெற்றனர். லாமா அவர்களுக்கு வழி சொல்லித் தந்தார்.

“சில நாட்களில் நாம் திரும்பிச் சென்றுவிடுவோம்” என்றார் டாக்டர்.

“ஆம். என் அறிக்கை கிடைத்ததும் அரசாங்கமே கதிகலங்கி விடும். உலகமே அரண்டு போய்விடும். இன்னும் சில நாட்களில் அந்த காட்டில் தொலைக்காட்சி காமிராக்கள் வந்து குவியும். அறிஞர்களும் ஆய்வாளர்களும் வந்து கூடுவார்கள்” என்றான் பாண்டியன்.

“அதைப் பற்றித்தான் உங்களிடம் பேச விரும்புகிறேன் பாண்டியன். நாம் இதை பகிரங்கப்படுத்தத் தான் வேண்டுமா?” என்றார் டாக்டர்.

“என்ன டாக்டர் இது? இத்தனை சிரமப்பட்டு இங்கு வந்திருக்கிறோம். எத்தனை பெரிய அற்புதத்தைக் கண்டு பிடித்திருக்கிறோம். இதை வெளியே சொல்லாமல் இருப்பதா? எதற்கு?” என்றான் பாண்டியன்.

அற்புதமான ஓர் உறுப்பு!

மனித உறுப்புகளில் மற்ற எந்த விலங்குகளுக்கும் இல்லாத அளவுக்கு வளர்ச்சி அடைந்த உறுப்பு என்ன?
கட்டை விரல்தான்!
நமது கரங்களின் எல்லா செயல்களுக்கும் கட்டை விரல் தேவை. கட்டை விரல் ஒரு நாளில் எத்தனை வகையான வேலைகளை செய்கிறது என்று பார்த்தால் வியப்பு ஏற்படும். கட்டை விரல் மிக வலிமையானதும் கூட.
பரிணாம வளர்ச்சியில் மனிதன் தொடர்ந்து கையைப் பயன்படுத்தியதால்தான் கட்டைவிரல் இவ்வாறு மாறியது!

# அத்தியாயம் 44

“உங்கள் அறிக்கையை நீங்கள் சமர்ப்பித்ததும் என்னென்ன நடக்கும் தெரியுமா?” என்றார் டாக்டர்.

“என்ன நடக்கும்?” என்றான் பாண்டியன்.

“இந்திய ராணுவம் அந்தக் காட்டை சுற்றி வளைக்கும். அங்குள்ள செல்வங்களை எல்லாம் தனக்குரியது என்று கூறும்.”

“ஆனால் அப்பகுதி சீனாவிலும் இந்தியாவிலும் பொதுவாக உள்ளது.”

“ஆமாம். உடனே சீனா போர் பிரகடனம் புரியும். போர் மூண்டு ஆயிரக்கணக்கான மக்கள் செத்துப் போவார்கள். ஒரு வேளை குண்டு வீச்சில் அந்தக் காடு முழுக்க அழிந்து போனாலும் போகும். ஏன் சிலசமயம் அணுகுண்டு கூட வீசப்படலாம். பிறகு உலகமே இருக்காது” என்றார் டாக்டர்.

“இதெல்லாம் கற்பனைதான் டாக்டர். ஏன் இரு நாடுகளும் அந்தக் காட்டை சரி சமமாக பங்கு போட்டுக் கொள்ள கூடாது?” என்றான் பாண்டியன்.

“நீங்கள் கூறுவதுதான் கற்பனை. உலகில் இதுவரை எங்காவது அப்படி நடந்திருக்கிறதா? செல்வத்துக்காக எத்தனை எத்தனை போர்கள் நடந்துள்ளன! எத்தனை கோடி மனிதர்கள் கொன்று ஒழிக்கப்பட்டிருக்கிறார்கள். யோசித்துப் பாருங்கள்!” என்றார் டாக்டர்.

“இந்த விஷயம் ஒரு அற்புதமான செய்தி அல்லவா டாக்டர்? நாம் அதை மறைக்கலாமா?” என்றான் பாண்டியன்.

“உலகில் இதே போல அற்புதமான எத்தனை காடுகள் இருந்துள்ளன! அமேசான் காடு இதை விட நூறு மடங்கு பெரிய காடு. இன்று அதில் மூன்றில் இரண்டு பங்கு அழிக்கப்பட்டு விட்டது” என்றார் டாக்டர்.

“இதையும் மனிதன் அழித்துவிடுவான் என்கிறீர்களா?” என்றான் பாண்டியன்.

“ஆமாம். ஏனெனில் மனிதன் பேராசை நிரம்பியவன். அவன் அனைத்தையும் சொந்தமாக்கிக் கொள்ளத் துடிப்பவன். எதையும் தனக்கு பயன்படுத்திக் கொள்ளவே அவன் முயல்வான். பயன்படாத அனைத்தையும் ஈவிரக்கம் இல்லாமல் அழித்தும் விடுவான்” என்றார் டாக்டர்.

“மனிதன் ஒரு கொடூரமான உயிரினம் அல்ல டாக்டர்” என்றான் பாண்டியன்.

“கண்டிப்பாக கொடூரமான உயிரினம்தான். நம் நாட்டில் காடுகளில் எத்தனை யானைகள் இருந்தன. எத்தனை புலிகள் இருந்தன. எல்லாவற்றையும் நாம் அழித்து விட்டோம். இன்னும் சில நாட்களில் அவை எதுவுமே மிஞ்சாது. இவ்வாறு எவ்வளவு உயிரினங்கள் பூண்டோடு அழிந்தன தெரியுமா? மனிதனுக்கு தன்னுடைய நலன்தான் முக்கியம். அதற்காக அவன் எதையும் செய்வான்” என்றார் டாக்டர்.

பாண்டியனுக்கு பதில் கூறவே முடியவில்லை.

“இந்த காடுகள் இங்கு இருக்கும் விஷயம் வெளியே தெரிந்தால் உடனே வியாபாரிகள் இங்கு

வந்து கூடிவிடுவார்கள். இங்குள்ள அபூர்வமான மிருகங்களை பிடித்துக் கூண்டில் அடைத்து வித்தை காட்டப் பழக்குவார்கள். பழகாத உயிரினங்களையெல்லாம் கொன்று விடுவார்கள். அவற்றின் தோலையும் இறைச்சியையும் விற்பார்கள். அங்குள்ள மிருகங்களை மட்டுமல்ல. மரங்களைக் கூட விட்டு வைக்கமாட்டான். ஏன் அங்குள்ள கல்லையும் மண்ணையும்கூட எடுத்து விற்பனை செய்து விடுவான்” என்றார் டாக்டர்.

“ நீங்கள் கூறுவதை என்னால் நம்பவே முடியவில்லை” என்றான் பாண்டியன்.

“இது தான் மனித வரலாறு தெரிவிக்கும் செய்தி. நூறு வருடங்களுக்கு முன்பு கூட ஆப்பிரிக்காக் கண்டம் இந்தக்காடு போலச் செழிப்பாக இருந்தது. அங்குள்ள நீக்ரோ மக்கள் மகிழ்ச்சியாக இருந்தார்கள். இன்று ஆப்பிரிக்கா காடுகள் அனைத்தும் அழிக்கப்பட்டு விட்டன. ஆப்பிரிக்கா பாலைவனம் போலஆகிவிட்டது. அங்கு பெரும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. லட்சக்கணக்கான மக்கள் உணவின்றி சாகிறார்கள். மனித இனம் இந்த பூமியின் பெரும் குதியை சூறையாகி விட்டது. பாண்டியன் இனி மிக அபூர்வமாக உள்ள சில இடங்கள் மட்டும் தான் மிச்சமுள்ளன” என்றார் டாக்டர்.

“இந்தக் காடு பற்றிய தகவலை நான் விஞ்ஞானிகளிடம் மட்டும் கூறலாமே” என்றான் பாண்டியன்.

“விஞ்ஞானிகள் எதற்காக ஆராய்ச்சி செய்கிறார்கள்? மனிதனின் நலனுக்காகத்தானே? எதைக் கண்டுபிடித்தால் மனிதன் லாபம் அடைய முடியும் என்றுதானே அவர்கள் யோசிக்கிறார்கள். விஞ்ஞானிகள் என்ன செய்வார்கள் தெரியுமா? பனிமனிதர்களைப் பிடித்து கூண்டில் அடைப்பார்கள்! பல விதமான மருந்துகளை அவர்களுக்கு அளித்து பரிசோதனை செய்வார்கள். அவர்களை பழக்கி மனிதனுக்கு அடிமையாக மாற்ற முடியுமா என்று யோசிப்பார்கள். ஆப்பிரிக்காவில் உள்ள குரங்குகள் எல்லாம் என்ன ஆயின தெரியுமா? ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் அவற்றைப் பிடித்துச் சென்று தங்கள் பரிசோதனைகளுக்கு பயன் படுத்தினார்கள். பலவிதமான சோதனைகள் செய்து அவற்றை சித்திரவதை செய்வார்கள். கொரில்லா, உராங் உடான், சிம்பன்சி முதலிய மிருகங்கள் எல்லாம் கூண்டோடு அழிந்து கொண்டிருக்கின்றன தெரியுமா?” நீளமாக பேசியதனால் டாக்டருக்கு மூச்சிரைத்தது.

“மனிதர்களுக்குள் கருணை உடையவர்களே இல்லையா?” என்றான் பாண்டியன்.

“உண்டு. தனிப்பட்ட முறையில் மனிதர்களுக்கு கருணை உண்டு. ஆனால் மனித இனத்துக்கு கருணையே இல்லை. ஏனெனில் மனிதனின் வாழ்க்கை முறை அப்படிப்பட்டது. அவனுடைய கலாசாரம் அப்படிப்பட்டது. இயற்கையை அழித்துத்தான் அவனால் வாழ முடியும். அவன் அப்படியே பழகி விட்டான்” டாக்டர் கூறினார்.

“என் கடமையை நான் செய்ய வேண்டாமா?” என்றான் பாண்டியன்.

“இந்த பூமியின் எதிர்காலத்தை விட பெரிதா உங்கள் பதவியின் கடமை?” என்றார் டாக்டர் கோபமாக.

“டாக்டர், நான் ஒரு ராணுவ வீரன். என் கடமை...” என்றான் பாண்டியன்.

டாக்டர் வேகமாக அவனை இடைமறித்தார். “என்ன கடமை? அற்புதமான இந்தக்காட்டை அழிப்பதா உங்கள் கடமை? பச்சைக் குழந்தைகள் போல விளையாடும் பனிமனிதர்களை கூண்டிலடைத்து சித்திரவதை செய்வதா உங்கள் கடமை?” டாக்டரின் கண்கள் கலங்கின.

பாண்டியனும் கலங்கிவிட்டான். ராணுவ ஆய்வுச் சாலையில் அவன் பலவகை குரங்குகளைக் கண்டதுண்டு. விஷங்களும் கிருமிகளும் எவ்வாறு வேலை செய்கின்றன என்று அறிவதற்காக அவற்றின் உடலில் ஊசி மூலம் விஷங்களையும் கிருமிகளையும் செலுத்துவார்கள். பல குரங்குகள் துடிதுடித்துச் சாவதை அவன் கண்டதுண்டு. பல குரங்குகள் நோய்வாய்ப்பட்டு

மெல்ல மெல்ல சாவதையும் கண்டதுண்டு.

பனிமனிதர்களையும் அவ்வாறு கூண்டில் அடைத்து சோதனை செய்வார்கள். பனிமனிதர்களின் அழகான நீல நிறக் கண்கள் அவனுக்கு ஞாபகம் வந்தன.

“வேண்டாம் டாக்டர். வேண்டாம் நான் பனிமனிதர்கள் என்பது வெறும் கற்பனை என்று அறிக்கை தந்து விடுகிறேன்” என்று பாண்டியன் கூவினான்.

டாக்டர் பெருமூச்சு விட்டார். பிறகு “இந்தப் பனிமனிதர்கள் உயிர் வாழ்ந்தாக வேண்டும் பாண்டியன்” என்றார்.

“ஏன்?” என்றான் பாண்டியன்.

“இராமபிதாகஸ் குரங்குகளில் இருந்து இரண்டு வகை மனிதர்கள் பரிணாம வளர்ச்சி அடைந்தார்கள். ஒன்று நாம். இன்னொன்று பனிமனிதன். இரண்டும் இரண்டு வகை பரிணாம வளர்ச்சி. நமது கரங்கள் வளர்ந்தன. அவனுடைய ஞானம் வளர்ந்தது. நாம் இயற்கையுடன் போராடி வளர்ச்சி பெற்றோம். அவன் இயற்கையுடன் இணைந்து வாழ்ந்து வளர்ச்சி பெற்றான். இதில் எது சரியான பாதை?” என்றார் டாக்டர்.

“தெரியவில்லை” என்றான் பாண்டியன்.

“நமது மனித கலாசாரம் இன்று மிகவும் வளர்ந்து விட்டது. நாம் இன்று சந்திர மண்டலம் வரை போய்விட்டோம். ஆனால் நமக்கு இன்னும் ஞானம் வரவில்லை.கோடிக்கணக்கான மனிதர்கள் ஒரு பக்கம் பட்டினி கிடக்கிறார்கள். மறுபக்கம் லட்சக்கணக்கான மக்கள் ஆடம்பரமாக வாழ்கிறார்கள். மனிதர்களை பிற மனிதர்கள் அடிமையாகப் பிடித்து வேலை வாங்குகிறார்கள். செல்வத்துக்காக ஒருவரோடொருவர் போரிட்டுச் சாகிறார்கள்” என்றார் டாக்டர்.

“ஆமாம் டாக்டர். பனிமனிதனைப் பார்த்த பிறகு மனித வாழ்க்கை மீதே எனக்கு வெறுப்பு ஏற்பட்டு விட்டது. பொறாமை, பேராசை, துக்கம்... நமது வாழ்வில் இவைதானே நிரம்பியுள்ளன?” என்றான் பாண்டியன்.

“மனிதன் இயற்கையை நாசம் செய்துவிட்டான். பூமி மீது இயற்கை இனி மிகக் கொஞ்சம்தான் மிஞ்சியிருக்கிறது. மக்கள் தொகையோ பெருகி வருகிறது. ஏதோ ஒரு கட்டத்தில் பூமி மீது மனிதர்கள் தொடர்ந்து வாழ முடியாது ஆகலாம். பஞ்சமும் நோய்களும் ஏற்படலாம். உடனே பெரும் போர்கள் ஏற்படலாம். பிறகு மனித இனமே அழிந்து போகலாம். ஆம், அதற்கான வாய்ப்பு இருக்கிறது பாண்டியன்” என்றார் டாக்டர்.

“ஆமாம் டாக்டர்!” என்றான் பாண்டியன்.

“அந்த பிட்சுக்கள் கூறினார்களே. பனிமனிதர்கள் விதை நெல் போன்றவர்கள் என்று. அது உண்மை. மனித குலம் அழிந்தால் பிறகு பூமி முழுக்க பனிமனிதர்கள் பரவி வளர்ச்சி அடையலாம்! அவர்கள் இயற்கையுடன் இணைந்து வாழ்பவர்கள். இயற்கைச் சூழலுக்கு ஏற்ப அவர்கள் மாறுவார்கள். அதனால் அவர்கள் அழிய மாட்டார்கள்” என்றார் டாக்டர்

“ஆமாம் டாக்டர், அது உண்மை!” பாண்டியன் வியப்புடன் கூறினான்.

“மூவாயிரம் வருடங்களாக திபெத்திய பௌத்த மதத்தினர் பனிமனிதர்களைப் பற்றி அறிந்திருக்கிறார்கள். ஆனால் இந்த ரகசியத்தை அவர்கள் வெளிப்படுத்தவே இல்லை. அதற்குக் காரணம் இது தான். பரிணாமத்தின் இரண்டு பாதைகளில் ஒன்று தோல்வியடைந்தது என்றால் இன்னொன்று வளர்ச்சி அடையலாமே? பனிமனிதர்கள் பூமி மீது மிஞ்சியிருக்க வேண்டியது மிக மிக அவசியம். அவர்கள் மனித குலம் அழிந்த பிறகு பூமியெங்கும் பரவி விடுவார்கள். புத்தம் புதிய ஒரு நாகரிகம் இந்த பூமி மீது உருவாகி வரும்!” என்றார் டாக்டர்.

பாண்டியன் “ஆமாம் டாக்டர். அந்த நாகரிகம் எப்படி இருக்கும் என்றுதான் நாம் பார்த்தோமே” என்றான்.

டாக்டர் திரும்பி பனிமலைகளைப் பார்த்தார். அவர் முகத்தின் மீது ஒளி விழுந்தது. ஆவேசமான குரலில் அவர் சொன்னார்.

“அது இயற்கையை அழிக்காத நாகரிகம்! இயற்கையின் ஒரு பகுதியாக மனிதனும் வாழ்வான். அங்கு நான் என்ற உணர்வு இருக்காது. அங்கு எவருக்கும் எந்த உடைமையும் இருக்காது. எனவே அத்தனை பேரும் சமமாக இருப்பார்கள். அனைவரும் ஒன்றாக இருப்பார்கள்!”

டாக்டர் தன் கைகளை விரித்தார். கம்பீரமான குரலில் கூவினார். “பிரிவினைகள் இல்லாத உலகம்! நோயும் போரும் இல்லாத உலகம்! துயரமில்லாத உலகம்! இன்பமே நிரம்பிய பொன்னுலகம்! கிருதயுகம்! கிருதயுகம் வருக! கிருதயுகம் வருக! மைத்ரேய புத்தர் பிறெந்தெழுக!”

மலைகளில் அந்தக் குரல் எதிரொலித்தது.

பாண்டினின் கண்களில்இருந்து கண்ணீர் வழிந்தது. அவன் ஓடிச் சென்று டாக்டரைக் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

“நாம் பெரிய அதிர்ஷ்டசாலிகள் பாண்டியன். நாம் ஒரு மிகப்பெரிய உண்மையை நேரில் கண்டுவிட்டு வருகிறோம்!” என்றார் டாக்டர்.

“ஆம்” என்றான் பாண்டியன். பிறகு தன் சட்டைப் பையிலிருந்து ஒரு பொட்டலத்தை எடுத்து வீசியெறிந்தான்.

“அது என்ன?” என்றார் டாக்டர்.

“வைரம்! ரகசியமாக அதை எடுத்து வைத்திருந்தேன். இப்போதுதான் தெரிகிறது எத்தனை கேவலமான செயல் அது என்று. நான் ஒரு ராணுவ வீரன். வீரம் மட்டுமே எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த வைரமும் இது தரும் செல்வம் எனக்கு எதற்கு?” என்றான் பாண்டியன்.

“நாமெல்லாம் எளிய மனிதர்கள் தானே? எனக்கும் அத்தகைய ஆசை ஏற்பட்டது. நானும் சில வைரக் கற்களை எடுத்து வைத்திருந்தேன். முதல் முதலாக மகா லாமாவை தரிசித்ததுமே அதை வீசி எறிந்து விட்டேன்” என்றார் டாக்டர்.

“கிம்மையா?” என்றான் பாண்டியன்.

“ஆம். அவர் ஒரு கணம் கூட எதைப் பார்த்தும் ஆசைப்படவில்லை. அவர் பிறவியிலேயே ஞானி!” என்றார் டாக்டர்.

பாண்டியனுக்கு உடனே எல்லாம் புரிந்தது. “ஆமாம் டாக்டர். இப்போது புரிகிறது. எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டோம். ஒரு மகா லாமாவை சந்தித்துப் பழகும் வாய்ப்பு கிடைத்தது. இருந்தும் அவரை வணங்கி ஆசி பெற எனக்குத் தோன்றாமல் போய் விட்டதே” என்றான் பாண்டியன்.

“வருத்தம் வேண்டாம். மகா லாமா என்னிடம் சாதாரணமாக விடை பெற்றார். உங்களிடம் மட்டும் பார்க்கலாம் என்றார். அவரை நீங்கள் மீண்டும் சந்திப்பீர்கள்”- டாக்டர் கூறினார்.

“எங்கு? எப்போது? எப்படி?” என்றான் பாண்டியன்.

“அது எதிர்காலம். அதை நாம் காண முடியாது. ஞானிகள் மட்டுமே அதைக் காண முடியும்” என்றார் டாக்டர்.

அவர்கள் பனிப்பரப்பில் நடந்து நடந்து இறங்கினார்கள்.

“வழியை கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள் டாக்டர்” என்றான் பாண்டியன்.

“நாம் கவலையே படவேண்டியதில்லை. நமக்கு எவ்வித ஆபத்தும் வராது. வழியும் தவறாது. நமக்கு காவல் உள்ளது” என்றார் டாக்டர்.

“காவலா?” என்றான் பாண்டியன்.

“ஆம். அங்கே பாருங்கள்” என்றார் டாக்டர்.

பாண்டியன். டாக்டர் சுட்டிக் காட்டிய இடத்தைப் பார்த்தான்.

அங்கு பனிமனிதனின் பெரிய பாதத் தடம் நீண்டு சென்றிருந்தது.

டாக்டரும் பாண்டியனும் பனிமனிதனை மனத்தால் வணங்கினார்கள். பிறகு மீண்டும் மலையிலிருந்து இறங்க ஆரம்பித்தார்கள்.

நாகரிகங்கள் அழிவது எப்படி?
சுமேரிய நாகரிகம் பற்றி கேள்விப் பட்டிருப்பீர்கள். இன்றைய ஈராக் நாட்டில் முற்காலத்தில் மெசபடோமியா என்ற இடம் இருந்தது. இது யூப்ரடீஸ் டைக்ரீஸ் என்ற இரு நதிகளுக்கு நடுவே இருந்தது. இங்குதான் சுமேரிய நாகரிகம் இருந்தது.
அந்நாகரிகம் எப்படி அழிந்தது? சுமேரியர்கள் யூப்ரடீஸ் டைக்ரீஸ் நதிகளின் நீரை அணை கட்டி தேக்கினார்கள். அந்நீரை நிலத்தில் பாய்ச்சி விவசாயம் செய்தார்கள். அது மிகவும் வெப்பமான பகுதி. நீர் அதிகமான அளவுக்கு ஆவியாகும். நீரில் இருக்கும் உப்புகள் மட்டும் மண்ணில் தங்கிவிடும். இவ்வாறு மெசபடோமியாவில் உள்ள விவசாய நிலங்கள் எல்லாம் உப்பு நிலங்களாக மாறின.
உடனே சுமேரியர்கள் அந்த நிலங்களை விட்டுவிட்டு புதிய நிலங்களை விவசாயம் செய்தார்கள். அவையும் உப்பாக மாறின. பிறகு விவசாயத்துக்கு நிலமே இருக்கவில்லை. உணவு இல்லாமல் மெசபடோமியாவில் பஞ்சம் ஏற்பட்டது. படிப்படியாக சுமேரிய நாகரிகம் அழிந்தது. அந்தப் பகுதி இப்போது பாலைவனமாக உள்ளது.
உலகில் இது போல ஏராளமான நாகரிகங்கள் இருந்துள்ளன. எல்லா நாகரிகங்களும் இயற்கையை அழித்ததனால்தான் படிப்படியாக அழிந்தன.